PL
4753
.P57

PHRASE BOOK

OR

IDIOMATIC EXERCISES

IN

ENGLISH and TAMIL.

Designed to assist Tamil Youths in the study of the English language.

THIRD EDITION.

PUBLISHED BY THE AMERICAN MISSION.

JAFFNA:
AMERICAN MISSION PRESS:
1848.

[NOTE. The Tamil rendering is not intended to be exactly literal, but only to give the general meaning.]

EXERCISES

IN

ENGLISH AND TAMIL.

Can you speak English?	நீ இங்கிலீசுப் பாஷை பேசக் கூடுமா?
I can speak a little.	நான் கொஞ்சம் பேசுவேன்.
I can speak better than I can read.	நான் வாசிக்கிறதிலும் பேசுகிறது திறம்.
I know a few words.	எனக்குச் சில சொற்கள் தெரியும்.
I cannot speak but I can read.	எனக்குப் பேசத் தெரியாது வாசிக்கத் தெரியும்.
I have bought a grammar.	நான் ஒரு இலக்கணப் புத்தகங் கொண்டேன்.
Who can teach me to read?	எனக்கார் வாசனை பழக்கக் கூடும்?
Do you know any one who teaches English?	இங்கிலீசுப் பாஷை படிப்பிக்கிற யாதொருவரை அறிவீரா?
There is an English school in town.	பட்டினத்தில் ஒரு இங்கிலீசுப் பள்ளிக்கூடமிருக்கின்றது.
The master is clever.	அந்த உபாத்தியார் மெத்தக் கெட்டிக்காரன்.
I also can teach English.	நானும் இங்கிலீசு படிப்பிக்கக் கூடும்.

I teach English just as I learnt Tamil.	நான் தமிழ்ப்படித்த விதமாய் இங்கிலீசு படிப்பிக்கிறேன்.
You already know how to read.	நீ வாசிக்கப் பழகி விட்டாய்.
Take an article and a noun first and then find a verb.	சாரியையும் பேர்ச்சொல்லையும் பார்த்து பின் வினைச்சொல்லைத்தேடு.
I will give you an example.	ஒரு உதாரணஞ் சொல்லுவேன்.
A man.	ஒரு மனிதன்
A man talks.	ஒருமனிதன் பேசுகிறான்
He can talk Tamil and English.	அவன் தமிழும் இங்கிலீசும் பேசுவான்.
Two men can talk.	இரண்டு மனிதர் பேசுவார்கள். [கூடும்.
They can read also.	அவர்கள் வாசிக்கவுங்
One can read better than the other.	ஒருவனைப் பார்க்க மற்றவன் திறமாய் வாசிப்பான்.
Men cannot fly.	மனிதர் பறக்க மாட்டார்கள்.
A man has 2 hands, 2 feet, 2 eyes, 2 ears, and one mouth.	ஒரு மனிதனுக்கு உ. கைகளும், உ. கால்களும், உ. கண்களும், உ. காதுகளும், ஒருவாயுமுண்டு.
If you want to learn English you must speak it.	நீ இங்கிலீசுபடிக்க விரும்பினாற் பேசிப்பழகு.
Learn to spell each word.	ஒவ்வொரு சொல்லுக்கும் எழுத்துக் கூட்டப் படி.

Pronounce each letter and speak each word distinctly.	ஒவ்வொருஎழுத்தையுஞ் சொல்லையுந் தெளிவாய் உச்சரித்துப்பேசு.
Every word you learn you should speak.	நீ படிக்கிற சொல் ஒவ்வொன்றையும் பேசவும் வேண்டும்.
If you do not speak it, you will not learn fast.	நீ பேசிப் பழகாதிருந்தாற்சுறுக்காய்ப் படிக்கமாட்டாய்.
Endeavour to speak well.	நன்றாய்ப்பேசத் தெண்டி.
Always speak English when you can.	உன்னாற் கூடியவேளையில் இங்கிலீசாகப் பேசு.
I am ashamed to speak, because I make mistakes.	நான் பிழையாகப் பேசுகிறதினாலே பேச வெட்கிக்கிறேன்.
Do not be ashamed because you cannot speak well.	நீ திறமாய்ப் பேசக் கூடாததினால் வெட்கப்படவேண்டாம்.
By practice in speaking, errors are corrected.	பேசப் பழகுகிறதினாற் பிழைகள் திருந்தி விடும்.
You will soon be able to speak well.	கொஞ்ச நாளுக்குள் திருத்தமாய்ப் பேசுவாய்.

Parts of Speech. — பேச்சுப் பகுதிகள்.

We will now talk a little about the parts of speech.	பேச்சுப் பகுதிகளைப் பற்றி இப்பொழுது கொஞ்சம் பேசுவோமாக.
In the English language how many parts of speech are there?	இங்கிலீசுப் பாஷையிலே எத்தனை பேச்சுப் பகுதிகள் உண்டு?

Article, Noun, Pronoun, Adjective, Verb Adverb, Preposition, Conjunction and Interjection.	சாரியை, பெயர், சுட்டுப்பெயர், உரி, வினை, வினையுரி, முன்னிணை, கூட்டிணை, வியப்புச்சொல் இவைகளே.
We will speak a little about each one.	எவ்வொன்றையும் பற்றிக்கொஞ்சங் கொஞ்சம் பேசுவோம்.

Article. — சாரியை.

How many articles are there?	எத்தனை சாரியைகள் உண்டு?
There are two articles.	இரண்டு சாரியைகள் உண்டு.
What are they?	அவைகள் எவை?
They are *A* and *The*.	A யும் The யுந் தான்.
A, before a vowel, a silent *h*, and some other places becomes *an*.	உயிரெழுத்துக்கும் தொனியாத hக்கு முன்னேயும் மற்றுஞ்சிலவிடங்களிலேயும் A an ஆகமாறிவரும்.
Give some examples.	இதற்குச் சில உதாரணங்கொடு.
A man walks.	ஒரு மனிதன் நடக்கிறான்.
An eagle flies.	ஒரு கழுகுபறக்கின்றது.
The man has hands.	மனிதனுக்குக் கைகள் உண்டு.
The eagle has wings.	கழுகுக்குச் சிறகுகள் உண்டு.
Give me *a* book.	எனக்கொரு புத்தகங் கொடு.
Bring me *an* orange.	எனக்கொரு தேன்ரோடம் பழங்கொண்டுவா.

The book is worth more than the orange.	தேன்ரேடம் பழத்தி லும்புத்தகம் அதிக விலை பெற்றது.
You must study *an* hour and *a* half.	நீ ஒன்றரை மணித்தியா லம் படிக்க வேண்டும்.
He is *an* honest and *a* happy man.	அவன் நிதார்த்தமும் ம னப் பாக்கியமுமுள்ளவனா ய் இருக்கிறான்.
Give *an* historical account.	ஒரு சரித்திரஞ் சொ ல்லு.
That was *an* heroic action.	அது ஒரு வீரமானசெய் கை.
Give *a* history of *a* hero.	வீரவானைப்பற்றி ஒரு ச ரித்திரஞ் சொல்லு.
You must learn more about this in your Grammar.	இதைப்பற்றி நீ உன் இல க்கணப் புத்தகத்திலே அ திகமாய்ப் படிக்க வேண் டும்.
Noun.	பெயர்ச்சொல்.
What is a noun?	ஒரு பெயர்ச் சொல்லா வதென்ன?
A noun is the name of any thing whether material or immaterial	பெயர்ச் சொல்லாவது சித்துப் பொருள் சடப் பொருள்களுக்குள்ள பெ ரேயாம்.
Names of men, beasts, birds and other living things are nouns.	மனிதர்,பறவைகள்,மிரு கங்கள், முதலான சீவபி ராணிகளின் நாமங்கள் பெயர்ச்சொற்களேயாம்.
Names of actions, dispositions &c. are nouns.	செயல், குணம்,முதலிய வற்றின் பெயர்களும் பெ யர்ச் சொற்கள்தான்.

Man has a *soul.*	மனிதனுக்கொரு ஆத்துமா உண்டு.
Light and *heat* are essential to *man.*	வெளிச்சமுங்காங்கையும் மனிதனுக்குப் பிரதானமானதாய் இருக்கின்றன.
Poverty and *suffering* are common in this *world.*	வறுமையுந் துன்பமும் இவ்வுலகத்தில் வழப்பமாய் இருக்கின்றன.
You will learn all this by a little study.	நீ கொஞ்சம் படித்தால் இவைகளை அறிவாய்.
Not only study, but practice is necessary.	படிப்பது மாத்திரமல்ல, அப்பியாசமுந் தேவை.

Pronoun. — சுட்டுச்சொல்.

We will now consider the Pronoun.	இப்போது சுட்டுச் சொற்களை ஆராய்வோம்.
What is a pronoun?	சுட்டுச் சொற்களாவதென்ன?
A pronoun is used instead of a noun.	ஒரு சுட்டுச்சொல்பெயர்ச்சொல்லுக்குப் பதிலாகப் பாவிக்கப்படுகிறது.
You must learn all the pronouns.	நீ எல்லாச் சுட்டுச்சொற்களையும் படிக்கவேண்டும்.
Repeat some of them in the singular number.	ஒருமை எண்ணிலே அவைகளிற்சிலதைச் சொல்லு.
I, Thou, He, she, It.	நான், நீ, அவன், அவள், அது.
Repeat them in the plural number.	அவைகளைப் பன்மை எண்ணிலே சொல்லு,

We, *ye* or *you*, *They*.	நாம், நீங்கள், அவர்கள், அவைகள்.
Are there no other pronouns?	வேறு சுட்டுச் சொற்கள் இல்லையா?
Who, *Which*, *That*, *This*, *What* and some others.	ஆர், எது, அது, (or அந்த) இது (or இந்த) எந்த முதலானவைகள்.
Pronouns occur frequently.	சுட்டுச் சொற்கள் அடிக்கடி வருகின்றன.
You should commit them well to memory.	நீ அவைகளை எல்லாம் நன்றாய்ப் பாடம்பண்ண வேண்டும்.
Learn not only these but all the inflections thoroughly.	இந்தச் சொற்களை மாத்திரமல்ல அவைகளின் வேற்றுமைகளையும்படி.
You and *I* can cypher.	நீயும் நானும் கணக்குப் பார்க்கக் கூடும்.
You can study in *my* book.	நீ என்னுடைய புத்தகத்திற் படிக்கலாம்.
Who is *that?*	அதார்?
He can work with *us*.	அவன் எங்களுடனே வேலை செய்வான்.
This is the paper *which* *I* brought.	நான் கொண்டு வந்த காகிதம் இதுதான்.
We will go with *them*.	நாம் அவர்களுடனே போவோம்.
They can carry *our* slates.	அவர்கள் நமது கற்பலகைகளைக்கொண்டுபோவார்கள்.
This is *mine*, *that* is *yours*. [enough.	இது என்னுடையது, அது உன்னுடையது. (தும்.
These examples are	இவ்வுதாரணங்கள் போ

Verb.	வினைச்சொல்.
What is a verb?	வினைச் சொல்லாவ தென்ன?
A verb is a word expressing action or passion or existence	வினைச் சொல்லாவது செய்தல் படுதல் இருத்தல் இவற்றை வெளிப்படுத்துஞ் சொல்லேயாம்.
I *run.*	நான் ஓடுகிறேன்.
A man *worshipped* the idol.	ஒருமனிதன் விக்கிரகத்தை வணங்கினான்.
We must not *worship* idols.	நாம் விக்கிரகத்தை வணங்கப்படாது.
All men must *worship* God.	எல்லாரும் பராபரனை வணங்க வேண்டும்.
Verbs are very numerous.	வினைச்சொற்கள் அநேகமாய் இருக்கின்றன.
Verbs express past, present, and future, times.	வினைச் சொற்கள் இறந்த காலத்தையும், நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையுங், காட்டுகின்றன
I did not wish to teach you grammar but phrases.	நான் உனக்குக் கூட்டுச் சொற்களையேயன்றி இலக்கணம் படிப்பிக்க விரும்புவில்லை.
Learn not only these phrases, but make new ones.	நீ இவைகளைப் படிக்கிறது மாத்திரமல்ல, வேறும் கூட்டுச் சொற்களை உண்டாக்கு.
Use each word many ways.	ஒவ்வொரு சொல்லையும் பல விதமாயும் பாவி.

Use each verb in all its tenses.	ஒவ்வொரு வினைச்சொல்லையும் முக்காலங்களிலும் கிரிகாமாலைப் படுத்து.
Carefully correct your mistakes when you are told.	உன் பிழைகளை உனக்குச் சொல்லும்போது அவைகளைக் கவனமாய்த்திருத்து.
Be thankful for corrections.	உன் பிழைகள் திருத்தப்படுவதற்காக நன்றியுள்ளவனாயிரு.
Keep a memorandum of all your mistakes.	நீ சொல்லுகிற பிழைகளெல்லாம் எழுதிவை.
This is very important.	இது மிகவுந் தேவையாயிருக்கின்றது.
Adjectives.	உரிச்சொற்கள்.
Adjectives are joined with nouns.	உரிச்சொற்கள்பெயர்ச்சொற்களுடனே இணைந்துவருகின்றன.
That is a *good* house.	அதொரு நல்ல வீடு.
This fruit is *sour*.	இந்தப் பழம் புளிப்பாயிருக்கின்றது.
Sweet things are not always *good*.	இனிப்புப் பண்டம் எப்பொழுதும் நல்லதல்ல.
God is *holy*, *just*, *merciful*, *omnipresent* and *omniscient*.	பராபரன் பரிசுத்தம், நீதி, இரக்கம், சருவவியாபகம் சருவ ஞானமுமுள்ளவராய் இருக்கிறார்.

Now let us find some adverbs.

இப்பொழுது சில வினையுரிச் சொற்களைப் பார்ப்போமாக.

Adverbs.

வினைஉரிச்சொற்கள்.

What is an adverb?

வினை யுரிச்சொல்லாவதென்ன?

Adverbs are joined to verbs, adjectives, and other adverbs.

வினையுரிச்சொற்கள்வினைச் சொற்களுடனேயும் உரிச்சொற்களுடனேயும் வேறுவினையுரிச்சொற்களுடனேயும் இணைந்து வருகின்றன.

The bird flies *swiftly*.

அந்தப் பட்சி விரைவாய்ப் பறக்கின்றது.

Come *immediately*.

உடனே வா.

I will come *to-morrow*.

நாளைக்கு வருவேன்.

If you come *to-day*, I will give *willingly*.

நீ இன்றைக்கு வந்தால் சந்தோஷமாய்த் தருவேன்.

I am always *actively* engaged.

நான் எப்பொழுதும் வேலையிற் சுறுசுறுப்பாயிருக்கிறேன்.

That is *doubtless* true.

அது சந்தேகமில்லாமல் மெய்.

Where are you going?

நீ எங்கேபோகிறாய்?

I am going *directly* to town.

இப்பொழுதே பட்டினத்துக்குப்போகிறேன்.

I need not speak more *minutely about* this.

நான் இதைப்பற்றி அதிசநுட்பமாய்ப் பேசத் தேவையில்லை.

Consequently you may leave off here.

ஆதலால் நீ இதில் நிறுத்து.

Very well; now we will learn some prepositions.

நல்லது, நாம் இப்பொழுது சில முன்னிணைமொழிகளைப் படிப்போமாக.

Prepositions.

முன்னிணைமொழிகள்.

A preposition shows the relation of words one to another.

முன்னிணைமொழி சொற்கள் ஒன்றுடனே ஒன்று கொண்டிருக்குஞ் சேர்மானத்தைக் காட்டுகின்றது.

Put this money *in* a box *on* the table.

மேசையின் மேலிருக்கிறவொரு பெட்டிக்குள் இந்தப்பணத்தை வை.

The box is *above* the table, not *under* it, nor *beside* it.

பெட்டி மேசையின்கீழல்லப், பக்கத்திலுமல்ல, அதன்மேல்இருக்கின்றது.

Inquire *into* this case.

இந்தக்காரியத்தை விசாரி.

He walks *with* a staff *by* moon-light.

அவன் பொல்லுப் பிடித்துக்கொண்டு நிலவு வெளிச்சத்தில் நடக்கிறன்.

He was about twenty years *before* me, not *after* me.

அவன் எனக்கு ஏறக்குறைய இருபது வருஷத்துக்கு முன் இருந்தான், பின்னல்ல.

Better commit all the prepositions to memory.

எல்லா முன்னிணைமொழிகளையும் நீ பாடம்பண்ணுவது நல்லது.

It will take but a short time.

அதற்குக் கொஞ்சநேரம்மாத்திரஞ் செல்லும்.

Let us run *into* the garden and play.	நாம் தோட்டத்துக்குள் ஓடி விளையாடுவோமாக.
Conjunctions.	கூட்டிணைச் சொற்கள்.
A conjunction connects words together.	கூட்டிணைமொழி சொற்களை ஒன்றோடொன்று இணைக்கின்றது.
I will give you a few examples.	நான்சில உதாரணஞ் சொல்லுவேன்.
I saw a man *and* his horse.	நான் ஒரு மனிதனையும் அவனுடைய குதிரையையுங் கண்டேன்.
He *and* his brother *and* two sisters came here.	அவனும் அவனுடைய சகோதரனும் இரண்டு சகோதரிகளும் இங்கேவந்தார்கள்.
He is happy *because* he is good.	அவன் நல்லவனாய் இருக்கிறபடியால் மனப்பாக்கியமுள்ளவனாயிருக்கிறான்.
You *or* I must go *and* see him.	நீ அல்லது நான் போய் அவனைக் காணவேண்டும்.
I can *neither* see *nor* walk.	பார்க்கவாகுதல் நடக்கவாகுதல் என்னாற் கூடாது
God made my hands, *and* feet, *and* head, *and* heart.	பராபரன் என்கரங்களையும், கால்களையுஞ், சிரசையும், இருதயத்தையும் உண்டாக்கினார்.
I will ever love, *and* serve, *and* adore him.	நான் அவரை என்றைக்கும் நேசித்து அவருக்கூழியஞ் செய்து, அவரை வணங்குவேன்.

Though he slay me, *yet* will I trust in him.	அவர் என்னைக் கொன்றாலும், அவரையே நான் நம்புகிறேன்.
Interjections.	**வியப்புச் சொற்கள்.**
Alas! alas! what shall we do.	ஐயையோ! நாம் என்ன செய்வோம்.
Oh! how soon we must die.	ஆ! நாம் எவ்வளவு சுறுக்காய்ச் சாக வேண்டும்.
Behold I come quickly.	இதோ நான் சீக்கிரமாய் வருகிறேன்.
Ah! what shall we do?	ஆ! நாம் என்னசெய்வோம்?
Oh! that I knew what to do!	ஆ! நான் செய்ய வேண்டிய தின்னதென்றறிந்திருந்தேனாகில் நலம்.
There are only a few interjections.	வியப்புச் சொற்கள் கொஞ்சந்தான்.
You will soon learn them all.	அவைகளை எல்லாம் நீ சுறுக்கிற்படிப்பாய்.
We have now seen a small specimen of all the parts of speech,	எல்லாப்பேச்சுப்பகுதிகளிலுங் கொஞ்சங் கொஞ்சம் அறிந்துகொண்டோம்
We will now talk about many things.	நாம் இப்பொழுது பல காரியங்களையும் பற்றிப் பேசுவோம்.
We will have one conversation a day.	நாம் நாளொன்றுக்கொரு சம்பாஷணைபண்ணுவோம்.
Let us begin to-morrow morning.	நாங்கள் நாளைக் காலமே துவங்குவோமாக.
I wish you to come early.	வெள்ளென வந்துவிடுமென்று உம்மைக்கேட்கிறேன்.

Good bye.	போய்வருகிறேன், அல்லது, போய்வாரும்.
School.	பள்ளிக்கூடம்.
Good morning.	கால வந்தனம்.
Why have you come so late?	நீ இப்படி நேரஞ் செல்ல வந்ததென்ன?
I had many things to do.	நான் செய்யும்படிக்கு அநேகங் காரியங்கள் இருந்தன.
Had you more than common to do?	வாடிக்கையாய் நீர் செய்வதிலும் அதிக காரியங்கள் இருந்ததா?
No, I rose early and washed my face and hands.	இல்லை நான் வெள்ளென எழும்பி முகமுங் கைகளுங் கழுவினேன்.
I then read a chapter in the Bible.	பின்பு வேதாகமத்தில் ஒரு அத்காரம்வாசித்தேன்
After that I prayed that God would bless me and keep me from sin to-day.	அதின் பின்பு இன்றைக்குப் பராபரன் என்னைப் பாவத்துக்கு விலக்கி ஆசீர்வதிக்கும்படி அவரைப் பார்த்து மன்றாடினேன்.
Very well I am glad to hear that.	மெத்த நல்லது அதைக் கேட்கிறது எனக்குச் சந்தோஷம்.
Now let us go to school.	இப்பொழுது பள்ளிக்கூடத்துக்குப் போவோமாக.
The school opens at seven.	பள்ளிக் கூடம் ஏழு மணிக்குத் துவங்குகிறது.

John comes late every day.	யோவான் ஒவ்வொரு நாளும் நேரஞ் செல்லவருகிறான்.
I came before the school was opened.	நான் பள்ளிக்கூடந் துவங்க முன்வந்தேன்.
How many children study in the school?	அந்தப் பள்ளிக் கூடத்தில் எத்தனை பிள்ளைகள் படிக்கிறார்கள்?
Do girls also learn?	பெண்பிள்ளைகளும் படிக்கிறார்களா?
Yes it is well, for girls also to read and write.	ஆம், பெண்பிள்ளைகளும்வாசிப்பதும் எழுதுவதும் நல்லது.
Knowledge is more precious than diamonds.	வச்சிரக்கல்லினும் அறிவு அதிக விலையேறப்பெற்றது.
Learning is the most valuable gift we can bestow.	நாம் கொடுக்கக் கூடியதெல்லாவற்றிலுங் கல்வி படித்துக்கொடுப்பதே மேலான கொடை.
It is better to possess wisdom than gold.	பொன்னை வைத்திருக்கிறதிலும்அறிவைக்கொண்டிருப்பதுதிறம்.
Pearls are less to be desired than instruction.	முத்துக்களிலும் கல்வி அதிகம் விரும்பப்படத்தக்கது.
Where is the head monitor?	முதற் சட்டம்பிப்பிள்ளை எங்கே?
He is the best boy in the whole school.	பள்ளிக் கூடத்தார் எல்லாரிலும் அவன் கெட்டிக்காரன்.

He has not so much understanding as she has.	அவளுடைய அறிவளவு அவனுக்கில்லை.
He is a little boy but very clever.	அவன் சிறுவன், ஆகிலும் மகா கெட்டிக்காரன்.
John is much behind in learning.	யோவான் படிப்பிலே மெத்தப்பிந்திப்போகிறான்.
Attend to your studies.	நீ படிக்க வேண்டியதைப் படி.
Why do you look about?	நீ ஏன் அங்குமிங்கும் பார்க்கிறாய்?
The school closes at ten o'clock.	பள்ளிக்கூடம் பத்துமணிக்கு முடிகிறது.
This is the best school I ever saw.	நான்கண்ட பள்ளிக்கூடங்கள் எல்லாத்திலும் இது திறம்.
I am much gratified with the sight of such a school.	இப்படிப்பட்ட பள்ளிக்கூடத்தைக்காண்கிறது எனக்கு மிகுந்தசந்தோஷம்.
It is now ten and we have a recess.	இப்பொழுது பத்துமணியானதினால் நமக்கு விடுதலை உண்டு.
You may all go.	நீங்கள் எல்லாரும் போகலாம்.
I never saw such a school before.	இப்படிப்பட்ட பள்ளிக்கூடத்தை நான் முன் ஒருக்காலுங் கண்டதில்லை.

Reading. — வாசித்தல்.

Very well, now read.	நல்லது இப்பொழுது வாசி
Please to give me a book.	தயவாக எனக்கொரு புத்தகந் தாரும்.

I will begin to learn to-day.	நான் இன்றைக்குப் படிக்கத்துவங்குவேன்.
Open your book.	உன் புத்தகத்தைத் திற.
Let me hear you spell.	நீ எழுத்துக் கூட்டுகிறதை நான் கேட்கட்டும்.
That is a hard word	அதொரு அருமையான சொல்.
This is a very easy word.	இது மெத்த லேசான சொல்.
I can pronounce that letter.	அந்த எழுத்தை நான் உச்சரிப்பேன்.
He pronounces very well.	அவன் கெட்டியாய் உச்சரிக்கிறான்.
I cannot read that word.	அந்தச் சொல் எனக்கு வாசிக்கத் தெரியாது.
Where is to-day's lesson?	இன்றையிற் பாடம் எங்கே?
Yesterday I left off studying here.	நேற்று நான் படித்து விட்டது இவ்விடந்தான்.
Do not read so loud.	அப்படி உரத்து வாசியாதே.
You read too low.	நீ மெத்த மெதுவாய் வாசிக்கிறாய்.
Make a pause where there is a stop.	அடையாளம் போட்டிருக்கிற இடத்திலே தரித்து வாசி.
That word is commonly pronounced thus.	அந்தச் சொல் வழக்கமாய் இப்படி உச்சரிக்கப்படுகின்றது.
This word is pronounced differently in different places.	இந்தச் சொல்லைப் பல இடங்களிலும் பலவிதமாய் உச்சரிக்கிறார்கள்.

Why do you not speak distinctly?	நீ ஏன் தெளிவாய்ப் பேசுகிறதில்லை?
I can now read tolerably well.	இப்பொழுது நான் ஒரு மட்டாய் வாசிப்பேன்.
I do not understand.	எனக்குவிளங்கவில்லை.
Tell me the meaning of that in Tamil.	அதின் கருத்தைத் தமிழ்ற் சொல்லு.
Translate that sentence into Tamil.	அந்த வாசகத்தைத் தமிழ்ப்படுத்து.
I do not know the meaning of it.	அதின் கருத்து எனக்குத் தெரியாது.
If I speak wrong correct me.	நான் பிழை பேசினாற் திருத்தும்.
Six lines are enough for one lesson.	ஒரு பாடத்துக்கு ஆறுவரி போதும்.
How many lines shall I read?	நான் எத்தனை வரி வாசிப்பேன்?
Read till you come to a period.	ஒருவசனம் முடியுமளவும் வாசி.
Read in a proper tone.	ஏற்ற சத்தமாய் வாசி
Read by turns one after another.	ஒவ்வொருத்தனும் வாசியுங்கள்.
It is not your turn to read.	நீ வாசிக்கிற முறையல்ல.
Why do you speak before your turn?	உன் முறை வருமுன்னம் ஏன் சொல்லுகிறாய்?
Read the lessons straight forward.	அந்தப் பாடத்தைநேரேக வாசி.
Do not read so fast.	அத்தனை சுறுக்க வாசியாதே.

I cannot hear what you say.	நீ சொல்லுகிறதை நான் கேட்கக்கூடாது.
Let all be silent except the boy who reads	வாசிக்கிறவன்தவிர மற்றெல்லாரும் பேசாதிருங்கள்.
This is the lesson you read yesterday.	நேற்று நீ வாசித்த பாடம் இதுதான்.
William you begin	வில்லியம் நீ துவங்கு.
Let each one read a sentenee	ஆளுக்கொரு வசனம் வாசியுங்கள்.
Read to the end of the line.	வரிமுடிய வாசியுங்கள்.
In reading mind the stops.	வாசிக்கையில் தரிக்கவேண்டியயிடங்களிற்தரி
Why do you leave off where there is no stop?	அடையாளம் இல்லாத இடத்தில் ஏன் தரிக்கிறாய்?
Stop there.	அதிலே நிறுத்து.
What figure is this?	இதென்ன இலக்கம்?
What stop is that?	அதென்னஅடையாளம்
This letter is not plain.	இந்த எழுத்து மங்கலாய் இருக்கின்றது.
Say it without looking at your book.	உன் புத்தகத்தைப் பாராமல் அதைச் சொல்லு.
Savarymoottoo is very clever; he learns very fast.	சவரிமுத்து கெட்டிக்காரன்—சுறுக்காய்ப் படிக்கிறான்.
Ambalam is a very stupid fellow.	அம்பலம் கொஞ்சமுங் கூர்மையில்லாதவன்.
He forgets all I tell him.	நான்அவனுக்குச் சொல்லுகிறதெல்லாம் மறந்துபோகிறான்.

I told him six times over.	நான் அவனுக்குத் திரும்பத் திரும்ப ஆறுதரஞ்சொன்னேன்.
Christian has a good memory.	கிறிஸ்தியான் என்கிறவன்நல்ல நினைப்பாளி.
Have you set him his lesson?	அவனுடைய பாடம் அவனுக்குக் காட்டிவிட்டீரா?
How can I read without a book?	ஒரு புததகமும் இல்லாமல் நான் எப்படி வாசிப்பேன்?
Lend James your book.	உன் புத்தகத்தையேமிசுக்கு இரவலாய்க் கொடு.
Look over Christian.	கிறிஸ்தியானுடைய புத்தகத்திலே பார்.
Christian go below.	கிறிஸ்தியான் பிந்து.
Charles go and take his place.	சால்சு, அவன் நின்ற இடத்திலே போய் நில்.
Christian was at the head of the class.	கிறிஸ்தியான் இந்தவகுப்பிலேமுதலாகநின்றவன்.
Charles was at the bottom of the class	சால்சு இந்த வகுப்பில் கடைசியாக நின்றவன்
Does no one in the class understand this?	இந்த வகுப்பிலே இருக்கிற ஒருவனுக்கும் விளங்கவில்லையா?
Monitor explain to them.	சட்டம்பிள்ளை அவர்களுக்கு விளங்கப்பண்ணு,
He is the least in the class.	இந்த வகுப்பிலே இருக்கிற எல்லாரிலும் அவன் சின்னவன்.
He is a very sharp boy.	அவன் மெத்தக் கூர்மையுள்ளவன்.

He surpasses all others in learning,	அவன் படிப்பிலே மற்றெல்லாரையும்வென்று விடுகிறான்.
How many scholars are there in the school?	அந்தப் பள்ளிக்கூடத்தில் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்?
Shut your books and sit down.	உங்கள் புத்தகங்களை மூடிக்கொண்டிருங்கள்.
Lay the books on the desk.	புத்தகங்களை மேசையின் மேல் வையுங்கள்.
Slates.	கற்பலகைகள்.
Write on slates.	கற்பலகைகளில் எழுதுங்கள்.
The monitor will dictate.	சட்டம்பிள்ளை வாசகஞ் சொல்வார்.
You must write faster.	நீ இன்னுஞ் சுறுக்காய் எழுத வேண்டும்.
Read what you have [written.	நீ எழுதினதை வாசி.
He cannot read even his own name.	அவன் தன் பேர்தானும் வாசிக்கமாட்டான்.
You write too closely.	நீ மெத்த நெருக்கி எழுதுகிறாய்.
Write the words separately.	சொற்களை வெவ்வேறாய் எழுது.
Slant the letters more.	எழுத்துக்களை இன்னுஞ் சாய்த்தெழுது.
Write a letter from dictation.	ஒருவன் வாசகஞ்சொல்ல நீ காகிதம் எழுது.
Do you know how to cypher?	நீ கணக்கறிவாயா?
Do you know how to keep accounts?	கணக்குப் பார்க்க உனக்குத் தெரியுமா?

Take your slate and write a sum in addition.	உன் கற்பலகையை எடுத்துக் கூட்டுக்கணக்கெழுது.
Place the figures one under another.	இலக்கங்களை ஒன்றின் கீழ் ஒன்ருக எழுது.
Write units under units and tens under tens.	ஒன்றின் கீழ் ஒன்றும் பத்தின் கீழ் பத்துமாக எழுது.
Cast up the sum and see if it is right.	அவைகளைக் கூட்டித் தொகை சரியோவென்றுபார்.
It is all wrong.	அதெல்லாம் பிழை.
You have broken your slate.	நீ உனது கற்பலகையை உடைத்துப் போட்டாய்.
I did not break it, John broke it.	நானல்ல, யோவான் உடைத்தான்.
See how dirty your slate is.	உன கற்பலகை எவ்வளவு அழுக்காய் இருக்கிறதென்றுபார்.
Wash your slate and wipe it clean.	உனது கற்பலகையைக் கழுவி நன்ருய்த்துடை.
Hang up your slates and take your paper	கற்பலகைகளைத் தூக்கிவிட்டு உங்கள் கடுதாசியை எடுங்கள்.

Paper. — கடுதாசி.

Very well; now write on paper.	நல்லது இப்பொழுது கடுதாசியில எழுதுங்கள்.
Do not hold your pen so erect.	உன் தூவலை அப்படி நிறுத்திப்பிடியாதை.

Dry this paper at the fire.	நெருப்பிலே இந்தக் கடுதாசியைக் காய்ச்சு.
Copy from the book before you.	உனக்கு முன்னிருக்கிற புத்தகத்தைப் பார்த்தெழுது
Divide the pens equally among the scholars.	இந்தத் தூவல்களைப் பள்ளியிற் பிள்ளைகளுக்குச் சரிவரப் பகிர்ந்து கொடு.
Please to mend my pen.	தயவுபண்ணி என் தூவலை வெட்டித்தாரும்
You have cut it all away.	நீர் அதை முற்றிலும் வெட்டித் தள்ளிப்போட்டீர்.
This pen is very stiff	இந்தத் தூவல் மெத்தமுரடு.
This pen will not last long.	இந்தத் தூவல் நாட்படஇராது,
Whose penknife is this?	இந்தத் தூவல் வெட்டுங் கத்தி ஆருடையது?
This knife is very dull.	இந்தக் கத்தி மெத்தமணையாயிருக்கிறது.
I cannot mend a pen with it.	அதினாலே நான் ஒரு தூவலையும் வெட்டக் கூடாது
I cannot write with this pen.	எனக்கிந்தத் தூவலால் எழுதக் கூடாது.
Who has blotted my paper?	என் கடுதாசியில் மை போட்டதார்?
This paper will not stay on the desk.	சாய்ந்த மேசையின்மேல் இந்தப் புத்தகந் தங்காது.
Let me look at your writing.	உன்னுடைய எழுத்தை நான் பார்க்கட்டும்.

This is exceedingly well written.	இது மிகவும் நன்றாய் எழுதியிருக்கின்றது..
He has taken my ink-stand.	அவன் என்னுடைய மைக்கூட்டை எடுத்துப் போட்டான்.
He has broken my ink-stand.	அவன் என்னுடைய மைக் கூட்டை உடைத்துப்போட்டான்.
You have inked your hands and face.	உன் முகத்திலுங் கையிலும் மை பூசிக்கொண்டாய்.
Why have you spilt my ink?	நீ ஏன் என் மையை ஊற்றினாய்?
You seem to me to write worse and worse.	நீ வர வர இழப்பாய் எழுதுகிறாய் என்றெனக்குத் தோன்றுகின்றது.
This is the worst writing I ever saw.	இப்படி ஆகாத எழுத்தை நான் முன் ஒருக்காலுங் கண்டதில்லை.
He holds his pen in the left hand.	அவன் இடக்கையிலே தூவலைப் பிடிக்கிறான்.
Keep your writing-books clean.	நீங்கள் எழுதிப்பழகும் புத்தகங்களைப் பௌத்திரமாக வைத்திருங்கள்.
In all things learn to be neat and clean.	எல்லாத்திலும் நேற்றியாயுஞ்சுத்தமாயும் இருக்கப் பழகுங்கள்.
Do not tear or blot your paper.	உங்கள் கடுதாசியைக் கிழிக்கவாகுதல் மை சிந்தவாகுதல் வேண்டாம்.
I have no room to write.	எனக்கு எழுதஇடமில்லை.
Sit beside Condan.	கந்தனுக்கு அருகில்இரு.

Do not write fast.	சுறுக்கெழுதாதிரு
Write slowly.	மெதுவாய் எழுது.
If you write with care you will soon write well.	நீ கவனம்வைத்தெழுதிஞல் சீக்கிரத்தில் நன்ருய் எழுதுவாய்.
He speaks and writes the English language grammatically.	அவர் இங்கிலீசுப்பாஷையை இலக்கண முறைப்படி பேசுகிறவரும் எழுதுகிறவருமாய் இருக்கிருர்.
Let us compare my writings with yours.	உன் எழுத்தையும் என் எழுத்தையும் ஒத்துப் பார்ப்போம்.

Miscellaneous Exercises. — நாஞவித அப்பியாச வசனங்கள்.

He lost his place by making a mistake.	ஒரு பிழை சொன்னதிஞல் அவன் தான் நின்ற இடத்தை இழந்தான்.
Monitor, what is the noise in your class?	சட்டம்பிள்ளை, உன்வகுப்பிலே அதென்ன சத்தம்?
Where is the lesson?	பாடம் எங்கே இருக்கின்றது?
Show him where to begin.	அவன் தொடங்கவேண்டிய இடத்தைக் காட்டு.
What page is it?	அது எத்தனையாம் புறம்?
Turn over a leaf.	ஒரோற்றையைப் புரட்டு.
Look at the page before that.	அதற்கு மேற் புறத்தைப் பார்.

How do you know that?	அது உனக்கு எப்படித் தெரியும்?
Monitor ask the meaning.	. சட்டம் பிள்ளை அதீன் கருத்தைக் கேள்.
They give the answers very well.	அவர்கள் வெகு நேற்றியாய் மறுமொழி சொல்லுகிறார்கள்.
He has studied only a short time.	அவர் கொஞ்சக் காலந் தான் படித்தார்.
He has made great progress in study.	படிப்பிலே அவர் மெத்தத் தேறிவிட்டார்.
I wish I could speak like him.	நானும் அவரைப் போற் பேசக் கூடியவனாயிருக்க ஆசைப்படுகிறேன்
Every body understands him.	அவர் பேசுகிறது ஒவ்வொருவனுக்கும் விளங்குகிறது.
I have heard him speak.	அவர் பேசக் கேட்டேன்.
I did not understand what he said.	அவர் சொன்னது எனக்கு விளங்கவில்லை.
He speaks in high language.	அவர் மெத்த ஆழமான சொல்லாகப் பேசுகிறார்.
He studies several hours at home.	வீட்டிலே இருக்கிற பொழுதிலும் அவர் வெகுமணித்தியாலம் படிக்கிறார்.
He speaks in common language.	அவர் வழக்கமான பேச்சாகப் பேசுகிறார்.
I do not know how to express properly what I wish to say.	நான் சொல்ல விரும்புகிறதை முறையாகச் சொல்லத்தெரியவில்லை.

The Tamil and English languages are very different.	தமிழ்ப் பாஷைக்கும் இங்கிலீசுப் பாஷைக்கும் மெத்த வித்தியாசம்.
Every thing may be acquired by application.	யாவும் முயற்சியாற் பெறலாம்.
Do we not have a recess?	எங்களுக்கு இளைப்பாற்றி இல்லையா?
Ask leave to go out.	வெளியிலே போக உத்தரவு கேள்.
It is now ten o'clock.	இப்போது பத்து மணியாயிற்று.
It is time to go home.	வீட்டுக்குப்போக நேரமாயிற்று
This is an excellent way of learning.	படிக்கிறதற்கு இது ஒரு நல்ல மாதிரி.
I will come to shool every day.	நான் ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்துக்குவருவேன்
Get the sentence by heart.	அந்த வாசகத்தைப் பாடம்பண்ணு.
This word has two meanings.	இந்த வார்த்தை உபயத்தமாயிருக்கின்றது.
It is a very common word.	அது மெத்த வழக்கமானசொல்.
It is very seldom used in conversation.	பேச்சிலே அது மெத்த வருகிறதில்லை.
Had I begun to study earlier, ere this I might have possessed much learning.	நான் முன்னே படிக்கத் துவங்கினால், இவ்வளவுக்குப் பெரிய படிப்பாளியாய் விடுவேன்.

Bathing.	முழுகுதல்.
Now I propose we all go and bathe.	இப்பொழுது நாம் எல்லாரும் போய் முழுக்காடுவோம் வாருங்கள்.
I will go with you presently.	நான் உன்னுடனே இப்பொழுது வருவேன்.
Bathing is very healthful in this country.	முழுக்காடுவது இவ்வூரிலிருக்கிறவர்களுடைய சரீரத்துக்குச் சுகம்.
We should bathe every week.	நாம் ஒவ்வொரு கிழமையும் முழுக்காடவேண்டும்.
If we pour over ourselves much water, it will make us sick.	மிகுந்த தண்ணீர் ஊற்றி முழுகுதல் துன்பத்தை உண்டாக்கும்.
Limes and the pumace of olive fruit are good for cleaning the body.	எலுமிச்சங்காயும் இலுப்பை அரைப்புஞ் சரீரத்திலூத்தைபோக்க நல்லது.
This is a very deep well and the water is very good.	இந்தக்கிணறு மிகுந்ததாழ்வானது,தண்ணீரும்மெத்த நல்லது.
Warm water for bathing is often good for sick people.	வெந்நீரில் முழுகுவதுபெரும்பாலுந் துன்பக்காரருக்கு நல்லது.
Boil the limes, &c. and make it ready soon.	எலுமிச்சங்காய் முதலியதைச் சுறுக்கு அவித்து ஆயத்தம்பண்ணு.
Never expose your person when bathing.	ஒருபோதும் வெளியாய் நின்று நீராடாதை.
This disease was brought on by bathing.	இது முழுக்கிலே வந்த தோஷம்.

Bazar.	கடை.
Come let us go to the Bazar.	கடைக்குப் போவோம் வா.
There are many kinds of goods in the bazar.	கடையிலே பல்வித சாமான்கள் உண்டு.
Rice is very dear at this time.	இந்த வேளை அரிசி மெத்த ஒறுப்பு.
You ask more than the market price.	கடையில் விலையிலும் நீ அதிகங் கேட்கிறாய்.
His prices are below those of others.	மறுபேர் சொல்லுகிற விலையிலும் அவர் சொல்லுகிற விலை தணிவு.
His house cost between four and five thousand rupees.	அவருடைய வீட்டுக்கு நாலாயிரம் ஐயாயிரம் உரூபாச் சென்றது.
I brought these plantains from beyond Tillipally.	நான் இந்த வாழைப்பழங்கள் தெல்லிப்பழைக் கப்பாலே இருந்துகொண்டுவந்தேன்.
Are any such to be had at Trincomalie?	இப்படிப்பட்ட யாதொன்று திருக்கோணமலையிற்கிடைக்குமா?
These mangoes came from Dindigul.	இந்த மாம்பழங்கள் திண்டிக்கல்லிலே இருந்து வந்தன.
He would not abate one pice.	ஒரு துட்டும் அவர் தணித்துவிட மாட்டார்.
They cheat whom they can.	அவர்கள் தங்களால் எத்தக் கூடியவர்கள் எல்லாரையும்எத்துகிறார்கள்.
That article decreases in value daily.	அந்தஉடைமைநாடோறும் விலை குறைகின்றது.

These things are worth very little.	இந்தப் பொருள்கள்மிகவுங் குறைந்த விலையுள்ளன.
You had better advertize the sale.	நீர் விற்கிறதைஅறிவித்தால் நல்லது.
Cheating in weight and measures is a great sin.	நிறையிலும் அளவிலும் வஞ்சித்தல் பெரிய பாவம்.
Lying and deceiving in trade are sin.	வியாபாரஞ் செய்வதில் பொய்சொல்வதும் அணுப்புவதும் பெரிய பாவம்.
Tell the truth about the quality and quantity of your goods.	உன்னுடைய சாமான்கள் எவ்வகைப்பட்டதென்றும் எவ்வளவென்றும் உண்மையாகச்சொல்லு
The man who lies or deceives about the price of goods cheats himself.	பொருள்களின் விலையைக்குறித்துப்பொய்சொல்லிஅணுப்புகிற மனிதன் தன்னைத்தான் வஞ்சிக்கிறான்.
He who is honest in a little thing is honest in all.	அற்ப காரியத்தில்நிதார்த்தமாய் இருக்கிறவன் சகல காரியத்திலும் நிதார்த்தமாய் இருக்கிறான்.
Can you change a rupee?	ஒரு உருபா மாற்றக் கூடுமா?
Buy some fowls and some eggs if cheap.	மலிவானால் சிலகோழியும் முட்டையும் வாங்கு.

Bearers. — காக்காரர்.

How many bearers do you want?	உமக்கெத்தனைகாக்காரர் தேவை?

Do you take a palankeen or tomjon?	நீர் ஒரு பல்லாக்கெடுக்கிறீரா தோளானெடுக்கிறீரா?
I take a palankeen and want a full set of bearers.	நான் ஒரு பல்லாக்கெடுக்கிறேன், போதுமான காக்காரர் தேவை.
I shall want torches too.	எனக்குத் தீப்பெட்டிகளுந்தேவை.
Send for bearers immediately.	இப்போதே காக்காரரைக் கூப்பிடுவி.
How much should I give each?	நான் ஒவ்வொருதருக்கும் எவ்வளவு கொடுக்கவேண்டும்?
Give them two annas each for ten miles.	ஒவ்வொருத்தருக்கும் பத்துக் கட்டை தூரத்துக்கு இரண்டு அணாவாய்க் கொடு.
This palankeen is very heavy.	இந்தப் பல்லாக்கு மெத்தப் பாரமானது.
How far will the bearers go to-day?	காக்காரர் இன்றைக்கு எவ்வளவு தூரம் போவார்கள்?
How far is it to the rest house?	இதில் இருந்து தங்குமடம் எவ்வளவுதூரம்?
These bearers do not run fast.	இந்தக் காக்காரர் சுறுக்காய் ஓடுகிறார்களில்லை.
Some bearers carry very steadily, others jolt very much.	சில காக்காரர்திட்டமாய்க்கொண்டு போகிறார்கள், மற்றவர்கள் மெத்தத் துலுக்கிக்கொண்டு போகிறார்கள்.
The bearers have gone to eat. They	காக்காரர் சாப்பிடப் போய்விட்டார்கள். அவர்

will be here soon.	கள் சீக்கிரத்திலே வந்துவிடுவார்கள்.
It is time to go.	போக நேரமாயிற்று.
Take up the palankeen.	பல்லாக்கைத் தூக்குங்கள்.
Stop; put down the palankeen.	பொறுங்கள் பல்லாக்கைப்பணியஇறக்குங்கள்
I am very tired.	நான் மெத்த இளைத்துப்போனேன்.

Blacksmiths. — கொல்லர்.

What does a blacksmith do?	ஒரு கொல்லன் என்ன செய்கிறான்?
He makes all kinds of iron and steel instruments.	அவன் எல்லா விதமான இருப்பாயுதங்களும் உருக்காயுதங்களுஞ் செய்கிறான்.
Where is the bellows?	துருத்திகள் எங்கே?
The fire on the forge is very hot.	உலையிலுள்ள நெருப்பு மெத்த அனலானது.
Bring me some nails and a few screws.	கொஞ்ச ஆணிகளுஞ் சில சுரியாணிகளும் எனக்குக்கொண்டுவா.
Can you make the springs and irons of a bandy?	வண்டிலுக்கு வேண்டியவில்லுக்களையும் மற்றும் இருப்புக்கருவிகளையும் நீ உண்டாக்குவாயா?
What do you make coal of?	கரியை என்னத்தைக் கொண்டு உண்டாக்குகிறாய்?

The steel is good, but the iron is bad.	உருக்கு நல்லது, ஆனாலும் இரும்பு ஆகாது.
What is the price of this work?	இந்த வேலையின் கூலி என்ன?

Books. — புத்தகங்கள்.

Let me see your book.	உன் புத்தகத்தை நான் பார்க்கட்டும்.
How long has this book been printed?	இந்தப் புத்தகம் அச்சிற்பதித்து எவ்வளவு காலம்?
The book will be printed shortly.	அந்தப் புத்தகம் சுறுக்கிலே அச்சுப்போடப்படும்.
Can you get me another book?	எனக்குப் பின்னும் ஒரு புத்தகம் வாங்கித்தரக் கூடுமா?
That is an old book not worth half price.	அதொரு பழம் புத்தகம் அரை விலையும் பெறாது.
My book got wet and is almost spoiled.	எனது புத்தகம் நனைந்து பாதிக்குட் பக்கம் பழுதுபோயிற்று.
Keep your books and slates carefully, and use them every day.	உன்னுடைய புத்தகங்களையுங் கற்பலகைகளையும் பதனமாய்வைத்திருந்து ஒவ்வொரு நாளும் அவைகளை எடுத்துப் பாவி.
Never lay your book or slate down carelessly.	உன்னுடைய புத்தகத்தையாவது கற்பலகையையாவது கவலையீனமாய் வைத்துவிடாதே.

Books are easily damaged.	புத்தகங்கள் லேசுவாய்ப்பழுதுபண்ணப் படுகின்றன.
Slates and pencils are easily broken.	கற்பலகைகளும் அதின் எழுதுகோல்களும் லேசுவாய் முறிந்துபோகின்றன.
Read your books carefully, and understand them well.	உன் புத்தகங்களைக் கவனமாய்வாசித்து நன்றாய் விளங்கிக்கொள்.
Where can I get my book bound?	என் புத்தகத்தை எங்கே கட்டுவிக்கலாம்?
Books are bound very well in Madras.	சென்னைப் பட்டினத்திலே புத்தகங்கள் நேர்த்தியாய்க்கட்டப்படுகின்றன.
Did you ever see a book store?	நீ எப்பொழுதாகுதல் ஒரு புத்தக சாலையைக் கண்டதுண்டா?
Where is the printing office?	அச்சுக் கூடம் எங்கே?
Who keeps the book depository?	புத்தகச் சாலையைப் பராமரிக்கிறதார்?

Carpenters. — தச்சர்.

Call a carpenter to do this work.	இந்த வேலை செய்யும்படி ஒரு தச்சனைக் கூப்பிடு.
Here comes the carpenter.	இங்கே தச்சன் வருகிறான்.
Can you make a table?	நீ ஒரு மேசை செய்வாயா?

Yes, I can make tables, almyras, and chairs.	ஆம். நான் மேசைகளையும் அலுமாரிகளையும் நாற்காலிகளையுஞ் செய்வேன்.
Some carpenters hew the timbers, and some build the house.	சில தச்சர் மரம் வெட்டச் சில தச்சர் வீடுகட்டுகிறார்கள்.
Bring your adze, hammer and wimble.	உன்னுடைய வாய்ச்சியையும் சுத்தியலையும் திறப்பணத்தையும் கொண்டுவா.

Carriage. / பண்டி.

Horsekeeper, bring the carriage.	குதிரைக்காரா, பண்டியைக்கொண்டுவா.
This is a splendid carriage.	இதொரு அழகானபண்டி.
There were two servants behind the carriage.	அந்தப்பண்டியின் பிற்பறத்தில் இரண்டுபணிவிடைகாரர் இருந்தார்கள்.
His carriage broke down near the fort.	கோட்டைக்குக் கிட்ட அவனுடைய பண்டி முறிந்துபோயிற்று.
One wheel and the springs broke.	ஒரு சில்லும் வில்லுக் களும் முறிந்துபோயின.
Riding out to-day I fell from my chaise.	இன்று குதிரை வண்டிலேறி உலாத்தப்போனபொழுதுவிழுந்துவிட்டேன்
Send for the carpenter and blacksmith and mend this bandy.	தச்சனையுங் கொல்லனையும் அழைப்பித்து இந்த வண்டிலைப் பழுதுபார்ப்பி.

I want two ox bandies for my baggage.	சாமான் சுமைகளை ஏற்ற எனக்கிரண்டு மாட்டு வண்டில் தேவை.
How much will an ox bandy cost?	ஒருமாட்டுவண்டில் என்ன பெறும்?
What must I give for carrying a load ten miles?	பத்துக் கட்டை தூரத்துக்கு ஒரு சுமை கொண்டுபோக என்ன கொடுக்க வேண்டும்?

Cook: சமைத்தல்.

He cooks for himself because he has no servant.	வேலைகாரன் இல்லாதபடியால் தான்தானே சமைத்து கொள்ளுகிறான்.
He is a very good cook.	அவன் மெத்த நல்ல சமையற்காரன்.
Cook, boil the water and make tea quickly.	சமையற்காரா, தண்ணீரைச் சுட வைத்து சீக்கிரந் தேயிலையை அவி.
Roast a chicken and fry a little fish.	ஒரு கோழிக்குஞ்சைப் பொரித்து ஒரு சிறுமீனைச் சுடு.
Why is breakfast so late to-day?	இன்றைக்குக் காலச் சாப்பாட்டுக்கு ஏன் இவ்வளவுநேரஞ்சென்றுபோயிற்று?
The cook has no wood to make a fire.	நெருப்பு மூட்டச்சமையற்காரனுக்கு விறகு இல்லை.
Can this cook make bread and cakes?	இந்தச் சமையற்காரன் அப்பமும் பலகாரமுஞ் சுடுவானா?

He can make good soups and curries. — அவன் நல்ல கறியும் ஆணமுஞ் சமைப்பான்.

This curry is very hot. — இந்தக் கறி மெத்த உறைப்பாய் இருக்கிறது.

Coolies. — வேலைக்காரர்.

Call a cooly to do this. — இதைச் செய்யும்படி ஒரு வேலையாளைக் கூப்பிடு.

I want four coolies to work to-day. — இன்றைக்கு வேலைசெய்யும்படி எனக்கு நாலு வேலைகாரர் தேவை.

Where are the coolies? — கூலிக்காரர் எங்கே?

Who brought these goods? — இந்தச் சாமான்களைக் கொண்டு வந்ததார்?

Coolies who work hard should be well paid. — பிரயாசப்பட்டு வேலை செய்கிற கூலியாட்கள் நல்ல கூலி பெற வேண்டும்.

They should cheerfully obey their employers. — அவர்கள் தங்கள் எசமான்களுக்குச் சந்தோஷமாய்க் கீழ்ப்படிய வேண்டும்.

Employers should treat coolies kindly. — எசமான்கள் வேலைகாரரைப் பட்சமாய் நடத்த வேண்டும்.

Kindness has great power even over beasts. — பட்சம் மிருகங்களையும் கீழ்ப்படியப்பண்ணும்.

Court.	நியாயத்தலம்.
At what time is the court opened?	நியாயத் தலம் எந்நேரந் துவங்குகின்றது.
I have received notice to attend the court at ten o'clock.	பத்து மணிக்கு நியாயத் தலத்துக்கு வர வேண்டுமென்று எனக்குக் கட்டளை கிடைத்தது.
Have you summoned your witnesses?	நீ உன் சாட்சிகளைச் சித்தாரித்திருக்கிறாயா'
He was arrested for debt and put in prison by the chitty.	அவன் கடன்காரனாகச் செட்டியால் மறித்துப் பிடிக்கப்பட்டு மறியலில் வைக்கப்பட்டான்
He was apprehended and put in prison.	அவன் பிடிபட்டு மறியலில் வைக்கப்பட்டான்.
Appearing before the court he was much agitated.	நியாயத் தலத்தில் வந்து அவர் மெத்தப் பதறிப் போனார்.
He has been tried and acquitted.	அவன் சோதிக்கப்பட்டு விடுதலை பெற்றுக்கொண்டான்.
The plaintiff was nonsuited.	வழக்காளியின் துரற்சி பெறமற்போயிற்று.
Do you mean to prosecute him for this offence?	இந்தப் பிழைக்காக அவரைத் தொடர்ச்சிபண்ண நினைக்கிறீரா?
I can prove this to be true.	இது மெய்யென்று நான் ஒப்பனை பண்ணக் கூடும்.
There were many witnesses, but they did not agree.	வெகு சாட்சிக்காரர் இருந்தார்கள், ஆனாலும் அவர்கள் ஒன்றுபடச் சொல்லவில்லை.

Some of the witnesses contradicted themselves.	அவர்களிற் சிறிதுபேருடைய சாட்சி புரண்டு போயிற்று.
The proctor who cross-examined the witnesses was a clever man.	அந்தச் சாட்சிக்காரரைக் குறுக்குக் கேள்வி கேட்ட தரணி கூர்மையுள்ளவன்.
The case was tried in the supreme court.	அந்தவழக்கு மேற்கோட்டிலே விசாரிக்கப்பட்டது.
If we are not prompt at court, the judge will fine us.	நாம் நீதித்தலத்துக்கு நேரத்துக்குப் போகாதிருந்தால் நீதவான் நமக்குக் குற்றம்போடுவார்.
I shall attend the court to-morrow.	நான் நாளைக்கு நீதித்தலத்துக்குப் போவேன்.
Two of the men were sentenced to be hung.	அந்த மனிதரில் இரண்டுபேர் தூக்கப்படத் தீர்க்கப் பட்டார்கள்.
The other two were transported for life.	மற்ற இருவரும் சீவனுள்ள அளவும் புறத் தேசத்துக்கென்று ஏற்றப்பட்டார்கள்.

Dhony or *ship*. — மரக்கலம், கப்பல்.

I want to hire this dhony.	நான் இந்தத் தோணியைக் கேள்வுக்குப் பிடிக்க வேண்டும்
Tell them to load the boat.	அவர்களை அந்தத்தோணியில் ஏற்றச்சொல்லு.

I have ordered the goods to be got ready.	அந்தச் சரக்குகளைச் சேகரப்படுத்தி வைக்க வேண்டுமென்று கட்டளையிட்டேன்.
We must pull the boat along with a rope.	இந்தத் தோணியை நாம் கயிறுபோட்டிழுக்கவேண்டும்.
The ship will be launched to-morrow.	அந்தக் கப்பல் நாளைக்குக் கடலில் விடப்படும்.
Do you intend to insure that vessel?	அந்தக் கப்பலுக்கு உத்தரவாதங் கேட்க நினைக்கிறீரா?
Clear these goods and ship them.	இந்தச் சரக்குக்குத் தீர்வைகொடுத்து அவைகளைக் கப்பலிலேற்று.
The cargo was consigned to him.	அக்கப்பலில் ஏற்றின சரக்குகளை அவரிடத்தில் ஒப்புவிக்க வேண்டியது.
A large quantity of indigo has been exported this month.	இந்த மாதம் வெகு நீலக்கட்டிகள் ஏற்றப்பட்டது.
These goods have been imported from Europe.	இந்தச் சரக்குகள் ஐரோப்பாவில் இருந்து வந்தன.
When do you mean to land?	எப்பொழுது கரைக்கிறங்க நினைக்கிறீர்?
He fell overboard and was drowned.	அவர் தோணியில் இருந்து விழுந்து அமிழ்ந்திப் போனார்.
The same ship was off the pearl fishery.	அந்தக் கப்பல் சலாபத்திலே வந்து பொறுத்துப்போயிற்று.

The ship was totally lost off Madras.	அந்தக் கப்பல் சென்னை பட்டினத்துக்குக் கிட்டச் சேதம்போய்விட்டது.
The crew had abandoned the ship.	கப்பலாட்கள் அந்தக் கப்பலை விட்டு விட்டார்கள்.
The ship was becalmed four days.	அந்தக் கப்பல் நாலுநாளாய்க் காற்றில்லாமல் தாமதப்பட்டது.
It is high water, the vessel will now float.	இப்பொழுது கடல் பெருக்து, தோணி மிதக்கும்.
We must lighten the boat, otherwise it will sink.	நாம் தோணியிற் பாரத்தைக் குறைக்க வேண்டும், அல்லது அது அமிழ்ந்தீப்போம்.
The ship is very large and has good accommodations.	அந்தக் கப்பல் மகா பெரியதும் நல்ல வசதியுமுள்ளதாய் இருக்கின்றது.

Eating. — சாப்பிடுதல், உண்ணல்.

I am very hungry.	நான் மெத்தப் பசியாய் இருக்கிறேன்.
Bring me some food	எனக்குத் கொஞ்சம் போசனங்கொண்டுவா.
Can you bring some milk?	கொஞ்சப் பால் கொண்டுவருவாயா?
I will soon make dinner ready.	நான் பகற் சாப்பாட்டைச் சுறுக்கு ஆயத்தம் பண்ணுவேன்.
Bring me a knife and fork.	எனக்கொரு கத்தியும் முள்ளுங் கொண்டுவா.

I cannot eat without a plate.	ஒரு வட்டில் இல்லாமல் நான் சாப்பிடக் கூடாது.
I have a good appetite.	எனக்குச் சாப்பிட மெத்த விருப்பமாயிருக்கின்றது.
This bread is very good.	இந்த அப்பம் மெத்த நல்லது.
Garden.	தோட்டம்.
Amuse yourself a while in the garden.	தோட்டத்திலே சற்றுப் பராக்காய் இரும்.
Will you permit me to walk in your garden?	உமது தோட்டத்திலே நான் உலாவ விடுவீரா?
This plant will soon blossom.	இந்தப் பூடு சுறுக்குப் பூக்கும்.
These trees are beginning to bud.	இந்த மரங்கள் தளிர்க்கப் போகின்றன.
We must pluck up all these weeds.	இந்தக் களைகள் எல்லாவற்றையும் நாம் பிடுங்கிப்போட வேண்டும்.
Go and fetch me some fruit out of the garden.	தோட்டத்திலுள்ள பழங்களிற் சில கொண்டுவா.
This garden produces nothing but weeds.	இந்தத் தோட்டத்திற் செடியல்லாமல் வேறொன்றும்உண்டாகிறதில்லை
Call the gardener and draw some water.	தோட்டக்காரனைக் கூப்பிட்டுத் தண்ணீர் அள்ளுவி.

All the plants wither for want of water.	பயிர் எல்லாந் தண்ணீர் இல்லாமல் வாடிப் போகின்றன.
Cocoanut trees are much higher than jack and mango trees.	பலாமரத்திலும் மாமரத்திலும் தென்ன மரம் அதிகம் உயரமானது.
Have you no vines in the garden?	உன் தோட்டத்திலே முந்திரிகைச் செடியில்லையா?
These clusters are very ripe and sweet.	இந்தக் குலைகள் மிகப் பழுத்ததும் இனிமையானதுமாய் இருக்கின்றன.
The garden is full of flowers.	தோட்டம் புட்பங்களால் நிறைந்திருக்கின்றது.
These flowers are very fragrant.	இந்தப் புட்பங்கள் மிகுந்த வாசனையுள்ளன.

Harvest. — அறுப்பு, வெட்டுவேளாண்மை.

We reap paddy with a sickle.	நாம் அரிவாளால் அரிவி வெட்டுகிறோம்.
Of some grains we gather the ears.	சில தானியங்களைக் கதிராய்க்கொய்கிறோம்.
We thresh some grain with sticks.	சில தானியத்தைநாம் கோலால் அடிக்கிறோம்.
Some grain is trodden out by cattle.	சில தானியம் மாடுகளால் மிதிக்கப்படுகின்றது.
Put the straw in stacks and carry the grain home.	வைக்கோலைக் குவித்துத் தானியத்தை வீட்டுக்குக்கொண்டுபோ.

The harvest is poor on account of the drought.	மழை இல்லாததினாலே வெள்ளாண்மை குன்றிப்போயிற்று.
The harvest is cut off and there will be a famine.	வெள்ளாண்மை அழிந்துபோயிற்று, பஞ்சம் உண்டுபடும்.
The rain is abundant and the crops are fine.	மழையும் மிகுதி விளைவுந் திறம்.
The harvest is plenteous but the reapers are few.	அறுப்பு மிகுதி, வேலையாட்களோகொஞ்சம்.

Heaven and Hell. — மோட்சமும் நரகமும்.

We ought to fear God more than man.	நாம் மனிதனைப் பார்க்கப் பராபரனுக்குப் பயப்பட வேண்டும்.
Fear God, honor the king.	கருத்தாவுக்குப் பயப்படு, இராசாவைச் சங்கை பண்ணு.
Those who fear God will obtain eternal happiness.	பராபரனுக்குப் பயப்படுகிறவர்கள் நித்திய சந்தோஷத்தை அடைவார்கள்.
Can you inform me how the heart may be purified?	இருதயத்தைச் சுத்தமாக்கிறதற்கு ஒரு வழி சொல்லுவீரா?
We usually kneel when we pray to God.	பராபரனை வேண்டுதல் பண்ண முழங்காற்படியிடுகிறது எங்கள் வழமை.

Let us all strive to go to heaven.	நாம் எல்லாரும் மோட்சஞ் சேரத் தெண்டிப் போமாக.
Heaven is a glorious and happy place.	மோட்சம் மகிமையுஞ் சந்தோஷமுமான இடம்.
Heaven is the place where God and angels dwell.	மோட்சம் பராபரனும் தேவதூதர்களும் இருக்கும் இடம்.
The glory of God and of the Lamb is the light of heaven.	பராபரனுடைய மகிமையும் ஆட்டுக் குட்டியுடைய மகிமையுந்தான் மோட்சத்தின் வெளிச்சம்.
If you want to go to heaven you must be holy.	நீ மோட்சஞ் சேர வேண்டுமேயாகில் பரிசுத்தமாக வேண்டும்.
Jesus Christ himself is the way to heaven.	இயேசுக் கிறிஸ்துநாதர் தாமே மோட்சத்தின் வழியாய் இருக்கிறார்.
He is the way, the truth and the life.	அவரே வழியுஞ் சத்தியமுஞ் சீவனுமாய் இருக்கிறார்.
Those who do not believe in Christ must go to hell.	கிறிஸ்துவை விசுவாசியாதவர்கள் நரகத்துக்குப் போக வேண்டும்.
Hell is the place of torment.	நரகம் உவாதியான இடம்.
Hell was prepared for the devil and his angels.	நரகம் பசாசுக்கும் அவன் தூதருக்குமாக ஆயத்தம் பண்ணப்பட்டது.
Does our daily conduct lead to heaven or to hell?	நாம் நாடோறும் நடந்துகொள்ளுகிற நடக்கை மோட்சத்துக்கோ நரகத்துக்கோ ஏதுவாயிருக்கிறது?

House.	வீடு.
Cannot this house be enlarged?	இந்த வீட்டைப் பெரிதாகக் கட்டக் கூடாதா?
I will inquire and let you know.	நான் விசாரித்து உமக்குச் சொல்லுவேன்.
This house is to be let.	இந்த வீடு வாடைக்கு விடப்படும்.
Inquire at No. 6 king's street.	அதை இராசா வீதியில் ஆறும் வீட்டிலே விசாரிக்கவும்.
She has let her house for six months.	அவள் தன் வீட்டை ஆறுமாதத்துக்கு வாடைக்குக் கொடுத்து விட்டாள்.
After another month I shall have occupied this house twenty years.	இன்னம் ஒரு மாதஞ் செல்ல இந்த வீட்டிலே நான் வந்து இருபது வருஷம்.
Have you oiled the lock of that door?	அந்தக் கதவிற் பூட்டிற்கு எண்ணெய் போட்டீரா?
The windows are so small that one can but just peep through them.	அந்தப் பலகணி மிகவுஞ் சிறிது பார்த்தாலும் பார்வை யோடாது.
The house is perfumed by the fragrance of these flowers.	இந்தப் புட்பங்களுடைய வாசனை இந்த வீடு முழுதுங் கமழுகின்றது.
The inside walls are plastered with chunam.	உட்சுவருக்குச் சாந்து பூசப்பட்டிருக்கின்றது.

I prefer his house to yours.	உன் விட்டிலும் அவர் வீடு நல்லதென்கிறேன்.
I could not prevail upon him to remain here longer.	இன்னம் இங்கே இருக்கும்படிக்கு அவரை மறிக்கக் கூடாமற்போயிற்று.
If I had sufficient money I should h ve purchased the house.	எனக்கு அந்த வீடுகொள்ளத் தக்க பணம் இருந்தாற் கொள்ளுவேன்.
When do you mean to quit this house?	இந்த வீட்டில் இருந்து எப்பொழுது எழும்ப நினைக்கிறீர்?
The house has been rebuilt.	அந்த அழிந்த வீடு கட்டப்பட்டிருக்கின்றது.
I wish to renew the lease of my house.	என் வீட்டுக்கு மறுவாடைச் சீட்டு எழுதுவிக்க விரும்புகிறேன்.
The house is not my own, I only rent it.	அந்த வீடு என்னுடையதல்ல, வாடைக்கு வாங்கினது.
The house is old, but the furniture is new.	வீடு பழையது, அதின் தட்டுமுட்டுக்கள் புதிது.
I will sell or rent the whole.	நான் முழுதையும் விற்பேன், அல்லது குத்தகையாய்க் கொடுப்பேன்.
It is too small for my family.	அது என் சமுசாரத்துக்குப் போதாது.
Love and kindness will make us happy even in a small house.	நாஞ் சிறு வீட்டில் இருந்தாலும் அன்பும் பட்சமும் நமக்கிருந்தாற் சந்தோஷம் உண்டு.

Heavcn is sometimes called a house.	மோட்சஞ் சிலவேளை வீடென்று சொல்லப்படுகின்றது.
Alas! how few regard eternity!	ஐயோ! மறுலோகத்தை வெகுபேர் நினைக்கவில்லையே.
We must soon leave this earthly house.	நாம் இந்தப் பூமிக்கடுத்த வீட்டைச் சீக்கிரம் விட்டுவிட வேண்டும்.

Jewelry: ஆபரணம்.

Where does the goldsmith live?	தட்டான் இருக்கிறதெங்கே?
He is an excellent workman.	அவன் ஒரு நல்ல வேலைகாரன்.
This gold is not good.	இந்தப் பொன் நல்லதல்ல.
What is the quality of this gold?	இதெத்தனை மாற்றுப் பொன்.
This gold is the fifth quality.	இது ஐந்து மாற்றுப்பொன்
I can refine it and make it pure gold.	நான் அதை அறவைத்துச் சுத்தப் பொன்னாக்குவேன்.
The gold smith refines it in a crucible.	தட்டான் அதைக் குகைக்குள் வைத்து அறவைக்கிறான்.
He makes the fire very hot and melts it.	அவன் நெருப்பை அனலாய் மூட்டிப் பொன்னை உருக்கிறான்.
Many jewels make people proud.	மிகு ஆபரணம் சனங்களைப் பெருமைகொள்ளப் பண்ணுகின்றது.

Some people wear rings on their fingers.	சிலர் தங்கள் கை விரல்களில் மோதிரம் அணிகிறார்கள்.
Women wear necklaces, and also jewels in their ears.	பெண்கள் கழுத்திலே மணியும் காதிலே கடுக்கனும் அணிகிறார்கள்.
He has pledged his jewels.	அவன் தன் ஆபரணங்களை அடகு வைத்துவிட்டான்.
They have many jewels but they do not wear them.	அவர்களிடத்தில் வெகு ஆபரணம் உண்டு. ஆனாலும் அவர்கள் அவைகளை எடுத்து அணிகிறதில்லை.
Sometimes thieves steal jewels.	சிலவேளை கள்வர் ஆபரணங்களைத் திருடுகிறார்கள்.
The brightest and most valuable jewel is true religion.	மெய்த் தேவபத்தி அதிக ஒளியுள்ளதும் விலைபெற்றதுமான ஆபரணமாய் இருக்கின்றது.

Journey. — பிரயாணம்.

When do you mean to depart?	எப்பொழுதுபிரயாணம்போக நினைத்திருக்கிறீர்?
It depends upon the state of my health.	அது என் சுகத்துக்குத் தக்கதாயிருக்கும்.
To go there I must hire a palankeen and a boat.	அங்கேபோக ஒரு பல்லாக்குந் தோணியுங்கூலிக்கு நான் வாங்க வேண்டும்.
They are preparing	அவர்கள் இங்கிலாந்து

to go to England.	க்குப் போக ஆயத்தம்பண்ணுகிறார்கள்.
I presume, sir, that you have lately arrived in this country.	ஐயா, நீர் இந்தஊருக்கு வந்தது கொஞ்ச நாளென்று நினைக்கிறேன்.
Tell the coachman not to drive so fast.	அவ்வளவு சுறுக்கு விடவேண்டாமென்று பண்டிக்காரனுக்குச்சொல்லு
We must quicken our pace if we wish to arrive there this evening.	நாம் இன்று சாயந்தரம் அங்கேபோய்ச் சேருகில் சுறுக்கு நடக்க வேண்டும்.
It is a week's journey.	அது ஒரு கிழமைப் பிரயாணம்.
I can go there in four days.	நான் அங்கே நாலு நாளைக்குள்ளே போகக் கூடும்.
You must take food and clothing.	நீ உண்ண உடுக்க வேண்டும்.
Are there any rest houses?	அங்கே யாதொரு சத்திரங்கள் உண்டா?
The government rest houses are very good.	அரசாட்சியார் கட்டுவித்த சத்திரங்கள் வெகு திறம்.
You may get milk and butter and fowls.	நீ பாலும் வெண்ணெயும் கோழியும் வாங்கு.
It is a long tiresome journey.	அது வெகுதூரம் அலைக்களிவான பிரயாணம்.
The journey to Benares is very pleasant	காசிக்குப் பிரயாணம் பண்ணுதல் வெகு சந்தோஷமானது

Money.	பணம்.
If I had money I would buy a house.	என்னிடத்திற் பணம் உண்டானால் ஒரு வீடு கொள்ளுவேன்.
A house and garden and fields are worth more than money.	பணம் வைத்திருக்கிறதைப் பார்க்க வீடுந் தோட்டமும் வயல்களும் இருப்பது அதிக திறம்.
I will give a hundred rix dollars.	நான் நூறு இறைசால் கொடுப்பேன்.
100 Rix Dollars are 75 Rupees.	நூறிறைசால் எழுபத்தைந்து ரூபா
Do you wish to borrow money?	பணம் கடன் வாங்க விரும்புகிறாயா?
I will lend you a pound.	நான் உனக்கொரு பவுண் கடனாகக் கொடுப்பேன்.
I will give you a draft for 200 rupees.	நான் உனக்கு இருநூறு ரூபாவின் உண்டியல் ஒன்று தருவேன்.
You ought to have endorsed the bill.	நீர் இந்த உண்டியலுக்குக் கையெழுத்துப்போட வேண்டியது.
That is counterfeit money.	அது கள்ளப்பணம், அல்லது செல்லாப்பணம்.
In notes rupees and pice I have in hand 10 pounds.	நோட்டு, உருபா, துட்டுகளாக பத்துப் பவுண் என் கையில் உண்டு.
Altogether the bill will amount to 50 rupees.	அந்தக் கணக்குஆக ஐம்பது உருபாவுக்கு வரும்.

Can you advance me this sum?	இவ்வளவு பணம் நீர் எனக்குத் தரக் கூடுமா?
He is now able to discharge his debts.	இப்பொழுது அவன் தன் கடன் இறுக்கக் கூடியவனாயிருக்கிறான்.
They allow five per cent discount for ready money.	கைப்பணத்துக்கு நூற்றுக்கைந்து கழித்து விடுகிறார்கள்.
He amassed great wealth.	அவர் வெகு திரவியஞ் சேர்த்தார்.
His riches are much increased.	அவருடைய பாக்கியம் மிகவும் அதிகப்பட்டிருக்கின்றது.
I was amazed at the amount.	அந்தத் தொகையை நினைத்து நினைத்து ஆச்சரியப் பட்டேன்.
I want some money: where can I borrow?	எனக்குக் கொஞ்சப் பணம் வேண்டும். எங்கே கடன் வாங்கலாம்?
He was bribed to commit that fault.	அந்தக் குற்றத்தைச் செய்ய அவனுக்குக் கைக்கூலி கிடைத்தது.
Who defrays the expense of his learning?	அவரைப் படிப்பிக்கிறதற்குச் செலவு கொடுக்கிறவரார்?
I suppose you have misreckoned these rupees, count them again.	இந்த ரூபாக்களைமோசமாய் எண்ணிப்போட்டாயென்று நினைக்கிறேன். மறுபடி எண்ணு.
Keep this money for me till I shall want it.	இந்தப் பணத்தை வைத்திருந்து எனக்குத் தேவையான வேளை தா.

This coin does not pass in Bengal.	இந்தக் காசு வங்காளத்திற் செல்லாது.
Call at my house today and I will pay you.	இன்றைக்கு என்வீட்டுக்கு வந்தாற் கடனைத் தீர்த்துப்போடுவேன்.
Have you reckoned what these things will come to?	இவைகள் எவ்வளவுக்கு வருமென்று கணக்குப்பார்த்தீரா?
I have very much reduced my expenses.	என் செலவை நான் மிகவுங் குறைத்துக்கொண்டேன்.
He will be obliged to refund this sum.	இந்தப் பணம் அவன் மறுபடி கொடுக்க வேண்டிவரும்.
Can you lend me two hundred rupees? I will repay you in ten days.	நூறு ரூபா எனக்குக் கடனாய்த் தருவீரோ? பத்து நாளையிலே தந்துவிடுவேன்.
He laid by what remained of his wages.	தன் சம்பளத்திலே மிஞ்சினதை வைத்திருந்தான்.
By laying aside all his profits he became rich.	கிடைத்த ஊதியங்களைக் கூட்டிக் கூட்டிப் பாக்கியவானானான்.
I paid the money before the note became due.	அந்தச் சீட்டில் எழுதின தவணைக்கு முன்னே நான் பணங் கொடுத்துவிட்டேன்.
Having paid every one I have no concern on that account.	எல்லாருக்குங் கொடுத்துத் தீர்த்துப் போட்டபடியால் அதிலே எனக்கு உடந்தையில்லை.

He put all the money he saved into the bank.	அவன் தேடினபணம் எல்லாங் காசுக்காரர் வசங்கொடுத்தான்.
Having put his money into the bank he receivos interest.	அவர் தமது பணம் காசுக்காரர் கையிற் கொடுத்து வட்டி வாங்குகிறார்.
What is the rate of exchange?	என்னவிதமாய் மாற்றுவது?
Please change this pound note and give me silver.	இந்தப் பவுண் நோட்டை மாற்றி வெள்ளி நாணயமாகத் தா.
You must give me a premium for changing it.	அதை மாற்றுவதற்காக நீ எனக்கு வட்டங்கொடுக்க வேண்டும்.
Money is very scarce.	பணம் மெத்த அரிதாய் இருக்கிறது.
He refuses to lend the money without interest.	வட்டி இல்லாமற் பணங் கடன் கொடுக்க மாட்டாராம்.
Always pay your debts when they are due.	கொடுக்க வேண்டிய காலத்திலே உன் கடனைக் கொடுத்துத்தீர்.

Rain. — மழை.

It rains very fast.	மழை மிகவும் உரத்துப் பெய்கிறது.
He went from Oodooville to Nellore in the midst of the rain.	அவர் உடுவிலில் இருந்து நல்லூருக்கு மழைக்குள்ளே போனார்.
The rain will be at	நான் இந்த வயல் உழ

hand by the time I shall have ploughed this field.	து முடிய முன் மழை வந்து விடும்.
The rain comes through the roof.	சாய்ப்பிலே ஒழுக்கு விழுகின்றது.
It rains fast, otherwise I would go now.	பெலனாய் மழை பெய்கிறது அல்லாதிருந்தால் இப்பொழுது போவேன்.
The whole country has been inundated.	ஊர் முழுதும் வெள்ளமெடுத்தது.
The early and the latter rains have been light.	முன்மாரியும் பின்மாரியுஞ் சொற்பமானதாய் இருந்தது.
You had better take your umbrella. It may rain.	மழை பெய்யும், உன் குடையைக் கொண்டு போவாயேயாகில் நல்லது.
Do not go in the rain. You will be sick.	மழையிலேபோகாதே. போவாயேயானால் உனக்குத் துன்பம் வரும்.
It rained very hard yesterday.	நேற்று மழை மெத்தப் பெய்தது.

Relatives. — சுற்றத்தார்.

His relatives are all heathen.	அவனுடைய சுற்றத்தார் எல்லாரும் விக்கிரகபத்திக்காரர்.
They persecute him very much.	அவர்கள் அவனை மெத்தத் துன்பப் படுத்துகிறார்கள்.

My uncle and aunt are christians.	அம்மானும் மாமியும் கிறிஸ்தவர்கள்.
Many of my relations have joined the church.	என்னுடைய இனத்தாரில் அநேகர் திருச்சபையிற் சேர்ந்திருக்கிறார்கள்.
Where does your father live?	உன் பிதா எங்கே இருக்கிறார்?
My father and mother both live in town.	என் பிதாவும் மாதாவும் பட்டினத்தில் இருக்கிறார்கள்.
I have one brother and one sister who live in the country.	எனக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உண்டு அவர்கள் நாட்டிலே இருக்கிறார்கள்.
My cousin and nephew are at the seminary.	என் மைத்துனனும் மருமகனும் சாத்திரப் பள்ளிக்கூடத்தில் இருக்கிறார்கள்.
His father died while at Madras.	அவனுடைய பிதா சென்னைப்பட்டினத்தில் இருந்த போது மரித்து விட்டார்.
I was quite a child when my mother died.	என் மாதாக் காலஞ்சென்றபோது நான்மெத்தச் சிறுபிள்ளையாய் இருந்தேன்.
Rivers.	**நதி, ஆறு.**
Rivers flow from the mountains to the sea.	நதிகள் மலைகளில் இருந்து கடலுக்குப் பாய்கின்றன.

There is a bridge thrown over the river.	அந்த ஆற்றுக்கு மேலே ஒரு பாலங் கட்டப்பட்டிருக்கின்றது.
The water flows under the bridge.	அந்தப் பாலத்துக்குக் கீழே நதி பாய்கிறது.
The river flows close by his house.	அந்த ஆறு அவர் வீட்டருகாய்ப் பாய்கிறது.
The river has overflowed its banks.	அந்த ஆறு கரைகளை மூடிப் பாய்ந்தது.
The rains on the mountains are very heavy and the rivers high.	மலைகளின் மேற் பெருமழை பொழிகின்றதால் ஆறுகளும் மிதந்துபாய்கின்றன.
He was drowned in the river.	அவன் ஆற்றிலே அமிழ்ந்திப்போனான்.
The Ganges is a large and long river.	கங்கை நதி விஸ்தாரமும் நீளமுமானது.
There are many rivers in the world larger than the Ganges.	கங்கை நதியைப் பார்க்கப்பெரிய ஆறுகள் உலகத்திலே அநேகம் உண்டு
Many rivers in India are small in the dry season.	இந்து தேசத்திலுள்ள ஆறுகளில் அநேகம் கோடைகாலத்திற் சிறிசாய் இருக்கின்றன.
It is pleasant walking by the side of the river.	ஆற்றோரத்தில் நடக்கிறது மெத்தச் சவுக்கியம்.

Sickness and Medicines — நோயும், மருந்தும்.

All men are liable to be sick.	எல்லா மனிதரும் துன்பத்துக்கு ஏதுவாய் இருக்கிறார்கள்.

When I was ill and weak he came to see me.	நான் துன்பமாய்ப் பெலன் கெட்டிருந்த போது அவர் என்னைப் பார்க்க வந்தார்.
He said to me, how do you do, sir?	ஐயா, சுகமாயிருக்கிறீரா வென்று அவர் என்னைக் கேட்டார்.
I hope you are well.	நீர் சுகமாயிருக்கிறீரென்று நம்புகிறேன்.
I replied I am much better than I was.	எனக்கு முனிருந்ததிலும் இப்பொழுது சகாயமாய் இருக்கிறதென்றேன்.
By the blessing of God I am almost recovered.	கர்த்தாவுடைய கிருபைகளாலே கிட்டத்தட்ட சுயமடைந்தேன்.
Did you take much medicine?	நீர் கன மருந்து தின்றீரா?
I have heard that he is dangerously ill.	அவர் வருத்தமான வியாதியாய் இருக்கிறார் என்று கேள்விப்பட்டேன்.
He still continues very poorly.	அவர் இன்னஞ் சுகயீனமாய்த்தான் இருக்கிறார்.
He caught a fever by exposing himself to the sun.	வெய்யிலிலே திரிந்ததினால் அவருக்குக் காய்ச்சல் வந்தது.
In what manner does this medicine operate?	இந்தமருந்து என்ன செய்யும்?
He always does contrary to the doctor's order.	அவர் எப்போதும் பரிகாரி சொல்வதற்கு எதிராய்ச் செய்கிறார்.
I have been cured by that physician.	அந்தப் பரிகாரியாற் சுகமானேன்.

His wound is now healed.	அவருக்கு இப்பொழுது காயஞ் சுகமாய் விட்டது.
She was for some days indisposed and unable to go out.	கொஞ்சநாள் அவள் சுகயீனமாய் வெளியேபோகக் கூடாமலிருந்தாள்.
His health has been injured by too great exertions.	அதிக பிரயாசத்தினாலே அவருக்குச் சுகயீனம் வந்தது.
He broke his leg and was obliged to have it amputated.	அவன் தன் காலை முறித்துக்கொண்டான். அதனால் அதை வெட்டித் தள்ளிப் போட வேண்டியதாயிருந்தது
It is easy to get sick but hard to get well.	துன்பமாக்கிக்கொள்வது இலேசு. சுகமாக்கிக் கொள்வது வருத்தம்.
Health is a great blessing.	சுகம் ஒரு பெரிய நன்மை.
God gives us health and every other blessing.	பராபரன் நமக்குச் சுகத்தையும் மற்றும் ஒவ்வொரு நன்மையையும் கொடுக்கிறார்.
Medicine will do very little good, unless we are careful in our diet.	நாம் கவனமாய்ப் பத்தியம் பிடியாதிருந்தால் மருந்து நமக்கு மெத்தச் சித்தியாது.
Light food, and even abstinence will often cure us.	அற்பபோசனஞ் சாப்பிடுதல் அல்லது சாப்பிடாதிருக்குதல்தானும் நம்மைச் சுகமாக்கும்.
Give me a dose of medicine.	எனக்கு ஒரு முறை குடிக்க மருந்துதாரும்.

It is not good to take much medicine.	மிகுதியாய் மருந்து தின்பது நல்லதல்ல.
He came to me for a dose of medicine.	ஒரு முறை தின்னத் தக்க மருந்து தரச் சொல்லி அவர் என்னிடத்தில் வந்தார்.
A little medicine is sometimes very necessary.	கொஞ்ச மருந்து சில வேளை மெத்தத் தேவையாய் இருக்கிறது.
The physician will come and prescribe.	பரிகாரி வந்து செய்ய வேண்டியதின்னதென்று சொல்லுவார்.
There are no remedies for such a disease.	அப்படிப்பட்ட வியாதிக்கு மாற்று மருந்தில்லை.
His fever is very high and his pulse low.	அவருக்குக் காய்ச்சல் கடிசு, கைநாடியும் விழுந்து போயிற்று.
If you wish to preserve health, be carefull about your food.	நீ சுகத்தை விரும்பினுல், உன் சாப்பாட்டிற் பத்திரமாயிரு.
That medicine is not good for this complaint.	அந்த மருந்து இந்த வியாதிக்கு நல்லதல்ல.

Situation. — உத்தியோகம்.

I want to get a situation.	நான் ஒரு உத்தியோகம் பெற வேண்டும்.
What employment do you want?	உனக்கு என்ன உத்தியோகம் வேண்டும்?
I have engaged him as my servant.	நான் அவனை என் பணிவிடைகாரனுகக் கூப்பிட்டுக் கொண்டேன்.

I would not exchange situations with you.	என் நிலையை விட்டு உன் நிலையில் நிற்க எனக்குப் பிரியம் இல்லை.
You must forfeit one rupee for doing this.	இது செய்ததற்காக உனக்கு ஒருரூபாத்தெண்டம்.
I cannot afford to give so much wages.	அவ்வளவு சம்பளம் நான் கொடுக்கக் கூடாது.
Give me as much only as will enable me to live.	நான் சீவனம் பண்ணத் தக்க அளவுதாரும்.
I am not permitted to give more than a hundred rupees.	நூறு ரூபாவுக்குமேலே கொடுக்க எனக்கு உத்தரவில்லை.
Ten rupees were added to his salary.	அவருக்கு பத்து ரூபா அதிகஞ் சம்பளங் கொடுக்கப்பட்டது.
In this way I can earn ten rupees a month.	இவ்விதமாய் ஒரு மாதம் பத்து ரூபா எனக்குக் கிடைக்கும்.
Does this account include last month's expenses?	போன மாதச் செலவும் இந்தக் கணக்கிலே அடங்கியிருக்குமா?
I would rather be an accountant than a writer.	எழுத்துக் காரியஸ்தனாய் இருப்பதிலும் கணக்கப் பிள்ளையாய் இருப்பது எனக்குப் பிரியம்.
His situation is very lucrative.	அவனுடைய உத்தியோகம் மிகு வரத்துள்ளது.
Though his situation is a good one, he is obliged to work hard.	அவன் உத்தியோகம் நல்லதாய் இருந்தும், அவன் மிகுந்த வேலை செய்யவேண்டியவனாய் இருக்கிறான்.

He is incompetent for that situation.	அவன் அந்த வேலைக்கு அபாத்திரனாய் இருக்கிறான்.
Whatever be your employment be honest.	உன் வேலை ஏதாயிருந்தாலும்அதிலே நீதார்த்தனாய் இரு.
His horsekeeper is very clever, but his head-servant is stupid.	அவருடைய குதிரைப்பாகன் வெகு கெட்டிக்காரன். ஆனாலும் அவருடைய முதல் வேலைகாரன் புத்தியீனன்.

Writing. / எழுத்து.

Write me a letter soon.	சீக்கிரமாய் எனக்கொரு காகிதம் எழுது.
Send your letter by the Tapal.	தவால் வழியாய் ஒரு காகிதம் அனுப்பு.
Pray favor me with your address.	உமக்கெழுதுஞ் சீட்டுக்கு மேல் வாசகம் என்ன போட வேண்டும்.
You must write now as the post-office closes at six.	தவால் ஆறு மணிக்கு முடிந்துபோகிற படியால் இப்பொழுது எழுத வேண்டும்.
You have not dated your letter.	உமது சீட்டிலே தேதி போடவில்லை.
My note is now ready.	எனது சீட்டு இப்போது எழுதி முகிந்தது.
I do not perceive any error in what you have written.	நீர் எழுதினதிலே நான் யாதொரு பிழையுங் காணவில்லை.

I received your letter dated the 1st of March.	பங்குனீ மாதம் முதற்றேதீ நீர் எழுதிய காகிதம் எனக்குக் கிடைத்தது.
I have written this in much haste. You will therefore excuse all defects.	நான் இது மெத்த அவசரத்தில் எழுதினேன் ஆகையால் நீர் எல்லாக் குறைகளையும் பொறுத்துக்கொள்ளும்.
If there are any mistakes please to rectify them.	இயாதொரு பிழையிருந்தால் திருத்தீ விடும்.
You ought to have replied to his letter.	அவர் எழுதின காகிதத்துக்கு நீர் மறுமொழி அனுப்ப வேண்டும்.
I did not write sooner, partly for want of time, and partly because I had nothing particular to communicate.	நேரம் இல்லாததினாலும்,அறிவிக்கப் பிரதானகாரியம் இல்லாததினாலும், இதற்கு முன் நான் எழுதவில்லை.
Please copy this for me.	தயவாய் எனக்கு இதை எழுதித் தாரும்.
Do you correspond with him?	நீரும் அவரும் ஒருத்தருக்கொருத்தர் சீட்டெழுதிக் கொள்ளுகிறதா?
He will criticise our composition.	நாம் எழுதின வாசகத்தை அவர் கருத்தாய்ப் பிழை பார்ப்பார்.
I will defer writing to him till tomorrow.	நாளை மட்டுந் தாமதித்து எழுதுவேன்.
Inclose my letter in yours.	என் சீட்டை உமது சீட்டுக்குள் வையும்.

You had better insert this in your letter.	உமது காகிதத்திலே இதை எழுதிப்போட்டால் நல்லது.
For this reason you will excuse my not writing to you.	ஆகையால் நான் உமக்கு எழுதி அனுப்பாததைப் பொறுத்துக்கொள்ளும்.
Help me to finish this letter.	இந்தக் காகிதத்தை எழுதி முடிக்க எனக்கு உதவியண்ணும்.
Can you improve what he has written.	அவர் எழுதினதை நீர் திருத்துவீரா?
It is written very well and I do not think I can make it better.	அது திறமாய் எழுதப்பட்டிருக்கின்றது. அதைப் பார்க்கத் திறமானதாய் எழுதுவேனென்று நான் நினைக்கவில்லை.
I sealed my letter, and superscribed it to him.	நான் என் காகிதத்தை மடித்து முத்திரை வைத்து, அவருக்கு மேல் வாசகம் போட்டேன்.
My letter is already sealed, and I cannot add more.	என் காகிதத்துக்கு முத்திரை வைத்தாயிற்று. இனி அதிகமாய் அதில் ஒன்றும் எழுதக் கூடாது.
His letter came unsealed and torn too.	அவருடைய காகிதம் முத்திரை இல்லாததாகவும் கிழிக்கப்பட்டதாகவும் வந்து சேர்ந்தது.
I will send you a letter in a few days. Till then wait.	கொஞ்சநாட்களுக்குள்ளே நான் உனக்கு ஒரு காகிதம் அனுப்புவேன். அவ்வளவும் பொறுத்திரும்.

Examples of Regular Verbs.

Note. After this first general example, the other verbs are arranged *Alphabetically*, and marked with figures which refer to the same figures in the examples, and show, in a general way, the modes, times, &c.

1. I *study* Geography to-day.	இன்றைக்கு நான் புவனசாத்திரம் படிக்கிறேன்
2. I *studied* grammar yesterday.	நேற்று நந்நூல் படித்தேன்.
3. I *have studied* Astronomy.	நான் வான் சாத்திரம் படித்திருக்கிறேன்.
4. I *had studied* my lesson before he came.	அவன் வர முன்னிதாக என் பாடம் படித்திருந்தேன்.
5. I *shall* (or will) *study* Trigonometry.	நான் முக்கோண சாத்திரம் படிப்பேன்.
6. I *shall have* (or will have) *studied* my lesson before you return.	நீர் திரும்பி வர முன் என் பாடம் படித்திருப்பேன்.
7. *Study* your lesson now.	இப்பொழுது உன்பாடத்தைப்படி.
8. *Let me study* history.	நான் சரித்திரங்களைப் படிக்கட்டும்.
9. I *may*, (can, must, might, would, could, or should) *study* my lesson without interruption.	தடை இல்லாமல் என் பாடத்தைப் படிக்கலாம். (கூடும், வேண்டும், விரும்புவேன்,)
10. I *may*, (can,	நீர் திரும்பி வருமுன் நா

must, might, would could or should) *have studied* my lesson before you return.	ன் என் பாடத்தைப்படித்திருக்கலாம். (கூடும், வேண்டும், விரும்புகிறேன்.)
11. It is his duty (or he ought) *to study* his lesson.	அவன் தன் பாடத்தைப் படிக்கக் கடனாளியாய் இருக்கிறான். (வேண்டும்)
12. It was his duty (or he ought) *to have studied* his lesson yesterday.	அவன் தன் பாடத்தை நேற்றுப் படித்திருக்கக் கடனாளியாய் இருந்தான். (வேண்டும்.)
13. If I *study* hard I shall gain a prize.	நான் பிரயாசப்பட்டுப் படித்தால் வெகுமதி பெறுவேன்.
14. If I *had studied* hard I should have gained a prize.	நான் பிரயாசப்பட்டுப் படித்திருந்தால், வெகுமதி பெற்றிருப்பேன்.
15. If I *may*, (can, must, might, would, could or should) *study* my lesson, very well.	நான் என் பாடத்தைப் படிக்கலாமானால் நல்லது. (கூடுமானால், வேண்டுமானால், விரும்பினால்.)
16. If I *may*, (can must, might, would, could, or should) *have studied* my lesson before noon, very well.	நான் என் பாடத்தை மதியத்துக்கு முன் படித்திருக்கலாமானால் நல்லது. (கூடுமானால், வேண்டுமானால், விரும்பினால்.)
17. *Though* I *study* hard I cannot understand it.	நான் பிரயாசப்பட்டுப் படித்தாலும் அது எனக்கு விளங்காது.
18. *Though* I *had*	நான் பிரயாசப்பட்டுப்

studied my lesson, I could not recite.	படித்திருந்தாலும், பாடஞ் சொல்லக் கூடாது.
19. *Unless* I *study* hard I cannot understand it.	நான் பிரயாசப்பட்டுப் படித்தாலொழிய, அது எனக்கு விளங்காது.
20. *Unless* I *had studied* it before I should not have been able to recite.	நான் முன் படித்திருந்தாலொழிய, நான் பாடஞ் சொல்லக்கூடாதிருக்கும்.
21. The master gave me an easy lesson *to be studied.*	நான் படிக்கிறதற்கு உபாத்தியார் இலேசானபாடந் தந்தார்.
22. I am *about to study.*	நான் படிக்கப் போகிறேன்.
23. *Having studied* Arithmetic I shall begin Algebra.	கணக்குப் படித்து முடித்துக்கொண்டு அட்சரகணிதம் படிக்கத் துவங்குவேன்.
24. I *am studying* Botany.	நான் பதார்த்த சாத்திரத்தைப் படித்து வருகிறேன்.
25. I *have* or *had been studying* Botany.	நான் பதார்த்த சாத்திரத்தைப் படித்திருந்தேன்
26. *The studying* of algebra sharpens the mind.	அட்சர கணிதத்தைப் படிக்குதல் புத்தியைக் கூர்மையாக்கும்.
27. *By studying* Algebra the mind is sharpened.	அட்சர கணிதத்தைப் படிப்பதினாலே புத்தி கூர்மையாக்கப்படும்.

Regular Verbs arranged Alphabetically.

4. The crew had *abandoned* the ship.	கப்பலாட்கள் அந்தக் கப்பலை விட்டு விட்டார்கள்.
11. We ought *to abstain* from doing what is evil.	பொல்லாப்பானதைச் செய்யாமல் நாம்விடவேண்டியது.
1. Do you *accede* to what I propose.	நான் சொல்லுகிறதற்கு நீர் சம்மதிக்கிறீரா?
2. He immediately *accepted* my offer.	நான் சொன்னதற்கு அவன் உடனே சம்மதித்துக்கொண்டான்.
9. I can *accommodate* you in my house.	என் வீட்டிலே உமக்கு நான் வுசதிபண்ணுவேன்.
9. Can you *accommodate* me with pen and ink?	எனக்குத்தூவலும்மையுந் தர உம்மாலே கூடுமா?
19. Unless you *accompany* me I will not go.	நீ என்னுடனேவராவிட்டாற் போகமாட்டேன்.
11. I have not been able to *accomplish* my wishes.	என் விருப்பத்தை முடிக்க என்னாலே கூடாமற்போயிற்று.
1. How do you *account* for this?	இதென்னத்தினாலே வந்ததென்று சொல்லுகிறீர்?
2. He was *accused* of robbing his master.	அவன் தன் எசமானிடத்திற்களவெடுத்தானென்று குற்றப்பட்டான்.

7. *Accustom* yourself to read and write.	எழுத வாசிக்கப் பழகு.
1. I am *acquainted* with every particular.	ஒவ்வொரு காரியமும் நான் அறிந்திருக்கிறேன்
3. He has *acquired* great knowledge.	அவர் மெத்தக் கல்வி படித்திருக்கிறார்.
2. To-day's meeting was *adjourned* till monday next.	இன்றையிற் கூட்டம் வருகிற திங்கட் கிழமைக் கென்று நிறுத்தப்பட்டது
2. The prize was *adjudged* to him, as the best scholar.	அவன்கெட்டிக்காரன் என்று அந்த வெகுமதி அவனுக்குக் கொடுக்க நியமித்தார்கள்.
8. Let us first *adjust* this matter.	முதல் இந்தக் காரியத்தைத் திட்டம்பண்ணுவோம்.
1. I *admire* him for his great learning.	அவருடைய பெரிய படிப்புக்காக அதிசயப்படுகிறேன்.
9. May strangers be *admitted*?	புறத்தியாரையுஞ் சேர்க்கக் கூடுமோ?
9. I cannot *admit* of what you say.	நீர் சொல்லுகிறதை நான் ஏற்க மாட்டேன்.
4. The enemy *had advanced* as far as the city.	பட்டிணமட்டும் அந்தச் சத்துராதிகள் வந்திருந்தார்கள்.
9. I would *advise* you to wait a little.	கொஞ்சம் பொறுக்க வேண்டுமென்று உமக்குப் புத்தி சொல்லுகிறேன்.
5. This small loss will not *affect* him.	இந்தக் கொஞ்ச நட்டம் அவருக்குப் பெரிய காரியம் அல்ல.

2. He *affected* a great show of kindness.	அவர் மிகுந்த தயவுள்ளவராக மாரிசம்பண்ணினார்.
1. This story is very *affecting*.	இந்தக் கதை மெத்த மனமுருகத் தக்கது.
2. He *assumed* this to be a certain fact;	இது நிசமாய் நடந்த கதையென்று சொன்னார்.
2. The news *afflicted* him greatly.	அந்தச் செய்தி அவரை மெத்த வருத்தப் படுத்திற்று.
7. Pray *afford* me your assistance.	எனக்கு உதவி செய்யுமென்று மன்றாடிக் கேட்கிறேன்.
11. I should be sorry *to affront* him.	அவரைக் கோபப்படுத்துகிறதற்கு எனக்குத் துக்கமாய் இருக்கும்.
1. I *agree* to what you say.	நீர் சொல்லுகிறதற்கு நானுஞ் சம்மதிக்கிறேன்.
3. I have *agreed* with him for the price of the cloth.	அந்தப் புடைவையின் விலைக்கு நானும் அவரும் இணங்கிக்கொண்டோம்.
2. The news very much *alarmed* him.	அந்தச் செய்திகள் அவரை மெத்தத் திகைக்கப்பண்ணிற்று.
7. *Allow* me to go with you.	உம்முடன் வருவதற்கு உத்தரவு தாரும்.
9. It is now done: I cannot *alter* it.	அது முடிந்தது. நான் அதை மாற்றமாட்டேன்.
1. If you know, why do you not *answer*?	நீ அறிந்தால் ஏன் மறுமொழி சொல்லவில்லை?
5. This will *answer* my purpose.	இது என் காரியத்துக்குக் கூடும்.

11. You have no need *to apologize.*	நீர் முகாந்தரஞ் சொல்லத் தேவை இல்லை.
1. I *appeal* to you for the truth of what I say.	நான் சொல்லுகிறது மெய்யோவென்று நீர்தானே சொல்லும்.
1. It *appears* to me very strange.	இதெனக்கு மெத்த ஆச்சரியமாய் இருக்கும்.
5. The furniture will be *appraised* and sold.	அந்தத் தட்டு முட்டு விலை மதித்து விற்கப்படும்.
1. I *apprehend* you mistake.	நீர் நிதானந் தப்பிப்போனீரென்று நினைக்கிறேன்
11. The enemy were afraid *to approach.*	அந்தச் சத்துருக்கள்சேரப் பயப்பட்டார்கள்.
8. He has *appropriated* all his property to this purpose.	அவன் தன் ஆஸ்தி எல்லாம் இக்காரியத்துக்கென்று வைத்திருக்கிறான்.
1. Do you *approve* of what I say?	நான் சொல்லுகிறதை நீர் நல்லதென்று எடுத்துக்கொள்ளுகிறீரோ?
8. Let us *argue* the point together.	இந்தக் காரியத்தைப் பற்றி நியாயம் பேசிப் பார்ப்போம்.
8. Let us now *ascend* the mountain.	இப்பொழுது நாம் அந்த மலையில் ஏறுவோம்.
2. He was *assailed* on all sides.	நாலு புறத்திலும் அவனை வருத்தப் படுத்தினார்கள்.
2. The people were *assembled* from the villages round about.	சனங்கள் சுற்றியிருந்த கிராமங்களில் இருந்து கூடி வந்தார்கள்.

1. I *assent* to your proposal.	நீர் சொன்னதற்குச் சம்மதிக்கிறேன்.
2. He *asserted* that it was so.	அது அப்படித்தானென்று உறுதியாகச் சொன்னான்.
9. Can you *assign* any reason for his acting thus?	அவர் இப்படிச் செய்தது என்னத்தினாலென்று நீர் சொல்லக் கூடுமோ!
11. We ought to *assist* each other.	நாம் ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்ய வேண்டும்.
1. Why do you *associate* with evil company?	பொல்லாத கூட்டத்தில் ஏன் கூடுகிறாய்?
1. I *assure* you there is no danger.	மோசம் இல்லையென்று நிச்சயிக்கிறேன்.
1. What you say *astonishes* me.	நீர் சொன்னதற்கு அதிசயப்படுகிறேன்.
5. How shall I *atone* for this conduct?	இந்தச் செய்கைக்கு நான் என்ன உத்தரவாதஞ் செய்வேன்.
2. We were *attacked* by the enemy's cavalry.	குதிரை மேல் வந்த சத்துருக்கள் எங்களைச் சூழ்ந்து தொடர்ந்தார்கள்.
2. He never *attempted* to learn.	ஒரு பொழுதும் அவன் படிக்க முயன்றதில்லை.
8. Let us *attend* to our studies.	நாம் நமது படிப்பிலே கருத்து வைப்போம்.
1. His book *attracts* great notice.	அவருடைய புத்தகத்தை எல்லாரும் பேராய்ப் பேசுகிறார்கள்.

5. This will *avail* much.	இது மெத்தப் பலன் தரும்.
9. How may I *avert* this calamity?	இந்த ஆவத்தான துன்பத்தை எப்படி விலக்கலாம்?
5. This will *augment* my trouble.	இது என் தலையடியை அதிகமாக்கும்.
9. I cannot *avoid* going.	நான் போகாமல் விடக் கூடாது.
1. Who *authorizes* you to do this?	இதை உன்னைச் செய்யச் சொன்னதார்?

B

7. *Bake* this dough in the oven.	இந்தப் பிசைந்த மாவை அடுப்பிலே வைத்துச் சுடு.
9. We may now *banish* our fears.	நாம் இனிப் பயப்பட வேண்டாம்.
1. This dog *barks* at every body.	இந்த நாய் எவர்களைக் கண்டாலும் குலைக்கும்.
25. I *have been bathing* in the Ganges.	கங்கையிலே தோய்ந்து விட்டு வருகிறேன்.
1. Why do these children *bawl* in this manner?	ஏன் இப்படி இந்தப் பிள்ளைகள் கூக்குரலிடுகிறார்கள்?
7. *Beckon* him to come here.	அவனை இங்கே வரக் கை காட்டு.
3. He has lately *become* very proud.	அவன் கொஞ்ச நாளைக்குள் பெருமைக் காரனாய் விட்டான்.

5. We know not what shall *befall* us on the morrow.	நமக்கு நாளைக்கென்ன சம்பவிக்குமென்று தெரியாது.
1. I *beg* your pardon for what I have done.	நான் செய்ததைப் பொறுத்துக் கொள்ளுமென்று உம்மை மன்றாடுகிறேன்.
13. If he *behaves* well, I will keep him.	அவன் நன்மையாக நடந்தால் அவனை வைத்துக்கொள்வேன்.
1. He *believes* whatever people tell him.	மனிதர் என்ன சொன்னாலும் அவர் நம்புகிறார்.
11. I am a poor man; be pleased to *bestow* one rupee.	நான் ஒரு எளியவன், தயவாகி எனக்கொரு உருபாய் தாரும்.
7. *Beware* of idleness and ignorance.	சோம்புத் தன்மைக்கும் அறிவீனத்துக்கும் இடங்கொடாதிரு.
2. Why should you *blame* me?	நீ என் மேற் குறைசொல்ல வேண்டிய தென்ன?
4. I saw a lamb *bleating* for its dam.	தன் தாயைத் தேடி அழுகிற ஒரு ஆட்டுக் குட்டியைக் கண்டேன்.
1. We *bless* the good and curse not the bad.	நாம் நல்லவர்களுக்கு நன்மொழி சொல்லிப்பொல்லாதவர்களைச் சபியோம்.
6. This plant will have *blossomed* before to-morrow.	இந்தப் பூடு நாளைக்கு முன் பூத்திருக்கும்.
17. Though I had *blotted* my paper I did not cry.	என் கடுதாசியில் நான் மை ஊற்றிப்போட்டாலும் அழவில்லை.

1. You *blunder* continually.	நீ நித்தமும் பிழை செய்கிறாய்.
11. I have no reason to *boast* on this account.	இதற்காக நான் என்னைப் புகழ நியாயம் இல்லை.
14. If I had *borrowed* money I might have paid my debt.	நான் பணங் கடனாக வாங்கினால் என் கடனை இறுத்துப்போடக் கூடும்.
26. The *bribing* of witnesses in this country is a great sin.	சாட்சிகளுக்குக் கைகூலி கட்டுதல் இவ்வூரிலே மிகுந்த பாவமாய் இருக்கின்றது.
7. This is waste paper; *burn* it.	இது உதவாத கடுதாசி, இதைச் சுட்டுப்போடு.
11. He is gone to *bury* his father.	அவர் தமது பிதாவை அடக்கம்பண்ணப்போய் விட்டார்.
C	
24. I saw him *carrying* a load on his head.	அவர் தமது தலையிலே ஒரு சுமைகொண்டுபோகிறதைக் கண்டேன்.
1. He *causes* me much trouble.	அவன் எனக்கு மெத்தத் தொந்தரவு செய்கிறான்.
10. You must *caution* him not to do so.	அப்படிச் செய்ய வேண்டாமென்று நீர் அவனுக்குப் புத்தி சொல்ல வேண்டும்.
5. When will you *cease* talking?	நீ எப்பொழுது பேச்சை விட்டோய்வாய்?
12. You ought to have *chained* this dog.	நீ இந்த நாயைச் சங்கிலியாற் கட்ட வேண்டியதாய் இருந்தது.

9. I must *change* my clothes.	நான் புடைவைகளைக் களைந்து வேறு புடைவை உடுக்க வேண்டும்.
1. He *charges* very high.	அவர் மெத்த விலை கேட்கிறார்.
5. Do not cram his mouth; you will *choke* him.	அவன் வாய்க்குள்ளே திணியாதே, திக்கு முக்கடைப்பான்.
8. They will have *circulated* notice before you come.	நீர் வரு முன் அவர்கள் சுற்றி அறிவித்திருப்பார்கள்.
24. He was *climbing* a tree.	அவன் ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான்.
5. I shall now *close* my account.	நான் இப்பொழுது என் கணக்கை முடிப்பேன்.
2. A great crowd was *collected.*	மிகுதியான சனங் கூடியிருந்தது.
7. *Comb* your hair.	உன் மயிரைச் சீவு.
5. How shall I *compose* them?	எப்படி அவர்களை ஆறுதற்பண்ணுவேன்?
14. If he had *commanded* me to go instantly, I would have gone.	அவர் என்னை இப்பொழுதுபோகக் கட்டளைபண்ணினால் போயிருப்பேன்.
8. Let us now *commence* our work	இப்பொழுது நமது வேலை தொடங்குவோமாக.
1. I *commend* your prudence.	உமது புத்தியை நான் மெச்சிக்கொள்ளுகிறேன்
2. He was *committed* to prison.	அவன் மறியலில் வைக்கப் பட்டான்.
7. *Communicate* this to him.	இதை அவனுக்குச் சொல்லு.

17. Though we *compare* our writing he will not believe.	நாம் நமது எழுத்துக்களை ஒத்துப் பார்த்தாலும் அவன் நம்பமாட்டான்.
9. Why should you *compel* him to act thus?	இப்படிச் செய்ய நீ அவனைப் பலபந்தம் பண்ணவேண்டியதென்ன?
3. I have long *complained* of his conduct.	நான் வெகுநாளாக அவனுடைய நடத்தையைக் குறையாய்ச் சொல்லிவந்தேன்.
18. Unless you *comply*, what can I do.	நீர் இணங்காதிருந்தால் நான் என்ன செய்யக் கூடும்?
24. He is now *composing* a grammar.	அவர் இப்பொழுது ஒரு இலக்கணம் உண்டுபண்ணுகிறார்.
1. I do not exactly *comprehend* this.	எனக்கிது திட்டமாய் விளங்கவில்லை.
10. We cannot *conceal* this matter.	நாம் இந்தக் காரியத்தை மறைக்கக் கூடாது.
1. I *conceive* that what you say, is right.	நீர் சொல்லுகிறது சரியென்று நான் நினைக்கிறேன்.
1. This business does not *concern* you.	இந்தக் காரியத்திலே உனக்குத்தக்கவை இல்லை.
11. It is time to *conclude*.	முடிக்கிறதற்கு நேரமாயிற்று.
7. *Condemn* not the innocent.	குற்றமற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்மானம்பண்ணாதே.
5. Who will *conduct* us thither?	நம்மை அங்கே கூட்டிக்கொண்டுபோகிறவரார்?

19. Unless I *confess* that my conduct has been amiss, he will not pardon me.	நான் பிழையாய் நடந்தேனென்று ஒத்துக்கொள்ளாவிட்டால் அவர் எனக்கு மன்னிக்க மாட்டார்.
1. Have you heard whether the news is *confirmed* or not?	அந்தச் செய்தி நிசப்பட்டதோ இல்லையோவென்று நீ கேள்விப்பட்டாயோ?
3. You have *confused* my work.	நீ என் வேலையைக் குழப்பிப்போட்டாய்.
4. He had *conquered* the whole country, before that.	அதற்கு முன் அவன் அந்தத் தேசம் முழுதும் வென்றுவிட்டிருந்தான்.
1. Do you *consent* to his proposal?	அவர் சொல்லுக்கு நீர் சம்மதிக்கிறீரோ?
5. I will *consider* it.	அதை நான் யோசனை பண்ணிப் பார்ப்பேன்.
9. Let us *consult* upon this subject.	இந்தக் காரியத்தைப்பற்றி யோசனைபண்ணுவோமாக.
5. It will *consume* all our time.	நமது நேரம் எல்லாம் வீணக்கெட்டுப்போம்.
5. How much will this box *contain*?	இந்தப் பெட்டகம் எவ்வளவுகொள்ளும்?
1. They two *contend* who shall be the greatest.	தங்களில் எவன் பெரியவனென்று அவர்கள் இருபேருந் தருக்கம்பண்ணுகிறார்கள்.
13. If he still *continues* very poorly, I shall not come.	அவன் இன்னுஞ் சுகவீனமாய்த்தான் இருந்தால் நான் வர மாட்டேன்.

5. How shall we *contrive* to go?	போகிறதற்கு என்ன யோசனை பண்ணுவோம்?
5. Will you please to *convey* this to him?	தயவுபண்ணி இதைஅவருக்குக் கொண்டுபோய்க் கொடுப்பீரோ?
15. If I can *cook* my own food I will.	சமைக்கத் தெரியுமானால் நான் சமைத்துக் கொள்வேன்.
25. Unless I had *copied* the letter yesterday I could not have sent it.	நேற்று நான் அந்தக்காகிதத்தை எழுதாதிருந்தேனால் அதை அனுப்பிக் கொள்ள மாட்டேன்.
14. If I had *corrected* it it would have been well.	நான் அதைத் திருத்தியிருப்பேனால் அது நல்லாயிருக்கும்.
1. This *corresponds* with what I heard.	நான் கேட்டிருந்ததற்கு இது ஒத்து வருகிறது.
1. He *coughs* all night.	அவர் இராமுழுதும் இருமுகிறார்.
7. *Count* the money I gave you.	நான் உமக்குக்கொடுத்த பணத்தை எண்ணும்.
1. Do you *credit* what he says?	அவர் சொல்லுகிறதை நீர் நம்புகிறீரா?
6. He will have *criticised* our composition, before noon	நாம் எழுதினதை அவர் மத்தியானத்துக்கு முன் கருத்தாய்ப் பிழை பார்த்திருப்பார்.
2. They were *crushed* under the wheels of the carriage.	அந்தப் பண்டியிற் சில்லுகளுக்குக் கீழே அவைகள் நெரிந்துபோயின.
1. Why do you *cry*?	ஏன் அழுகிறாய்?

1. This land is *cultivated.*

இந்த நிலம் செய்கைபண்ணியிருக்கின்றது.

13. If he has been *cured* by that physician, well.

அந்த வயித்தியனாற் சுகமாக்கப்பட்டால் நல்லது.

D

3. He has been *dancing* and singing

அவன் ஆடிப்பாடிக் கொண்டிருந்தான்

3. You have been *deceived* by them.

அவர்களால் நீ ஏய்க்கப்பட்டாய்.

8. Let him *decide* the question.

அவர்தானே அந்த வழக்கைத் தீர்மானம் பண்ணட்டும்.

2. I asked him, but he *declined.*

நான் அவரைக் கேட்டேன் அவர் சம்மதிக்கவில்லை.

17. Though that article *decreases* in value daily I must have it now.

அந்த உடைமை நாடோறும் விலை குறைகிறதாயிருந்தும் இப்பொழுதே எனக்குத் தேவை.

5. I shall *deduct* so much from his account.

அவர் கணக்கிலே இவ்வளவு கழிப்பேன்.

15. If I may *defer* writing to him till tomorrow very well.

அவருக்கு எழுதாமல் நாளை மட்டுந் தாமதிக்கக் கூடுமாகில் நல்லது.

1. Who *defrays* the expense of his learning.

அவரைப் படிப்பிக்கிறதற்குச்செலவுகொடுக்கிறவரார்

1. Why do you *delay* to do this?

இதைச் செய்ய ஏன் தாமதப்படுகிறீர்:

2. I was *delighted* to see him.	அவரைக் கண்டு மிகுந்த சந்தோஷப்பட்டேன்.
2. Did you *deliver* to him my message?	சொன்ன செய்தி அவரிடத்திற் சொன்னாயா?
2. He *demanded* more than his due.	தனக்குவர வேண்டியதிலும் அதிகங் கேட்டான்.
1. He *denies* having said this.	இதைச் சொல்லவில்லையென்கிறான்.
11. When do you intend to *depart*?	எப்பொழுது பிரயாணம்போக நினைத்திருக்கிறீர்
1. It *depends* upon the state of my health.	அது என் சுகத்துக்குத் தக்கதாயிருக்கும்.
10. I cannot *depend* upon what he says.	அவர் சொல்லுகிறதை நம்பக் கூடாது.
1. His spirits are much *depressed*.	அவர் மனம் மெத்த ஒடுங்கி விட்டது.
1. This *deprives* her of comfort.	இது அவள் ஆறுதலைக் கெடுத்துப்போடுகிறது.
1. I *derive* instruction from their society.	அவர்களோடு கூடியிருக்கிறதினால் எனக்குப் பிரயோசனம் உண்டாகிறது.
13. Though they had *deserved* to be punished, they were pardoned.	அவர்கள் தண்டனைப்பட நியாயம் இருந்தும் மன்னிப்படைந்தார்கள்.
5. I will *desire* him to do so.	அவர் அப்படிச் செய்யக்கேட்டுக்கொள்வேன்.

1. He *despairs* of accomplishing his object.	அவர் தமது காரியம்முடிக்கக் கூடுமென்று அவரும் நம்பவில்லை.
12. We ought not to *despise* any one.	நாம் ஒருதரையும் இகழப்படாது.
3. All your papers have been *destroyed.*	உன் கடுதாசி எல்லாம் சிதைவுபட்டுப் போயின.
1. Do not *detain* the servant any longer.	அந்த வேலைகாரனை இனி மறித்து வையாதேயும்.
1. I am *determined* to do as you say.	நீர் சொல்லுகிறபடி செய்ய நினைத்திருக்கிறேன்.
1. She *devotes* all her property to this purpose.	அவள் தன் ஆஸ்திகள் எல்லாவற்றையும் இதற்கென்று குறித்திருக்கிறாள்.
17. Though he and I *differ* in opinion, still I love him.	அவன் நினைப்பும்என் நினைப்பும் வெவ்வேறாய் இருந்தும் அவனை நேசிக்கிறேன்.
9. It is said that some animals can *digest* iron.	இரும்பு தின்றாலும் சில மிருகங்களுக்குச் சமித்துப்போகுமென்று சொல்லி இருக்கின்றது.
9. He cannot always *dine* at one o' clock.	அவர் எப்பொழுதும் ஒரு மணிக்குச் சாப்பிடக் கூடாது.
11. Please *direct* me where to find him.	அவரை எங்கே காணலாஞ் சொல்லும்.
1. They *disagree* one with another.	அவர்கள் ஒருவரோடொருவர் இணங்குகிறதில்லை.

2. I was much *disappointed*.	நான் நினைத்த நினைப்பு தவறிப்போயிற்று.
8. She *disapproves* of all I say.	நான் சொல்லுகிறதொன்றையும் அவள் ஒத்துக்கொள்ளுகிறதில்லை.
1. He is now able to *discharge* his debts.	இப்பொழுது அவன் தன் கடன் இறுக்கக் கூடியவனாய் இருக்கிறான்.
13. If that custom is now *discontinued*, very well.	அந்த வழமை அழிந்துபோனால் நல்லது.
3. I have not as yet *discovered* the thief.	நான் இன்னம் அந்தத் திருடனைக்காணவில்லை
1. What you say *discourages* me.	நீர் சொன்னது என் மனத்திடனைக் குறைக்கிறது.
8. Let us *discourse* together a little.	நாங் கூடிக் கொஞ்சம் பேசிக்கொள்வோம்.
14. If I had *disliked* their company very much, I would have left it.	அவர்களோடே கூடுகிறது எனக்கு வெறுப்பாயிருந்தால் அதை விடுவேன்.
2. He was *dismissed* for bad conduct.	பொல்லாத நடக்கையின் நிமித்தம் அவன் தள்ளப்பட்டான்.
9. I cannot *disobey* his orders.	அவருடைய கட்டளைக்கு அமையாமல் நான் இருக்கக் கூடாது.
5. Why will you *disoblige* him without cause?	காரியம் இல்லாமல் அவரைக் குறைப்படுத்த வேண்டியதென்ன?

17. Though he *displays* his talents in that, still his temper is bad.
அதில் அவர் சாமர்த்தியம் தெரியும் ஆகிலும் அவனுடைய குணம் சரியல்ல.

1. They were much *displeased*.
அவர்கள் மிகவுங் கோபங்கொண்டார்கள்.

1. They are always *disputing* one with another.
அவர்கள் எப்பொழுதும் ஒருவரோடொருவர் தருக்கம் பண்ணிக்கொள்ளுகிறார்கள்.

1. Why are you *dissatisfied*?
நீ ஏன் மனப் பூரணப்படவில்லை?

9. You cannot *dissuade* him from doing so.
அவன் அப்படிச் செய்கிறதை நீ புத்தி சொல்லி மறிக்கக் கூடாது.

9. I can *distinguish* no difference in these two letters.
நான் இவ்விரண்டெழுத்திற்கும் வேற்றுமை காணவில்லை.

7. *Double* this string and then it will do.
இக்கயிற்றை இரண்டாய் மடித்தாற் பெலன்போதும்.

23. Having *doubted* whether this be true or not, how can I believe it?
இது மெய்யோ பொய்யோவென்று நான் ஐயப்படுகிறதால் எப்படி நம்பக் கூடும்?

9. How can one horse *drag* such a load as this?
இத்தனை பாரத்தை ஒரு குதிரை எப்படி இழுக்கும்?

1. Wait a little; he is now *dressing*.
சற்றுப் பொறும் அவர் உடுக்கிறார்.

11. Tell the coachman not to *drive* so fast.
அவ்வளவு சுறுக்கு விடவேண்டாமென்று பண்டிக்காரனுக்குச் சொல்லு

17. Though I have *dropped* my knife into this water, I will not cry.	இந்தத் தண்ணீரில் என் கத்தீவிளவிட்டாலும் அழமாட்டேன்.
E	
9. In this way I can *earn* ten rupees a month.	இவ்விதமாய் ஒரு மாதம் பத்து ருபாய் எனக்குக் கிடைக்தும்,
9. Who would *employ* such people as these?	இப்படிப்பட்டவர்களை ஆர் வேலைக்குக் கூப்பிடுவார்கள்?
7. *Empty* this box.	இந்தப் பெட்டியிலுள்ளதை எடுத்துப்போடு.
5 Give me as much only as will *enable* me to live.	எனக்குச் சீவனம்பண்ணத்தக்க அளவு மாத்திரம் தாரும்.
7. *Enclose* my letter in yours	என் சீட்டை உமது சீட்டுக்குள் வையும்.
1. Your former kindness *encourages* me to make this request.	நீர் முன்னும் எனக்குத் தயவு செய்த படியால் இப்பொழுது இதைக் கேட்க எனக்த மனம் உண்டாயிற்று.
11. He has much reason to be *encouraged*.	அவன் தயிரீயப்படுவதற்கு நல்லு நியாயம் உண்டு.
9. I must *endeavour* to see him to-day.	இன்றைக்கு நான் அவரைக் காண வகை பார்க்க வேண்டும்.
12 You ought to have *endorsed* the bill.	நீர் இந்த உண்டியலுக்குக் கையெழுத்துப்போட வேண்டியது.

3. I have *engaged* him as my servant.	நான் அவனை எனக்குப் பணிவிடைகாரனாக அழைத்துக்கொண்டேன்.
11. Do you know how to *engrave*?	சித்திரம் வெட்ட உனக்குத் தெரியுமா?
1. I *enjoy* this season of the year.	வருஷத்தில் இந்தக்காலம் எனக்குப் பிரியம்.
9. Cannot this house be *enlarged!*	இந்த வீட்டைப் பெரிதாகக் கட்டக் கூடாதா?
13. If I *enquire* and let you know, will that please you?	நான் விசாரித்து உமக்குச் சொல்லுகிறது பிரியமோ?
2. They *entreated* him to stay, but to no purpose.	இருக்கச் சொல்லி அவர்கள் மன்றாடியும் அவர் கேட்கவில்லை.
11. I will try to *equal* him in learning.	படிப்பிலே அவனுக்குச் சரிவரத் தெண்டிப்பேன்.
11. We are by nature apt to *err*.	சுபாபத்தில் நாம் பிழை செய்யத் தக்கவர்கள்.
2. We *escaped* out of the enemy's hand.	நாம் சத்துருவின் கைக்குத் தப்பினோம்.
2. This regulation has lately been *established*.	இந்தக் கட்டளை கொஞ்சநாளுக்கு முன் நியமிக்கப்பட்டது.
1. He *exceeds* every one in quickness of apprehension.	எவர்களிலும் அவர் கூரிய புத்தியுள்ளவர்.
9. I would not *exchange* situations with you.	என் நிலையை விட்டு உமது நிலையில் நிற்க எனக்குப் பிரியமில்லை.

8. Let us *excite* each other to study.	நாம் ஒருவரை ஒருவர் படிப்பிலே முயர்ச்சிபண்ண வேண்டியது.
5. For this reason you will *excuse* my not writing to you.	ஆகையால் நான் உமக்கு எழுதீ அனுப்பாததைப் பொறுத்துக்கொள்ளும்
2. Three men were *executed* for murder last Monday.	போன தீங்கட்கிழமை மூன்று கொலைகாரர் கொல்லப்பட்டார்கள்.
5. Sir, your order shall be *executed* without delay.	ஐயா, உமது கட்டளைப்படி தாமதமீல்லாமற்செய்யப்படும்.
1. Do you *expect* to see him shortly?	சீக்கிரத்தீல் அவரைக் காணலாமென்று காத்திருக்கீறீரா?
5. If you ask, he will *explain* any part which you do not understand.	அவரைக் கேட்டால் உமக்கு விளங்காததைவிபரமாய்ச் சொல்லுவார்.
3. A large quantity of indigo has been *exported* this month.	இந்த மாதம் வெகு நீலக் கட்டி ஏற்றப்பட்டது
27. He caught a fever by *exposing* himself to the sun.	வெய்யிலிலே திரிந்ததினால் அவருக்குக் காய்ச்சல் வந்தது.
11. I do not know how to *express* this in English.	இதை இங்கிலீசிலேசொல்ல எனக்குத் தெரியாது.
1. This colour *fades* very much.	இந்த நிறம் மங்கிப்போகின்றது.
10. Had it not been for his assistance, I	அவருடைய உதவி இல்லாதிருந்தால் காரியம்

should have entirely *failed* in my purpose.	முடித்துக்கொள்ள மாட்டேன்.
10. Had it not been for him I should have *fallen* into the river.	அவர் இல்லாதிருந்தால் ஆற்றிலே விழுந்துபோவேன்.
11. You have no need to be *fanned* now it is winter.	மாரிகாலமாய் இருப்பதினால் விசிறத் தேவைஇல்லை.
1. Do you *fancy* it is summer?	கோடை காலமாகக் காணுகின்றதா?
1. I am very much *fatigued* with walking.	நான் நடந்து மிகவும் இளைத்துப்போனேன்.
7. Pray, *favour* me with your address.	உமக்குச் சீட்டெழுதினால் மேல் விலாசம் என்னபோட வேண்டுமென்று சொல்லும்.
11. We ought to *fear* God more than man.	நாம் மனிதருக்குப் பயப்படுகிறதைப் பார்க்க பராபரனுக்குப் பயப்பட வேண்டும்.
1. These animals *feed* only on grass.	இந்த மிருகங்கள் புல்லுமாத்திரந்தான்தின்னும்
7. Go and *fetch* me some fruit out of the garden.	தோட்டத்திலுள்ள பழங்களிற் சிலவற்றைக் கொண்டுவா.
7. ***File*** this screw.	இந்தப் புரியாணியைஅராவு.
7. ***File*** these papers.	இந்தக் கடுதாசிகளைக் கோத்துப்போடு.
7. ***Fill*** this tub with water.	இந்தத் தொட்டி நிறையத் தண்ணீர் ஊற்று.

9. Can I *find* a servant here?	ஒரு வேலைக்காரன் இங்கே எனக்கு அகப்படுவானோ?
9. If you do so again you must be *fined*.	இன்னும் அப்படிச்செய்தால் உனக்கு அபராதம்போட வேண்டும்.
11. Help me to *finish* this letter.	இந்தக் காகிதத்தை முடிக்க எனக்கு உதவிபண்ணும்.
3. What day have you *fixed* upon to go there?	எந்நாளில் அங்கேபோக நியமித்திருக்கிறீர்?
5. It is high water, the dhony will now *float*.	இப்பொழுது கடல் பெருக்குத் தோணி மிதக்கும்.
1. The people are *flocking* to see him.	அவரைக் காணச் சனங்கள் கூட்டங் கூட்டமாய்ப்போகிறார்கள்.
19. Unless the river *flows* close by his house how can he swim?	அந்த ஆறு அவர் வீட்டருகாகப் பாயாவிட்டால் எப்படி நீந்த அறிவார்?
7. *Fold* these things in paper.	இவைகளைக் கடுதாசிக்குள் வைத்து மடித்துப் போடும்.
5. You go before: I will *follow*.	நீர் முன்னேபோம் நான் பிறகே வருவேன்.
2. Why did you *forbid* his coming?	அவனை வராதபடிக்கு ஏன் மறித்தீர்?
1. Why *force* him to do so against his will?	அவன் அப்படிச் செய்ய மனதில்லாதிருக்க ஏன் பலபந்தம் பண்ணுகிறீர்?

9. For doing this you must *forfeit* one rupee.	இதைச் செய்தபடியால் உனக்கு ஒரு ரூபாத் தெண்டம்.
9. Who can *foretell* what will happen on the morrow?	நாளைக்குச் சம்பவிப்பதேதென்று ஆர்முன்னே சொல்லுவார்?
10. If he had acknowledged his fault I should have *forgiven* him.	அவன் தன் பிழையை வலியச் சொன்னால், நான் பொறுத்துவிடுவேன்.
3. The purpose for which you sent me has been *accomplished*.	நீர் என்னை அனுப்பின காரியஞ்செய்துமுடிந்தது.
9. In how short a time can you *finish* these things?	எவ்வளவு குறுக்கிலே நீர் இந்தக் காரியங்களை முடித்துத் தரக் கூடும்?
7. *Gather* up the crumbs.	அந்த அப்பத் துண்டுகளைக் கூட்டி எடு
10. I should have been *glad* if you had come.	நீர் வந்தீரேயாகில் நான் சந்தோஷப்படுவேன்.
11. Tell the carpenter to *glue* these two boards together.	தச்சனிடத்தில் இவ்விரண்டு பலகையையும் பசையிட்டுப் பொருத்தச் சொல்லு.
11. Every one does not know how to *govern*.	அரசாள வகை எல்லாருக்குந் தெரியாது.
11. Sir, be pleased to *grant* me this request.	ஐயா, தயவு வைத்து நான் கேட்டபடி செய்து தாரும்.

1. I am much *gratified* with the sight of such a school.	இப்படிப்பட்ட பள்ளிக்கூடத்தைக் காண்கிறது எனக்கு மிகுந்த சந்தோஷம்.
5. I am ignorant; who will *guide* me in the way of truth?	நான் அறியாமையில் இருக்கிறேன், என்னை மெய்யான வழியில் நடத்துகிறவரார்?
10. Can you *guess* the meaning of what I say?	நான் சொல்லுகிற கருத்தின்னதென்றுமக்குவிளங்குகிறதா?
7. *Hand* me that book.	அந்தப் புத்தகத்தைத் தாரும்.
15. If I should *happen* to see him before you, I will tell him this.	நீர் அவரைக் காணமுன்னே நான் கண்டால் இதை அவருக்குச் சொல்லுவேன்.
2. When did that *happen*?	அதெப்பொழுது நடந்தது?
5. Why are you afraid? nobody will *harm* you.	ஏன் பயப்படுகிறீர்? ஒருவனும் உமக்குத் தீங்கு செய்யான்.
20. Unless they had *hasted* away as fast as possible, they would have suffered loss.	தங்களாலான மட்டுஞ் சுறுக்காய்ப் போகாதிருந்தால் அவர்களுக்கு நட்டம் வரும்.
11. You must endeavour to *hasten* his coming.	நீர் அவரைச் சுறுக்கு வரத் தெண்டிக்க வேண்டும்.
9. We should *hate* nothing but sin.	பாவத்தையல்லாமல் வேறொன்றையும் வெறுக்க வேண்டியதில்லை.

13. If his wound is now *healed*, why does he not walk?	அவருக்கு இப்பொழுது காயஞ் சுகமாய் விட்டால் அவர் ஏன் நடக்கவில்லை?
3. Who has *heaped* these things one upon another in this manner?	இப்படி ஒன்றுக்குமேல் ஒன்றாகக் குவித்துவைத்தார்?
1. Do you *hear* what I say?	நான் சொல்லுகிறது உனக்குக் கேட்கிறதா?
10. If you had come sooner you might have *helped* me.	நீர் சற்று முன் வந்து விட்டீரானால் எனக்கு உதவி செய்யக் கூடும்.
9. You can just *hint* this to him.	நீர் இதைச் சற்றுச் சமிக்கினையாய் அவருக்குச் சொல்ல வேண்டும்.
9. To go there I must *hire* a palankeen and boat.	அங்கேபோக ஒரு பல்லாக்குந் தோணியுங் கூலிக்கு வாங்க வேண்டும்.
7. Fear God—*honor* the king.	கத்தாவுக்குப் பயப்படு—இராசாவைக் கனம் பண்ணு.
1. I *hope* I shall soon have the pleasure of seeing you.	உம்மைச் சுறுக்குக் காண்பேனென்று நம்புகிறேன்.
9. How could you *imagine* I should agree to this?	நான் இதற்கு இணங்குவேனென்று நீர் நினைத்ததெப்படி?
11. We ought to *imitate* the example of good men.	நல்லவர்களைப் பார்த்து நாமும் நடக்க வேண்டியது.

11. It is our duty to *impart* knowledge	அறிவைப் போதிக்கிறது நமக்குக் கடன்.
3. These goods have been *imported* from Europe.	இந்தச் சரக்குகள் ஐரோப்பாவில் இருந்து வந்தன.
1. They *impose* on whomsoever they can.	அவர்கள் அகப்பட்ட யாவரையும் மோசப்படுத்துகிறார்கள்.
17. Though you *improve* what he has written, it will not be good.	அவர் எழுதினதை நீர் திருத்தினாலும் திறமாய் வராது.
1. He is much *improved* in learning.	அவர் படிப்பில் மெத்தத் தேறி இருக்கிறார்.
1. I am not at all *inclined* to quarrel with them.	அவர்களோடே சண்டைபண்ண எனக்குக் கொஞ்சமும் மனமில்லை
1. Does this account *include* last month's expenses?	போன மாதச் செலவும் இந்த மாதக் கணக்கிலே அடங்கி இருக்குமோ?
3. My family has lately been *increased*.	என்வீட்டிற்சனம்இப்பொழுதுஅதிகமாய்விட்டது
2. She was for some days *indisposed* and unable to stir out.	கொஞ்சநாள் அவள் சுகவீனமாய் வெளியேபோகக் கூடாமல் இருந்தாள்.
11. He appears *indisposed* to agree to this.	இதற்கு உடன்பட அவருக்கு மனம் இல்லையென்று தோன்றுகின்றது.
1. What do you *infer* from what he said to you on the subject.	இதைப்பற்றி அவர் உமக்குச் சொன்னதைக் கொண்டு என்ன நினைக்கிறீர்?

9. Is there no one here that can *inform* me concerning this?	இதைப்பற்றி எனக்கு அறிவிக்க இங்கே ஒருவனும் இல்லையா?
3. His health has been *injured* by too great exertion.	அதிக பிரயாசத்தினாலே அவருக்குச் சுகவீனம் வந்தது.
4. You had better *insert* this in your letter.	உமது காகிதத்திலே இதை எழுதினால் நல்லது.
2. He *insisted* on my staying there.	என்னை அங்கே நிற்க வேண்டும் என்று மறித்துக்கொண்டார்.
11. Call a person to *inspect* this cloth.	இந்தப் புடைவையைச் சோதித்துப் பார்க்க ஒருவனைக் கூப்பிடு.
2. Why did you *instigate* him to do this.	இதைச் செய்யும்படி ஏன் அவனை ஏவிவிட்டாய்?
9. Can you *instruct* me in this science?	இந்தச் சாத்திரத்தை எனக்குப் படிப்பிக்க உம்மாலே கூடுமா?
11. If you intend to *insure* that vessel, do it now.	அந்தக் கப்பலுக்கு உத்தரவாதங்கேட்க நினைத்தால் இப்பொழுது செய்யும்.
1. Are you *interested* in that affair?	அந்தக் காரியத்திலேஉமக்கொரு பங்குண்டா?
9. Why should we *interfere* with other people's affairs?	மறுபேருடைய காரியத்திலே நாம் போக வேண்டுவதென்ன?
7. *Interline* what you have omitted in your letter.	உன் காகிதத்திலே தப்ப விட்டதை அதன் இடையிலே எழுது.

23. Having *interpreted* to me what he said he sat down.	அவர் சொல்லுகிறதைப் பாஷைப்படுத்தி உழுக்கார்ந்தார்.
1. I hope, sir, I do not *interrupt* you.	ஐயா, என்னாலே உமக்கு விணக்கேடில்லையென்று நம்புகிறேன்.
5. Shall I *introduce* you to that gentleman?	அந்தத் துரையோடே நான் உம்மை அறிமுகம் பண்ணிவிடலாமோ?
16. Though I may have *introduced* this mode of expression, it is not good.	இவ்விதமான பேச்சை முன் சொல்லிக் காட்டினாலும் அது திறமல்ல.
1. They are *intrusted* with the whole management of the business.	இக்காரியம் பராபரிக்க முழுதும் அவர்களிடத்தில் விட்டிருக்கிறது.
27. By *inventing* this instrument he has become celebrated.	இவ்வாயுதம் முதல் முதல் உண்டுபண்ணினதினால் அவனுக்கு வெகு புகழ்ச்சி வந்தது.
9. We must *investigate* this matter.	இக்காரியத்தை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.
3. He has *invited* me to his house.	அவர் தமது வீட்டுக்கு என்னை வரவழைத்தார்.
3. The whole country has been *inundated*.	ஊர் முழுதும் வெள்ளம் எடுத்தது.
1. His affairs are much *involved*.	அவருடைய காரியம் மிகவும் குழப்பமாயிருக்கிறது.

7. *Join* these two boards together.	இவ்விரண்டு பலகையையும் பொருத்திப்போடு.
9. How can I *judge* of his character? I do not know him?	அவரை அறியாமல் இருக்க அவர் எவ்வகைப் பட்டவரென்று நான் எப்படிச் சொல்லக் கூடும்?
9. How far can you *jump*?	எவ்வளவு தூரத்துக்குப் பாய்வாய்?
17. Though I cannot *justify* her conduct, still I forgive her.	அவளுடைய நடத்தை நல்லதென்று சொல்ல மாட்டேன், ஆகிலும் அவளுக்கு மன்னிக்கிறேன்.
7. *Keep* this money for me till I shall want it.	இந்தப் பணத்தை வைத்திருந்தெனக்குத்தேவையான வேளைதா?
11. It is sinful to *kill* animals without cause.	காரணம் இல்லாமற் சீவன்களைக் கொல்லுகிறது பாவம்.
4. They had *kindled* a fire with straw.	அவர்கள் வைக்கோலில் நெருப்பு மூட்டியிருந்தார்கள்.
4. If they had *kissed* each other, all would have been well.	அவர்கள் ஒருவரை ஒருவர் முத்த மிட்டுக்கொண்டால், எல்லாம் நல்லாய் முடியும்.
1. We usually *kneel* when we pray to God.	பராபரனை வேண்டுதல் பண்ணை முழந்தாட்படியிடுகிறது எங்கள் வழக்கம்.
19. Unless they *labour* hard for their	தங்கள் சீவனத்துக்காகக் கடிய பிரயாசப்படா

living, they will be in debt.	விட்டால் கடன்படுவார்கள்.
17. Though I *lament* that you were not present, what use?	நீர் முன்னிலையிலே இல்லாததற்காகச் சலிக்கிறேன், ஆகிலும் என்னபலன்?
5. The ship will be *launched* to-morrow.	அந்தக் கப்பல் நாளைக்குக் கடலில் விடப்படும்.
11. When do you mean to *land*.	எப்பொழுது கரைக்கிறங்க நினைக்கிறீர்?
5. This pen will not *last* long.	இந்தத்தூவல் நாட்பட இராது.
1. Why do you *laugh* without reason?	முகாந்தரம் இல்லாமல் நீர் சிரிக்கிறதென்ன?
1. Where does this road *lead*?	இந்த வழி எங்கே போகும்?
27. By *leaning* upon the table you have broken it.	மேசையின் மேற் சாய்ந்ததினால் முரித்துப்போட்டாய்.
11 I saw a monkey *leap* over the fence.	ஒரு குரங்கு வேலியைப் பாய்ந்துபோகிறதைக்கண்டேன்.
9. You can *learn* faster than I.	நான் படிக்கிறதிலும் நீ சுறுக்குப் படிப்பாய்.
11. This house is to be *let*. Inquire at No. 6, King Street.	இந்த வீடு வாடைக்கு விடப்படும். அதைப்பற்றி இராச வீதியில் ஆறும் வீட்டிலே விசாரிக்கவும்.
3. She has *let* her house for six months.	அவள் தன் வீட்டை ஆறு மாதத்லைதக்கு வாடைக்குக் கொடுத்துவிட்டாள்.

1. The dog *licks* water with his tongue.	நாய் தண்ணீரை நாவினாலே நக்குகிறது.
9. Can you *lift* this stone?	இந்தக் கல்லைத் தூக்குவாயா?
11. Tell him to *light* a fire.	நெருப்பு மூட்டென்று அவனுக்குச் சொல்லு.
11. We must *lighten* the boat, otherwise it will sink.	தோணிதாழ்ந்துபோகாதபடிக்குப் பாரத்தைக் குறைக்க வேண்டும்.
1. It *lightens* very much.	மெத்தக் கடிசாய் மின்னுகிறது.
9. I should *like* very much to visit England.	இங்கிலாந்து தேசத்தைப் பார்க்க எனக்கு மெத்தப் பிரியம்.
20. Unless I had *liked* it, I would not have bought it.	அதெனக்குப் பிரியம் இல்லாதிருந்தால் நான் கொள்ள மாட்டேன்.
9. This cloth must be *lined*.	இந்தச் சீலைக்கு உட்புடைவை வைத்துத் தைக்க வேண்டும்.
7. *Listen* to what I tell you.	நான் சொல்லுகிறதை உற்றுக்கேள்.
1. I shall respect him as long as I *live*.	நான் உயிரோடிருக்குமளவும் அவரைச் சங்கிப்பேன்.
11. Tell them to *load* the boat.	அவர்கள் அந்தத் தோணியிற் பாரமேற்றச்சொல்லு.
1. Is this gun *loaded?*	இந்தத் துப்பாக்கிலே மருந்துபோட்டிருக்கிறதா?
7. *Lock* up the house.	வீட்டைப் பூட்டிப்போடு.

5. Where shall we *lodge* to night?	இராத்திரிக்கு எங்கே தங்குவோம்?
27. You lose much by *loitering* away your time in this manner.	நீ இப்படி வீண் பொழுது போக்குகிறதினால்வெகு நட்டப்படுகிறாய்.
1. I *long* verymuch to see him.	அவரைக் காண எனக்கு மெத்த ஆசை.
8. Let me *look* through your spy-glass.	உமதுதூரதிட்டிக் கண்ணுடிக் குழலிலே நான் பார்க்கட்டும்.
16. Try if you can *loose* this knot.	இந்த முடிச்சை நீ அவிழ்க்கக் கூடுமோவென்று பார்.
1. I *love* them more than they love me.	அவர்கள் என்னை நேசிக்கிறதைப் பார்க்க நான் அவர்களை அதிகமாய் நேசிக்கிறேன்.
7. *Lower* this bucket into the well.	இந்தச் சாலை அந்தக் கிணற்றிலே தாழ்.
1. Does this glass *magnify* or diminish the object?	இந்தக் கண்ணுடி பொருளைப் பெரிதாய்க் காண்பிக்குமோ சிறிதாய்க் காண்பிக்குமோ?
1. Who *manages* his affairs in his absence?	அவர் இல்லாத வேளையிலே அவர் காரியங்களைப் பார்க்கிறவர் ஆர்?
1 They *manufacture* shawls in Cashmire.	காசுமீரம் என்னும் ஊரிலே சால்வை நெய்கிறார்கள்.
5. The regiment will *march* to-morrow.	அந்தப் பட்டாளம் நாளைக்குப் புறப்படும்.
1. I hear that you	கலியாணம் முடிக்கப்

are going to be *married.*	போகிறீரென்று கேள்விப் பட்டேன்.
1. I do not understand what you *mean.*	உம்முடைய கருத்து எனக்கு விளங்கவில்லை.
1. I *mean* to go to town to-morrow.	நாளைக்குப் பட்டணத்துக்குப் போக நினைக்கிறேன்.
7. *Measure* this cloth.	இந்தச் சீலையை அளந்து பார்.
7. *Melt* this lead in the fire.	இந்த ஈயத்தை தீயிற் போட்டுருக்கு.
11. Tell the carpenter to *mend* the box.	இந்தப் பெட்டகத்தைச் செம்மையாக்கத் தச்சனிடத்திற் சொல்லு.
12. You ought to have *minded* what he said to you.	அவர் உனக்குச் சொன்னதை நீ கருத்தாய்க் கேட்கவேண்டியிருந்தது.
2. Perhaps you *misapprehended* his meaning.	அவர் சொன்னதை நீர் மறுவிதமாய் விளங்கிக் கொண்டதாய் இருக்கும்.
2. I was *misled* by your advice.	உமது புத்தியைக் கேட்டுவழிதப்பிப்போனேன்.
3. I have *mislaid* my book.	என் புத்தகம் எங்கேயோ வைத்து விட்டேன்.
3. He has sadly *mismanaged* the business.	அவர் அந்த வேலையைப் பழுதுபண்ணிப்போட்டார்.
11. We ought not to *misspend* our time.	நமது நேரத்தை நாம் பழுதுபண்ண ஒண்ணாது.
3. All my things have been *misplaced.*	என் உடைமைகளெல்லாம் தாறுமாறாகப் போட்டிருக்கின்றன.

3. I suppose you have *misreckoned* these rupees. Count them again.	இந்த ரூபாய்க்களை மோசமாய் எண்ணிப்போட்டாயென்று நினைக்கிறேன். மறுபடி எண்ணு.
3. He has very much *misrepresented* the matter.	அந்தக் காரியத்தை அவர் மெத்தப் பிழையாகச் சொன்னார்.
2. They fired three times at a tiger but *missed* it.	அவர்கள் ஒரு புலிக்கு மூன்று தரம் வெடி வைத்துந் தப்பிப்போயிற்று.
1. You *mistake* my meaning.	நான் சொன்னதின் கருத்து உனக்கு விளங்கவில்லை.
11. We ought not to *mistrust* when there is no cause.	ஓர் ஏதுவும் இல்லாமல் நாம் நம்பிக்கையீனப்பட வேண்டுவதில்லை.
5. I find I have *misunderstood* what you said to me.	நீர்சொன்னதுஎனக்கு நேராய் விளங்கவில்லையென்றுகாண்கிறேன்.
7. *Mix* these two together.	இவ்விரண்டையுங் கல.
11. It is improper to *mock* any one.	யாதொருவரையுஞ் சரசம்பண்ணுகிறது ஆகாது.
1. They *molest* us very much.	அவர்கள் நம்மை மிகவும் அலட்டுப் பண்ணுகிறார்கள்.
23. Having *mounted* his horse, he rode off.	அவர் தமதுகுதிரையில் ஏறிப்போனார்.
1. The whole country *mourns* his loss.	அவர் இல்லாததற்காக ஊர் முழுதுந் துக்கிக்கின்றது.

2. He was *murdered* by robbers.	அவரைக் கள்ளர் கொன்றுபோட்டார்கள்.
21. It is their disposition to be always *murmuring*.	எப்பொழுதும் முறுமுறுக்கிறது அவர்களுடைய குணம்.
7. *Nail* this mat to the floor.	இந்தப் பாயை நிலத்தில் விரித்து ஆணியடி.
1. This vessel is *named* the Moira.	இந்தக் கப்பலுக்கு மோய்ருவென்ற பெயர் இட்டிருக்கிறது.
5. I shall *need* your assistance.	எனக்கு உம்முடைய உதவிதேவையாயிருக்கிறது.
10. Had the business been in my hands I should not have *neglected* it.	அந்த வேலை எனக்கு வந்ததானால் அப்படி அசட்டைபண்ண மாட்டேன்.
3. I have *nipped* my fingers with the pincers.	குறட்டினால் என் விரலைக் கிள்ளிக்கொண்டேன்.
2. The plaintiff was *nonsuited*.	வழக்காளிக்குப் பெருமற்போயிற்று
9. I must *obey* his orders.	நான் அவருடையகட்டளைக்குஅமையவேண்டும்
17. Though I cannot *object* to what you say, still I am sorry.	நீர் சொல்லுகிறதற்கு நான் எதிர் சொல்லக் கூடாதிருந்தும், துக்கிக்கிறேன்.
11. You should have made it your business to *oblige* your master by *observing* his instructions.	உன் எசமான் சொற்படி நடந்து அவரைச் சந்தோஷப்படுத்த நீ தெண்டிக்க வேண்டும்.

9. I must *observe* that you have been negligent in your duty.	நீ செய்ய வேண்டிய வேலைகளை அசட்டை பண்ணிப்போட்டாயென்று நான் உனக்குச் சொல்ல வேண்டும்.
23. Having *obtained* this, what more can you desire?	இதையும் பெற்றுக்கொண்டு இனி என்னத்துக்கு ஆசைப்படுகிறாய்?
3. He has *occasioned* his parents a great deal of trouble.	அவன் தன் பிதா மாதாவுக்கு வெகு கலக்கம் வரப்பண்ணினான்.
10. After another month I shall have *occupied* this house twenty years.	இன்னம் ஒரு மாதஞ் செல்ல நான் இந்த வீட்டிலே வந்து இருபது வருடம்.
2. This never *occurred* before to my knowledge.	நான் அறிய இது முன் ஒரு பொழுதும் சம்பவித்ததில்லை.
27. I cannot possibly think of thus *offending* you.	இப்படி உம்மைப் பிரிய வீனப்படுத்த நான் நினைக்க மாட்டேன்.
10. Had I known this before, I should have *offered* my services.	இதை நான் முன் அறிந்திருந்தால் உதவி செய்வேனே.
3. Have you *oiled* the lock of that door?	அந்தக் கதவிற் பூட்டுக்கு எண்ணெய் போட்டீரா?
2. I *omitted* to mention that.	அதை நான் சொல்லாமல் விட்டு விட்டேன்.
1. In what manner does this medicine *operate*!	இந்த மருந்து என்ன செய்யும்?

1. He constantly *opposes* my wishes.	அவர் எப்பொழுதும் என் விருப்பத்துக்கு எதிரிடை பண்ணுகிறார்.
3. If I had *ordered* the goods to be got ready, there would have been no delay.	அந்தச் சரக்குகளைச்சேகரப்படுத்தீ வைக்க வேண்டுமென்று கட்டளையிட்டால்த் தாமதம் இராது.
11. We shall not be able to *overcome* the enemy.	அந்தச் சத்துருவைவெல்ல நம்மாலே கூடாது.
3. The river has *overflowed* its banks.	அந்த ஆறு கரைகளைமூடிப் பாய்ந்தது.
9. It will be better that you *overlook* his offence.	அவர் செய்த பிழையை நீர் கண்டு சாய்ப்பாய்விட்டால் நல்லது.
2. A sudden gust of wind *overset* the boat.	சடுதீயாய் ஒரு காற்று வந்து அந்தத் தோணியைக் கவிழ்த்துப்போட்டது.
10. Had it not been for that delay I should have *overtaken* them.	அந்தத் தாமதம் வராதிருந்தால் அவர்களைப் பிடித்து விடுவேன்.
3. You have *painted* this box very badly	இந்தப் பெட்டிக்குநீர்வன்னம் போட்டது ஆகாது
10. Had I acted thus, he never would have *pardoned* me.	நான் இப்படிச் செய்தால் ஒருபொழுதும் பொறுத்து விட மாட்டார்.
11. I asked him to *partake* of some fruit, but he would not.	கொஞ்சப் பழஞ் சாப்பிடச் சொன்னேன், மாட்டோமென்றுவிட்டார்.
9. The road is so narrow that a carriage cannot *pass*.	அந்தத்தெரு மிகவு ஒடுக்கம், ஒரு பண்டிபோக மாட்டாது.

1. This coin does not *pass* in Bengal.	இந்தக் காசு வங்காளத்திற் செல்லாது.
1. He *patronises* whatever tends to the welfare of the people.	சனங்களுக்கு நன்மை வரத் தக்க காரியங்களுக்கு உதவி செய்கிறார்.
19. Unless I *pause* in the proper place I cannot read well.	நான் தரிக்க வேண்டிய இடத்திலே தரித்தாலேயன்றி நன்றாய் வாசிக்கக் கூடாது.
5. Call at my house to-day, and I will *pay* you.	இன்றைக்கு நீ என் வீட்டுக்கு வந்தாற் கடனைத் தீர்த்துப்போடுவேன்.
9. The windows are so small that one can but just *peep* through them.	பலகணி மிகவுஞ் சிறிதானபடியால் பார்த்தாலும் பார்வை ஓடாது.
1 Though I do not *perceive* any error in what you have written the meaning is bad.	நீர் எழுதினதிலே நான் யாதொரு பிழையுங் காணாதிருந்தும் கருத்து ஆகாது.
1. He *promises* more than he *performs*.	அவர் செய்கையைப் பார்க்கப் பேச்சுக் கெட்டி.
1. The house is *perfumed* by the fragrance of these flowers.	இந்தப் புட்பங்களுடைய வாசனை வீடு முழுதுங் கமழுகிறது.
5. Will you *permit* me to walk in your garden?	உமது தோட்டத்தில் நான் உலாவ விடுவீரோ?
1. I am much *perplexed* with this business.	இந்தக் காரியத்திலே நான் மிகவுங் கலங்கிப் போனேன்.

2. If the inside walls are *plastered* with chunam, it is enough.	உட்சுவருக்குச் சாந்து போடப்பட்டிருந்தாற்போதும்.
12. We have now no time to *play*.	இப்பொழுது விளையாட நமக்கு நேரம் இல்லை
10. If he had informed me of this before, I should have been better *pleased*.	இதை முன்னம் எனக்கு அவர் அறிவித்திருந்தால் அதிகஞ் சந்தோஷப்படுவேன்
1. I *pledge* my word to act in this manner.	இப்படிச் செய்வேனென்று வார்த்தைகொடுக்கிறேன்.
6. The rains will be at hand by the time I shall have *ploughed* this field.	நான் இந்த வயல் உழுது முடியுமுன் மழை வந்து விடும்.
9. We must *pluck* up all these weeds.	இந்தக் களைகள் எல்லாவற்றையும் நாம் பிடுங்கிப்போட வேண்டும்.
10. Had you asked I could have *pointed* out to you in what manner to act.	நீர் என்னைக் கேட்டீரானால் எப்படிச் செய்கிறதென்று சொல்வேனே.
10. Had I begun to study earlier, ere this I might have *possessed* much learning.	நான் முன் படிக்கத் தொடங்கினால் இதற்குட் பெரிய படிப்பாளியாய்ப் போவேனே.
11. We ought not to *praise* those who deserve blame.	குற்றமுள்ளவர்களை நாம் புகழ்ந்துபேசப்படாது.
2. He first *prayed* & afterwards *preached*.	அவர் முன்னஞ் செபம் பண்ணிப் பின்பு பிரசங்கித்தார்.

9. We cannot *predict* what will happen on the morrow.	நாளைக்கு என்னநடக்கும் என்று சொல்லக் கூடாது.
1. I *prefer* his house to yours.	உன் வீட்டிலும் அவர் வீடு நல்லதே.
1. They are *preparing* to go to England.	அவர்கள் இங்கிலாந்துக்குப்போக ஆயத்தம்பண்ணுகிறார்கள்.
9. What would you *prescribe* as my rule of conduct?	நான் நடக்க வேண்டிய முறை இன்னதென்று சொல்லும்.
2. These elephants were *presented* to the governor at Colombo by the king of Kandy.	இந்த யானைகளைக் கண்டியில் இராசாக் கொழும்பில் இராசாவுக்கு உபகாரங்கொடுத்தது.
3. It is owing to your kindness that my life has been *preserved*.	என் சீவன் காக்கப்பட்டது உம்முடைய தயவினாலேதான்.
9. It is strange he should *presume* to act without leave.	அவன் உத்தரவில்லாமற் செய்யத் துணிவது அதிசயம்.
1. I *presume*, Sir, you have lately arrived in this country.	ஐயா! நீர் இந்த ஊருக்கு வந்தது கொஞ்சநாளென்று நினைக்கிறேன்.
2. He *pretended* to be very friendly.	பெரிய சினேகிதன்போல் மாரீசம்பண்ணினார்.
9. I could not *prevail* upon him to remain here longer.	இன்னம் இங்கே இருக்கும்படிக்கு அவரை என்னால் மறிக்கக் கூடாமற் போயிற்று.

10. I think you might have *prevented* his going away.	நீர் அவரைப் போகாதபடி மறித்துக்கொள்ளக்கூடுமென்று நினைக்கிறேன்.
5. The book will shortly be *printed.*	அந்தப் புத்தகம்சுறுக்கிலே அச்சுப்போடப்படும்.
11. I have come from Calcutta, and am to *proceed* up the country.	நான் கல்குத்தாவில் இருந்து இனி நாட்டுக்குப் போக நினைக்கிறேன்.
9. Where can I *procure* a boat?	தோணி எங்கே அகப்படும்?
1. This garden *produces* nothing but weeds.	இந்தத் தோட்டத்திற்களையல்லாமல் வேறொன்றும் உண்டாகிறதில்லை.
17. Though he *professes* great friendship towards us, he deceives us.	தாம்நமக்குப்பெரிய சினேகிதனென்று சொல்லியும் நம்மை ஏய்க்கிறான்.
26. The observance of these rules leads to the *prolonging* of life	இந்த முறைப்படி நடக்கில் நீடிய ஆயிசு உண்டாம்.
2. I *promised* to call upon him to-day.	இன்றைக்கு வருவேனென்று அவருக்கு வார்த்தை சொன்னேன்.
5. By these means our happiness will be *promoted.*	இதினால் நமக்குப் பாக்கியம் பெருகும்.
2. Having *pronounced* my lesson well, he *praised* me.	நான் என் பாடத்தை நன்றாய்ச் சொன்னபடியால் அவர் என்னை மெச்சுக்கொண்டார்.

2. This doctrine was *propagated* all over the country.	இந்த உபதேசம் ஊரெங்கும் பரம்பிவிட்டது.
1. I *propose* that we share the loss between us.	அந்த நட்டத்தைப் பங்காகப் பொறுத்துக்கொள்ளுவோமென்று சொல்லுகிறேன்.
11. Do you mean to *prosecute* him for this offence?	இந்தப் பிழைக்காக அவரைத் தொடர்ச்சிபண்ண நினைக்கிறீரோ?
1. In whatever he undertakes, he *prospers.*	அவன் என்ன செய்யத் தொடங்கினாலும் அனுகூலமாகிறது.
11. It is the glory of a Prince to *protect* his people.	இராசாத் தமது குடிசனங்களைக் காக்கிறது அவருக்கு மேன்மை.
9. I can *prove* this to be true.	இது மெய்யென்று நான் உருசுபண்ணக் கூடும்.
3. Being in service all this time, have you not *provided* for your family?	இத்தனை காலமும் வேலையாயிருந்துஞ் சமுசாரத்துக்கு நீ தேடிக்கொள்ளவில்லையோ?
11. He does every thing he can to *provoke* me.	அவன் என்னைக் கோபம் மூட்டத் தக்கதெல்லாஞ் செய்கிறான்.
3. How long has this book been *published?*	இந்தப் புஸ்தகம் பிரசித்தம்பண்ணப்பட்டு எவ்வளவு காலம்?
9. We must *pull* the boat along with a rope.	இந்தத் தோணியை நாங் கயிறுபோட்டு இழுக்க வேண்டும்.

9. You may expect to be *punished* for this.

இதற்காக நீ ஆக்கினைப்படுவாயே.

10. If I had had sufficient money, I should have *purchased* the house.

எனக்கு அந்த வீடுகொள்ளத் தக்க பணம் இருந்தாற்கொண்டுவிடுவேன்.

9. Can you inform me how the heart may be *purified*?

மனதைச் சுத்தமாக்க வகை சொல்வீரோ?

1. I *purpose* to consider this subject.

இந்தக் காரியத்தையோசித்துப் பார்க்க நினைக்கிறேன்.

2. The enemy were *pursued* by our soldiers sixty miles.

நமது படைவீரர் சத்துருவை அறுபது மயில் தூரந் தொடர்ந்தார்கள்.

Q.

1. Are you *qualified* to undertake this work?

இந்த வேலையைத் தொடங்கிச் செய்ய நீ தகுதியுள்ளவனோ?

1. Why do you *quarrel* one with another?

நீங்கள் ஒருவர் ஒருவருடனே சண்டைபண்ணுகிறதென்ன?

1. Take some water to *quench* your thirst.

உமது தாகந் தீரக் கொஞ்சந் தண்ணீர் குடியும்.

9. We must *quicken* our pace, if we wish to arrive there this evening.

நாம் இன்று சாயந்தரம் அங்கே போய்ச் சேருகில், சுறுக்கு நடக்க வேண்டும்.

11. When do you mean to *quit* this house?	இந்த வீட்டில் இருந்து எப்பொழுது எழும்பநினைக்கிறீர்?
1. It *rains* very fast.	மழை மிகவும் உரத்துப் பெய்கிறது.
9. I cannot *reach* so high.	அவ்வளவு உயரம் எனக்கு எட்டாது.
3. The house has been *rebuilt*.	அந்த வீடு அழித்துக் கட்டப்பட்டிருக்கிறது.
2. I *received* your letter dated the first of March.	பங்குனி மாதம் முதற்றேதி நீர் எழுதிய காகிதம் எனக்குக் கிடைத்தது.
3. Have you *reckoned* what these things will come to?	இவைகள் எவ்வளவுக்கு வருமென்று கணக்குப் பார்த்தீரா?
1. I now *recollect* that you told me so.	நீர் சொன்னது இப்பொழுது தான் எனக்கு நினைவு வந்தது.
9. I should *recommend* you to act thus.	என் புத்திக்கு இப்படிச் செய்தால் நல்லது.
1. They two are now *reconciled*.	அவ்விருபேரும் இப்பொழுது உறவாய் விட்டார்கள்
27. Have you any expectation of *recovering* your property?	உன் உடைமை மறுபடியுங் கிடைக்குமென்று நம்பி யிருக்கிறாயா?
11. If there be any mistakes, please to *rectify* them.	யாதொரு பிழை இருந்தால் திருத்திவிடும்.
3. I have very much *reduced* my *expences*.	என் செலவை நான் மிகவுங் குறைத்துக்கொண்டேன்.

1. To what do these words *refer?*	இந்த வார்த்தைகள் என்னத்தைக் காட்டுகின்றன?
1. The more I *reflect* upon this circumstance, the more I *regret* it.	நான் இந்தக் காரியத்தை நினைக்க நினைக்க அதிக துக்கம் உண்டாகிறது.
6. Do you expect that he will ever *reform* his conduct?	அவர் எப்பொழுதாவது சீர்ப்படுவாரென்று நினைக்கிறீரா?
1. I am much *refreshed* by the air.	இந்தக் காற்றினால் எனக்கு மிகவுஞ் சவுக்கியம்.
11. He will be obliged to *refund* this sum.	இந்தப் பணம் அவன் மறுபடி கொடுக்க வேண்டி வரும்.
1. He *refuses* the advice I offer.	நான் சொல்லுகிற புத்தியைத் தட்டிப்போடுகிறார்.
12. You ought to have *regarded* the advice I gave you.	நான் சொன்ன புத்தியை நீர் கேட்டுக்கொள்ள வேண்டியதே.
1. I *regret* much that I did not follow your advice.	நீர் சொன்ன புத்தியின் படி செய்யாததற்காக மிகவுந்துக்கிக்கிறேன்.
21. These matters need to be *regulated*.	இந்தக் காரியங்களை ஒழுங்காக்க வேண்டியதே.
3. The king has now *reigned* twenty years.	இராசா இருபது வருஷ காலமாக இராச்சியம் ஆண்டார்.
5. I shall *rejoice* to see him.	அவரைக் காண்பது எனக்குச் சந்தோஷம்.

11. I wish to *renew* the lease of my house.	என் வீட்டுக்கு மறுபடி வாடைச் சீட்டு எழுதுவிக்க விரும்புகிறேன்.
1. The house is not my own; I *rent* it only.	அந்த வீடு என்னுடையதல்ல வாடைக்கு வாங்கினது.
5. Can you lend me two hundred rupees? I will *repay* you in ten days.	இருநூறுருபா எனக்குக் கடனாகத் தருவீரோ, பத்துநாளையிலே மறுபடி தந்துவிடுவேன்.
1. I now *repeat* what I told you before.	நான் முன் சொன்னதே இன்னம் உனக்குச் சொல்லுகிறேன்.
10. Had I acted as they advised me, I should have *repented* of it.	அவர்கள் சொன்ன புத்தியின் படி நான் செய்தால் துக்கப்பட வேண்டி வரும்.
12. You ought to have *replied* to his letter yesterday.	அவர் காகிதத்துக்கு நீர் நேற்றே மறு மொழி அனுப்ப வேண்டியது.
5. I will *represent* to him the subject.	இந்தக் காரியத்தை நான் அவருக்குச் சொல்வேன்.
2. He *reproved* them very sharply.	அவர்களை மிகவுங் கண்டிப்புப்பண்ணினார்.
1. I *request* of you only this one favour.	இந்த உபகாரத்தை மாத்திரஞ் செய்யுமேன்.
11. At ten o'clock the company began to *retire*.	வந்திருந்தவர்கள் பத்து மணிமட்டிற் போகத் தொடங்கினார்கள்.
16. When do you propose to *return*?	நீர் மறுபடி எப்பொழுது வருவீர்?

14. If I had *revised* what I had written it would have been well.	நான் எழுதினதை மறுபடியும் பார்த்தால் நல்லதாயிருக்கும்.
11. Trade is now beginning to *revive*.	வியாபாரம் மறுபடியும் நடக்கத் தொடங்குகிறது.
2. The general *rewarded* the soldiers.	படைத் தலைவன் படைச் சேவகருக்கு வெகுமானம்பண்ணினான்.
5. When shall I be *rid* of this trouble?	இந்தத் தொந்தரை எப்பொழுது என்னை விட்டு நீங்கும்?
27. By *ridiculing* serious counsel, they offended God.	சொல்லுகிற நற்புத்தியை எல்லாம் பரிகாசம் பண்ணி அவர்கள் பராபரனைக் கோபம்மூட்டினார்கள்.
11. This fruit is beginning to *ripen*.	இந்தக் காய் பழுத்துவருகிறது.
1. The sea *roars*.	கடல் இரைகின்றது.
3. He has been *robbed* of all his plate.	அவருடைய பொன் உடைமை வெள்ளி உடைமை எல்லாங் களவுபோய் விட்டது.
11. Tell the boatmen to *row* faster.	படகுக் காரரை இன்னஞ் சுறுக்காய்த் தண்டு வலிக்கச் சொல்லு.
7. *Rub* your hand with this leaf.	இந்த இலையை உன் கைக்குத் தேய்த்துக்கொள்.
7. *Rule* your paper, and then write.	உன் கடுதாசிக்கு வரி போட்டெழுது.
11. Do not let these knives *rust*.	இந்தக் கத்திகளைக் கறள் பிடிக்க விடாதே.

S.

11. When is the vessel expected to *sail*	படகு எப்பொழுது பாய் வலிக்கிறது?
1. They are never *satisfied*.	அவர்கள் ஒரு பொழுதும் திருத்தியாகிறதில்லை.
2. She has *scalded* her foot.	அவள் கால் வெந்நீர்பட்டு வெந்தது.
1. *Save* this till to-morrow.	நாளை மட்டும் இதை வைத்திரு.
7. *Scatter* this seed on the ground.	நிலத்திலே இந்த விரையைத் தெளி.
7. Let me *scrape* the ink off your pen.	உன் தூவலிற் பிடித்த மையை நான் வளித்துத் தள்ளட்டும்.
1. Why do you *scrawl* on my paper?	என் கடுதாசியில் ஏன் கீறுகிறாய்?
3. I have *scratched* my finger with a nail.	நான் ஒரு ஆணியாலே என் விரலைக் கீறிக்கொண்டேன்.
1. The children are *screaming* all the day long.	குழந்தைகள் நாள் முழுதுங் கூக்குரலிட்டு அழுகின்றன.
23. Having *scribbled* on his paper, he tore it.	அவன் தன் கடுதாசியிலே வீணாகக் கிறுக்கிக் கிழித்துப்போட்டான்.
3. I have been *searching* for this all day.	நான் நாள் முழுதும் இதைத் தேடிக்கொண்டுவருகிறேன்.
23. Having *sealed* your letter, send it to the post office.	நீர் எழுதின காகிதத்துக்கு முத்திரை வைத்துத் தவாலுக்கு அனுப்பும்.

1. He *seems* a very excellent man.	அவர் மகா உத்தமராய்க் காணப்படுகிறார்.
2. He was *seized* by a police officer.	இராசாவின் சேவகனாலே அவன் பிடிபட்டான்
7. *Select* what thing you choose.	உமக்கு மனமானவைகளைத் தெரிந்தெடும்.
1. How do you *sell* them?	இவைகளை என்ன விலையாய் விற்பீர்?
7. *Send* them to my house.	அவைகளை என் வீட்டுக்கு அனுப்பும்.
7. We are now about to *separate*.	நாம் இப்பொழுது ஒருவரை ஒருவர் விட்டுப் பிரியப்போகிறோம்.
1. Ivory *serves* for various purposes.	யானைக்கொம்பு பல வேலைக்குங் கூடும்.
5. I will now *settle* my account.	இப்பொழுது என் கணக்கைத் தீர்த்துப்போடுவேன்.
7. *Sew* these two together.	இவ்விரண்டையும் ஒன்றாகத் தை.
17. Though my house is *shaded* with trees, it is very hot.	என் வீடு மரநிழலுக்குள் இருந்தும் மெத்த உட்டணம்.
7. *Shake* the boughs of the tree.	மரத்தின் கொப்புகளை அசை.
11. You ought to *sharpen* your knife	உன் கத்தியைத் தீட்டவேண்டும்.
8. It rains fast; let us *shelter* ourselves here.	மழை பெலனாய்ப் பெய்கின்றது. நாம் இங்கே ஒதுங்கிக்கொள்வோமாக.
10. Cannot you *shorten* this?	இதை நீர் சுருக்கமாட்டீரோ?

8. *Shun* evil company.	பொல்லாத கூட்டத்தை விட்டு விலகு.
11. What makes you *sigh*?	ஏன் பெருமூச்சு விடுகிறாய்?
11. Please to *sign* this paper.	இந்தக் கடுதாசியிற் கையெழுத்து வையும்.
1. It *signifies* little what they say.	அவர்கள் சொல்லுகிறது ஒன்றும் பெறாது.
1. There is not a just man who *sinneth* not.	பாவஞ் செய்யாத நீதிமான் ஒருத்தனும்இல்லை
1. The cut in my hand *smarts* very much.	என் கையில் வெட்டு மிகவும் எரிகின்றது.
8. Let me *smell* those flowers.	நான் அந்தப் பூக்களை மணக்கட்டும்.
17. Though you *smile* you are not happy.	நீர் புன் சிரிப்புக் காட்டியும் உமக்குச் சந்தோஷம் இல்லை.
1. These dogs *snarl* at one another.	இந்த நாய்கள் ஒன்றுக்கொன்று உறுமுகிறது.
2. Not waiting for me to give it to him, he *snatched* it out of my hand.	நான் கொடுக்குமட்டும் பொறாமல் அதை என் கையில் இருந்து பறித்துக் கொண்டான்.
1. You have got a cold, that is the reason why you *sneeze*.	உமக்குத் தடிமல்கொண்டிருக்கிறபடியால் தும்முகிறீர்.
9. May I *solicit*, Sir, this one favour?	ஐயா, இந்த ஒரே உபகாரத்தை உம்மிடத்திற் கேட்கலாமா?

11. I am not able to *solve* this question.	இந்தக் கேள்வியின் கருத்தை என்னாற் சொல்லக் கூடாது.
7. *Sort* these papers.	இந்தக் கடுதாசிகளைவகை வகையாய் வை.
9. Can you *spare* me one of these pens?	இந்தத் தூவலில் ஒன்றைஎனக்குத்தரக்கூடுமா?
11. He besought them to *spare* his life.	தன் சீவனைத் தப்பவிடும்படிஅவன் அவர்களை மன்றாடினான்.
27. By *spoiling* my paper they provoked me.	என் கடுதாசியைக் கெடுத்துப்போட்டதினால் என்னை கோபமூட்டினார்கள்.
7. Sprinkle a little water.	கொஞ்சந் தண்ணீர் தெளி.
9. San you not speak without *stammering?*	நீ கொன்னியாமற் பேச மாட்டாயா?
2 They all *started* to see me.	எல்லாரும் என்னைப் பார்க்கப் வரப் புறப்பட்டார்கள்.
24. The people were near *starving*.	சனங்கள் பசியாய்ச் செத்தவர்களைப் போலானார்கள்.
9. I am in haste; otherwise I would *stay* longer.	எனக்குப்போக அவசரம், அல்லாதிருந்தால் இன்னம் இருப்பேன்.
9. Could you *steer* a vessel?	தோணியோட்டத் தெரியுமா?
9. I am now so weak, I can scarcely *stir*.	நான்மிகவும்பலவீனமாய் இருக்கிறபடியால்எழும்பிஉலாவுகிறதும்வருத்தம்.

9. You must *stoop* else you cannot get through.	நீர் குனிய வேண்டும் அல்லது போகக் கூடாது.
7. *Strain* this milk through a cloth.	இந்தப் பாலை ஒரு புடைவையிலே வடி.
3. I have *strained* my wrist.	என் கணுக்கை சுளுக்கிக்கொண்டது.
7. *Stretch* out your hand.	உன் கையை நீட்டு.
18. Though they had *stripped* him of his cloths he would have forgiven them.	அவர்கள் அவன் சீலையை உரிந்தாலும் அவர்களைப் பொறுத்துக்கொண்டிருப்பான்.
23. Having *studied* all the day long, they were tired.	அவர்கள் நாள் முழுதும் படித்திருந்தபடியால் தோய்ந்திருந்தார்கள்.
2. I *stumbled* in running across the road.	வழிக்குக் குறுக்கே நான் ஓடுகையிற் கால் இடறிற்று.
11. We ought to *subdue* our passions.	நமது ஆகாத குணங்களை அடக்கிப்போட வேண்டும்.
2. They *submitted* to the conqueror.	அவர்கள் வென்றவனுக்குக் கீழ்ப்பட்டார்கள்.
5. Will you *subscribe* to this publication?	இதைப் பிரசித்தப்படுத்தப் பணங் கொடுப்பேனென்று கையெழுத்து வைப்பாயா?
10. With your assistance, I should have *succeeded*.	நீர் உதவிபண்ணினால் என் காரியங் கைகூடிப் போம்.

27. By *suffering* me to sell the goods, he suffered loss.	அந்த உடைமைகளை விற்க அவர் எனக்கு இடங்கொடுத்த படியால் அவன் நட்டப்பட்டான்.
5. Will this kind *suit* you?	இந்த மாதிரி உமக்கு ஏற்குமா?
3. Have the witnesses been *summoned*?	சாட்சிக்காரர் வரக் கட்டளை அனுப்பினதா?
1. Who *superintends* this work?	இந்த வேலைக்கு மேல் விசாரிப்புக்காரன் ஆர்?
11. It will then be too late to *supplicate* for mercy.	அப்பொழுது இரக்கங் கேட்டாலும் பெற்றுக் கொள்ளக் கூடாது.
10. Can you *supply* me with these articles?	இப்படி உடைமைகள் எனக்குத் தரக் கூடுமா?
1. How does he *support* his family?	தன் சமுசாரத்தை எப்படிக் காப்பாற்றுகிறான்?
9. I should *suppose* you mistake.	பிழைப்பட்டுப் போனீர் என்று நினைக்கிறேன்.
10. He would have been greatly *surprised* had you told him this.	இதை அவனுக்குச்சொன்னீரானால் மிகுதியும் ஆச்சரியப்படுவான்.
1. I am *surrounded* with difficulties.	நாலு புறத்திலும் எனக்குத் தொந்தரை.
11. To *swear* is vulgar, as well as sinful.	சத்தியம்பண்ணுகிறது பாவமுமேயல்லாமல் மரியாதையுமல்ல.
7. *Sweep* away this litter.	இந்தக் குப்பையைக் கூட்டிப்போடு.

1. My foot is much *swelled*.	என் காலடி மிகவும்வீங்கிற்று.
T.	
1. They *talk* incessantly.	ஓயாமற் பேசுகிறார்கள்
5. This will *tend* to increase our knowledge.	இதினால் நமக்கு அறிவு பெருகும்.
5. When do you expect this affair will *terminate?*	இந்தக் காரியம் எப்பொழுது முடியுமென்று நினைக்கிறீர்?
5. Sir, I will *thank* you to give me a book.	ஐயா, நீர் எனக்கொரு புத்தகங் கொடுத்தால்பெரிய உபகாரம்.
9. This house must be *thatched* a-new.	இந்த வீட்டை மறுபடியும் புல்லினாலே வேயவேண்டும்.
1. Though he *threatens* to punish them, they do not fear.	அவர்களை ஆக்கினை பண்ணுவேனென்று கண்டித்தாலும் அவர்கள் பயப்படுகிறதில்லை.
1. It *thunders*.	முழக்கம் முழங்குகின்றது.
7. *Tie* it fast.	அதை இறுக்கிக் கட்டு
3. This ground has never been *tilled*.	இந்த நிலத்தை ஒருக்காலும் பண்படுத்தினதில்லை.
1. I am quite *tired*	நான் முற்றாய்த் தொய்ந்துபோனேன்.
2. The boat was *tossed* with the waves	அந்தப்படகு திரைகளினாலே மோதுண்கின்றது.

22. You are about to *touch* this with your finger.	இதை உன் விரலாலே தொடப்போகிறாய்.
1. They there *transact* different affairs.	அவர்கள் அங்கே பல விதமான காரியங்களையும் நடத்துகிறார்கள்.
3. The money has been *transferred* to me.	அந்தப்பணம் எனக்குக் கொடுத்திருக்கின்றது.
3. We have all *transgressed* the commands of God.	நாம் யாவரும் கர்த்தாவுடைய கற்பனைகளை மீறினோம்.
7. *Translate* this into Tamil.	இதைத் தமிழ்ப் பாஷையாகத் திருப்பு.
18. Though he had been *transported* for life he did not reform	வயசுக்கெல்லாந் திரும்பாதபடி பிறலுக்கு ஏற்றப்பட்டாலும் அவன் வசப்படவில்லை.
2. This news quite *transported* me.	இந்தச் செய்தியைக் கேட்கவும் பரவசமாய்ப் போனேன்.
3. We *travelled* all the way on foot.	அந்தப் பிரயாணம் முழுதுங் கால் நடையாய்ப் போனோம்.
10. I should have *trembled* with fear.	நான் பயந்து நடுங்கிப் போயிருப்பேன்.
1. Why do you thus *trifle* away your time?	உன் நேரத்தை இப்படி என் வீணிலே போக்குகிறாய்?
9. I can always *trust* to what he says.	அவர் சொல்லுகிறதை நான் எப்பொழுதும் நம்புகிறேன்.

11. I am not afraid to *trust* him.	அவரை நம்புகிறதிலெனக்குப் பயம் இல்லை.
27. My *trying* to do this is of no use.	நான் இதிலே தலைபோட்டாலும் பலன் இல்லை.
26. By *tumbling* one over the other, they were crushed.	ஒருத்தர் மேல் ஒருத்தர் தட்டப்பட்டு விழுந்ததினால் நசுக்கப்பட்டார்கள்
8. Let me *turn* over this leaf.	இந்த ஒற்றையைத் திருப்பட்டும்.
7. *Twist* these cords together.	இந்தக் கயிறுகளை ஒன்றாய் முறுக்கு.

U.

1. They are now *undeceived*.	அவர்களுக்கு இப்பொழுது அது வெளித்துப்போயிற்று.
1. Why do you needlessly *undergo* all this trouble?	ஒரு காரணமும் இல்லாமல் நீர் ஏன் இந்தத்தொந்தரைப்பட்டுக் கொள்ளுகிறீர்?
2. I did not *understand* your meaning.	நீர் சொன்ன கருத்து எனக்கு விளங்கவில்லை.
19. Unless you *undertake* this business it will fail.	இந்த வேலையை நீர் செய்யாவிட்டால் முடியாது.
1. Our sentiments are *united*.	நமது மன எண்ணங்கள் ஒன்றித்திருக்கின்றன
7. *Unlock* the door.	அந்தக் கதவைத் திற.
13. If no one *urged* him to do so, what is his fault?	அப்படிச் செய்யும்படி அவனை ஒருத்தரும் வற்புறுத்தாவிட்டால் அவனுக்கு என்ன குற்றம்?

11. I do not know now to *use* this instrument.

இந்த ஆயுதத்தைப் பரீட்சைபண்ணுகிறது எனக்குத் தெரியாது.

2. I never *uttered* such a word.

நான் அப்படிப்பட்ட வார்த்தை ஒரு பொழுதும் பேசினதில்லை.

V.

1. I *value* his friendship greatly.

அவருடைய சினேகிதம் எனக்கு மிகவும் அரிதாயிருக்கின்றது.

3. This chair has not been *varnished*.

இந்த நாற்காலிக்கு மினுக்கெண்ணெய் போடவில்லை.

2. He *ventured* all his property on this risk.

தன் பொருள் எல்லாம் இதிலே நம்பிப்போட்டான்.

10. Had this loss been yours, would you not have been *vexed?*

இந்த நட்டம் உனக்கு வந்தால் நீ கலங்க மாட்டாயா?

9. I cannot *vindicate* his conduct.

அவனுடைய நடக்கை நல்லதென்று சொல்ல நியாயம் இல்லை.

9. We must not *violate* the rules of the society.

சங்கத்தின் முறைக்கு நாம் தப்பி நடக்கக் கூடாது.

11. I am going to *visit* him.

நான் அவரைக் காணப்போகிறேன்.

W.

3. I have been *waiting* for you two hours

இரண்டு மணித் தியாலமாக உம்மைக் காத்திருக்கிறேன்.

11. You must endeavour to *wake* early	நீர் நேரத்தோடே எழும்பிவிடத் தெண்டிக்க வேண்டும்.
11. Do you mean to *walk* or ride?	கால் நடையாய்ப் போகிறீரா யாதொன்றில் ஏறிப்போகிறீரா?
3. I have been *wandering* about the country.	ஊரெங்கும் வழி தப்பித் திரிந்தேன்.
2. I *wanted* much to see him.	அவரைக் காண எனக்குப் பெரிய ஆசை.
1. This table is *warped*.	இந்த மேசை நெளிந்து போயின.
1. This horse is *warranted* without blemish.	இந்தக் குதிரையிற் பழுது கண்டால் தான் உத்தரிப்பாளும்.
27. *Washing* your hands will do you good.	உன் கைகளைக் கழுவுகிறது உனக்கு நயம்.
1. Why do you *waste* your paper?	உன் கடுதாசியை ஏன் கெடுக்கிறாய்?
24. I am *watching* an opportunity of going there.	நான் அங்கேபோகிறதற்குச் சமயம் பார்த்திருக்கிறேன்.
1. She does nothing but *weep*.	அவள் அழுதுகொண்டே இருக்கிறாள்.
14. If this sugar has been *weighed*, very well.	இந்தச் சீனி நிறுத்திருந்தால், நல்லது.
2. I *whispered* that to him.	அவருக்கு அதை இரகசியமாய்ச் சொன்னேன்.

11. I hear somebody *whistle*.	ஆரோ சீழ்க்கை விட்டுக்கேட்கிறது.
25. They have been *wishing* to remain here.	அவர்கள் இங்கே விரும்பி ஊருகிறார்கள்.
10. No body can *wonder* at this.	ஒருத்தரும் இதற்கு அதிசயப்படார்கள்.
24. They are *working* hard for their living.	அவர்கள் வருத்தப்பட்டுச் சீவனந் தேடுகிறார்கள்.
1. We *worship* one God only.	நாம் ஏக தேவனையே வணங்குகிறோம்.
2. Some of our men were *wounded*.	நமது படைச் சேவகர் சிலர் காயப்பட்டுப்போனார்கள்.
2. That ship was *wrecked* off Calpentyn.	அந்தக் கப்பல் கற்பிட்டியை அடுத்து உடைந்துபோயிற்று.

PHRASES

SHOWING THE USE OF

IRREGULAR VERBS.

[*Note.* If the learner has not committed the list of irregular verbs to memory, he should do it thoroughly before studying these phrases.]

A.	
Abide with me.	என்னுடனே தங்கி இரு.
He *abode* there three days.	அவர் மூன்று நாள் அங்கே தங்கி இருந்தார்.
Having *abode* there three days, they departed.	அங்கே மூன்று நாள் இருந்து பின் பிரயாணப் பட்டார்கள்.
I *am* now wiser than I *was* before.	முன்னையிலும் நான் அதிக அறிவாளி.
Having *been* there once I do not wish to go again.	நான் அங்கே ஒரு முறை போயிருந்தபடியால் மறு படிபோக மனதில்லை.
Six o'clock:-it is time to *arise*.	ஆறு மணியாயிற்று, எழும்ப வேண்டும்.
He *arose* before sunrise.	சூரியோதயத்துக்கு முன்னே எழும்பினார்.
Having *arisen* early, he went on his way.	நேரத்தோடே எழும்பிப்போய் விட்டார்.
Awake me early in the morning.	நேரத்தோடே என்னை எழுப்பி விடு.
He *awoke* through fear.	அவர் பயத்தினாலே விழித்தார்.
Having *awaked* they got up.	அவர்கள் விழித்து எழும்பினார்கள்.

B.

A goat *bears* young three times a year.	வெள்ளாடு ஒரு வருஷத்துக்கு மூன்றுதரங் குட்டிபோடுகிறது.
She *bare* a great many children.	அவள் வெகு பிள்ளைகளைப் பெற்றாள்.
He was *born* before you.	அவர் உனக்கு முன் பிறந்தவர்.
He *bears* this load on his head.	அவர் இந்தச் சுமையைத் தலையிலே வைத்துச் சுமக்கிறார்.
You *bore* it very patiently.	நீர் இதை மிகவும்பொறுதியாய்த் தாங்கினீர்.
He has *borne* the load six miles.	அந்தச் சுமையை ஆறுமயில் தூரமாய்ச் சுமந்து போனான்.
Beat this idle boy.	இந்தச் சோம்புப் பயலை அடி.
I *beat* him soundly.	நான் அவனைப் பெலனாய் அடித்தேன்.
I have *beaten* him twice in learning.	படிப்பிலே அவனை இரண்டு முறை வென்றுவிட்டேன்.
I *begin* to speak in English.	நான் இங்கிலீசு பேசத் தொடங்குகிறேன்.
He *began* to learn before me.	எனக்கு முன் அவர் படிக்கத் தொடங்கினார்.
I have already *begun* to read.	நான் வாசிக்கத்தொடங்கி விட்டேன்.
The ear of corn being ripe, *bends* to the ground.	அந்தக் கதிர்கள் முத்திப்போனதினால் நிலத்தோடே சாய்கிறது.

It was *bent* by the wind.	காற்றினாலே வளைந்து விட்டது.
He has *bent* my knife.	அவன் என் கத்தியை வளைத்துப் போட்டான்.
The Lord *bereaves* me, not man.	மனிதனல்லப் பராபரனே எனக்குள்ளதை என்னை விட்டு விலக்குகிறார்.
I was *bereft* of my children.	நான் என்னுடைய பிள்ளைகளை இழந்து விட்டேன்.
He has *bereft* us.	அவர் எங்களிடத்திலுள்ளதை எடுத்துப்போட்டார்.
I *beseech* you to pay attention.	நீங்கள் கருத்தாய்க்கேளுங்களேன்.
She *besought* me with tears.	அவள் கண்ணீர் விட்டு அழுது என்னை மன்றாடினாள்.
Many times I have *besought* him.	நான் அவனை வெகுமுறை மன்றாடினேன்.
Why do you *bid* me do this?	இதைச் செய்யென்று நீ எனக்குச் சொல்லுகிறதென்ன?
I *bade* him do it.	அவனுக்கு அதைச் செய்யச் சொன்னேன்.
He has been *bidden* twice.	அவனுக்கு இரண்டு முறை கற்பிக்கப்பட்டது.
Bind him hand and foot.	அவனுடைய கையையுங் காலையுங் கட்டு.
He *bound* up the parcel.	முட்டைகட்டிப்போட்டான்.

He has already *bound* it.	அவன் அதைக் கட்டி முடித்துப்போட்டான்.
Can you *bite* this sugarcane?	இந்தக் கரும்பை நீ கடிப்பாயா?
He bit it in two with his teeth.	தன் பல்லினாலே அதை இரண்டாய்க் கடித்தான்.
He was *bitten* by a jackal.	அவனை ஒரு நரி கடித்தது.
I have cut my finger, see how it *bleeds*.	என் விரலை வெட்டிக்கொண்டேன், எப்படி இரத்தம் வடிகிறது பார்.
It *bled* very fast for a long time.	வெகு நேரமாய் இரத்தம் பாய்ந்தது.
After being *bled* he recovered.	இரத்தம் எடுத்த பின் அவர் சுகப்பட்டார்.
Blow the dust off your book.	உன் புத்தகத்தில் இருக்கிற துகளை ஊதிவிடு.
He *blew* the dust in my face.	அவன் என் முகத்திலே துகளை ஊதி விட்டான்.
Several ships were *blown* on shore by the storm.	அந்தப் புயலினால் அநேக கப்பல் கரையிலே தள்ளப்பட்டன.
Try if you can *break* this cocoanut.	இந்தத் தேங்காயை உடைப்பாயோ பார்.
He *broke* it at one blow.	ஒரு அடியிலே அதை உடைத்தான்.
He has *broken* it in pieces.	அவர் சில்ல பொல்லமாய் உடைத்தார்.
These insects *breed* in the rice.	இந்தப் பூச்சிகள் அரிசியிலே உண்டாகின்றன.

He *bred* up his children in the best manner.	அவர் தமது பிள்ளைகளை நன்றாய் வளர்த்தார்.
His bad conduct has *bred* many quarrels.	அவனுடைய ஆகாத நடத்தை வெகுசண்டைகளை உண்டாக்கிற்று.
Bring me some paper from the China Bazar.	எனக்குக் கொஞ்சக் கடுதாசி சீனக் கடையிலே வாங்கிக் கொண்டுவா.
He *brings* up his children in the best manner.	தன் பிள்ளைகளை நல்ல மார்க்கமாய் வளர்க்கிறான்.
The paper you *brought* is very bad.	நீ கொண்டு வந்த கடுதாசி கொஞ்சமும் ஆகாது.
How was this *brought* about?	இக்காரியம் எவ்விதமாய் நடத்தப்பட்டது?
Having *brought* me here he returned.	என்னை இங்கே கொண்டு வந்து விட்டபின் திரும்பிவிட்டார்.
I am going to *build* a house.	நான் ஒரு வீடு கட்டப் போகிறேன்.
He *built* a house on the banks of the Ganges.	கங்கைக் கரையிலே அவர் ஒரு வீடு கட்டினார்
This house has been *built* these ten years.	இந்த வீடு கட்டிப் பத்து வருஷமாயிற்று.
The wine fermented and *burst* the bottle.	திராட்ச ரசம் நுரைத்து துருத்தியை வெடிக்கப் பண்ணிற்று.
He *burst* open the door.	கதவைப்பலபந்தமாய்த் திறந்தான்.

Having *burst* open all the doors they robbed the house.	அவர்கள் எல்லாக்கதவுகளையுந் திறந்து விட்டு உடைமைகளைக் களவெடுத்தார்கள்.
I am going to the bazar to *buy* paper.	நான் கடுதாசி கொள்ளக் கடைக்குப் போகிறேன்.
I *bought* some pens and paper.	நான் சில தூவலுங் கடுதாசியுங்கொண்டேன்.
The pens you have *bought* for me are good for nothing.	நீ எனக்கென்று கொண்ட தூவல் ஒன்றுக்கும் உதவாது.

C.

Cast away this clothing.	இந்தப் புடைவைகளைத் தள்ளிவிடு.
They *cast* stones at him.	அவனுக்குக் கல்லெறிந்தார்கள்.
He has been *cast* off by all.	அவன் எல்லாராலுந் தள்ளப்பட்டிருக்கிறான்.
Catch that bird.	அந்தக் குருவியைப் பிடி.
I *caught* the jackal by the tail.	அந்த நரியை நான் வாலிலே பிடித்தேன்.
Having *caught* some fish he sold them.	அவன் கொஞ்ச மீன் பிடித்து விற்றான்.
It does very little good to *chide*.	கடிந்து கொள்வதினால் வரும் நன்மை அற்பம்.
He *chid* me publicly.	அவன் பிரசித்தமாய் என்னைக் கடிந்துகொண்டான்.

He has *chidden* me several times.	அவன் பலதரமும் என்னைக் கடிந்துகொண்டான்.
Choose which of these two you please.	இவ்விரண்டில் உனக்கு மனமானதைத் தெரிந்தெடு.
He *chose* the worse of the two.	அந்த இரண்டிலும் ஆகாததை எடுத்தான்.
He must take that which he has *chosen*.	தான் தெரிந்துகொண்டதைஅவன் ஏற்றுக்கொள்ள வேண்டும்.
Cleave this stick.	இந்தத் தடியைப் பிள.
He *cleft* it at one blow.	அவன் அதை ஒரு அடியிலே பிளந்தான்.
There appeared unto them *cloven* tongues.	அவர்களுக்குப் பிளந்த நாவுகள் காணப்பட்டன
That child *clings* to its mother.	அந்தப் பிள்ளைதன் தாயோடே ஒட்டிக் கொள்ளுகிறது.
He *clung* fast to the boat.	அவன் தோணியை வறுகிப் பிடித்துக் கொண்டான்.
I have *clung* to him in all my troubles.	எனக்குக் கலக்கம் வந்தபொழுதெல்லாம் அவரை அண்டிக்கொண்டேன்.
He *clothes* the naked and feeds the hungry.	இல்லாதவர்களுக்கு அன்னவஸ்திரம் அவர்கொடுக்கிறார்.
He *clothed* himself with rich garments.	அவர் விலை உயர்ந்த புடைவைகளைத் தரித்தார்.

He was *clad* wtih fine clothing.	மெல்லிய புடைவையை அவர் உடுத்தார்.
Come with me and we will cross the river	என்னுடனே வா அந்த ஆற்றைத் தாண்டிப் போவோம்.
I *came* from Madras to Jaffna in twenty-four hours.	இருபத்தினாலு மணித்தியாலத்திற் சென்னபட்டினத்தில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்தேன்.
I *came* by your house.	உன் வீட்டு வழியாய் வந்தேன்.
He is lately *come* from England.	அவர் இங்கிலாந்தில் இருந்து வந்துசிலநாளாயிற்று
How did you *come* by this book?	இந்தப் புஸ்தகம் உனக்கு எப்படிக்கிடைத்தது?
How do you *come* on with your work?	உமது வேலை எப்படி நடந்து வருகிறது?
How *came* this to pass?	இது எவ்விதமாய்ச் சம்பவித்தது.
I endeavoured to *come* up with them but could not.	அவர்களை நடந்து பிடிக்கப் பிரயாசப்பட்டும் என்னாற் கூடாது.
It *costs* me sixteen rupees a month to keep this horse.	இந்தக் குதிரையைத் தொட்டு எனக்கு ஒரு மாதம் பதினாறு ரூபாச் செல்லுகிறது.
This horse *cost* me two hundred rupees.	இந்தக் குதிரை இருநூறு ரூபாக் கொள்விலை.
After having *cost* me six hundred rupees the horse died.	அந்தக் குதிரைக்கு அறுநூறு ரூபாமட்டுக்கும் பொறுத்ததுதான் அதுவுஞ் செத்துவிட்டது.

He rises when the cock *crows*.	கோழிக் கூவலுக்கு அவன் எழும்புகிறது.
The cock *crew* so loud that it awoke him.	அவன் விழிக்கத் தக்கதாகச் சேவல் பெலத்துக் கூவிற்று.
The cock had *crowed* long before sunrise.	சூரியன் உதிக்க வெகு நேரத்துக்கு முன் சேவல் கூவிற்று.
Look how this lizard *creeps* along the wall.	சுவர் வழியாய்ப் பல்லி ஊருகிறதைப் பார்.
The rat *crept* into a hole.	அந்த எலி ஒரு பொந்துக்குட்பட்டது.
Having *crept* into a hole it escaped.	பொந்துக்குள்ளே போய்த் தப்பி விட்டது.
If the pen will not write *cut* it.	தூவல் எழுதாதிருந்தால் அதை வெட்டு.
Instead of cutting the pen he *cut* his finger.	அவன் தூவலை வெட்டுகிறேனென்று தன் விரலை வெட்டிக்கொண்டான்.
You have *cut* it so that it will not write.	நீ வெட்டின தூவல் எழுத மாட்டாது.

D.

I *dare* not do as you say.	நீர் சொல்லுகிறபடி செய்யத் துணியேன்.
He wished to do it but *durst* not.	அவன் அதைச் செய்ய விரும்பியுந் துணியவில்லை.
If he had *dared* to do so he would have done it.	அவன் அதைச் செய்யத் துணிந்தானேயாகில் செய்வான்.

He *deals* honestly with every body.	அவன் எவர்களுக்கும் நீதியாய் நடக்கிறான்.
You *dealt* with him in a very proper manner.	நீ அவனுடனே நன்முறையாய் நடந்தாய்.
He was *dealt* with as he deserved.	அவனுக்குத் தக்கதான ஆக்கினை நடந்தது.
Dig up this jungle.	இந்தக் காட்டை வெட்டிப்புடுங்கு.
He *dug* up the jungle in one day.	அவன் காட்டை ஒரு நாளிலே வெட்டிப் பிடுங்கினான்.
He burned the jungle after having *dug* it up.	அவன் காட்டைப் பிடுங்கிச் சுட்டுப்போட்டான்.
Why do you *do* so?	நீ ஏன் அப்படிச் செய்கிறாய்
He *did* his work in a clever manner.	அவன் தன் வேலையைக் கெட்டியாய்ச் செய்தான்
After having *done* his work he sat down to read.	தன் வேலையைச் செய்து முடித்து வாசிக்க உளுக்கார்ந்தான்.
We ought *to do* good to all.	நாம் சகலருக்கும் நன்மை செய்ய வேண்டும்
You may take this, I have *done* with it.	நீர் இதை எடுத்துக்கொள்ளலாம், எனக்கு இனித் தேவை இல்லை
What have you *done* with the book I gave you?	நான் உனக்குத் தந்த புத்தகத்தை என்ன செய்தாய்?
You have made the figures; now *draw* a line.	இலக்கம் வரைந்திருக்கிறாயே, இனிக் கீறுபோடு.

I sat near him while he *drew* a picture.	நான் கிட்ட இருந்தபொழுது அவன் ஒரு சித்திரம் எழுதினான்.
I saw several cannon *drawn* by elephants.	யானைகள் இழுத்துக் கொண்டுபோகிற சில பீரங்கிகளைக் கண்டேன்.
He always *drives* very fast.	அவன் எப்பொழுதும் ஊர்திகளைக் கதியாய்ச் செலுத்துகிறான்.
I *drove* a nail into the wall.	நான் சுவரிலே ஒரு ஆணியை அடித்து இறுக்கினேன்.
When he had *driven* the carriage four miles one of the wheels broke.	ஊர்தியை நாலு மயில் தூரத்துக்குச் செலுத்த, உருளைகளில் ஒன்று முறிந்தது.
He *drinks* new milk every day.	அவன் தினமும் உடனே கறந்த பாலைக் குடிக்கிறான்.
The cat *drank* up all the milk.	பால் எல்லாம் பூனை குடித்துப் போட்டது.
The jackal has *drunk* the milk and broken the cup.	நரி பாலையுங் குடித்துப் பாத்திரத்தையும் உடைத்தது.
Dwell where he may he is unhappy.	அவன் எங்கே இருந்தும் அபாக்கியன் அபாக்கியன் தான்.
He was unhappy as long as he *dwelt* there	அவன் அங்கே இருக்குமட்டாக அபாக்கியனாய்த் தானிருந்தான்.
He had *dwelt* there many years when I saw him.	நான் அவனைக் கண்ட காலத்தில் அவன் அங்கே வெகு வருஷம் வாசம்பண்ணினான்.

E.	
If you live in Madura you must learn to *eat* rice.	மதுரையிலே இருந்தீரானாற் சோறு சாப்பிடப் பரிசவனை பண்ண வேண்டும்.
He soon *ate* up all the fruit you gave him.	நீர் கொடுத்த பழம் எல்லாம் அவன் சுறுக்குத் தின்றுபோட்டான்.
He has *eaten* the fruit I gave him and now asks for more.	நான் கொடுத்த பழம் எல்லாந் தின்றுபோட்டு இன்னும் அதிகங் கேட்கிறான்
F.	
If you ride on horseback take care you do not *fall* off.	நீர் குதிரை ஏறினால்விழுந்துபோகாமற் பத்திரமாய் இருக்க வேண்டும்.
He *fell* from his horse and broke his leg.	அவன் குதிரையில் இருந்து விழுந்து கால் முறிந்துபோனான்.
Having *fallen* from his horse he does not now ride on horseback.	அவன் குதிரையில் இருந்து விழுந்ததினால் இப்பொழுது குதிரை ஏறுகிறதில்லை.
Squirrels *feed* chiefly upon fruit.	அணில் மிகுதியும் பழங்களையே புசிக்கிறது.
He bought a kitten and *fed* it with milk.	ஒரு பூனைக்குட்டி வாங்கிவைத்துக்கொண்டுபால் கொடுத்து வளர்த்தான்.
It grew very fast because it was *fed* with milk.	பால் குடித்துச் சுறுக்கு வளர்ந்தது.

I *feel* a pain in my side what shall I do?	எனக்கு ஒரு வளத்து நாரியிலே நோகிறது, அதற்கென்ன செய்வேன்?
I never *felt* so much pain before.	நான் ஒரு பொழுதும் இவ்வளவு வருத்தப்படவில்லை.
I give you this advice because I have *felt* much concern on your account.	உனக்காக மிகுந்த கவலைப்பட்டபடியால் நான் இந்தப் புத்தியை உனக்குச் சொல்லுகிறேன்.
Better to sit still than to *fight*.	சண்டையிலே என்ன அமைந்திருக்கிறது நல்லது.
The sepoys *fought* with great courage.	சிப்பாசிகள் மிகுந்த தயிரியத்துடனே போர்பண்ணினார்கள்.
The enemy fled, after having *fought* two hours.	இரண்டு மணித்தியாலம் போர்பண்ணிச் சத்துருக்கள் ஓடினார்கள்.
I have lost my pen see if you can *find* it.	என் தூவலைப்போட்டுவிட்டேன், எங்கே என்கிலும் இருக்கிறதோ பார்.
I *found* it under the table	மேசைக்குக் கீழே அதைக் கண்டேன்.
I have *found* it easy to speak English.	இங்கிலீசு பாஷையைப் பேசுவது இலேசென்று கண்டேன்.
Why shouid we *flee* there is no danger.	நாம் ஓட வேண்டியதென்ன? ஒரு மோசமும் இல்லை?
He was defeated and *fled* into his own country.	அவன் தோற்றுத் தன் ஊருக்கு ஓடினான்.

Having *fled* into his own country he died there.	தன் ஊருக்கு ஓடிப் போய் அங்கே செத்துவிட்டான்.
What *flowers* are these? *fling* them away.	இவை என்ன புட்பங்கள்! இவைகளை எறிந்துபோடு.
He *flung* the flowers I had given him into the river.	நான் கொடுத்த புட்பங்களை ஆற்றிலே எறிந்துவிட்டான்.
As soon as he had *flung* down his load he ran off.	தன் சுமையைப் போட்டுவிட்டவுடனே ஓடிவிட்டான்.
He cut the parrot's wing lest it should *fly* away.	பறவாதபடி கிளியின் செட்டையை வெட்டிப் போட்டான்
It *flew* from one tree to another.	அது ஒரு மரத்தில் இருந்து ஒருமரத்துக்குப் பறந்தது.
I perceive the musquetoes have all *flown* away.	நுளம்பெல்லாம் போய்விட்டதே.
Forbear threatening.	பயமுறுத்தாதே.
I *forbore* to speak to him.	நான் அவனுடனேபேசாமல் விட்டுவிட்டேன்.
He has *forborne* a long time.	அவன் வெகு காலமாய் விட்டு விட்டான்.
Dont *forget* to tell him what I said to you.	நான் உனக்குச்சொன்னதை அவனுக்குச் சொல்ல மறவாதே.
I *forgot* to tell him this.	அவனுக்கு இதைச் சொல்ல மறந்துபோனேன்.

He has *forgotten* every thing I told him.	நான் அவனுக்குச்சொன்னதெல்லாம் மறந்துபோனான்.
Forgive me my faults.	நான் செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொள்ளும்.
I heartily *forgave* him.	நான் அவனுக்கு மனதாரப்பொறுத்து விட்டேன்.
He has never *forgiven* me.	அவன்எனக்கு ஒருபோதும் பொறுத்துவிட்டதில்லை.
Let us not *forsake* our friends in their distress.	நமது சிநேகிதர்கள் இக்கட்டுப் படுகையில் நாம் பின்னிதம் பண்ணப்படாது.
He *forsook* all his former friends.	முந்தின சிநேகிதர்கள் எல்லாரையும் விட்டுவிட்டான்.
He has *forsaken* all his former bad habits.	அவன் தன் முந்தின அடாத பழக்கத்தை எல்லாம் விட்டுப்போட்டான்
It is so cold to-day I think it will *freeze* to night.	இன்றைக்கு மெத்தக் குளிராய் இருப்பதினால் இராவைக்குத் தண்ணீர் உறைந்துபோமென்று நினைக்கிறேன்.
It *froze* extremely hard last night.	இராத்திரித் தண்ணீர் கல்லுப்போலே உறைந்துபோயிற்று.
I went to see the tank where the water is *frozen*.	தண்ணீர் கெட்டியாய் உறைந்திருக்கிற குளத்தைப்பார்க்கப்போனேன்

G.

Can you *get* me another book like that?	அதைப்போல வேறொரு புத்தகந் தேடித்தரக்கூடுமோ!
He *got* the book for me which I wanted.	எனக்குத் தேவையாய் இருந்த புத்தகம் அவர்தேடித் தந்தார்.
You have *got* so many books, do give me one.	உமக்கு அவ்வளவு புத்தகம் இருக்க, எனக்கு ஒன்றைத் தாருமேன்.
Can you *get* him to do it?	அவனைக்கொண்டு நீர் செய்விக்கக்கூடுமோ?
I *got* a severe fall yesterday.	நேற்றுப் பாடாய் விழுந்து போனேன்.
He is unable to *get* up.	எழும்ப இயலாமல் இருக்கிறான்.
He immediately *got* off his horse.	அவன் உடனே தன்குதிரையை விட்டு இறங்கினான்.
I cannot *get* off taking my share in the work.	இந்த வேலையில் என் பங்கைச் செய்யாமல் விடக் கூடாது.
How does he *get* on in his learning?	அவன் படிப்பிலே எப்படித் தேறிவருகிறான்?
Do you know how to *gild* paper?	கடுதாசிக்குப் பொற்பூச்சுப் பூசத் தெரியுமா?
He shewed me a picture which he *gilded* yesterday.	தான் நேற்றுப் பொற்பூச்சுப் பூசின ஒருபடம் எனக்குக் காண்பித்தான்.
The book was *gilt* a week ago.	ஒரு கிழமைக்கு முன் அந்தப் புத்தகம் பொற்பூச்சுப் பூசப்பட்டது.

Gird up the loins of your mind.	உங்கள் மனதை இடைக் கட்டிக்கொள்ளுங்கள்.
He *girded* himself for wrestling.	அவன் மல்லுக்கு இடைக் கட்டிக்கொண்டான்.
He was *girt* about with a leather girdle.	அவன் வார்க்கச்சினுல் தன் இடையைக் கட்டிக்கொண்டான்.
Give me one of the penknives you bought at Calcutta.	நீ கற்குத்தாவிலேகொண்ட தூவல் வெட்டுங்கத்திகளிலே எனக்கு ஒன்றுதா.
He was so generous that he *gave* me two.	அவர் அவ்வளவு கொடையாளியானதினுல் எனக்கு இரண்டுதந்தார்.
He has *given* away much of his property to the poor.	தமதுஉடைமைகளில் அநேகத்தை எளியவர்களுக்குக் கொடுத்து விட்டார்.
I have *given* up all concern in the business.	அந்தக் காரியத்தில் எனக்கு உடந்தை இல்லை, துப்பரவாய் விட்டு விட்டேன்.
I *gave* away all the fruit you sent me.	நீர் அனுப்பின பழமெல்லாம் மறுபேருக்கு விட்டு விட்டேன்.
This beam appears likely to *give* way.	இவ்வுத்திரம் இருப்புவிட்டுப் போகிறதாகத் தோற்றுகிறது.
He can never *give* over talking.	அவன் ஒரு பொழுதும் பேச்சிலே ஓயான்.

He is capable of *giving* advice.	அவன் புத்தி சொல்லத் தக்கவன்.
If I am well I intend to *go* to-morrow.	சுகமானால் நாளைக்குப் போக நினைத்திருக்கிறேன்.
He *went* from Oodooville to Nellore in the midst of the rain.	அவர் உடுவிலில் இருந்து நல்லூருக்கு மழைக்குள்ளே போனார்.
He has been *gone* to Europe these six months.	அவர் ஐரோப்பாவுக்குப் போய் இப்போது ஆறு மாதமாயிற்று.
They *go* on well with their learning.	அவர்கள் செம்மையாய்ப் படித்திருக்கிறார்கள்.
Why do you stop reading? *go* on.	வாசியாமல் தரிப்பதென்ன? வாசி.
The lamp is *gone* out.	விளக்குத் தணிந்துபோயிற்று.
Having begun this I mean to *go* through with it.	இதைத் தொடங்கினபடியால் செய்து முடிக்கத் தீர்மானித்தேன்.
Can you *grave* on stone?	நீ கல்லிலே சித்திரம் வெட்டுவாயா?
He *graved* it beautifully.	அவன் அதை அழகாய்ச் சித்திரித்தான்.
The image was *graven* by an artist.	இந்தச் சொரூபத்தை ஒரு சிற்பாசாத்திரி சித்திரித்தான்.
Grind this wheat in the mill.	இந்தக் கோதும்பையைத் திரிகையிலே அரை.
They *ground* it as small as dust.	மண்போலே துகளாக அதை அரைத்தார்கள்.

Wheat when *ground* becomes flour.	கோதும்பை அரைக்க மாவாகும்.
A great many flowers *grow* in the garden.	தோட்டத்திலே வெகு பூச்செடிகள் உண்டாயின.
The plants I put in the ground *grew* to trees.	நான் நட்ட கன்றுகள் மரங்களாய் விட்டன.
You have *grown* very tall since I saw you last.	நான் உன்னைக் கண்டது முதல் நீ மிகவும் வளர்ந்திருக்கிறாய்.

H.

Have you any acquaintance with that gentleman?	அந்தத் துரையுடனே உனக்குப் பழக்கம் உண்டா?
I *had* acquaintance with him formerly.	முன்னே அவருக்கும் எனக்கும் பழக்கம் உ[illegible]
Having *had* no instruction he is very ignorant.	அவனுக்குப் ப[illegible]லாதத்தினாலே நின் [illegible]ய் இருக்கிறான்.
Hang the keys upon the nail.	அந்த ஆணியிலே இந்தத் திறப்புகளைத் தூக்கு.
The washerman *hung* up the clothes to dry in the sun.	வண்ணான் புடைவைகளை வெய்யிலிலே காயத் தூக்கி வைத்தான்.
Last week two men were *hung* (or *hanged*) for committing murder.	இரண்டு பேர் கொலை செய்ததற்காகப் போன கிழமை தூக்கப்பட்டார்கள்.
First *hear* what I say then give an answer.	முன்னே நான் சொல்லுகிறதைக் கேட்டுப் பின்பு மறுமொழி சொல்லு.

He *heard* very patiently all I had to say.	நான்சொன்னதெல்லாவற்றையும் மிகவும் பொறுதியாய்க் கேட்டான்.
Having *heard* both parties he gave his opinion.	இருதிறமுஞ் சொன்னதைக் கேட்டுக்கொண்டு தம்முடைய எண்ணத்தைச் சொன்னார்.
Hew this timber straight.	இந்த மரத்தை மட்டாய்ச் சீவு.
He *hewed* it eight square.	அவன் அதை எண் சதுரமாய்ச் சீவினான்.
The sepulchre was *hewn* out of a rock.	மலையிலே கல்லறை வெட்டியிருந்தது.
Can you *hide* your sins?	நீ உன் பாவங்களை மறைக்கக் கூடுமா?
The robbers *hid* their plunder in the wood.	அந்தக் கள்ளர்கள் தாங்கள் எடுத்தவைகளைக் காட்டிலே ஒளித்து வைத்தார்கள்.
Having *hid* what he had stolen he ran off.	அவன் தான் களவெடுத்ததை ஒளித்து வைத்துவிட்டு ஓடிப்போனான்.
I can *hit* this nail with a hammer.	ஒரு சுத்தியலாலே இந்த் ஆணியை அடிக்கக் கூடும்.
He *hit* me a very hard blow on the head	அவன் என் தலையிலே பெலத்துக் குற்றினான்.
He has *hit* the mark and gained the prize.	இலக்கின் மேற் பட்டபடியால் அவருக்குப்பந்தாயங் கிடைத்தது.
He *holds* his pen very well.	அவன் கெட்டியாய்த் தூவல் பிடிக்கிறான்.

They *held* a conversation in English.	அவர்கள் இங்கிலீசுப் பாஷையில் பேசிக்கொண்டார்கள்.
After *holding* a conversation for some time they returned.	கொஞ்ச நேரம் பேசிக்கொண்ட பின் திரும்பி விட்டார்கள்.
They all *hold* this opinion.	அவர்கள் யாவரும் இக் கருத்தைக் கொண்டிருக்கிறார்கள்.
Bid him *hold* his tongue.	அவனைப் பேசாமல் இருக்கச் சொல்லு.
Hold out your hand.	உமது கையை நீட்டும்
The garrison cannot possibly *hold* out much longer.	எதிராளிகளுடைய யுத்தத்தைக் கோட்டையிற் போர்ச் சேவகர் இனி ஒரு விதத்திலும் தாங்க மாட்டார்கள்.
It *hurts* his mind to see so much wickedness.	அத்தனை பொல்லாங்கைக் காண்கிறது அவருடையமனதுக்கு வருத்தம்
He *hurt* himself by a fall from his horse.	அவன் குதிரையில் இருந்து விழுந்து நோப்பட்டான்.
He has *hurt* his foot and is not able to walk	தன் காலிலே நோப்பட்டபடியால் நடக்கக் கூடாமல் இருக்கிறான்.

K.

He *keeps* secret every thing he hears.	அவன் கேள்விப்படுகிற யாவையும் இரகசியமாய் வைத்துக் கொள்ளுவான்.

He *kept* it secret from his nearest friends.	அவர் அதைத் தமது உற்ற சிநேகிதருக்குஞ் சொல்லாமல் வைத்தார்.
I have *kept* it secret thus long, now I tell it you.	இவ்வளவும் அதை இரகசியமாய்வைத்துக்கொண்டேன், இப்பொழுது அதை உனக்குச் சொல்லுகிறேன்.
Can you *knit* a stocking?	நீ சரணு கோசம் பின்னுவாயா?
I *knit* all the day yesterday.	நான் நேற்று முழுதும் பின்னிக் கொண்டிருந்தேன்.
I have *knit* two pairs since I saw you.	நான் உன்னைக் கண்ட பின் இரண்டு சோடு பின்னிப்போட்டேன்.
Do you *know* what the people in general think of him?	சனங்கள் அவனைப்பற்றி என்ன நினைக்கிறார்களென்று அறிவாயோ?
I inquired but they *knew* nothing of the matter.	நான் விசாரித்தேன், அந்தக் காரியத்திலே அவர்கள் ஒன்றும் அறியவில்லை.
Those who have *known* him say he is an excellent man.	அவரை அறிந்தவர்கள் அவர் உத்தமனென்று சொல்லுகிறார்கள்.

L.

Here are goods enough to *lade* a ship.	ஒரு கப்பலுக்கேற்றப் போதுமான சாமான்கள் இங்கே இருக்கின்றன.

He *laded* his ship yesterday.	அவன் தன் கப்பலில் நேற்றுச் சாமான் ஏற்றிப்போட்டான்.
The ship is *laden* with silk.	கப்பலிலே பட்டுப் புடைவை ஏற்றியிருக்கிறது
Let us *lay* aside every thing that is evil.	பொல்லாங்கை முற்றும் விட்டுவிடுவோமாக.
He *laid* by what remained of his wages.	தன் சம்பளத்திலே மிஞ்சினதை வைத்திருந்தான்.
By *laying* aside all his profits he became rich.	கிடைத்த ஊதியங்களைக் கூட்டிப் பாக்கியவானானான்.
He *lays* out his money to no purpose.	அவன் விருதாவிலே பணத்தைச் செலவளிக்கிறான்.
That poor man is blind, another *leads* him.	அந்த எளியவன் குருடன், அவனை வேறொருவன் கூட்டிப்போகிறான்.
He *led* so bad a life no one respected him.	அவன் அவ்வளவு பொல்லாதவனாக நடந்ததினால் ஒருவனும் அவனைச் சங்கிக்கவில்லை.
Having *led* a wicked life he was afraid to die.	பொல்லாங்கனாக நடந்தபடியால் சாவுக்கு மிகவும் பயந்தான்.
It is said he intends soon to *leave* this country.	சுறுக்கு இந்த ஊரை விட்டுப்போக எண்ணுகிறானென்று சொல்லுகிறார்கள்.
He *left* all his business in the hands of his servant.	தன் காரியங்களை எல்லாம் பணிவிடைகாரன் கையில் ஒப்புவித்துப்போனான்.

He died and has *left* a large fortune to his son.	அவன் வெகு ஆஸ்திகளைத் தன் மகனுக்கென்றுவைத்து விட்டு இறந்தான்.
I am very poor, can you *lend* me a few rupees?	நான் மெத்த எளியவனாய்ப்போனேன், எனக்குக் கொஞ்சம் உருபா கடனாய்த்தருவீரோ?
The people to whom he *lent* his money never paid him.	அவரிட்டத்திற் கடனாகப் பணம் வாங்கினவர்கள் ஒருக்காலுங் கொடுக்கவில்லை.
He has *lent* all his money and become poor, because he cannot get it.	பணம் எல்லாங் கடன்கொடுத்து வாங்கக் கூடாமல் வறியவனானான்.
Let us see if we can understand this book.	இந்தப் புத்தகம் விளங்குமோ பார்ப்போம்.
After beating him he *let* him go.	அவனை அடித்துப்போட்டு விட்டு விட்டார்.
The bird being *let* go flew into the wood.	அந்தக் குருவி விட்டவுடனே காட்டுக்குப் பறந்துபோயிற்று.
He *lies* under the shade of a banyan tree.	ஒரு ஆல மரநிழலிலே படுத்திருக்கிறான்.
He *lay* in that place till sun-set.	பொழுது படுமட்டும் அந்த இடத்திலே கிடந்தான்.
He arose in the morning after having *lain* all night on the ground	இராமுழுதும் நிலத்திலே கிடந்து காலமே எழுந்தான்.

He told me to *load* the boat with indigo.	தோணியிலே நீலக்கட்டி ஏற்றும்படி என்னிடத்திலே சொன்னார்.
I *loaded* the boat and gave orders to the Tindal.	தோணிக்குப் பாரம் ஏற்றி உடனே தண்டையலுக்குக்கட்டளைபண்ணினேன்.
When the boat was *laden* he sent it to Madras.	தோணி பாரமேற்றின பின் சென்னை பட்டினத்துக்கு அனுப்பினார்.
Take care you do not *lose* the knife I gave you.	நான் உனக்குத் தந்த கத்தியைஇழந்து விடாதை.
He *lost* his way in returning from the village.	கிராமத்தில் இருந்து வருகிற பொழுது வழியைத் தப்பவிட்டார்.
Having *lost* his way he arrived late.	அவர் வழிதப்பிப் போய் நேரஞ் செல்ல வந்து சேர்ந்தார்.
He has *lost* all patience.	அவனிடத்தில் இருந்த பொறுமை எல்லாம்போயிற்று.

M.

Make haste and write the letter I told you of.	சுறுக்குப் பண்ணி நான் சொன்னபடி காகிதத்தை எழுது.
He *made* me write the letter immediately.	அந்தக் கடுதாசியைச் சீக்கரத்திலே என்னை எழுதப்பண்ணினார்.
After the pen was *made* he began to write.	ஒரு தூவலை வெட்டிக் கொண்ட பின்எழுதத்தொடங்கினார்.

I cannot *make* out this word.	இச்சொல் இன்னதென்று விளங்கவில்லை.
Make out his account.	அவனுடைய கணக்கை எழுதித்தாரும்.
The matter betwixt us is entirely *made* up.	நமக்குள்ளே இருந்த காரியம் முற்றுஞ் சரிப்பட்டுப்போயிற்று.
I could not *make* my way through the jungle.	காட்டுக்கு ஊடாக வழிபிடித்துக்கொள்ளக் கூடாது.
You must *make* good the loss.	அந்த நட்டத்தை நீர் சரிப்படுத்தவேண்டும்.
I *mean* to go to town.	நான்பட்டணத்துக்குப் போக நினைக்கிறேன்.
I *meant* to buy a house.	நான் ஒரு வீடுகொள்ள நினைத்தேன்.
The letter was not *meant* to wound his feelings.	அந்தக் காகிதம் அவனுடைய மனதை விதனப்படுத்தவென்று எழுதப்பட்டதல்ல.
Meet me at Carnatty's house to-morrow.	நாளைக்குக் கண்ணத்தையுடைய வீட்டுக்குளென்னைச் சந்திக்க வா.
I walked four miles and *met* no one.	நாலு மயில் தூரவழி நடந்தும் நான் ஒருவரையுங் காணவில்லை.
Having *met* we conversed on the subject.	சந்தித்து அந்தக் காரியத்தைக் குறித்துப் பேசினோம்.
Did you ever *mow* grass?	நீ எப்பொழுதாகுதல் புல்லு அறுத்துமிருக்கிறாயா?
He *mowed* all day.	அவன் நாள் முழுதும் புல்லறுத்தான்

I have *mown* grass and barley too.	நான் புல்லும் வாற்கோதும்பையும் அறுத்தேன்.

P.

Will you *partake* of this food with me?	நீ என் கூட இருந்து இந்தப் போசனத்தைப் புசிப்பாயா?
He *partook* of it very thankfully.	அவர் வெகு நன்றியறிதலோடே அதைப் புசித்தார்.
He has often *partaken* of my bounty.	அவன் பல முறையும் என்னிடத்திலே நன்கொடைகள் பெற்றிருக்கிறான்
Will you *pass* this way on your return?	நீர் மறுபடி திரும்பிப் போகையில் இந்த வழியாய்ப் போவீரா?
He *past* me near the bazar.	நான் சந்தைக்குக் கிட்டப்போகையில் அவர் சேர்ந்து என்னைக் கடந்துபோனார்.
He has *past* the meridian of life.	அவருக்கு நடுவயது சென்றுபோயிற்று.
He is a just man, and *pays* every one his due.	அவர் நீதிமானானபடியால் எவனுக்குங் கொடுக்க வேண்டியதைக்கொடுக்கிறார்.
I *paid* the money before the note became due.	அந்தச் சீட்டில் எழுதின தவணைக்கு முன்னே நான் அந்தப் பணங்கொடுத்து விட்டேன்.

I have *paid* every one and have no concern on that account.	எல்லாருக்குங் கொடுத்துத் தீர்த்துப் போட்டபடியால் அதில் இனி எனக்குத் தொந்தரவில்லை.
Put the plant into the ground and it will live.	இந்தப் பயிரை நிலத்திலே நடு, அது உயிர்த்துவிடும்.
He *put* all the money he saved into the bank.	அவன் தேடின பணத்தில் மிஞ்சினதை எல்லாந் திரவிய சாலையிலேகொடுத்து வைத்தான்.
He has *put* his money into the bank and receives interest.	அவர் தமது பணத்தைத் திரவிய சாலையிலே கொடுத்து வைத்து வட்டி வாங்குகிறார்.
It is now day-light, *put* out the lamp.	கிழக்கு வெளிக்கின்றது, விளக்கைத் தணி.
Put off your shoes	உமது பாதரட்சையைக் கழற்றும்.
Put it off till to-morrow.	நாளைக்கென்று நிறுத்தி விடும்.

R.

He *reads* eight or ten hours every day.	அனுதினமும் எட்டு அல்லது பத்து மணிநேரம் வாசிக்கிறான்.
He *read* the grammar several times over.	அவர் இலக்கணத்தை மேலும் மேலும் வாசித்தார்.
He has *read* with attention and made great progress.	அவர் கவனமாய் வாசித்து வெகு தூரம் படித்து விட்டார்.

I can *rend* this cloth easily.	நான் இந்தப்புடைவை யைலகுவாய்க்கிழிப்பேன்.
He *rent* his garment and cried bitterly.	அவன் தன்புடைவை யைக் கிழித்துப்போட்டுக் கசந்தழுதான்.
The veil of the temple was *rent*.	தேவாலயத்தின் திரைப் புடைவை கிழிந்தது.
Can you *rid* me of this difficulty?	என்னை இந்த இக்கட்டில் இருந்து விலக்கி விடுவீரா?
I *rid* him of it yesterday.	நான் அவனை அதில் இருந்து நேற்று விலக்கி விட்டேன்.
He was *rid* of his fever before I saw him	நான் அவனைக் காணமுன் காய்ச்சல் அவனை விட்டு விலகினது.
He *rides* on horseback every morning.	ஒவ்வொரு காலமேயும் அவர் குதிரையில் ஏறிப்போகிறார்.
He *rode* from Calcutta in his own carriage.	அவர் கற்குத்தாவில் இருந்து தமது பண்டியில்ஏறிப்போனார்.
Having *rode* so far in a palankeen he was very tired.	அவ்வளவு தூரம் பல்லாக்கில் ஏறிப்போய் மிகவும் இளைத்துவிட்டார்.
The bell *rings* every day at twelve o'clock.	நாடோறும் மத்தியானத்தில் மணி அடிபடுகின்றது.
The bell *rung* so loud that it awaked him.	மணி பெலனாய் அடிபட்டதினால் அவன் அருண்டு விட்டான்.

The bell having *rung* the people assembled in the church.	மணி அடிபடவுஞ் சனங்கள் கோயிலிலே வந்து கூடினார்கள்.
If you wish to be a good scholar *rise* early.	நீ கல்வியிலே தேற விரும்பினால் நேரத்தோடே எழும்பு.
I *rose* yesterday before gun-fire.	நான் நேற்றுப் பீரங்கிச்சத்தத்திற்குமுன்னெழுந்தேன்.
The price of indigo has *risen* lately.	நீலக் கட்டி கொஞ்சநாளாய் விலையுயர்ந்து விட்டது.
Run after him and call him back.	ஓடிப்போய் அவனைக் கூப்பிடு.
He *ran* till he was out of breath.	அவன் தீரத் தொய்யுமட்டும் ஓடினான்.
Having *run* four miles he sat down to rest.	நாலு மயில் தூரமட்டும் ஓடிப் பின் இளைப்பாற உளுக்கார்ந்தான்.

S.

Tell the carpenter to *saw* this board in two.	தச்சனிடத்திலே இந்தப் பலகையை இரண்டாய் அரியச் சொல்லு.
He *sawed* the board in the way you told him.	நீர் சொன்ன மாதிரி அரிந்தான்.
After the board was *sawn* in two it answered the purpose.	அந்தப்பலகையை இரண்டாய் அரிந்தபின் காரியத்துக்கு அது கூடிற்று.
Why do you *say* the contrary to what I tell you?	நான் உனக்குச் சொல்லுகிறதற்கு எதிரிடையாய் ஏன் பேசுகிறாய்?

He *said* he would consider the subject.	அந்தக் காரியத்தை யோசனைபண்ணிப் பார்ப்பேனென்றார்.
Having *said* this he took leave.	இதைச் சொல்லி விடை பெற்றுப்போனான்.
I *see* the trouble I take to teach you is useless.	நான் உன்னைப் படிப்பிக்கப் பிரயாசப்படுகிறது வீணென்று காண்கிறேன்
I *saw* a great many boats on their way to Calcutta.	கற்குத்தாவுக்கு அநேகம் படவு போகிறதைக் கண்டேன்.
I returned home after having *seen* the fort and the city.	கோட்டையையும் நகரியையுங் கண்டு திரும்பி விட்டேன்.
If we *seek* for knowledge we shall find it.	நாம் அறிவைத் தேடினாற் பெறுவோம்.
He *sought* for information from every one	யாவரிடத்திலும் விசாரித்தார்.
I have *sought* for him in every place.	அவரை எங்குந் தேடிப் பார்த்தேன்.
I intend to *sell* my old books and buy new ones.	என் பழைய புத்தகங்களைவிற்றுப்புதுப்புத்தகங் கொள்ள நினைக்கிறேன்.
He *sold* his estate for ten thousand rupees.	அவர் தமது ஆஸ்தியைப் பதினாயிரம் உருபாவுக்கு விற்றார்.
He has *sold* his rice and now has a plenty of money.	அவர் தமது அரிசி விற்று வெகு பணம் வைத்திருக்கிறார்.
I *send* my servant to the bazar once a week	என் வேலைக்காரனைக் கிழமைக்கு ஒரு முறை கடைக்கு அனுப்புகிறேன்.

He *sent* him away without giving a pice.	ஒரு துட்டுங் கொடாமல் அவனை அனுப்பிவிட்டார்
As I was *sent* for I went there.	என்னை அழைப்பித்ததினாலே அங்கே போனேன்.
I *set* off to-day for Moolletive.	நான் இன்றைக்கு முல்லைத் தீவுக்குப் புறப்படுகிறேன்.
He *set* them a laughing by speaking in this way.	அவன் இவ்விதமாய்ப் பேச அவர்கள் சிரித்தார்கள்.
I have *set* the trap in the place you told me.	நீர் சொன்ன இடத்திற் பொறி ஏற்றியிருக்கிறேன்.
The rains appear to have *set* in.	மாரி காலம் வந்து விட்டதென்று தோன்றுகிறது.
We shall *set* out at one o'clock.	ஒரு மணிக்குப் புறப்படுவோம்.
I told you what to do; why do you not *set* about it?	செய்வதின்னதென்று உமக்குச் சொன்னேன், ஏன் முயலவில்லை?
Shake off the dust that is on your clothes	உன்னுடைய புடைவைகளில் இருக்குந் தூசுளை உதறு.
He *shook* off the dust upon my paper.	என் கடுதாசியில் அந்தத் தூசுளை உதறிவிட்டான்.
You have *shaken* the ink I cannot write.	நீர் மையைக் கலக்கினபடியால் நான் எழுதக்கூடாது.

Shape this vessel differently.	இந்தப் பாத்திரத்தை வேறுவிதமாய் உருவாக்கு.
The potter *shaped* his vessel very ingeniously.	குயவன் தன் பாத்திரத்தை வெகு சித்திரமாக உருவாக்கினன்.
Man was *shapen* in iniquity.	மனிதன் பாவத்திலே உருவானன்.
I cannot *shave* with this razor.	நான் இந்தக் கத்தியினுற் சௌளம் பண்ணக்கூடாது.
He *shaved* early in the morning.	அவன் காலமே வெகு நேரத்தோடே சௌளம் பண்ணினன்.
His head is *shaven* close to the skin.	அவன் தன் தலையை அறமுண்டமாய்ச் சௌளம்பண்ணுவித்துப் போட்டான்.
Shear off his hair.	அவன் மயிரைக் கத்திரித்துப்போடு.
He *sheared* off his hair once a year.	அவன் தன் மயிரை வருஷம் ஒரு முறை கத்திரித்தான்.
The sheep were *shorn* in June.	ஆடுகள் ஆனிமாதம் மயிர் கத்திரிக்கப்படுகின்றன.
Why do you *shed* tears on hearing this?	இதைக் கேட்டபோதே உனக்குக்கண்ணீர் வடிகிறதென்ன?
The sun *shed* his beams over the earth.	சூரியன் தன் கிரணங்களைப் பூமியிலே விட்டது.
As soon as the sun had *shed* his beams the darkness fled.	சூரியன் ஒளி விட இருள் அகன்றது.

The sun *shines* with great power to-day.	இன்றைக்கு வெகு பெலனாக வெய்யில் எறிக்கிறது.
The beams of the sun *shone* through the clouds.	சூரியன் புகாருக்கூடாகப் பிரகாசித்தது.
The sun has *shone* all day.	சூரியன் நாள் முழுதும் பிரகாசித்தது.
Please to *shew* me the book you spoke of.	நீர் சொன்ன புத்தகத்தைத் தயவாகக் காட்டும்.
He *shewed* me his house and garden.	அவர் தமது வீட்டையுந் தோட்டத்தையும் எனக்குக் காண்பித்தார்.
The servant returned after having *shewn* me the way.	பணிவிடைகாரன் எனக்கு வழிகாட்டின பின் திரும்பிப் போனான்.
Can you *shoe* my horse to-day?	எனது குதிரைக்கு இன்றைக்கு இலாடன் அடிப்பாயா?
I *shod* him yesterday.	நான் அதற்கு நேற்று இலாடன் அடித்துப்போட்டேன்.
That horse has not been *shod* for a month	அந்தக் குதிரைக்கு ஒரு மாதமாக இலாடன் தைக்கவில்லை.
Do you know how to *shoot* with bow and arrow?	அம்பு வில்லு எடுத்து எய்ய உனக்குத்தெரியுமா?
We *shot* a deer in hunting.	வேட்டைக்குப் போய் ஒரு மான் வெடி வைத்தோம்.

He was *shot* through the heart.	குண்டு நெஞ்சிலே பட்டு அவன் இறந்து விட்டான்.
I will not *shrink* from my duty.	நான் என் கடைமையைச் செய்யாமல் விட்டு விடேன்.
He *shrunk* at the thought of it.	அவன் அதை நினைத்து மனங் குருவிப்போனான்.
This cord has *shrunk* much in drying.	இந்தக் கயிறு காய்ந்து சுருங்கிப்போயிற்று.
Shred these beans.	இந்த அவரைக் காய்களைச் சிறு துண்டுகளாக வெட்டு.
He *shred* them into the pot.	அவன் அவைகளைத் துண்டாக வெட்டிப் பானையிலேபோட்டான்.
The vegetables were *shred* in the morning.	பூண்டுகள் காலமே அரியப்பட்டன.
Shut the door—there is much noise.	மிகுந்த இரைச்சலாயிருக்கிறது கதவைச் சாத்து.
He went into the chamber and *shut* the door.	அவர் தமது அறைக்குட்போய்க் கதவைச் சாத்தினார்.
The door was *shut* and I could not go in	கதவு பூட்டப்பட்டாயிற்று நான் உள்ளே போகக் கூடாது.
She *sings* very sweetly.	அவள் இனிமையாய்ப் பாடுகிறாள்.
They *sung* (or *sang*) very much out of tune.	அவர்கள் பாடினது இராகம் தப்பிப்போயிற்று.

Having *sung* for two hours, they ceased.

இரண்டு மணிநேரம்பாடி முடித்தார்கள்.

Iron will *sink* in water.

இரும்பு தண்ணீரில்த் தாழும்.

Yesterday a boat laden with cotton *sank* (or *sunk*) in the Ganges.

பஞ்சேற்றின தோணி ஒன்று நேற்றுக் கங்கையிலே தாழ்ந்துபோயிற்று.

Having *sunk* in deep water the cargo was lost.

ஆழமானதண்ணீரிலே தாழ்ந்தபடியால் சரக்குகள் கெட்டுப்போயிற்று.

Sit down and see if you can understand this.

இது உனக்கு விளங்குமோ என்று உளுக்கார்ந்து பார்.

She *sat* down on the bank of the river and began to weep.

ஆற்றங்கரையிலே அவள் இருந்து அழத்தொடங்கினாள்.

Having *sat* for four hours the council broke up.

நாலு மணித்தியாலமட்டும்இருந்துஅந்த ஆலோசனைச் சங்கங்கலைந்தது.

Though he *slay* me yet will I trust in him.

அவன் என்னைக் கொன்றாலும், நான் அவனை நம்புவேன்.

He way-laid him and *slew* him.

அவன் வழியில் ஒழித்து நின்று அவனைக் கொன்றுபோட்டான்.

Many were *slain* in the battle.

போரிலேஅநேகர் கொல்லப்பட்டார்கள்.

He *sleeps* every morning till eight o'clock.

ஒவ்வொருநாளும்காலமே எட்டு மணிமட்டும் நித்திரைகொள்ளுகிறார்.

Yesterday he *slept* till past nine.	நேற்று அவர் ஒன்பது மணிக்கு மேலும் நித்திரை கொண்டார்.
He has *slept* all night and is much recovered.	இராமுழுதும் நித்திரை கொண்டதினாற் சுகமாய் இருக்கிறான்.
The book will *slide* off the desk.	புத்தகஞ் சாய்ந்த மேசையில் இருந்து வழுவிவிழும்.
The plate *slid* off and was broken.	பிங்கான் வழுவி விழுந்து உடைந்துபோயிற்று.
I have often *slidden* on the ice.	நான் அநேக முறை உறைந்த நீரிலே வழுக்கி ஓடினேன்.
Can you *sling* a stone?	நீ கவணிலே கல்லு வைத்து எறிவாயா?
David *slung* a stone and killed Goliath.	தாவீது கவணிலே கல்லு வைத்தெறிந்து கோலியாத்தைக்கொன்றான்.
I have often *slung* stones at birds.	நான் வெகு முறை கவணிலே கல்லு வைத்துப்பட்சிகளுக்குஎறிந்தேன்
Why should you *slink* away?	நீ ஏன் பதுங்குகிறாய்?
He *slunk* away and no one knew it.	அவன் ஒருவரும் அறியாமற் பதுங்கிப் போனான்.
He is a coward and has *slunk* into his tent.	அவன் ஆண்மைகெட்டுக் கூடாரத்துக்குட் புகுந்து விட்டான்.
Slit this cloth for me	இந்தப் புடைவையை எனக்குக் கிழித்துத் தா.

He *slit* his finger with his knife.	அவன் தன்கைவிரலை க் கத்தியினுற் கீறிக்கொண்டான்.
The meat was all *slit* in pieces.	இறைச்சியெல்லாந் துண்டு துண்டாகக் கீறப்பட்டது.
Smite him.	அவனை அடி.
He *smote* him with his hand.	அவன் இவனைத் தன் கையினுலே அடித்தான்.
The Philistines were *smitten* by Samson.	பெலிஸ்தர் சிம்சோனுல் அடிக்கப்பட்டார்கள்.
Gardener, *sow* these seeds in the garden.	தோட்டக்காரா, இந்த விரையைத் தோட்டத்தில் விரை.
He *sowed* the seed in five or six places.	ஐந்தாறு இடத்திலும்விரையை விரைத்தான்.
Having *sown* the seed we may expect a harvest.	விரையை விரைத்தபடியால் விளைவுக்குங் காத்திருக்கலாம்.
He *speaks* the Bengalee language very correctly.	அவர் வங்காளப் பாஷை மிகவும் திருத்தமாய்ப் பேசுகிருர்.
He *spoke* to us in the English language	அவர் இங்கிலீசுப் பாஷையிலே எங்களுடனே பேசினுர்.
I need not repeat it as I have *spoken* of this before.	இதை முன்னே பேசினபடியால் இனிப் பேசத் தேவை இல்லை.
Speed your flight as fast as you can.	நீ விலகிக் கூடிய மட்டுந் தீவிரமாய் ஓடு.
He *sped* very swiftly.	அவன் மிகுதியுந் தீவிரித்தான்.

A thousand years have *sped* away.	ஆயிரம் வருஷங்கள் தீவிரத்தோடே சென்றன.
He *spends* his money as fast as he gets it	அவர் பணங் கிடைத்தவுடனே செலவழித்துப்போடுகிருர்.
He *spent* a great deal to no purpose.	அவர் வீணுக மிகுதியுஞ் செலவழித்தார்.
Having *spent* all, he began to beg.	அவர் எல்லாம் அழித்துப்போட்டு இரக்கப் புறப்பட்டுவிட்டார்.
Take care you do not *spill* the ink.	மை ஊற்றுண்ணுதபடி பத்திரமாய்ப் பார்.
He *spilled* the ink over my clothes.	என் புடைவைகளில் அவர் மையைச் சிந்திஞர்
He has broken the pot and the water is *spilt*.	அந்தக் கலயத்தை உடைத்த படியால்த் தண்ணீர் ஊற்றுண்டது.
She *spins* thread for fine cloth.	மெல்லிய புடைவைக்கு நூல் நூற்கிருள்.
She *spun* all this with her own hand.	அவள் தன் சொந்தக் கையிஞலே இதெல்லாம் நூற்ருள்.
Having *spun* her thread she takes it to market.	அவள் நூல் நூற்றுக் கடைக்குக்கொண்டுபோகிருள்.
Never *spit* about the house.	வீட்டுக்குக் கிட்ட ஒருக்காலுந் துப்பாதே.
They smote him and *spit* on him.	அவர்கள் அவரை அடித்து அவர் மேலே துப்பிஞர்கள்.
He has *spit* on my cloth.	அவன் என் புடைவையின் மேலே துப்பிஞன்.

Can you *split* this piece of wood?	இந்த மரத்தைப் பிளப்பாயோ?
He *split* the log of wood with an axe.	அந்தக் குற்றியை அவர் கோடாலியாலே பிளந்தார்.
Having *split* the cocoanut, he drank the water.	அவர் தேங்காயை உடைத்து இளநீரைக் குடித்தார்.
Spread this mat upon the floor.	இந்தப் பாயை நிலத்திலே விரி.
He *spread* the salt all over the table.	அசன பீடத்தில் முற்றும் உப்பைப் பரவினான்.
Having *spread* a net he caught many birds.	அவன் கண்ணி வைத்து வெகு குருவிகளைப் பிடித்தான்.
The weeds *spring* up very fast here.	வெகு சீக்கிரங் களைகள் இங்கே உண்டாகிறது.
The weeds *sprang* up amongst the corn.	பயிர்களுக்குட் களைகள் முளைத்தன.
The weeds and corn have *sprung* up together.	பயிருங் களையும் ஒன்றாக முளைத்தன.
When you read *stand* in your proper place.	நீ வாசிக்கிற பொழுது உன்னுடைய இடத்திலே நில்.
He *stood* up to read before his teacher.	உவாத்திக்கு முன்பாக வாசிக்கஅவன்எழுந்தான்
After he had *stood* a moment he began to read.	எழுந்து சற்றே நின்று வாசிக்கத் தொடங்கினான்.
The jackal *steals* what he can lay hold of.	திருடக் கூடியதெதுவோ அதை நரி திருடும்.

He *stole* the plantains that were on the table.	அவன் பீடத்திலிருந்த வாழைப் பழங்களை அவன் களவெடுத்தான்.
He told me that some one had *stolen* his watch.	தன் நாழிகை வட்டத்தை ஆரோகளவெடுத்துப்போட்டதென்று எனக்குச் சொன்னான்.
Stick these papers together with paste.	பசையினாலே இந்தக் கடுதாசிகளை ஒட்டு,
He *stuck* fast in the mud while getting into the boat.	தோணியில் ஏறப்போன பொழுது, சேற்றிலேபுதைந்து விட்டான்?
The bearer got him out after he had *stuck* there some time.	சற்று நேரம் புதைந்திருக்கக்,காவாள்அவனவெளியே எடுத்து விட்டான்.
Do not be afraid of the lizard, it *stings* no one.	பல்லிக்கு நீ பயப்படவேண்டாம், அது ஒருவரையுங் கொட்டாது.
The scorpion *stung* him in the foot.	தேள் அவன் காலிலே கொட்டிப்போட்டது.
Being *stung* by a scorpion, he died in an hour.	தேள் கொட்டி அவன் ஒரு மணிநேரத்திலே செத்து விட்டான்.
The elephant *strides* off very rapidly.	யாவனை இடந்து இடந்து வெகுசுறுக்காய்நடக்கிறது
The elephant *strode* over the plain very soon.	யாவனை வெளியை எல்லாஞ் சுறுக்கிலே தாண்டிப்போட்டது.
After the elephant had *stridden* a mile, a soldier shot him.	யாவனை ஒரு கட்டைதூரம்அளவுக்குப்போனபின் ஒரு சேவகன் அதைவெடிவைத்துப்போட்டான்.

I will go as soon as the clock *strikes*.	மணி அடித்தவுடனே நான் போவேன்.
He *struck* him with a stick on the head.	ஒரு தடியால் அவன் தலையில் அடித்தான்.
We sat down to dinner as soon as the clock had *struck* two.	இரண்டு மணி அடிக்கப் பகற் சாப்பாட்டுக்கு உளுக்கார்ந்தோம்.
String these beads upon thread.	இந்த மணியை நூலிலே கோத்துப்போடு.
He *strung* the flowers which I gave him.	நான் அவனுக்குக் கொடுத்த பூக்களைக் கோத்தான்.
Having *strung* the flowers, he made a garland.	அவன் பூக்களைக் கோத்து மாலையாக்கினான்.
Strive to do your duty.	உன் கடமையைச் செய்யப் பிரயாசப்படு.
He *strove* with him very furiously.	அவன் இவனுடனே கோபமாய்த் தருக்கம் பண்ணினான்.
After the tigers had *striven* an hour, one died.	புலிகள் ஒரு மணித் தியாலமாய்ச் சண்டை பிடித்த பிறகு, ஒன்று செத்துப்போயிற்று.
Strew these flowers on the floor.	இந்தப் புட்பங்களைத் தரையிலே தூவி விடு.
He *strowed* the books all round.	புத்தகங்களை நாலு புறத்திலும் அவன் சிதறிப் போட்டான்.
Every thing was *strown* about the house.	சகல உடைமைகளும் வீடடங்கச் சிதறியிருந்தன.
Swear not at all.	ஒரு போதும் ஆணையிடாதே.

He *swore* falsely.	அவன் பொய்ச்சத்தியம்பண்ணிஞன்.
He was *sworn* by the magistrate.	நீதவான் அவனைக்கொண்டு சத்தியம் பண்ணுவித்தார்.
He *sweats* profusely.	மிகுதியாய் அவனுக்கு வேர்க்கிறது.
The horse *sweat* before he had gone a mile.	ஒரு கட்டை தூரம்போக முன் குதிரைக்கு வேர்த்தது.
He had *sweat* very much before we got to the rest-house.	நாங்கள் தங்கும் மடத்துக்குப் போக முன் அதுக்கு வேர்வை உண்டாயிற்று.
His foot *swells* in the rainy season.	மழை காலத்திலே அவன் கால் வீங்குகிறது.
Being bitten by a serpent, his foot *swelled*.	பாம்பு கடித்ததிஞல் அவன் கால் வீங்கிற்று.
His face was much *swollen*.	அவன் முகம் மெத்த வீங்கிப்போயிற்று.
Can you teach me to *swim*?	எனக்கு நீந்தப் பழக்குவாயா?
He *swam* from this side to the other.	இக்கரையில் இருந்து அக்கரைக்கு நீந்திப் போஞன்.
He *sunk* before he had *swum* half way across the river.	ஆற்றிலே அரைவாசி அளவும் நீந்திப் போக முன் தாழ்ந்து போஞன்.
This parrot *swings* upon wire.	இந்தக் கிளி கம்பியில் இருந்து ஆடுகிறது.

He *swung* on the bough of a mango tree.	ஒரு மாங்கொப்பிலே அவன் தூங்கி ஆடினான்.
Having *swung* a little while, he fell down.	கொஞ்ச நேரந் தூங்கி ஆடி அவன் விழுந்தான்.

T.

He *takes* medicine generally once a month.	மாதம் ஒருக்கால் அவன் மருந்து உண்பான்.
He *took* all the oranges you sent for me.	நீர் எனக்கனுப்பினதேன்தோடம் பழத்தை எல்லாம் அவர் எடுத்துக்கொண்டார்.
The city surrendered when they had *taken* the fort.	கோட்டையைப் பிடித்துக்கொண்ட படியால் நகரி ஒப்புக்கொடுக்கப் பட்டது.
When did this *take* place?	இது எப்பொழுது நடந்தது?
I wish to *take* your advice.	இதற்கு உமது புத்தியைக் கேட்க விரும்புகிறேன்.
This table *takes* up much room.	இந்தப் பீடம் வெகு இடங்கொள்ளுகிறது.
Take care that you do not follow their bad example.	அவர்களுடைய கெட்ட நடத்தையைப் பழகாமற் பத்திரமாய் இரு.
He *teaches* the English and Tamil languages.	அவர் இங்கிலிசுப் பாஷையையுந் தமிழ்ப்பாஷையையும் படிப்பிக்கிறார்.

The same teacher who *taught* you *taught* me.	உம்மைப் படிப்பித்த உவாத்தியார்தான் என்னையும் படிப்பித்தார்.
He has *taught* me with much pains.	அவர் மிகவும் பிரயாசப்பட்டு என்னைப் படிப்பித்தார்.
Mind you do not *tear* your book.	உன் புத்தகத்தைக்கிழித்துப் போடாமற் பதனம் பண்ணு.
He *tore* his clothes in going through the jungle.	காட்டுக்குட் போய்த் தன் புடைவைகளைக் கிழித்துப்போட்டான்.
You have *torn* the paper, how can you write?	கடுதாசிகளைக் கிழித்துப் போட்டுஎப்படிஎழுதுவாய்
Tell me when I may meet with him.	அவனை எப்பொழுதுசந்திக்கலாமென்றெனக்குச் சொல்லும்.
I *told* him to make haste and come back.	சுறுக்குப்பண்ணி வாவென்று நான் அவனுக்குச் சொன்னேன்.
Having *told* him this I expected him to-day	இதை அவருக்குச் சொன்னபடியால் இன்றைக்கு வருவாரென்று காத்திருக்கிறேன்.
I *think* you had better tell him this.	நீர் இதை அவருக்குச் சொன்னால் நல்லது.
I *thought* it best to say nothing about it.	அதில் ஒன்றும் பேசாமலிருக்கிறது நல்லதென்று நினைத்தேன்.
Having *thought* of the matter, I told him this.	காரியத்தை நினைத்து இப்படி அவருக்குச் சொன்னேன்.

The merchant *thrives* in his business.	வியாபாரி தன் தொழிலில்வர்த்தித்து வருகிறான்.
The horse *throve* as long as I gave him gram.	நான் கொள்ளுக்கொடுத்து வந்த காலமெல்லாங் குதிரை தெளிவாய் இருந்தது.
He has *thriven* very much within a month.	ஒரு மாதத்துக்குள்ளே மிகவுஞ் செழிப்பாய் விட்டது.
Throw these bits of paper out of doors.	இந்தக் கடுதாசித் துண்டுகளை வெளியே எறிந்துவிடு.
He *threw* away the fruit which I gave him.	நான் அவனுக்குக்கொடுத்த பழத்தை எறிந்துபோட்டான்.
The paper was *thrown* into the fire.	கடுதாசி அக்கினியிற் போடப்பட்டது.
He *thrusts* his hand into the fire.	அவன் தன்னுடைய கையை நெருப்புக்குள் நீட்டுகிறான்.
He *thrust* his spear at the lion.	அவன் தன் ஈட்டியைச் சிங்கத்திலே பாய்ச்சினான்.
Absalom was *thrust* through the heart.	அப்சலோம் ஈட்டியினாலே மார்பு ஊடுருவக் குத்தப்பட்டான்.
He *treads* so softly I do not hear his step.	அவர் மிகவும் மிருதுவாய் மிதிக்கிறபடியால் எனக்குச் சத்தங் கேட்கவில்லை
You *trod* upon his toes.	நீ அவன் கால் விரலில் மிதித்தாய்.
Having *trodden* on a snake, it bit him.	ஒரு பாம்பிலே மிதிக்க அது அவனைக் கடித்தது.

W.

I *wear* a suit of clean clothes every day.	தினமும் வெளுத்த உடுப்பு நான் உடுக்கிறது.
He *wore* out his clothes and was unable to buy more.	தன் உடுப்பைப் பாழாக்கிப்போட்டு வேறேகொள்ள இயலாதிருந்தான்.
Having *worn* his cloth so long, it is full of holes.	நெடுநாளாக உடுத்தபடியால் அந்தப் புடைவை பீறலாய்ப்போயிற்று.
He *weaves* the kind of cloth we wear.	நாம் உடுக்கிற தரவழிப் புடைவைதான் அவன் நெய்கிறது.
He *wove* more in one day than others in two.	மறுபேர் இரண்டுநாள் நெய்கிறதிலும் அவன் ஒரு நாளிலே அதிகம் நெய்தான்.
Having *woven* the cloth he sold it at the market.	புடைவையை நெய்து கடையிலே விற்றான்.
He *weeps* on account of the death of his son.	தன் மகன் செத்ததற்காக அவன் அழுகிறான்.
She *wept* greatly at the loss of her husband.	தன் கணவன் இல்லாததற்காக அவள் மிகவும் அழுதாள்.
Having *wept* a flood of tears, she began to speak.	கண்ணீர் ஆறாய் ஓட அழுதுகொண்டு பேசத் தொடங்கினாள்.
He *wins* every one's kind feelings.	ஒவ்வொருவரும் தன் மேற் பட்சம் வைக்கத்தக்கதாய் அவன் நடக்கிறான்

I *won* ten rupees by my exertion.	நான் என் முயற்சியினாலே பத்து உரூபாய் பெற்றேன்.
He has *won* the prize	வெகுமதி அவனுக்குக் கிடைத்தது.
Wind the watch.	கடிகாரத்தைத் திருப்பிவிடும்.
He *wound* a string round his finger.	அவன் தன் கைவிரலிலே ஒரு கயிற்றைச் சுற்றிக்கொண்டான்.
The twine was *wound* in balls.	முலிவளைகொண்ட நூல் பந்து பந்தாய்ச் சுற்றப்பட்டது.
She *works* to support herself and children.	தன்னையுந் தன் பிள்ளைகளையுந் தாங்கத் தக்கதாக வேலை செய்கிறாள்.
She *wrought* with her own hands as a gardener.	தன் கையினாலேதோட்டக்காரியாகவேலைசெய்தாள்.
Having *wrought* night and day, she completed the work.	வேலையை இரவும் பகலுமாகச் செய்து முடித்தாள்.
Wring out the water that is in the cloth.	புடைவையில் இருக்கிற தண்ணீரைப் பிழிந்துவிடு.
She *wrung* a wet cloth over my writing paper.	நான் எழுதுகிற கடுதாசியில் அவன் சீலையில்த் தண்ணீரைப் பிழிந்து விட்டான்.
He hung the cloth up to dry after he had *wrung* it.	சீலையைப் பிழிந்து காயத் தூக்கி விட்டான்.

Let me see if I can *write* as well as you.	நீ எழுதுகிறதுபோல நான் எழுதுவேனோவென்று பார்க்கட்டு.
He dictated the letter and I *wrote*.	அவர் வாசகஞ்சொல்ல நான் சடுதாசியை எழுதினேன்.
He shewed me a letter beautifully *written*	நேர்த்தியாய் எழுதப்பட்ட காகிதத்தை எனக்குக் காண்பித்தார்.

EXAMPLES OF NOUNS

ARRANGED IN ALPHABETICAL ORDER.

A.

He possesses great *ability*.	அவன் மகா வல்லபத்தையுடையவன்.
I am unhappy at your *absence*.	நீர் பிரிந்திருப்பது எனக்குத் துக்கம்.
Take as much as you please: I have *abundance*.	என்னிடத்தில் மிகுதி உண்டு, உமக்கு மனமானதை எடுத்துக்கொள்ளலாம்.
He goes to an *academy*.	அவன் சாத்திரப்பள்ளிக் கூடத்திற்குப் போகிறான்.
I still retain the *accent* of my native language.	என் பாஷையின்போக்கும் உச்சரிப்புமாய்ப்பேசுவேன்.
I beg your *acceptance* of this book.	இந்தப் புத்தகத்தை ஏற்றுக்கொள்ள உம்மைக் கேட்டுக்கொள்ளுகிறேன்

Have you an *account* with him?	உனக்கும் அவருக்கும் ஏதுங்கொடுக்கல் வாங்கல் உண்டோ!
She has a very bad tooth-*ache*.	அவளுக்கு மிகுந்த கடினமான பற்கொதி.
He has many *acquaintances*.	அவனுக்குக் கூட்டாளிகள் அநேகர்.
Good *actions* are our praise.	நற்செய்கைகளே நமது புகழ்.
He has received an *addition* to his salary	அவனுக்குச் சம்பளம் அதிகப்பட்டிருக்கிறது.
Pray can you tell me his *address*?	தயவுபண்ணி அவன் பெயர் ஊர் என்ன சொல்ல வேண்டும்.
I asked, but they refused me *admission*.	நான் கேட்டும், அவர்கள் என்னை உட்பட விடவில்லை.
Of what *advantage* will that be to me?	எனக்கு அதினால் என்னபலன்?
She has long been in *adversity*.	அவள் வெகுகாலமாக இக்கட்டிலேஇருக்கிறாள்.
I saw the *advertisement* in yesterday's news paper.	இந்தப் பிரசித்தத்தை நேற்றையிற் புதினக் கடுதாசியிலே கண்டேன்.
What is your *advice* in this affair.	இந்தக் காரியத்தைப்பற்றி என்ன புத்தி சொல்லுகிறீர்?
He shows great *affection* for the people.	அவன் சனங்கள் மேற் பெரிய பட்சங் காட்டி நடக்கிறான்.
They have suffered great *affliction*.	மிகுதியும் உபத்திரப்பட்டார்கள்.

His *age* is not more than ten years.	அவனுக்கு வயது பத்துக்கு மேலே இல்லை.
Do you know who is his *agent?*	அவனுடைய காரியகாரன் இன்னாரென்று தெரியுமா?
What *agreement* did you make with him?	அவனுடனே என்னஉடம்படிக்கை பண்ணினாய்?
I saw an *alligator* in the Ganges.	கங்கையிலே நான் ஒரு முதலை கண்டேன்.
He made me an *allowance* of ten rupees	அவர் எனக்குப் பத்து ரூபாக் கழித்துத் தந்தார்.
Have you not this year's *almanac?*	இவ்வருஷ பஞ்சாங்கம் உம்மிடத்தில் இல்லையோ?
I have not yet learned the *alphabet.*	நான் இன்னம் அரிவரி படிக்கவில்லை.
What *alteration* shall I make?	நான் இதிலே என்னதிருத்த வேண்டியது?
What is the *amount* of your bill?	உன்னுடைய கணக்கின் தொகை எவ்வளவு?
Do you know this *animal's* name?	இந்த மிருகத்திற்குப்பேர் இன்னதென்று அறிவீரா?
There are sixteen *annas* in a rupee.	பதினாறு அணாக்கொண்டது ஒரு ரூபா.
Can you give an *answer* to this question?	இந்தக் கேள்விக்கு ஒரு மறுமொழி கொடுக்கக்கூடுமா?
He made no *apology* for his conduct.	தான் செய்ததற்கு ஒரு நியாயமுஞ் சொல்ல வில்லை.

He made an *appeal* to government.	தேசாதிபதிக்கு முறைப்பாடுபண்ணினார்.
He made an *application* to the judge.	நீதியதிபதிக்கு விண்ணப்பபத்திரம் எழுதி அனுப்பினார்.
Does this meet your *approbation*?	இது உமக்குச் சம்மதமோ?
There are five *arches* in the veranda.	சாலையிலே ஐந்திடத்தில் வில் வளைவாகக் கட்டியிருக்கிறது.
He uses very strong *arguments*.	மகா உறுதியான நியாயங்களைச்சொல்லுகிறான்.
I am now learning *arithmetic*?	நான் இப்பொழுது கணக்குப் படிக்கிறேன்.
The king was at the head of his *army*.	இராசா தனது சேனையின் முன்னணியிலே இருந்தான்.
Have you heard of his *arrival*?	அவன் வந்ததைக் கேள்விப்பட்டீரோ?
I am not acquainted with that *art*.	அந்தக் கைத்தொழிலில் எனக்கு அப்பியாசம் இல்லை.
They deal in various *articles*.	அவர்கள் பல சரக்குகளை வைத்துப் பரிமாறுகிறார்கள்.
I saw a great *assembly* of people.	நான் வெகு சனக் கூட்டத்தைக் கண்டேன்.
Can no one give me any *assistance*?	ஒருவரும் எனக்கு உதவி செய்யக் கூடாதோ?
He has been appointed *assistant* secretary.	அவன் எழுத்துக் காரியஸ்தனுக்குத் துணையாக வைக்கப் பட்டான்.

He expressed great *astonishment*.	அவன் மிகவும் ஆச்சரியப்பட்டான்
Are you acquainted with *astronomy*?	வான சாத்திரத்திலே உமக்குப் பரிட்சை உண்டா?
He is now become an *atheist*.	அவன் இப்பொழுது நிரீச்சுரன்.
Your *attendance* is required there.	நீர் அங்கே போக வேண்டும்.
She pays *attention* to learning.	அவள் படிப்பிலே கவனமாய் இருக்கிறாள்.
By profession he is an *attorney*.	அவன் காரிய காரனாய் இருக்கிறான்.
Do you mean to attend the *auction*?	ஏலத்துக்குப் போக நினைக்கிறீரா?
He is by trade an *auctioneer*.	அவர் ஏலக்காரன்.
He is now in *authority*.	அவன் இப்பொழுது தத்துவவானாய் இருக்கிறான்.
There is no end to his *avarice*.	அவன் மெத்த அங்கலாய்த்தவன்.
What is the *attendance* at your school on an *average*?	உமது பள்ளிக்கு வரும் பிள்ளைகள் ஏக சகட்டுக்கு எவ்வளவு?
Bring an *axe* and chop this wood.	கோடரிகொண்டு வந்து இந்த மரத்தைத் தறி.

B.

He is still a *bachelor*.	அவன் இன்னம் பிரமசாரிதான்.
Put this money in a *bag*.	இந்தப் பணத்தைப் பையிலே போடு.

The soldiers departed this morning with their *baggage*.	போர்ச் சேவகர் தட்டு முட்டுகளை எடுத்துக்கொண்டு இன்று காலமே புறப்பட்டார்கள்.
Are you willing to give *bail* for him?	அவனுக்குப் பிணை நிற்க நீ சம்மதிக்கிறாயோ?
What is the *balance* of my account?	என் கணக்கிலே நிலுவையென்ன?
Open this *bale* of cotton.	இந்தப் பஞ்சுக்கட்டை அவிழ்.
That vessel has come in *ballast*.	ஓடம் அடிப்பாரம்போட்டு வந்தது.
They are *bankers* in Calcutta.	கல்குத்தாவில் அவர்கள் திரவிய கடைக்காரராய் இருக்கிறார்கள்.
He is lately became a *bankrupt*.	அவர் இந்நாட்களிற் கடனிறுக்கத் திராணியில்லாதவராய்ப் போனார்.
He has bought twenty *bars* of iron.	அவன் இருப்புச் சலாகை இருபதுகொண்டான்
You have made a bad *bargain*.	பொருள் வாங்கினதில் மோசம்போனீர்.
I have sold my twenty *barrels* of pitch.	எனது இருபது பீப்பாக் கீசிலும் விற்றுப்போட்டேன்.
Put these things in a *basket*.	இவைகளை ஒரு பெட்டியிலே வை.
Bring some water in a *basin*.	கிண்ணியிற் கொஞ்சந் தண்ணீர்கொண்டுவா.
He wears a very long *beard*.	அவன் தாடி நெடுக வளர்த்து வருகிறான்.

He is ill and confined to his *bed*.	அவர் இயலாப்பாய்ப்ப டுத்திருக்கிறார்.
I have been stung by a *bee*.	தேனீ என்னைக் குத் தினது.
There is a *beggar* at the door.	கதவருகே யாசகன் நி ற்கிறான்.
Here is neither *beginning* nor end.	இதற்குத் துவக்கமும் இ ல்லை முடிவும் இல்லை.
This is very bad *behavior*.	இது மிகவும் ஆகாத ந டத்தை.
Have you received *benefit* from the medicine?	மருந்து தின்றதினாலே உமக்கு ஏதொரு நயங் க ண்டிருக்கிறதா?
I have been three years in *Bengal*.	நான் வங்காளத்துக்கு வந்து இப்பொழுது மூன்று வருஷம்.
Give me your *bill*: I will pay it.	உமது வருமானக் கண க்கைத் தந்தாற் பணந்த ருவேன்.
What *bird* is this?	இதென்ன பட்சி?
The *blame* rests only upon me.	குற்றம் என் மேலே மாத்திரம் பொறுக்கிறது.
Through the *blessing* of God, I have recovered.	பராபரனுடைய அருளி னாற் சுகப்பட்டேன்.
Where there is *blossom* we may hope for fruit.	பூவுள்ள இடத்திற் ப ழத்தையுந் தேடலாம்.
Here are a great many *blunders*.	இங்கே வெகுபிழைகள் இருக்கின்றன.
Fix a *bolt* on the window shutter.	பலகணியிற் கதவுக்கு த் தாட்போடு.

He wishes for a *bond* to this amount.	இந்தப் பணத்துக்கும் உறுதி செய்து தரச்சொல்லுகிருன்.
I have been at the *book-seller's*.	புத்தகம் விற்கிறவனுடைய வீட்டுக்குப்போயிருந்தேன்.
Put this oil into a *bottle*.	எண்ணெய்யைக் குப்பியில் வார்.
Read to the *bottom* of the page.	புறம் முடிய வாசி.
He sat on the *bough* of a tree.	ஒரு மரத்திற் கொப்பின் மேல் இருந்தான்.
Having made a *bow* he sat down in the *assembly*.	அவன் ஆசாரஞ் செய்து பின் கூட்டத்திலே உளுக்கார்ந்தான்.
Bows and arrows were formerly used in war.	முற்காலத்தில்விற்போர் பண்ணினர்கள்.
What shall I put in this *box*.	இந்தப்பெட்டகத்திலே நானென்னபோட்டு வைக்க?
He is a very clever *boy*.	அந்தப் பிள்ளை மகாசமர்த்தன்.
That lady wears *bracelets*.	அந்தத் தலைவி கடகந் தரித்துக்கொள்ளுகிருள்
That tree has many *branches*.	அந்த மரத்திலே கொப்புகள் மிகுதி.
Don't you know *brass* from copper?	பித்தளைக்குஞ் செம்புக்கும் வேற்றுமை அறியாயோ?
This is very nice *bread*.	இது மிக உசிதமானஅப்பம்.

What is the *breadth* of that cloth?	அந்தப் புடைவையின் அகலம் என்ன?
I have run till I am out of *breath*.	தொய்ந்துபோகுமளவும் ஓடினேன்.
It is wrong to give or take a *bribe*.	பரிதானங் கொடுக்கிறதும் வாங்குகிறதும் பிழை
Bricks are made of this kind of earth.	செங்கல்லு இவ்விதமான மண்ணிலே அரிந்து எடுக்கப்படுகின்றது.
I have seen both the *bride* and *bridegroom*	மணவாளன் மணவாளி இருவரையுங் கண்டேன்.
He has a horse, but no *bridle*.	அவனிடத்திற் கலினம் இல்லை, குதிரை உண்டு.
He is by trade a *broker*.	அவன் ஒரு தரவன்.
How much will be the *brokerage*?	தரவுக்கு என்ன கிடைக்க வேண்டும்?
Here is a *brush*; where is the paint?	தூரியக்கோல் இங்கே இருக்கிறது, மை எங்கே?
Are you not afraid of that *bull*?	அந்தக் காளைக்கு நீ பயப்படவில்லையா?
Where shall I put this *bundle*?	பொதியை நான் எங்கே வைக்க?
The whole *burden* rests upon me.	முழுச் சுமையும் என்னிலே பொறுக்கிறது.
She caught a *butterfly* in the garden.	அவள் தோட்டத்தில் வண்ணாத்திப் பூச்சி பிடித்தாள்.
There is a *by-road* through the wood.	காட்டுக்கூடே போக ஒரு குறுக்கு வழி இருக்கிறது.

C.

Are there *cabbages* in your garden?	உன் தோட்டத்திற்கோவிகள் உண்டோ:
That ship has lost her anchor and *cables*	அந்தக் கப்பலின் நங்கூரமும் அம்மாறுங் காணாமற்போயின.
This *cage* is to keep birds in.	இது பட்சி விட்டு வளர்க்குங் கூடு.
Where did you get that *cake*?	அந்தப் பண்ணிகாரம் உனக்கு எங்கே கிடைத்தது?
This will be to them a great *calamity*	இது அவர்களுக்கு மிகுந்த அபாயமாய் இருக்கும்.
Have you made a *calculation* how much it will cost?	இதற்குச் செலவு எவ்வளவு பிடிக்குமென்று மதித்தீரோ?
The cow and *calf* were together.	பசுவுங் கன்றுங் கூட நின்றன.
The soldiers pitched their *camp* near Madura.	மதுரைக்குக் கிட்டப் போர்ச் சேவகர் பாளயமிறங்கினார்கள்.
Buy me (for me) two *candlesticks*.	இரண்டு விளக்குத்தாள் எனக்குக்கொண்டு தாரும்.
Where did you buy this *canvass*?	இந்தப் பருக்கன் புடைவை எங்கே கொண்டீர்?
He is a person of *capacity*.	அவன் சாமாத்தியகாரன்.
Where is the ship's *captain*?	கப்பல் ஓட்டி எங்கே?

He has sent me a *card* of invitation.	அவன் என்னை வரும்படி சீட்டனுப்பினான்.
I have no *care* on that account.	அதற்காக எனக்குக் கவலை இல்லை
Of what does this ship's *cargo* consist?	இந்தக் கப்பலிலுள்ள கேள்வு என்ன?
He is a *carpenter*.	அவன் தச்சன்.
Have you no *case* for this razor?	இந்தச் சௌளக்கத்திக்கு உறை இல்லையா?
This is a very difficult *case*.	இது அதிக தொந்தரையான காரியம்.
In *cash* and notes, I have five hundred rupees.	காசும் நோட்டுமாக ஐந்நூறு ரூபா என்னிடத்திலே இருக்கிறது.
He is head *cashier* in the bank.	பொக்கிஷ சாலையின் முதற் கணக்கப் பிள்ளை அவன்.
Put these things in a *cask*.	இவற்றை ஒரு பீப்பாவிலே போட்டு வை.
This *cat* has very large *claws*.	பூனைக்குக் கால் நகம் மிகவும் புரியது.
Have you seen the *catalogue* of to-day's sale?	இன்றைக்கு ஏலம்போடப்படுந் தட்டு முட்டின் இடாப்பைக் கண்டீரா?
Do you know the *cause* of this?	இதற்குக் காரணம் என்னவென்று அறிவீரா?
What need of all this *caution*?	இவ்வளவு எச்சரிக்கை வேண்டியதென்ன?
Place this in the *centre*.	இதை நடுவாக வை.
This house has been built a *century*.	இந்த வீடு கட்டி நூறு வருஷமாயிற்று.

I know this as a *certainty*.	இது நிச்சயமாக எனக்குத் தெரியும்.
I have received from him a *certificate* of my capacity and good behaviour.	என் சாமாத்தியத்துக்கும் நல்லொழுக்கத்துக்கும் அத்தாட்சிப் பத்திரம் அவரிடத்திலே பெற்றேன்.
Here is plenty of *chaff* but where is the rice?	பதர் மிகுதியாய் இங்கே இருக்கிறது, நெல் எங்கே?
Is this *chain* made of iron?	இது இருப்புச் சங்கிலியா?
Take a *chair* and sit down.	ஒரு நாற்காலியிலே இரும்.
He writes only with *chalk*.	சீமைச் சுண்ணாம்பினால் மாத்திரம் எழுதுகிறான்.
There is no *chance* of seeing him there.	அவனை அங்கே காண்பதரிது.
He has gone there for *change* of air.	வேறுவித காற்றுப்பட அங்கே போயிருக்கிறான்.
What *chapter* shall we read?	நாங்கள் வாசிக்க வேண்டிய அதிகாரம் எது?
He bears an excellent *character*.	அவனுடைய நடத்தையை வியந்துகொள்ளுகிறார்கள்.
She draws pictures with *charcoal*.	கரியினாற் சித்திரம் எழுதுகிறார்கள்.
Tell me what the *charge* is.	அதிலே உமக்கு வருமதி என்ன சொல்லும்.
He bestows a great deal in *charity*.	தருமத்துக்காக மிகுதியாய்க் கொடுக்கிறான்.
This will give a *check* to his exertions.	அவனுடைய முயற்சிக்கு இது ஒரு தடையாய் இருக்கும்.

I saw a hen with ten *chickens*.	ஒரு கோழியும் பத்துக் குஞ்சுகளுங் கண்டேன்.
I have known him since he was a *child*.	அவனைச் சிறு பிராயந்தொடுத்து அறிவேன்.
Childhood, youth, manhood, and old age make the four stages of life.	மனிதருக்குள்ள பருவங்கள் குழந்தைப் பருவம் வாலிபப் பருவம் ஆடவப் பருவம் விருத்தாப்பியம் என்னும் நான்கு.
He has lately come from *China*.	இந்த நாளிலே சீனாவில் இருந்து வந்தான்.
Why are all these *chips* here? take them away.	இந்தச் சிராய்கள் எல்லாம் இங்கேன்? எடுத்துக்கொண்டுபோ.
I sent him a *chit* by last night's post.	இராத்திரித் தவாலிலே அவனுக்கு ஒரு சீட்டு அனுப்பினேன்.
Cut this wood with a *chisel*.	இந்த மரத்தை உளியினாலே வெட்டு.
It was his own *choice* to do so.	அப்படிச் செய்வது அவனுடைய விருப்பம்.
Mix a little *cinnamon* with the other spices.	மற்றுஞ் சம்பாரங்களுடனே கொஞ்சங் கறுவாவுங் கல.
One and a *cypher* make ten.	ஒன்றின் இலக்கத்துடனே பூச்சியமும் எழுதினாற் பத்து.
How long has this coin been in *circulation*?	இந்த நாணயம் வழங்கி வந்து எவ்வளவு காலம்?
This is a curious *circumstance*.	இது நூதனமான காரியம்.

Calcutta is now a large *city*.	கல்தத்தா இப்போதுவிஸ்தாரமான பட்டிணம்.
He received us with great *civility*.	எங்களை மிகுந்த மரியாதையுடனே ஏற்றுக் கொண்டார்.
Have you any further *claim* on his estate?	அவருடைய ஆஸ்தியில் உனக்கு இன்னம் யாதொரு உடந்தை உண்டோ?
Bricks are made of *clay*.	செங்கல் களிமண்ணினலேதான் உண்டாகிறது.
The attorney has written to his *client*.	காரியக்காரன் தன்னை நியமித்தவனுக்கு ஒரு சீட்டெழுதினன்.
This *climate* is less healthy than that of Europe.	ஐரோப்பாவைப் பார்க்க இவ்வூர் சவுக்கியங் குறைவு.
What is the time by the church *clock*?	மணியின்படி நேரம் என்ன காணும்?
There are many *clouds*: it is likely there will be rain.	முகில் மிகுதியாய் இருப்பதினல்,மழை வரும்போலே இருக்கிறது.
Some people ride in *coaches*, others go on foot.	சிலர் இரதத்திலும் சிலர் கால் நடையாகவும் போகிருர்கள்.
Madras is on the sea *coast*.	சென்னபட்டிணம் கடலருகாக இருக்கிறது.
This vessel is a *coaster*.	இது கரையாக ஓடுங் கப்பல்.
Sweep away that *cob-web*.	அந்தப் பொட்டுப் பூச்சியின் நூலைத் துடை.

He is now *Collector* of Chilaw.

அவர் இப்பொழுது சலாபத்தில் ஆயத் துரையாய் இருக்கிறார்.

Have you seen the new *College*?

புதிய சுற்றுவாரியைக் கண்டீரோ?

What is the name of this *colour* in English?

இந்த நிறத்துக்கு இங்கிலிசிலே என்னபேர்?

Take a *comb* and comb your hair.

சீப்பெடுத்துத் தலையை வார்.

This affords me *comfort* in my trouble.

இது என் இக்கட்டில் ஆறுதலாய் இருக்கிறது.

Calcutta is the chief seat of *commerce* in India.

இந்து தேசத்தில் கல்குத்தா வியாபாரம் நடக்கும் மேலான இடம்.

The business of the society is conducted by a *committee* of ten persons.

சங்கத்திற் காரியங்களைக் கூட்டத்தார் பத்துப்பேர் நடப்பித்து வருகிறார்கள்.

I have no *companion*.

எனக்குத் தோழன் இல்லை.

I shall be glad of your *company* tomorrow at one o'clock.

நாளை ஒரு மணிக்கு நீர் வருவது எனக்குச் சந்தோஷம்.

He belongs to the house of Messrs. Gibson and Co.

அவன் கிப்சன்முதலான கூட்டத்தாரிலுள்ளவன்.

I am glad to be in his *company*.

அவனுடனே கூடியிருக்கச் சந்தோஷப்படுகிறேன்.

There is no *comparison* between him and her.

அவனும் அவளும் ஒருத்தருக்கொருத்தர் இணையல்ல.

Ships are navigated by the *compass*.	திசையறி கருவிகொண்டு திக்கறிந்து கப்பல் ஓட்டுகிறது.
Why act thus? have you no *compassion*?	இப்படிச் செய்வதென்ன? இரக்கம் உனக்கில்லையா?
He is always coming with *complaints*.	அவன் எப்பொழுதும் முறைப்பாடு சொல்லி வருகிறான்.
Sir, Mr.—— sends his *compliments* to you and begs, &c.	ஐயா! இன்னார் உமக்கு உபசாரஞ் சொல்லி அனுப்பி ஒரு காரியத்தைச் செய்ய மன்றாடுகிறார்.
He is a *compositor* at the Manepy press.	அவன் மானிப்பாய் அச்சுக் கூடத்தில் எழுத்துக் கோக்கிறவன்.
Let us not indulge *conceit*.	அகந்தைக்கு இடங் கொடுக்கப்படாது.
I have no *concern* in this business.	இந்தக் காரியத்திலே எனக்கு உடந்தை இல்லை
This has caused her much *concern*.	இதினால் அவளுக்கு வியாகுலம் மிகுதி
He has now left the *concern*: he is no longer a partner.	அவன் அந்தக் கூட்டரவை விட்டு விட்டான். இனி அவர்களுடனே அவனுக்கு உடந்தை இல்லை.
This is the *conclusion* of the chapter.	அதிகாரத்தின் முடிவு இது.
I saw a great *concourse* of people.	நான் அநேக சனங்கள் கூடி நிற்கக் கண்டேன்.

My *condition* at least is better than his.	என்னுடைய நிலைபரம் அவனுடைய நிலைபரத்திற் குறைந்ததல்ல.
His *conduct* is to be commended.	அவனுடைய நடத்தை புகழத் தக்கது.
I place no *confidence* in what they say.	அவர்கள் சொல்வதை நான்சற்றும் நம்பவில்லை
The *congregation* had assembled in church.	கோவிலிலே சங்கங் கூடியிருந்தது.
There is no *connection* in these sentences.	இவ்வசனங்களிலேபொருட்டொடர்பு தோன்றவில்லை.
She went without my *consent*.	அவள் என் சம்மதி இல்லாமற் போய்விட்டாள்
Never mind; that is a matter of no *consequence*.	அதைப் பாராதே, அதிலே ஒரு காரியமும் இல்லை.
Let us take this into *consideration*.	இதை நாம் ஆலோசித்துப் பார்ப்போம்.
His *constitution* is very strong.	அவன் சரீரம் நல்ல இறுக்கமானது.
Treat no one with *contempt*.	ஒருவரையும் மதியாமைபண்ணப்படாது.
This is a *continuation* of the former part.	இதுவும் முந்தின பகுதிக்கடுத்தது.
Are you fond of *conversation*?	நீர் சம்பாஷணைபண்ண விரும்புகிறவரா?
Buy some *cord* and tie these things together.	கொஞ்சக் கயிறு விலைக்கு வாங்கி இவைகளை ஒருமிக்கக் கட்டு.

Is there no *cork* to this bottle?	இந்தக் குப்பிக்கு ஒரு குச்சி இல்லையா!
There was great plenty of *corn* last year.	போன வருஷம் விளைவு அதிகம்.
Our *correspondence* has now ceased.	நமது காகிதச் சீராட்டம் நின்றுபோயிற்று.
What will be the *cost* of these articles?	இந்தச் சரக்குகளின்விலை என்ன!
They live in *cottages*	குடில்களிலே குடியிருக்கிறார்கள்.
This country produces much *cotton*.	இந்த ஊரிலேபஞ்சுமிகுதி
Move this *couch* into the other room.	இச்சிறுக் கட்டிலை மற்ற அறையிலே கொண்டுபோய் வை.
She has a very bad *cough*.	அவளுக்கு மிகவுங் கடிய இருமல்.
He is a member of the supreme *Council*.	மேலான ஆலோசனைத் தலைவர்களில் இவரும் ஒருவர்.
Let us regard good *counsel*.	நற்புத்தியை மதிப்புப் பண்ண வேண்டும்.
This is my native *country*.	இது நான் பிறந்த ஊர்
Buy for me a *couple* of razors.	எனக்குச் சௌளக் கத்தி இரண்டுகொண்டுதாரும்.
You possess greater *courage* than I.	என்னிலும் நீர் தயிரியவான்.
There is a *crack* in this basin.	இந்தக் கிண்ணியிலே வெடிப்பு இருக்கிறது.

This milk produces no *cream*.	இந்தப் பாலிலே ஆடை இல்லை.
God is the *creator* of all *creatures*.	சகல படைப்பையும் படைத்தவர் தேவன்.
I have no objection to allow you three months' *credit*.	மூன்று மாதத் தவணைக்கு நம்பித் தருகிறதற்குத் தடை இல்லை.
This action does him great *credit*.	இந்தச் செய்கையினாலே அவனுக்குப் பெயர் எழும்பும்.
I shall *credit* your account ten rupees.	உமதுவருமதியிலே பத்து ரூபாக்கொடுக்கிறேன்.
I give *credit* to what you say.	நீர் சொல்லுகிறதை நம்புகிறேன்.
His affairs being in a bad state, he called together his *creditors*.	அவன் முட்டுப்பட்டபடியால் தன் கடன்காரரைச் சேர அழைத்தான்.
This is called a *creeper*.	இது ஒரு படர்கொடி.
The *crew* of that ship mutined.	அந்தக் கப்பற்காரர் கலாதிபண்ணினார்கள்.
What *crime* has he committed?	அவன் செய்த குற்றம் என்ன?
Fill this *cruet* with vinegar.	இந்தக் குப்பியிலே நிறையக் காடி விடு.
She is an excellent *critic*.	அவள் பிழை கண்டு பிடிக்கிறதில் சமர்த்தி.
Have you seen his *criticism* on that work?	அந்தப் புத்தகத்திலே அவர் எடுத்த நுட்பத் திருத்தத்தைக் கண்டீரா?

There was a great *crowd* of people.	சனம் மிகுதியாய்க் கூடியிருந்தது.
They delight only in *cruelty*.	கொடுமையே அவர்களுக்குப் பிரியம்.
The birds will pick up all these *crumbs*.	இத்துணுக்கைகளையெல்லாம் பட்சிகள் பொறுக்கிப்போடும்.
They drink tea with *cups* and saucers.	கோப்பையிலும் பீரிசிலுந் தேநீர் குடிக்கிறார்கள்
Are you fond of *curds*?	உமக்குத் தயிரிலே பிரியமா?
Are there no *curtains* to this cot?	இந்தக் கட்டிலுக்குத் திரைப் புடைவை இல்லையா?
Do you know how this *custom* arose?	இந்த வழக்கம் எப்படித் துவக்குகிறதென்று உனக்குத் தெரியுமா?
Have you been at the *Custom House*.	ஆயத் துறைக்குப்போனீரா?

D.

Has the cargo received any *damage*?	கப்பலிற் சரக்குகளுக்கு ஏதுஞ் சேதம்உண்டாயிற்றோ?
Why are you afraid? there is no *danger*.	ஏன் பயப்படுகிறீர்? யாதொரு மோசமும் இல்லை
They are in gross *darkness*.	கன இருளிலே இருக்கிறார்கள்.
What is the *date* of his letter?	அந்தக் காகிதத்தை எத்தனையாந் தேதியில் எழுதினான்.

He has one son and two *daughters*.	அவனுக்கு ஆண்பிள்ளை ஒன்று பெண்பிள்ளை இரண்டு.
What time in the *day* is it?	இப்பொழுது நேரம் என்ன காணும்!
Do you not fear *death?*	நீ சாவுக்கு அஞ்சாயா?
He is very much in *debt*.	அவன் தீரக் கடனாளி.
Debtor, one who owes money.	கடன் இறுக்க வேண்டியவன் கடனாளி.
They live only by *deceit*.	வஞ்சகத்தினாலே தான் சீவனம் பண்ணுகிறார்கள்.
A *decree* has been passed for this purpose.	இந்தக் காரியத்துக்காக ஒரு தீர்ப்புப் பண்ணப்பட்டது.
The *deeds* have been drawn up.	உறுதிகள் எழுதப்பட்டன.
Do you observe any *defects* in this?	இதிலே ஏதுங் குறையைக் காண்கிறீரா?
He made his *defence* in Court.	நியாயத் தலத்திலே உத்தரவாதம்பண்ணினான்.
The plaintiff and *defendant* were both heard.	வழக்காளி எதிரி இருவருடைய காரியமும் விளங்கப்பட்டது.
There is much *delay* in this business.	இந்த வேலை மெத்தத் தாமதப்பட்டுப்போயிற்று.
Have you any *demand* upon me?	என் பேரில் உனக்கு யாதொரு தொடர்ச்சி உண்டா?
Do you place *dependance* on what he tells you?	அவன் உமக்குச் சொல்வதை நம்புகிறீரா?

This is a *depository* for books, &c.	இது புத்தகம் முதலானவைகள் வைக்குஞ்சாலை.
What is the *depth* of this tank?	இந்த வாவியின் தாழ்வு எவ்வளவு?
What *description* has he given of the place?	அது எப்படிப்பட்ட இடமென்று சொன்னார்?
I have a great *desire* to see him.	அவனைக் காண மிகுந்த வாஞ்சையாய் இருக்கிறேன்.
There is much *dew* on the grass.	புல்லின் மேற் பனி மிகுதியாய் இருக்கிறது.
I am reading a *dialogue* between a Pundit and his friend.	ஒரு பண்டிதனும் அவனுடைய சினேகிதனுமாகப் பேசிக்கொண்ட சம்பாஷணையை வாசிக்கிறேன்.
The king wore a crown set with pearls and *diamonds*.	முத்தும் வயிரமும் அழுத்திய முடியை இராசாத்தரித்தார்.
He was ruined by playing at *dice*.	தாய விளையாட்டிலே போய்க் கெட்டுப்போனான்.
See if the word is in the *dictionary*.	இந்தச் சொல்லு அகராதியிலே இருக்கிறதோ பாரும்.
It is necessary that you attend to your *diet*.	நீர் பத்தியம்பிடிக்கவேண்டும்.
What is the *difference* between these two?	இவ்விரண்டுக்கும் வித்தியாசம் என்ன?

There is no *difficulty* in learning this.	இதைப் படிக்கிறது பிரயாசம் அல்ல.
It requires only *diligence* and attention.	இதற்குச் சுறுசுறுப்புங் கவனமுந்தான் வேண்டும்.
I must go now; it is *dinner* time.	மத்தியானச் சாப்பாட்டு நேரமாகிறது, இப்பொழுது நான்போக வேண்டும்
I will attend to your *directions*.	உமது சொற்படி செய்வேன்.
This road is made of *dirt*.	இந்தத் தெருவீதியிலே மண்போட்டிருக்கின்றது.
If you act thus, it will be to your *disadvantage*.	இப்படிச் செய்தீராகில் உமக்கு நயவீனமாய் இருக்கும்.
There was formerly a *disagreement* between them.	அவர்கள் முன்னே இணக்கம் இல்லாமல் இருந்தார்கள்.
The *disciple* will be as his master.	குருவைப் போலச் சீஷனும் இருப்பான்.
These soldiers are without *discipline*.	இந்தப் போர்ச் சேவகர்களுக்குள் ஒழுங்கில்லை
Let us not indulge *discontent*.	நாம் மனக் குறைச்சற்படப்படாது.
That is an important *discovery*.	அது ஒரு பிரதானமான கண்டு பிடித்தல்.
He possesses ability truly, but wants *discretion*.	மெய்யாகவே அவனுக்கு வல்லபம்போதும், புத்தி போதாது.
Let us not use *disguise*.	நாம் மாரீசம் பண்ணப்படாது.

To do so would be a *disgrace* to us.	அப்படிச் செய்வது நமக்கு அவசங்கை.
I have bought several *dishes*, glasses, &c.	நான் கோப்பை வீதுரு முதலானவைகள் சில வாங்கினேன்.
I have lately incurred his *displeasure.*	நான் இந்நாட்களிலே அவனுக்குப் பிரியவீனம் வர நடந்தேன்.
What is the *dispute* between you two?	உங்கள் இருபேருக்குமுள்ள வழக்கென்ன?
What *distance* is Manaar from this place?	இந்த இடத்தில் இருந்து மன்னார் எவ்வளவு தூரம்?
Do you know the name of this *distemper*?	இந்த வியாதிக்குப் பேர் இன்னது தெரியுமா?
She is now in great *distress.*	அவள் இப்பொழுது மகா இக்கட்டாய் இருக்கிறாள்.
This place is in the Jaffna *District.*	இந்த இடம் யாழ்ப்பாண நாட்டிலே இருக்கின்றது.
This is their *diversion.*	இதுதான் அவர்களுடைய விளையாட்டு.
A *dividend* on his estate will be paid the first of next month.	வருகிற மாதம் முதற்றேதியிலும் அவனுடைய ஆஸ்திகளிற் பங்கிடப்படும்.
How many *divisions* are there in this book?	இந்தப் புத்தகத்தில் எத்தனை பகுதி?
The vessel is now in *dock* repairing.	கப்பலைத் துறையிலே விட்டுப் பழுது பார்க்கிறார்கள்.

His profession is that of a *doctor*.	அவருடைய தொழில் வயித்தியம்
This is very strange *doctrine*.	இது ஒரு நூதனமான போதனை.
Who was the *doer* of this?	இதைச்செய்தவர்ஆர்?
How many rupees shall I obtain for twenty *dollars*?	இருபது இறையாலுக்கு எத்தனை உருபா வரும்?
Donations have been received to the amount of five hundred rupees	ஐந்நூறு உருபா நன்கொடையாகக் கிடைத்தது.
He has taken two *doses* of medicine.	இரண்டு நேர மருந்து சாப்பிட்டான்.
If you had told me this before, I should have had no *doubt* how to act.	இதை முன்னே எனக்குச் சொல்லிப்போட்டீரேயாகில் எவ்விதமாய்ச் செய்வதென்று சந்தேகப்படேனே.
There are *drains* under the house to carry off the water.	தண்ணீர் போக வீட்டுக்குக் கீழே மதவுகள் இருக்கின்றன.
Give me one *draught* of water.	ஒரு மிடறு தண்ணீர் தாரும்.
Is there any *drawback* on these goods?	இந்தச் சரக்கு விலையில் யாதொரு கழிவு உண்டோ?
I will show you a beautiful *drawing*.	உனக்கு ஒரு வடிவான சித்திரத்தைக் காட்டுவேன்.
I thought thus in my *dream*.	கனவிலே இப்படி நினைத்தேன்.

He cares little about *dress*.	உடுப்பைப் பற்றி அவருக்கு மெத்த எண்ணம் இல்லை.
You have let a *drop* of ink fall upon the paper.	கடுதாசியிலே மைத்திவலை தெறிக்க விட்டு விட்டீர்.
I hear he has got the *dropsy*.	அவனுக்கு நீர்க்கோவையென்று கேள்விப்பட்டேன்.
The *drum* is beat in the fort daily.	மேளம் நாடோறுங் கோட்டையிலே அடிக்கப்படுகிறது.
He is quite a *drunkard*.	அவன் ஒரு குடி வெறியன்.
Whose are these *ducks* and geese?	இத்தாராக்களும் வாத்துக்களும் ஆருடையன?
Though he has learned so long he is yet a *dunce*.	இவ்வளவு காலமும் அவன் படித்தும் முட்டாளாய் இருக்கிறான்.
I have remitted the bill in *duplicate*.	உரோக்கச் சீட்டுக்குப் பிரதியும் ஒன்று கூட எழுதி அனுப்பி விட்டேன்.
Tell me what is my *duty* towards God and man.	தேவனுக்கும் மனிதருக்கும் நான் செய்ய வேண்டிய கடமையைச் சொல்லும்.
Do these articles pay *duty*?	இந்தச் சரக்குகளுக்குத் தீர்வை உண்டோ?
Dwarf, one who is little in stature.	உயரங் குறைந்தவன் குறளன்.

E.

He shows great *eagerness* to learn.	அவன் படிப்பில் மிகுந்த அவாவுள்ளவனாகக் காண்கிறது.

You are not in *earnest* in what you say, you jest only.	நீர் பேசுவது பகிடிக்கன்றி உண்மைக்கல்ல.
I gave ten rupees *earnest* money.	அச்சவாரமாகப் பத்து ரூபாக் கொடுத்தேன்.
You make so much noise, it deafens one's *ears*.	நீர் மிகுதியுஞ் சத்தமிடுவதினாற் காதடைக்கிறது
An *earthquake* was felt lately in this neighbourhood	பூமியதிர்தல் இவ்வூரீலே கொஞ்ச நாளுக்கு முன்னே உண்டாயிற்று.
I can do that with *ease*.	அதை நான் இலேசாய்ச் செய்வேன்.
Are you travelling *east*, west, north or south?	கிழக்கோ மேற்கோ வடக்கோ தெற்கோ நீர் பிரயாணம்பண்ணுகிறது!
It is now *ebb* tide.	இப்பொழுது கடல் வற்று.
There will be an *eclipse* of the sun the first of next month.	வருகிறமாதம் முதற்றேதீ சூரிய க்ரகணம்.
I saw him sitting on the *edge* of the river.	ஆற்றோரத்திலே அவன் இருக்கக் கண்டேன்.
His book has passed through five *editions*.	அவர் எழுதின புத்தகம் ஐம்முறையாகவும் அச்சடிபட்டது.
Who is the *editor* of this newspaper?	இந்தப் புதினக் கடுதாசியைப் பிரசித்தம்பண்ணுகிற முகாமைக்காரன் ஆர்?
She has written a book on *education*.	அறிவு பயிற்சியைக் குறித்து அவள் ஒருபுத்தகத்தை உண்டுபண்ணினாள்.

He has sold his *effects.*	தனது பொருள்களை விற்றுப்போட்டான்.
I gave him medicine but it had no *effect.*	நான் அவனுக்குக்கொடுத்த மருந்து பலிக்கவில்லை.
I saw a bird's nest with five *eggs.*	ஒரு பட்சியின் கூட்டிலே ஐந்து முட்டையுங் கண்டேன்
His affairs are under *embarrassment.*	அவனுடைய காரியங்கள் தொந்தரையாய் இருக்கின்றன.
China is a large *empire.*	சீனம் பெரிய இராச்சியம்
What is your *employment?*	உனது வேலை என்ன?
Who is your *employer?*	உன்னை இந்த வேலையில் வைத்தவன் ஆர்?
This affords me *encouragement.*	இது என்னைத் தயிரியப்படுத்துகிறது.
There is no *end* to his talking.	அவன் ஓயாமற் பேசுகிறான்.
This note wants your *endorsement.*	இந்தச் சீட்டுக்கு உமது கையெழுத்தும் வேண்டும்.
The cat is the *enemy* of the rat.	எலிக்குப் பகையாளிபூனை.
He goes to work with *energy.*	மன ஊக்கமாய் வேலை செய்யப்போகிறான்.
I am under *engagement* to do this for him.	இதை அவனுக்குச்செய்ய உடன்பட்டிருக்கிறேன்.

I have an *engagement* this evening, therefore I cannot accept your invitation.	இன்று சாயங் காலம் எனக்கு வேறே கவ்வை இருக்கிறபடியால், நீர் அழைத்ததற்கு வரக் கூடாது.
Have you ever been in *England*?	இங்கிலாந்துக்கு எப்பொழுதாயினும்போ யிருக்கிறீரா!
Send for an *engraver*.	சித்திரம் வெட்டுகிற ஒருவனை அழைப்பியும்.
What *enquiry* do you wish to make?	நீர் என்னத்தைப்பற்றி ஆராய விரும்புகிறீர்?
Envy and malice are hateful.	பொருமையும் வன்மமும் அருவருப்பானவைகள்.
He went there but forgot his *errand*.	அவன் அங்கே போயும், தான் சொல்லவேண்டிப்போன காரியத்தை மறந்துபோனான்.
Do you observe any *errors* in this writing?	இந்த எழுத்தில் ஏதும் பிழை காண்கிறீரா?
They made their *escape* from prison.	சிறைச் சாலையில் இருந்து தப்பி விட்டார்கள்.
He left the whole of his *estate* to his *eldest* son.	ஆஸ்தி முழுதையும் மூத்த பிள்ளைக்காக்கிப்போட்டு இறந்தான்.
Eternity has neither beginning nor end.	நித்தியத்துக்கு ஆதியும் இல்லை அந்தமும் இல்லை.
I expect to see him this *evening*.	இன்று சாயந்தரம் நான் அவனைக் காணக் காத்திருக்கிறேன்.

This is a melancholy *event*.	இது ஒரு துயரமான காரியம்.
By the *evidence* produced in court, he was fully proved to be guilty.	நியாயத் தலத்திற்பண்ணின ஒப்பனையின்படி அவன் குற்றவாளியென்று விளங்கிற்று
His coming has been the cause of much *evil* to many.	அவன் வந்ததினால் வெகு பேருக்குப் பெரிய கேடு
She is an *example* to all around.	அவள் நல்லொழுக்கத்தை யாவரும் பின்பற்றத் தகுதியாய் இருக்கிறது.
He made no *exception* to what I proposed on the subject.	அந்தக் காரியத்திலே நான் சொன்னதற்கு அவன் ஒரு தடையுஞ் சொல்லவில்லை.
I will give you this in *exchange* for that	அதற்கு மாறாக இதைத் தருவேன்.
He made a great many *excuses*.	அவன் வெகு போக்குகளைச் சொன்னான்.
Who are the *executors* to his estate?	மரண சாதனத்தின்படி அவருடைய ஆஸ்தியைப் பங்கிடப்பண்ண நியமிக்கப்பட்டவர்கள் ஆர்?
I am daily in *expectation* of hearing from him.	அவரிடத்தில் இருந்து செய்தி வருமென்று நாடோறும் பார்த்திருக்கிறேன்.
What will be the *expense* of doing this?	இதைச் செய்வதற்கு என்ன பிடிக்கும்?
He has *experience* in business.	அவன் வேலையிலே பரிட்சையுள்ளவன்.

Can you give me the *explanation* of this passage?	இந்த வாசகத்துக்கு வியாக்கியானம்பண்ணை உம்மாலே கூடுமோ?
These articles are for *exportation*.	இவை புற தேசத்துக்கு அனுப்புகிற சரக்குகள்.
Is this mode of *expression* common?	இவ்விதமான வசனம் வழக்கமா?
This is the *extent* of their learning.	அவர்களுடைய கல்வியின் ஆள நீளம் இவ்வளவுதான்.
I will show you an *extract* from his letter.	அவனுடைய காகிதத்திற் பெயர்த்தெழுதிய சிலவற்றை உமக்குக் காண்பிப்பேன்.
How can you write if you shut your *eyes*?	கண்களை மூடிக்கொண்டு என்ன விதமாய் எழுதுவாய்?

F.

This is a book of *fables*.	இது கட்டுக் கதைப் புத்தகம்.
Formerly there was an indigo *factory* here	முன்னாளிலே நீலக்கட்டி செயயும் ஓர் வீடு இவ்விடத்தில் இருந்தது.
I shall send you word without *fail*.	தவறுமல் உனக்குச் சொல்லி அனுப்புவேன்.
Have you *faith* in what they say?	அவர்கள் சொல்லுகிறதை நம்புகிறுயோ?
He was killed by a *fall* from his horse.	அவன் தன் குதிரையில் இருந்து விழுந்து செத்து விட்டான்.

They think nothing of speaking a *falsehood*.	அவர்கள் பொய்க்குச் சற்றுங் கூசார்கள்.
He has a large *family*.	அவனுக்குப் பெரிய சமுசாரம்.
So great was the scarcity of corn in that part of the country, that it was feared there would be a *famine*.	அவ்வூரிலே அகம் அரிமையாய் இருந்ததினாற் பஞ்சமுண்டாமென்று பயப்பட்டார்கள்.
The weather is now cold; you do not need a *fan*.	இது குளிர்காலமே, விசிறி தேவை இல்லை.
His *father* and mother are both dead.	அவனுடைய பிதா மாதாவும் இறந்துபோனார்கள்.
Those things are not yet ready: whose *fault* is it?	அவைகள் இன்னம்முடியவில்லை, அது ஆருடைய பிழை?
Sir, if you will do me this *favour*, I shall be much obliged.	ஐயா! இந்தத் தயவு எனக்குச் செய்வீரேயாகில் நான் நன்றியுள்ளவனாய் இருப்பேன்.
This little boy is my *favourite*.	இச்சிறுவன் எனக்கு அரிமையானவன்.
I can speak to him without *fear*.	பயப்படாமல் அவனுடனே நான்பேசக்கூடும்.
To-day there is a *feast* at his house.	இன்றைக்கு அவனுடைய வீட்டிலே ஒருவிருந்து.
This *feather* is very beautiful.	இந்த இறகு மகாவடிவு

The *features* of these two persons are much alike.	இவ்விரண்டு பேருடைய முகமும் ஒரு சாயல்.
There is a *ferry-boat* at this place.	அக்கரைக்குப் போகிற தோணி ஒன்று இங்கேயிருக்கிறது.
To whom does this *field* belong?	இந்த வயல் ஆருடையது?
Are there any *fish* in this tank?	இந்தக் குளத்தில் மீன் உண்டா?
I saw some *fishermen* laying their nets.	சில கரையார் வலைவீசுவதைக் கண்டேன்.
I have seen the *flag* at the Fort.	கோட்டையிற் கொடி கண்டிருக்கிறேன்.
Fire is produced by *flint* and steel.	தீத்தட்டிக் கல்லில் உருக்கினால் அடிக்க நெருப்பு உண்டாம்.
I saw there a *flock* of sheep.	அங்கே நான் ஆட்டுமந்தை கண்டேன்.
Bread is made of *flour*.	மாவிலே அப்பஞ் சுடுகிறது.
You must not pluck these *flowers*.	நீ இந்தப் புட்பங்களைப் பறிக்க வேண்டாம்.
The *floor* of this room wants repairing.	இந்த அறையிற்றளம் புதுப்பிக்க வேண்டும்.
He plays upon the *flute*.	அவன் குழல் ஊதி வாசிக்கிறான்.
There is a *fly*.	அங்கே ஒர் ஈ உண்டு.
In the morning there is generally a thick *fog* in this place.	இவ்விடத்திற் பெரும்பாலும் விடியற்காலத்திலே மூடுபனி மிகுதி.

How are all these people to obtain *food*?	இச்சனங்கள் எல்லாரும் எவ்விதமாய்ச் சீவனம் பெறுவார்கள்?
The stream now runs with great *force*.	இப்பொழுது இந்தத் தண்ணீர்ப் பாய்ச்சல் வெகு வேகம்.
He fell down and cut his *forehead*.	அவன் விழுந்து நெற்றியை உடைத்துக்கொண்டான்.
She possesses much *foresight*.	வருங் காரியத்தை முன் அறிந்து நடக்கிறாள்.
He has been put in prison for *forging* notes.	கள்ள நோட்டைச் செய்ததற்காகச் சிறைச்சாலையில் வைக்கப்பட்டான்.
He has made a large *fortune*.	அவன் வெகு பணஞ் சம்பாதித்தான்.
The *foundation* of the house has been laid.	வீட்டுக்கு அத்திவாரம் போடப்பட்டிருக்கின்றது.
There are *fountains* of water all over the country.	ஊரிலே எங்கே பார்த்தாலும், நீரூற்றுக்கள் உண்டு.
Whose are these *fowls* in the garden?	தோட்டத்தில் விட்டு நிற்கிற புட்கள் ஆருடையன?
He manufactures looking-glass *frames*.	அவன் கண்ணாடித் தட்டுச் செய்கிறவன்.
The house I live in is a *free-hold*.	நானிருக்கிற வீட்டிற் பிறருக்கு ஒரு பொழுதுந் தொடர்ச்சி இல்லை.

How much did you give for the *freight* of this vessel?	இக்கப்பலுக்குக் கேள்வு என்ன கொடுத்தாய்?
What shall I do? I have no *friend*.	எனக்கு ஒரு சிநேகிதரும் இல்லையே, என்ன செய்வேன்?
I enjoy the happiness of his *friendship*.	அவனுடைய சிநேக உறவு எனக்குப் பிரியம்.
I saw a *funeral* pass toward the burning ground.	சுடுகாட்டுக்கு நேராகப் பிரேதங்கொண்டுபோவதைக் கண்டேன்.
He makes all kind of *furniture*.	அவன் எவ்விதமான தட்டுமுட்டுக்களையுஞ் செய்வான்.
We cannot see *futurity*.	நமக்கு வருங்காலம் விளங்காது.

G.

Do you expect much *gain* from this trade?	இந்த வியாபாரத்திலே ஆதாயம் மிகுதி உண்டென்று நினைக்கிறாயா?
Why have you left the garden *gate* open.	தோட்டத்திற் படலையைத் திறந்தபடி ஏன் விட்டாய்?
I saw this in the *gazette*.	புதினக் கடுதாசியில் இதைக் கண்டேன்.
He is a man of great *genius*.	அவன் மகா விவேகி.
There is no limit to her *generosity*.	அவளுடைய உபகாரத் தனத்துக்கு மட்டில்லை.

Are you acquainted with that *gentleman*?	அந்தத்துரையுடனே உனக்குப்பழக்கம்உண்டா?
He has composed a book on *geography*.	பூமிச் சாத்திரத்தைப் பற்றிய புத்தகம் ஒன்றை உண்டாக்கினான்.
He has five children; three boys, and two *girls*.	அவனுக்குப் பிள்ளைகள் ஐந்து, ஆண் மூன்று, பெண் இரண்டு.
Take care; this will easily break: it is made of *glass*.	பத்திரம், இது வீதுறுவாம், இலேசாக உடைந்துபோம்
The earth is a *globe* which revolves round the sun.	பூமியானது சூரியனைச் சுற்றியோடும் ஓர் உண்டை.
I have bought a pair of *gloves*.	நான் ஒரு சோடு கையுறைகொண்டேன்.
Do you know what *glue* is made of?	வச்சிரம் எப்படிக் கூட்டுகிறதென்று உனக்குத் தெரியுமா?
Is that chain made of *gold*, silver, iron, brass or copper?	அந்தச் சங்கிலி பொன்னோ, வெள்ளியோ, இரும்போ, பித்தளையோ, செம்போ?
Have the *goodness* to inform me.	தயவு வைத்து எனக்கு அறிவியும்.
He was formerly *governor* of Ceylon.	அவர் முன் இலங்கைக்கு அதிபதியாய்இருந்தார்
Sir, I shall receive with *gratitude* the least trifle you may be pleased to give.	ஐயா! நீர் ஒரு தினையத்தனை பொருளைத் தந்தாலும் பனையத்தனையாக நினைத்துக்கொள்வேன்.

His conduct has caused much *grief* to his father.

அவனுடைய நடத்தையினாலே அவனுடைய பிதாவுக்கு மன விதனம் மிகுதியாயிற்று.

What is the *ground-rent* of this house?

இந்த வீட்டுக்கு நிலவாடை என்ன?

Who is the *guardian* of this child?

இந்தப் பிள்ளையைப் பராபரிக்கிறவர் ஆர்?

I went without a *guide* though I had never been that road before.

முன் ஒரு பொழுதும் அந்த வழி அறியாதிருந்துந் துணையில்லாமல் தனியே போய் விட்டேன்.

H.

He is in the *habit* of walking out early every morning.

அவன் தினமுங் காலையிலே வாடிக்கையாய் உலாவுகிறான்.

The house consists of a *hall* and three other rooms.

இந்த விட்டிலே ஒரு வெளியறையும் மூன்று உள்ளறையும் இருக்கின்றன.

Take hold of his *hand*.

அவனுடைய கையைப் பிடி.

Give me a *handkerchief*.

எனக்கு ஒரு சவுக்கந் தாரும்.

The *handle* of this drawer is broke.

இந்த அறையிற் கைபிடி முறிந்துபோயிற்று.

They who fear God will enjoy everlasting *happiness* in the world to come.

தேவனுக்குப் பயப்படுகிறவர்கள் மறுமையிலே முடியாத இன்பத்தை அனுபவிப்பார்கள்.

I must go to work every day at sun-rise; this is a great *hardship*.	அனுதினமும் சூரியோதயத்துக்கு நான் வேலைக்குப் போக வேண்டும். இது மகா பிரயாசமாயிற்று.
Is there any *harm* in doing this?	இதைச் செய்வதிலே குற்றம் உண்டோ?
I write in great *haste* to save post.	இன்றைக்கு அஞ்சலிலே அனுப்பும்படி வேகு சுறுக்கு எழுதுகிறேன்.
On entering the room he took off his hat.	அறையிலே உட்படும்பொழுது தொப்பியை எடுத்துப்போட்டான்.
I have got a sad pain in my *head*.	எனக்குத் தலையிடி கடிசாய் இருக்கிறது.
She is now much better. (i. e. her *health* is now much better.)	அவளுக்கு இப்பொழுது மிகுதியுஞ் சுகம்.
Here is a *heap* of papers, put them away.	இங்கே ஒரு கடுதாசிக் குவியல் இருக்கிறது, எடுத்து அடுக்கி வை.
The *heart* of man is by nature inclined to evil.	மனிதனுடைய மனஞ் சுபாவத்திலே தீமைக்குச் சாய்ந்திருக்கிறது
I trod upon his *heel*.	அவனுடைய குதிக்காலில் மிதித்தேன்.
What is the *height* and breadth of this wall?	இந்தச் சுவரின் உயரமும் அகலமும் என்ன?
This large estate is without an *heir*.	இந்தப் பெரிய ஆதனத்துக்குச் சுதந்தரர் இல்லை.

In heaven is unspeakable *happiness;* in *hell* unutterable woe.

மோட்சத்திற் சொல்லிறந்த இன்பமும் நரகத்திற் சொல்லிறந்த துன்பமும் உண்டு.

Can you afford me any *help* in this matter?

இந்தக் காரியத்தில் எனக்குச் சகாயஞ் செய்வீரா?

He lives only upon *kerbs.*

இலைவருக்கமே அவருக்குப் புசிப்பு.

There are five *hills* in Bengal.

வங்காளத்தில் ஐந்து மலைகள் இருக்கின்றன.

To have you with me will be a *hinderance* in my work.

நீ என்னுடனே இருப்பது எனது வேலைக்குத்தடை.

He gave a *hint* to this effect.

இதற்கு ஒரு குறிப்புக் காட்டினான்.

What will be the *hire* of a boat from this place to Point Calimere.

இங்கே இருந்து கோடிக் கரைக்குப் போகத்தோணிக் கூலி என்ன பிடிக்கும்?

Have you read the *history* of England?

இங்கிலாந்துதேசத்திற்சரித்திரம்வாசித்திருக்கிறீரா?

Make a *hole* in the ground here.

இங்கே நிலத்திலே ஒரு கிடங்குகிண்டு.

It is late; let us now return *home.*

நேரஞ் சென்றது, இப்பொழுது வீட்டுக்குத் திரும்புவோம்.

I ate some honey out of the *honey-comb.*

தேன் வதையில் எடுத்துக் கொஞ்சந் தேன் பருகினேன்.

He has obtained much *honour.*

அவன் பெரிய சங்கை பெற்றுக்கொண்டான்.

I caught a fish with a *hook*.	தூண்டில் போட்டு ஒரு மீன் பிடித்தேன்.
I have no *hopes* of seeing him again.	மறுபடி அவனைக் காண்பேனென்ற எண்ணம் என்னிடத்தில் இல்லை
This cow has no *horns*.	இந்தப் பசுவுக்குக் கொம்பில்லை.
I have heard that an *hospital* is about to be built there.	அங்கே ஒரு பரிகார வீடு கட்டப்படப்போகிறதென்று கேள்விப்பட்டேன்.
They use great *hospitality*.	அவர்கள் விருந்துகொடுத்து நன்றாய்த் தாபரிக்கிறார்கள்.
Do you know what *hour* it is?	இப்பொழுது நேரமின்னதென்று தெரியுமா?
He possesses great *humanity* as well as *humility*.	அவன் ஒரு தாழ்மையுள்ளவனும் தயவுள்ளவனுமாய் இருக்கிறான்.
Have you received any *hurt* from your fall?	விழுந்ததினாலே உமக்கு ஏதும் நோவுண்டோ?

I.

I had no *idea* that you would come to-day.	இன்றைக்கு வருவீரென்பதை நான் சற்றும் நினைக்கவில்லை.
They spend their time in *idleness*.	அவர்கள் நேரத்தை வீணிலே செலவிடுகிறார்கள்.
Idolater, one who worships *idols*.	விக்கிரகத்தை வணங்குகிறவனே விக்கிரகபத்திக்காரன்.

Alas! they live and die in *ignorance.*

ஐயோ! அவர்கள் அறிவற்றவர்களாய் நடந்துகொண்டு இறந்து விடுகிறார்கள்.

How long have you had this *illness?*

உமக்கு இந்தத் துன்பம் உண்டாய் எவ்வளவு காலம் உண்டு?

There is an *image* in that temple.

அந்தக் கோயிலிலே ஒரு விக்கிரகம் இருக்கிறது.

Whence arose this *imagination*?

இந்த எண்ணம் என்னத்தினாலே உண்டாயிற்று?

This is made of wood in *imitation* of stone.

இதுமரவேலை, கல்வேலைக்கொப்பாயிருக்கின்றது

This is a matter of great *importance.*

இது மகா முக்கியமான காரியம்.

Have you seen the account of exports and *imports* for the past year?

போன வருஷத்தில் ஏற்றிப்போன சரக்குக்கும் ஏற்றி வந்த சரக்குக்குங் கணக்குப் பார்த்தீரா?

They practice every kind of *imposition.*

அவர்கள் செய்யாத வஞ்சனை இல்லை.

How can I believe an *impossibility*?

கூடாத காரியஞ் சம்பவிக்குமென்று எப்படி நம்பலாம்?

He is a notorious *impostor.*

அவன் ஒரு பேர்ப்பட்ட எத்தன்.

This seal makes no *impression.*

இந்த முத்திரை பதியவில்லை.

What he said made an *impression* on my mind.

அவன் சொன்னது என் மனதிலே பட்டது.

Will there be any *impropriety* in my asking this favour?	இந்தத் தயவை நான் கேட்பதுமுறையீனமோ?
This is owing entirely to your *inattention.*	உன்னுடையஅசட்டையினாலே இப்படி ஆயிற்று.
Had this piece of wood been an *inch* longer, it would have answered the purpose.	இந்த மரத்துண்டு ஒரு அங்குல நீளங் கூட இருந்ததேயாகில் காரியத்துக்குக் கூடும்.
He feels no *inclination* to study.	அவனுக்குப் படிக்க மனம் இல்லை.
Do you know what is his *income*?	அவனுக்கு என்ன வரத்திருக்குமென்று உனக்குத் தெரியுமா?
Will my staying here till the first of next month be any *inconvenience* to you?	வருகிற மாதம் முதற்றேதீ வரைக்கும் நான் இங்கே இருந்தால் உமக்கு ஏதுந் தாழ்ச்சி உண்டோ?
He has lately had an *increase* of family.	இந்நாட்களில் அவனுக்குப் புத்திர லாபங் கிடைத்தது.
He maintains his *independence*.	அவன் ஒருவருக்குங் கீழ்ப்பட்டவன் அல்ல.
Is there an *index* to this book?	இந்தப் புத்தகத்துக்கு அட்டவணை உண்டோ?
How long have you been in *India*?	இந்த தேசத்துக்கு வந்து எவ்வளவு காலம்?
Have yon read the *indictment* brought against him?	வழக்கிலே அவன் பேரிற் பாரமாய்க் கூறப்பட்டிருப்பவைகளை வாசித்துப் பார்த்தீரா?
This is not a subject to be treated with *indifference*.	இது பராமுகம் பண்ணுகிற காரியம் அல்ல.

I was formerly employed in the *indigo* manufactory.	முன்னே நீலக்கட்டி செய்யும் வீட்டிலே வேலைக்காரனாய் இருந்தேன்.
I heard of your *indisposition* last week.	போன கிழமை சரீர சுகமில்லாமல் இருந்தீரென்று கேள்விப்பட்டேன்.
I knew him in his *infancy*.	அவன் குழந்தையாய் இருக்கையில் அவனை அறிவேன்.
From what you say, I draw this *inference*.	நீர் சொல்லுகிறதைக் கொண்டு நான் அனுமானிக்கிறது இதுதான்.
We ought to show kindness and respect to our *inferiors*, as well as superiors.	நமக்கு மேற்பட்டவர்களுக்கு மாத்திரம் அல்ல கீழ்ப்பட்டவர்களுக்குங் கூட அன்பும் மரியாதையுமாய் நடக்க வேண்டும்.
We have no *influence* over them.	அவர்கள் மேல் நம்முடைய அதிகாரஞ் செல்லாது.
Where did you obtain this *information*?	இந்தச் செய்தி எங்கே அறிந்தீர்?
He possesses much *ingenuity*.	அவன் கூரிய புத்தி யுள்ளவன்.
I have met with nothing but *ingratitude* for all the favours I have done him.	நான் அவனுக்குச் செய்த தயவுகளுக்கெல்லாம் அவன் நன்றிகேடாய்த்தான் நடக்கிறான்.
The petition was signed by every *inhabitant* of the village.	விண்ணப்பத்துக்கு கிராமத்திற் குடி சனங்கள் எல்லாருங் கையெழுத்துப்போட்டார்கள்.

That conduct shows the greatest *inhumanity*.	அந்த நடத்தை மகா கொடுமையைக் காட்டுகிறது.
They delight in all kinds of *iniquity*.	எவ்விதமான அக்கிரமத்திலும் அவர்களுக்குப் பிரியம்.
I never did him the least *injury*.	அவனுக்கு நான் ஒருபொழுதும் அற்பசேதமாகிலுஞ் செய்ததில்லை.
He practices every kind of *injustice* towards the people.	அவன் சனங்களுக்குச் செய்யாத அநீதங்கள் இல்லை.
By the grace of God let us endeavour to live a life of *innocence*.	பராபரனுடைய கிருபையைத் தேடிக் குற்றம் இல்லாமல் நடக்கப் பார்ப்போமாக.
A coroner's *inquest* was held yesterday on the body of a person who shot himself.	தன்னைத் தான் வெடிவைத்துக் கொன்றவனுடைய காரியம் நேற்று விசாரிக்கப்பட்டது.
Read the *inscription* which is on that stone.	அந்தக் கல்லில் வரைந்திருக்கிறதை வாசி.
What kind of an *insect* is this?	இதென்ன விதமான பூச்சி?
I have had several proofs of his *insincerity*.	அவன் ஒரு கபடனென்பதற்கு அநேக அத்தாட்சியைக் கண்டிருக்கிறேன்.
The goods are all ready for your *inspection*.	நீர் சோதிக்கும்படி சரக்குகள் எல்லாம் ஆயத்தம்.
I will be with you in an *instant*.	ஒரு நிமிஷத்திலே உம்மிடத்துக்கு வருவேன்.

Man acts from reason, animals from *instinct.*	மனிதனானவன் பகுத்தறிவோடு நடக்கிறான், மிருகமோ தன்அறிவாய் நடக்கிறது.
In Europe, Bengal and other countries are noble *institutions* for communicating knowledge.	ஐரோப்பா வங்காளம் முதலான தேசங்களில் அறிவுகளைப் படிப்பிக்க மேன்மையான பள்ளிக்கூடங்கள் உண்டு.
I hold a policy of *insurance* to the amount of fifty thousand rupees on that vessel.	அந்தஓடத்திற்கு, ௫௰௲ ரூபாவுக்கு ஒரு உத்தரவாத உறுதிபெற்றிருக்கிறேன்.
She has a wonderful *intellect.*	அவளுடைய புத்தி அதிசயிக்கத்தக்கதாய் இருக்கிறது.
How long ago did you receive this *intelligence?*	இந்தச் செய்தியை நீர் அறிந்து எவ்வளவு காலம் உண்டு?
Intemperance is hurtful to body and mind.	மட்டுக்கு மிஞ்சின உலக செல்விக்கை சரீரத்துக்கும் புத்திக்குங் கேடு.
Have you any *intention* to go to Europe?	ஐரோப்பாவுக்குப்போக ஏதும் ஒரு எண்ணம் உண்டா?
There is now no *intercourse* between them and us.	இப்பொழுது அவர்களுக்கும் எங்களுக்கும் யாதொரு கொள்கையும் இல்லை.

I have no *interest* whatever in this matter.	இதிலே எனக்கு யாதொரு காரியமும் இல்லை.
If you know not the language of the country, you must converse through an *interpreter*.	தேச பாஷை உனக்குத் தெரியாதிருந்தாற் துப்பாசியைக்கொண்டுபேசிக்கொள்ள வேண்டும்.
Your coming here is an *interruption* to my business.	நீர் இங்கே வந்தது என் வேலைக்கு வினைக்கேடு.
It is said a house will be built on the Neilgherries for the benefit of *invalids*.	நோயாளிக்குச் சவுக்கியமாதும் படிக்கு நீலகிரியில் ஒரு வீடு கட்டப்படுமாம்.
I have received an *invitation* to dine at his house to-day.	இன்றைக்குப் பகற்சாப்பாட்டுக்கு அவர் என்னைத் தமது வீட்டுக்கு அழைத்தார்.
Where is the *invoice* of these goods?	இந்தச் சரக்குகளின் அட்டவணை எங்கே?
J.	
The *jackal* is very cunning.	நரி மகா உபாயமுள்ளது.
He is to remain in *jail* twelve months.	அவன் மறியலிலே பன்னிரண்டு மாதம் அளவுக்கும் இருக்கவேண்டும்
I said so only in *jest*.	நான் அதைப் பகிடிக்கே சொன்னேன்.
Jewels consist of gold pearls, diamonds, &c.	பொன், முத்து, வயிரம், முதலானவைகளாற்றான் ஆபரணஞ் செய்யப்படுகிறது.

What I said was only in *joke*.	நான் சொன்னது பரிகாசத்துக்கு.
I am going a long *journey*.	நான் நெடுந் தூரப் பயணம்போகிறேன்.
This news affords me great *joy*.	இந்தச் செய்தியின் பேரால் மிகவுஞ் சந்தோஷமாயிருக்கிறேன்.
The *judge* having summed up the evidence, the jury gave their verdict.	நீதியிராசா எடுத்துக்காட்டின நியாயங்களை மத்திட்சர் கேட்டுத் தங்கள் தீர்மானத்தை அறிவித்தார்கள்.
He is a person of great *judgment*.	அவன் மகா நிதானி.
Squeeze some *juice* out of this lemon.	இந்த எலுமிச்சம் பழத்திலே கொஞ்சஞ் சாறு புளி.
The laws of the country secure *justice* between man and man	தேச நியாயப்பிரமாணம் மனிதருக்குள்ளே நீதியை நிறுத்துகிறது.
I could say nothing in *justification* of his conduct.	அவனுடைய நடத்தை நேரானதென்று சொல்லக் கூடாது.

K.

Break the shell of this cocoanut, and give me the *kernel*.	இதின் சிரட்டையை உடைத்து உள்ளே இருக்கிற தேங்காயைத் தாரும்.
I saw a goat with two *kids*.	ஒரு வெள்ளாட்டையும் இரண்டு குட்டிகளையுங் கண்டேன்.

They shewed us very great *kindness*.	எங்களில் மகாபட்சங் காட்டி நடந்தார்கள்.
We travelled through the *kingdom* of Persia.	பார்சு இராச்சிய வழியாகப் பிரயாணம் பண்ணினோம்.
Come give me a *kiss*; then go and fly your *kite*.	வந்து ஒரு முத்தந் தந்து விட்டுப் பின்போய்க் கொடியை ஏற்று.
This is a nice cat; she has two *kittens*.	இதொரு நல்ல பூனை, அதற்குக் குட்டிகளும் இரண்டு.
He fell on his *knees* and asked pardon.	அவன் முழந்தாளில் நின்று பொறுதி கேட்டான்.
Try if you can open this *knife*.	இந்தக் கத்தியைத் திறக்கக் கூடுமோபார்.
Here is a *knot* in this string; loose it.	இந்தக் கயிற்றில் ஒரு முடிச்சு இருக்கின்றது, அதை அவிழ்
What is wealth without *knowledge*?	அறிவில்லாதவனுக்குச் செல்வம் ஏன்?

L.

I have bestowed much *labour* in instructing him.	அவனைப் படிப்பிப்பதற்கு மிகவும் பிரயாசப்பட்டேன்.
There are fifty *labourers* employed at this work.	இந்த வேலையிலே ஐம்பது வேலைகாரர் ஏற்பட்டிருக்கிறார்கள்.
It will cost a *lack* of rupees.	இதற்கு ஒரு இலக்கம் உருபாச் செலவு வரும்

This vessel is taking in her *lading*.	இவ்வோடத்திற் சரக்குகள் ஏற்றப்படுகின்றன
Hang this *lamp* in the hall.	அறையிலே இந்த விளக்கைத் தூக்கு.
Will you go by *land* or by sea?	கரை வழியாகவோ கடல் வழியாகவோ போக விரும்புகிறீர்?
Kopaly Chitty is the *land-lord* of this house; I am his tenant.	இந்த வீடு கோபால செட்டியாருடையது, நான் வாடைக்கு வாங்கி இருக்கிறேன்.
I should not like to live in this narrow *lane*.	இப்படிப்பட்ட சிறுவீதியிலே குடியிருக்க எனக்கு மனமில்லை.
I am overcome with *languor*.	வாடித் தழர்ந்துபோயிருக்கிறேன்.
Melt this *lead* in the fire.	இந்த ஈயத்தை நெருப்பிலே இட்டுருக்கு.
I have taken a *lease* of this house for five years.	இந்த வீட்டை ஐந்து வருடத்துக்கு வாடையாக வாங்கி இருக்கிறேன்.
It is late; let us now take *leave*.	நேரஞ் சென்றுபோயிற்று, நாம்போக உத்தரவு கேட்போம்.
He fell off his horse and broke his *leg*.	குதிரையில் இருந்து விழுந்து கால் முறிந்துபோனான்.
Sir, are you now at *leisure*? can I speak with you?	ஐயா, நான் உம்மிடத்திலே பேசிக்கொள்ள இப்போது சமயம் இருக்குமா?
Leper, one who has the *leprosy*.	குட்டரோகம் பிடித்தவனைக்குட்டரோகியென்பது

He treats every thing with *levity*.	அவன் ஒன்றையும் பருவாய்ப் பண்ணுகிறதில்லை.
He was in prison, but is now set at *liberty*.	அவன் சிறைச் சாலையில் இருந்து இப்பொழுது விடுதலையாய் வந்திருக்கிறான்.
Have you seen his *library*?	அவனுடைய புத்தகசாலையைக் கண்டீரா?
Lift up the *lid* of this box.	இந்தப் பெட்டகத்தின் மூடியை உயர்த்து.
He thinks nothing of telling a *lie*.	அவன் பொய் சொல்லக் கூசுகிறதில்லை.
Life is short: we ought now to prepare for eternity.	ஆயுசு சொற்பமானதினால், நாம் இப்பொழுதே மோட்சத்துக்கு ஆயத்தம்பண்ண வேண்டும்.
I was yesterday in a storm of thunder and *lightning*.	நேற்று முழக்கமும் மின்னலுமாயிருக்கிற வேளையில் வெளியே இருந்தேன்.
This jacket must have a *lining*.	இந்தச் சட்டைக்கு உட் புடைவை போடவேண்டும்.
How many *links* are there in that chain?	அந்தச் சங்கிலியில் எத்தனை வளையம் உண்டு!
A *lion* is stronger than a tiger.	புலியினுஞ் சிங்கம் அதிக பெலனுள்ளது.
Is the medicine you speak of a *liquid*?	நீர் சொல்லும் மருந்து ஒரு நீரா?

Write a *list* of the things sent to Batticotta.	வட்டுக்கோட்டைக்கு அனுப்பின சரக்குக்கு ஒரு அட்டவணை எழுது.
He is ill of *liver* complaint.	கல்லீரல் வியாதியாய் இருக்கிறான்.
Are you acquainted with the properties of the *load-stone*?	காந்தக் கல்லு எதெதுக்குக் கூடியதென்று அறிவீரா?
Tell the baker to give three *loaves* of bread.	அப்பக்காரனிடத்தில் மூன்று அப்பந் தரச்சொல்லிக் கேள்.
May I beg the *loan* of this book?	இந்தப் புத்தகத்தை இரவலாகத்தரச் சொல்லிக் கேட்கிறேன்.
There is no *lock* to your box.	உமது பெட்டகத்துக்குப் பூட்டில்லை.
When you go to Madras, buy me a *looking-glass*.	நீர் சென்னப்பட்டினத்துக்குப் போகும் பொழுது, எனக்கொரு கண்ணாடி விலைக்கு வாங்கித் தர வேண்டும்.
He has met with great *losses*.	அவனுக்குப் பெரிய நட்டம் நேரிட்டது.
I purchased five *lots* at to-day's sale.	இன்றைக்கு ஏலத்தில் ஐந்து வகையான தட்டுமுட்டுக்களைக் கொண்டேன்.
They have no *love* for each other.	அவர்கள் ஒருவரில் ஒருவர் நேசம் இல்லை.
Put the *luggage* in the boat.	தட்டுமுட்டுகளைப் படகில் ஏற்று.

Bruise this salt; it is all in *lumps*.	இந்த உப்பு முற்றுங் கட்டியாய் இருக்கிறது, தூளாக்கு.

M.

What is the name of the *machine*?	இந்தச் சூத்திரத்துக்குப் பெயர் என்ன?
The *magazine* was demolished by the explosion of a barrel of gunpowder.	பீப்பா நிறைந்த வெடி மருந்து நெருப்புப் பற்றினதினால், மருந்துச் சாலை முழுதும் வெடித்துச் சிதறிப்போயிற்று.
For this offence, he was taken before the *magistrate*.	இந்தக் குற்றத்துக்காக நீதித் தலைவரிடத்திலே கொண்டு போகப்பட்டான்.
He has one man-servant and two *maid-servants*.	அவனுக்கு ஒரு பணிவிடைகாரனும் இரண்டு பணிவிடைகாரிகளும் உண்டு.
She lives with her *mamma*	தாயுடனே இருக்கிறாள்.
We ought to love all *mankind*.	நாஞ் சகலரையும் நேசிக்க வேண்டும்.
He spoke to us in a kind *manner*.	தயவாக நம்முடனே பேசினான்.
This garden needs some *manure*.	இந்தத் தோட்டத்துக்கு எரு வேண்டும்.
Shew me a *map* of Bengal.	வங்காள தேச படத்தை எனக்குக் காட்டும்.
This floor is paved with blue *marble*.	இவ்வறை கருங்கல்லினால் தளமிடப்பட்டிருக்கிறது.

Put a *mark* on the paper that is yours.	உன்னுடைய கடுதாசி ஏதென்று அடையாளம் போடு.
I have been at the *market*.	கடைக்குப்போனேன்
When will their *marriage* take place?	அவர்களுடைய விவாகம் எப்போது நடக்கும்?
He is a kind *master*.	அவர் ஒரு பட்சமுள்ள இயமான்.
Tell the carpenter and his *mate* to come to-morrow.	தச்சனையும் அவனுடைய கூட்டு வேலைகாரனையும் நாளைக்கு வரச் சொல்லு.
How can they work without *materials*?	தளவாடம் இல்லாமல் அவர்கள் வேலைசெய்வதெப்படி?
By what *means* will you be able to do this?	எதுக்கொண்டு இதை முடிப்பாய்?
This is short *measure*.	இது குறைந்த அளவு.
You are beyond *measure* extravagant.	நீ கடிய ஊதாரி.
I am reading a book of *memoirs*.	நான் ஒரு சரித்திரப் புத்தகம் வாசிக்கிறேன்.
Make a *memorandum* of this.	இதற்கு ஒரு ஞாபகக் குறிப்பெழுதி வை.
I have a bad *memory*.	நான் ஞாபகத் தாழ்ச்சியுள்ளவன்.
This is an article of *merchandise*.	இது வியாபாரத் தட்டுமுட்டு.
He is now a *merchant* in Galle.	அவர் இப்பொழுது காலியிலே வருத்தகம் பண்ணிக் கொண்டிருக்கிறார்.

She is a woman of great *merit*.	அவள் மகா யோக்கிய வாட்டி.
What is the best *method* (or mode) of learning a language?	ஒரு பாஷையைப் படிக்கிறதற்கு நல்ல ஒழுங்கென்ன?
Shall I place it at the end or in the *middle*?	ஈற்றிலேயோ நடுவிலே இதை வைக்க வேண்டும்?
I did not arrive there till *midnight*.	நான் அங்கே போய்ச் சேர நடுச் சாமமாய்ப் போயிற்று.
Grind this wheat in the *mill*.	திரிகையிற்போட்டு இந்தக் கோதும்பையை அரை.
Tin and copper are dug out of *mines*.	துத்தநாகமுஞ் செம்பும் நிலத்துக்குள்ளே வெட்டி எடுக்கப்படுகின்றன
They are full of *mirth*.	மிகுந்த மகிழ்ச்சியாய் இருக்கிறார்கள்.
He is always in *mischief*.	அவன் எப்பொழுதுந் துடினஞ் செய்கிறான்
He has met with many *misfortunes*.	அவனுக்கு முறைக்கு முறை கேடு வருகிறது.
This is owing to your *mismanagement*.	இது உன்னுடைய பராபரிப்புத் தாழ்ச்சியினாலே வந்தது.
The *motion* of this wheel is very quick.	இந்த உருளையின் கதி அதிக வேகம்.
What is your *motive* for doing this?	என்ன நோக்கங்கொண்டு இதைச் செய்கிறீர்?
Are you fond of *music*?	உமக்கு வாத்தியங்களிற் பிரியமோ?

This is a *mystery* which none can comprehend.

இது எவருடைய அறிவுக்கும் எட்டாத காரியம்

N.

His praise is spoken of by the whole *nation*.

அவருடைய கீர்த்தி இராச்சியம் எங்கும் பிரபலமாயிருக்கின்றது.

Have you learnt *navigation*?

மாலுமி சாத்திரம் படித்திருக்கிறீரா?

I went there but saw *nobody*.

நான் அங்கே போயும் ஒருவரையுங் காணவில்லை.

What they say is mere *nonsense*.

அவர்கள் பேசுகிறதெல்லாம் பதர்ப்பேச்சு.

They took with them their little child and its *nurse*.

தங்கள் குழந்தையையும் அதின் தாதியையுங் கூடக் கொண்டு போனார்கள்.

O.

How can the boatman row without *oars*?

தோணிக்காரன் தண்டில்லாமல் வலிப்பதெப்படி?

In a court of justice it is customary for a witness to take an *oath*.

நீதித் தலத்திலே சாட்சிக்காரன் சத்தியம்பண்ணுவது வழக்கம்.

To-morrow will be my son's wedding; I shall be happy to see you at my house on the *occasion*.

நாளை என்மகனுடைய கலியாணச் சடங்கு; அத்தருணத்தில் நீரும் அதற்கு என்னுடைய வீட்டுக்கு வர விரும்புகிறேன்.

He is celebrated as an *orator*.	அவர் வாக்குவல்லபத்தீலே பேர்பெற்றவர்.
Sir, what are your *orders*?	ஐயா! நீர் என்ன கட்டளை இடுகிறீர்?
He did that only through *ostentation*.	அவன் அதை ஒருவீம்புக்காகத்தானே செய்தான்.

P.

I have received a *packet* from Madras.	சென்னைப் பட்டினத்தில் இருந்து எனக்கு ஒரு கட்டு வந்தது.
Have you read that *pamphlet*?	அந்தச் சிறு புத்தகத்தை வாசித்தீரா?
I have forwarded to him the *parcel*.	அந்தக் கட்டை அவரிடத்துக்கு அனுப்பிப்போட்டேன்
Have you procured a *pass* for these goods?	இந்தச் சரக்குக்கொண்டுபோவதற்கு உத்தரவுச் சீட்டு பெற்றீரா?
He has obtained a *passport* to go to Manaar.	மன்னாருக்குப் போகப் பிரயாண உத்தரவு பெற்றிருக்கிறான்.
Under whose *patronage* has this work been commenced?	ஆர் முன்னிலையாய் இந்தக் காரியம் நடந்து வருகிறது.
For doing this you must pay a *penalty*.	நீ இதைச் செய்ததற்காகத் தண்டம் இறுக்க வேண்டும்.
We ought to aim at *perfection*, though we may not attain it.	முடியாதாயினும், பூரண சற்குணராய் இருக்க விரும்பி முயற்சிபண்ண வேண்டும்.

I want a pair of *pincers*.	எனக்கு ஒரு குறடு வேண்டும்.
There is no end to the *plague* and trouble of this business.	இந்த வேலையில் இருக்கிற வருத்தத்துக்கும் தேண்டிப்புக்கும் முடிவில்லை.
This needle has no *point*.	இந்த ஊசிக்குக் கூர் இல்லை.
He has been at the *point* of death.	மரணவத்தையாய் இருந்தான்.
I mentioned that in the *postscript* of my letter.	எனது காகிதத்தில் அதைக் கீழே எழுதிவிட்டேன்.
In the book which you gave me, there are many excellent *precepts*.	நீர் எனக்குத் தந்த புத்தகத்தில் வெகு மேன்மையான கற்பனைகள் இருக்கின்றன.
He is less capable than his *predecessor*.	முன் இந்த வேலை பார்த்தவனுக்கு இவன் குறைவாயிருக்கிறன்.
We ought to get rid of *prejudice*.	நியாயமில்லாமல் வெறுக்கிற குணத்தை விடவேண்டும்.
The doctor wrote this *prescription*.	பரிகாரி இந்த வாகடமுறையை எழுதினன்.
Are you fond of *preserves*.	இனிப்புச் செய்த பழத்திலே உமக்குப்பிரியமா?
Is there any *probability* of my seeing him?	நான் அவனைக் காண்பேனே?
These articles are the *produce* of this country.	இவை இவ்வூர்ச் சரக்கு.

We were five days without *provision.*	ஐந்து நாளாகப் போசனத்துக்கொன்று மில்லாமல் இருந்தோம்.
Have you made *provision* for the journey?	பிரயாணத்துக்கு வேண்டியவைகளைச் சேகரம்பண்ணிப்போட்டீரா?

Q.

Is the work printed in folio, *quarto*, octavo, or duodecimo?	அந்தப் புத்தகம் இரண்டாகவோ, நாலாகவோ, எட்டாகவோ, பன்னிரண்டாகவோ மடிக்கத்தக்கதாக அச்சடித்தது?

R.

Some of the garden *rails* are broken.	தோட்டக் கிருதிகளிற் சீல முறிந்தன.
What is his *rank* in the army?	பாளயத்திலே அவருக்கு என்ன உத்தீயோகம்’
Man is possessed of *reason*; the beasts are not.	மனிதனுக்குப் பகுத்தறிவுண்டு, மீருகத்துக்கோ அதில்லை!
What is the *reason* you cannot be silent?	நீ ஏன் அமர்ந்திருக்கவில்லை.
Sir, be pleased to give me a letter of *recommendation* to that gentleman.	ஐயா! என்னைக் குறித்து ஒரு நடத்தைப் பத்திரம் அந்தத் துரைக்குத்தாரும்.
Can you give me a *reference* to any one respecting your character?	உமது நடத்தையை அறிந்தவர்கள் ஆரும் உண்டோ சொல்லும்.

I feel great *regret* at the loss of your company.	உம்மை விட்டுப் பிரிவதினால், மிகவும் விதனப்படுகிறேன்.
The business is conducted with the greatest *regularity*.	இந்த வேலை மிகவும் ஒழுங்காக நடந்து வருகிறது.
I have made a *report* to Mr. ——	இன்னாருக்கு நான் அறிவிப்புப் பண்ணிப்போட்டேன்.
This *report* is without foundation.	இந்தப் பேச்சு வைப்புக் கட்டானது.
Can you tell the meaning of this *riddle*?	இந்த நொடியை உம்மாலே அவிழ்க்கக் கூடுமோ?
He is more successful than his *rival*.	அவன் எதிரியிலும் அவனுக்குக் காரியங் கைகூடி வருகிறது.
This is a sign of *rainy* weather.	இது மழை வருவதற்கு ஓர் அடையாளம்.

S.

Whose *signature* is this?	இது ஆருடைய கையெழுத்து!
Are you fond of *society*, or do you love *solitude*?	கூட்டமோ தனிமையோ உமக்குப் பிரியம்?
What is the name of this *Society*?	இச்சங்கத்தின் பேர் என்ன?
Shew me a *specimen* of your writing.	உம்முடைய எழுத்தின் மாதிரியைக் காட்டும்.
She intends to make a long *stay* there.	அங்கே நெடுகத் தங்கமனமாய் இருக்கிறாள்.

I have bought a *score* of sheep.	நான் ஆடு இருபதுகொ ண்டேன்.
Why have you made so many *scrawls*?	ஏன் இப்படிக் கேடாய் எழுதினுய்?
We ought to mortify our *senses*.	நமது புலன்களையொ டுக்க வேண்டும்.
Surely he is out of his *senses*.	நிச்சயமாக அவன் அ றிவு மயங்கிப்போனுன்.
There is neither beginning nor end to this *sentence*.	இந்த வசனத்துக்கு அ டிதலை இல்லை.
I am ready to do you any *service* in my power.	என்னுல் இயன்ற ப ணிவிடை உமக்குச் செ ய்யக் காத்திருக்கிறேன்.
He has a great *store* of learning.	அவன் ஒரு கல்விக் க ளஞ்சியம்.
He has received a *summons* to attend the court to-morrow	நாளை நீதித் தலத்துக் குப் போகும்படி அவனுக் குக் கட்டளை.

T.

It is now *term* time; the court is open.	இப்பொழுது நீதித் தல ந் திறந்திருக்கிறது.
For what *term* have you taken this house?	எவ்வளவு காலத்துக் கு இந்த வீட்டை ஏற்றிரு க்கிறீர்?
To the christian, death has no *terror*.	கிறிஸ்தவனுக்கு மரண ம் பயங்கரமானதல்ல.
The Bible includes the old and new *testaments*.	வேதாகமத்திலே ப ழைய ஏற்பாடும் புதியஏ ற்பாடும் அடங்கி யிருக்கி ன்றன.

They gave in fair *testimony* very briefly.

அவர்கள் சுருக்கமாய் நிதானமான சாட்சிகொடுத்தார்கள்.

The *text* was, John (III. 36.

யோவான் எழுதின சுவிசேஷம், ௩. அதி. ௩௬. வசனந்தான் முகவுரைவாக்கியம்.

The *texture* of the cloth is very strong.

அந்தப் புடைவை மிடுக்கான நெசவாயிருக்கின்றது.

Accept my hearty *thanks* for your kindness.

நீர் எனக்குச் செய்த தயவுக்காக நான் உமக்கு மன அன்பாய் உபகாரஞ் சொல்லுகிறேன்.

The *thatch* on the house took fire and the house was burnt.

கூரையிலே நெருப்புப் பற்றி வீடு எரிந்து போயிற்று.

Many young people are ruined by going to the *theatre*.

அநேகம் வாலிபர் கூத்துக்குப்போவதினாற், கெட்டுப்போகிறார்கள்.

Theology, as taught in the Bible, is pure.

வேதாகமசாத்திரஞ் சுத்தமுள்ளது.

Theory is of very little importance compared with practice.

எண்ணத்தைப் பார்க்கிலுஞ் செய்கையே பிரதானம்.

The *Thermometer* stands at 90° to-day; it is very hot.

உட்டண சயித்தியங்களைக் காட்டுஞ்சூத்திரத்திற்றொண்ணூறுபாகை அளவுக்கு இரசம் ஏறியிருக்கிறபடியால் இன்று மிகு காங்கை.

The *thieves* were caught and imprisoned.	கள்வர் பிடிபட்டு மறியலில் வைக்கப்பட்டார்கள்.
He fell from his carriage and broke both *thighs.*	அவன் தன் இரதத்தில் இருந்து விழுந்து தன் இரு துடையையும் முரித்துக் கொண்டான்.
Please give me a *thimble*, else I cannot sew this.	தயவுபண்ணி நீர் எனக்கொரு புட்டில் தந்தாலன்றி, நான் தைக்கக் கூடாது.
There is neither hunger nor *thirst* in heaven.	மோட்சத்திலே பசியாவது தாகமாவது இல்லை
I have got a *thorn* in my foot and cannot walk.	என் காலிலே ஒரு முள்ளுத் தைத்திருக்கிறதினால் நடக்க மாட்டேன்.
His *thoughts* are very correct.	அவருடைய எண்ணங்கள் சரி.
My needle and *thread* are in my sack.	என் ஊசியும் நூலும் என் சாக்கில் இருக்கின்றன.
I have a bad cold and a sore *throat.*	எனக்குப் பெருந்தடிமலும் தொண்டை நோவும் இருக்கிறது.
The queen sat on her *throne* when she gave those commands.	இராசாத்தி சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து கொண்டு அந்தக்கட்டளைகளைக் கொடுத்தாள்.
There was a great *throng* of people in the bazar.	சந்தையில் வெகு சன நெருக்கமிருந்தது.

There is a man with two *thumbs*.	அந்த மனிதனுக்குப் பெருவிரல் இரண்டு.
The *thunder* and lightning were very terrific.	மின்னல் முழக்கம் மிகவும் பயங்கரப்படத்தக்கதாய் இருந்தது.
He is employed as a *tide-waiter* under government.	அவன் அரசாட்சியாரால் துறைக் காவற்காரனாக நியமிக்கப்பட்டிருக்கிறான்.
These are heavy *tidings* to his parents.	இந்தச் செய்தி பெற்றருக்குக் கன துக்கமாய் இருக்கும்.
He saw a *tiger* and *tigress* in the jungle yesterday.	அவன் நேற்றுக் காட்டுக்குள் ஒரு புலிப்போத்தையும் பிணாவையுங் கண்டான்.
Can you sell me some *tiles* for my house?	என் வீட்டுக்குக் கொஞ்ச ஓடு விலைக்குத் தருவாயா?
Adam was a *tiller* of the ground.	ஆதாம் பயிரிடுகிறவனாய் இருந்தான்.
I want some *timber* to build a house.	வீடு கட்ட எனக்குக் கொஞ்சக் கவறு வேண்டும்.
Bring my *tin* box.	எனது தகரப் பெட்டியை எடுத்துவா.
There is no *tinder* in the box.	தீத்தட்டிக் குடுக்கேல பஞ்சில்லை.
His *title* to the land is not good.	அந்தக் காணிக்கு அவனுடைய உறுதி பெலம் பல்ல.

People raise much *tobacco* for exportation.	மறுதேசத்துக்கேற்றச் சனங்கள் மிகுதியாய்ப் புகையிலை செய்கிறார்கள்.
These people gather *toddy* from the palmira.	இந்தச் சனங்கள் பனையிலே கள்ளுச் சேர்க்கிறார்கள்.
Astronomy was the principal *topic* of conversation.	சம்பாஷணையிலேவானசாத்திரத்தைப்பற்றி அதிகம் பேசினார்கள்.
He carried a *torch* in his hand because it was dark.	இருட்டானதால் தன் கையிலே ஒரு சூள் வெளிச்சங் கொண்டுபோனான்.
Warn them lest they come to this place of *torment*.	அவர்களும் இந்த உபாதியான இடத்தில் வராதபடிக்கு அவர்களை எச்சரித்துக்கொள்.
The rain poured down in *torrents*.	மழை தாரை தாரையாய்ப் பெய்தது.
He is insensible to the *touch*.	அவனுக்குப் பரிச உணர்வில்லை.
Try this gold on the *touch-stone*.	இந்தப் பொன்னை உரைகல்லிலே உரைத்துப் பார்.
I shall be a week on my *tour*.	நான் ஒரு கிழமைப் பிரயாணத்தில் இருப்பேன்.
Bring me a clean *towel*.	சுத்தமான ஒரு கைக்குட்டை கொண்டுவா.
The *tower* was struck with lightning.	கோபுரத்தின் மேல் இடி விழுந்தது.
It is more pleasant to live in the country than in the *town*.	நகரியிலே குடியிருக்கிறதிலும் நாட்டிலே குடியிருக்கிறதுமிகுந்த சந்தோஷம்

He went to buy some *toys* at the *toy-shop*.	சில விளையாட்டுக் கருவிகள் கொள்ளக் கடைக்குப்போனுர்.
I saw a *track* of an elephant.	யானை அடியைக் கண்டேன்.
He bought a large *tract* of country.	அவன் வெகு பரப்புக் கொண்டான்.
The *trade* of India is fast increasing.	இந்து தேசத்திலே வியாபாரஞ் சீக்கிரமாய் வர்த்திக்கின்றது.
Every *trader* is busy.	ஒவ்வொருவத்தகனும் முயற்சியாய் இருக்கிறன்.
We learn some things by history and some by *tradition*.	நாம் சிலகாரியங்களைச் சரித்திரங்களினுலும், சில காரியங்களைப்பாரம்பரையாயும் அறிந்துகொள்ளுகிறேம்.
There is much *traffic* between Madras and Calcutta.	சென்னபட்டினத்தாரோடும் கற்குத்தாவாரோடும்மிகவும் வியாபாரஞ் செய்கிருர்கள்.
The Rajah had a great *train* with him.	இராசாவுக்குப் பெரிய பரிவாரம் உண்டு.
He has many good *traits* of character.	அவன் நல்லொழுங்கான நடையுள்ளவன்.
I will never become a *traitor* in the cause of Christ.	நான் ஒருக்காலுங் கிறிஸ்துவுக்கு விரோதமாய்த் துரோகியாகேன்.
He enjoys much *tranquility* of mind.	அவன் மெத்த மன அமைதியுள்ளவனுய் இருக்கிறன்.
These *transactions* will soon be finished.	இந்த வேலைகள் சீக்கிரம் முகிந்துபோம்.

This is an exact *transcript.*	இது அதுக்குச் சரியான பிரதீ.
Can you calculate the *transit* of Venus?	வெள்ளிக்கிரகணங் கணிப்பாயா?
This *translation* shows that the *translator* is a clever man.	இதைப் பாஷைப்படுத்தீ எழுதீனவர் மகா கெட்டிக்காரனென்று இந்தப் பாஷைப் போங்கினாலே காண்கின்றது
Transmigration and purgatory show that God has no mercy.	மறு பிறப்பும் உத்தரிக்குந் தலமுந் தேவன் கிருபையற்றவரென்று காட்டுகின்றன.
He was in a *transport* of joy.	அவன் சந்தோஷத்தினாற் பரவசமானான்.
He was sentenced to *transportation.*	அவன் புறதேசத்துக்கேற்றுப்படத் தீர்வைபண்ணப்பட்டான்.
The wicked shall fall into his own *trap.*	பொல்லாதவன் தான் வைத்த பொறிக்குள் விழுவான்.
He has been a great *traveller.*	அவன் வெகுபயணம் பண்ணியிருக்கிறான்.
He is guilty of great *treachery.*	அவன் இரண்டகச்செய்கையின் பேராற் குற்றவாளியாய் இருக்கிறான்.
Such conduct is *treason* against the king.	அத்தன்மையான செய்கை இராச துரோகமாய் இருக்கின்றது.
By diligence he acquired a great *treasure.*	அவன் முயற்சியுள்ளவனாய் இருந்ததினால், வெகு திரவியத்தைச் சம்பாதித்துக்கொண்டான்.

Please pay the money to the *treasurer*.	தயவுபண்ணிப் பொக்கிஷக்காரனுக்கு அந்தப் பணத்தைக்கொடு.
This is a very valuable *treatise*.	இதொரு விலையுயர்ந்த நூல்.
That was very proper *treatment*.	அது நல்லொழுக்கமான செய்கை.
The two nations have entered into a *treaty*.	அந்த இரண்டு தேசத்தாருஞ் சமாதான உடம்படிக்கை பண்ணிக்கொண்டிருக்கிறார்கள்.
This *tree* is very good for *timber*.	இது வேலைக்கு மெத்த நல்ல மரம்.
He dug a *trench* round his house.	அவன் தன் வீட்டை வளைய ஒரு அகழ் வெட்டினான்.
He was in great *trepidation* when I came.	நான் வந்த பொழுது அவன் பயந்து நடுங்கிக் கொண்டிருந்தான்.
This *trespass* is against the laws of the land.	இது தேசப் பிரமாணத்துக்குத் தப்பிதமாய் இருக்கும்.
The Hindu *triad* is not a united *trinity*.	மும்மூர்த்தி திரீயத்துவ தெய்வமல்ல.
We are subject to many *trials* in the world.	உலகத்திலே நாம் வெகு உபத்திரங்களுக்கேதுவானவர்களாய் இருக்கிறோம்.
How many kinds of *triangles* are there?	எத்தனை விதமான முக்கோணங்கள் உண்டு?
The country is inhabited by many *tribes*.	இத்தேசத்திலே அநேகங் கோத்திரத்தார் குடியிருக்கிறார்கள்.

Tribulation leads to patience.	உபத்திரம் பொறுமையைத் தரும்.
He was brought before the king's *tribunal.*	அவன் இராசாவின் நியாயாசனத்துக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டான்.
Give *tribute* to whom *tribute* is due.	வரிகொடுக்கவேண்டியவர்களுக்கு வரி கொடுங்கள்.
The monkey often shows his *tricks.*	அநேக முறைகளில் மந்தி தந்திரங்களைக் காட்டுகிறது.
He is much pleased with *trifles.*	அவன் அற்ப காரியங்களில் மெத்தச் சந்தோஷப்படுகிறான்.
Trigonometry is a very useful science.	முக்கோண சாத்திரம் மிகவும் பிரயோசனமுள்ள கல்வியாய் இருக்கின்றது.
He bought many *trinkets* at the shop.	அவன் கடையிலே வெகு அற்பமான பொருள்களைக் கொண்டான்.
I intend to take a *trip* to Culcutta.	நான் கற்குத்தாவுக்குப் போய் வர நினைக்கிறேன்.
He returned home in *triumph.*	அவன் வெற்றியுடனே வீட்டுக்குத் திரும்பினான்.
God is a *triune* being.	தேவன் திரீயத்துவமாய் இருக்கிறார்.
The soldiers are divided into *troops.*	படைவீரர் அணியணியாய் வகுக்கப் பட்டார்கள்.

Most of our *troubles* spring from ourselves.	எங்களுக்கு வருந்தொந்தரை வெகுவாய் எங்களாலேதான் வருகிறது.
The boat was a *trough* made of a simple tree.	அந்தத் தோணி ஒரே மரத்திலே உண்டாக்கப்பட்டது.
Masons work with *trowels*.	கற்சிப்பர் சாந்தகப்பையினால் வேலை செய்கிறார்கள்.
The *trumpet* shall sound.	எக்காளந் தொனிக்கும்.
We make *trunks* of the sawn *trunk* of a tree.	அரிந்த பலகைகளைக்கொண்டு பெட்டகங்களைச் செய்கிறோம்.
He betrayed his *trust* and lost the confidence of his friends.	அவன் நம்பிக்கைத்துரோகம் பண்ணினதினால் அவனுடைய சினேகிதர் அவனை நம்புகிறதில்லை.
Mr. A. is one of the *trustees* of the College	இன்னார் கல்லூரிக்கு முகாமைக்காரரில் ஒருவராய் இருக்கிறார்.
Whatever be the consequence always tell the *truth*.	என்ன வந்தாலும், எப்போதும் மெய் சொல்லு.
The water passes through a *tube* under ground.	தண்ணீர் பூமிக்குள் மதகு வழியாய்ப் பாய்கின்றது.
That bird has a *tuft* of feathers on its head.	அந்தப் பட்சிக்குத் தலையிலே சிகையிருக்கின்றது
John, go into the garden and gather some *tulips*.	யோவான் தோட்டத்துக்குள்ளேபோய் சிலபுட்பங்கள் கொய்துகொண்டுவாரும்.

That man has a *tumor* on his face.	அந்த மனிதனுக்கு முகத்திலே ஒரு திரட்சி இருக்கிறது.
There was a great *tumult* among the people.	சனங்களுக்குள்ளே ஒரு பெரிய குழப்பம் இருந்தது.
There is much harmony in that *tune.*	அந்த இராகம் மெத்த இன்னிசையாய் இருக்கின்றது.
The *Turks* generally wear *turbans.*	துலுக்கர் பெரும்பாலுந் தலைப்பா வைக்கிறார்கள்.
There aré many *turns* in this road.	இந்தத் தெருவிலே வெகு மடக்குகள் இருக்கின்றன
The *tusks* of that elephant are very large.	அந்த யானைக்குத் தந்தங்கள் மிகவும் பெரிதாய் இருக்கின்றன.
This man is a *tutor* in the Seminary.	இந்த மனிதன் சுற்றுவாரியில் ஒரு உவாத்தியாய் இருக்கிறார்.
You can pull out the thorn with *tweezers.*	நீ சாவணத்தினாலே முள்ளை இழுப்பாய்.
This tree has many *twigs* growing on it.	இந்த மரத்திலே அநேகம் முளைகள் முளைக்கின்றன.
Esau and Jacob were *twins.*	ஏசாவும் இயாக்கோபும் இரட்டைப்பிள்ளைகளாய் இருந்தார்கள்.
Give me a piece of *twine* to tie this.	இதைக் கட்ட ஒரு துண்டு முறுக்கு நூல்தா.
The stars are known by their *twinkling.*	இலங்குகிறதினாலே நட்சத்திரமென்றுதெரியும்.

He can set *types* very fast.	அவன் வெகு சுறுக்காய் அச்சுக்கோப்பான்.
Some kings are *tyrants*.	சில இராசாக்கள் கொடுங்கோன் மன்னராய் இருக்கிறார்கள்.
I am only a *tyro* in learning.	நவ மாணாக்கனாய் இருக்கிறேன்.

V.

How long does *vacation* last?	விடுதலையான காலம் எந்த மட்டும் இருக்கும்?
The benefits of *vaccination* are many.	பால் கட்டுகிறதினாலே வெகு பிரயோசனங்கள் உண்டு.
Pour melted lead into this *vacancy*.	உருக்கப்பட்ட ஈயத்தை இந்த வெளிக்குள்ளே வார்.
Even a bird cannot live in a *vacuum*.	வாயு இல்லாத இடத்தில் பட்சிதானும் உயிரோடிருக்கக்கூடாது.
He has been a *vagabond* for many years.	அவன் வெகு வருஷமாக நிலையற்றலைந்து திரிகிறவனாய் இருந்தான்.
The lady had a *vail* over her face.	அந்தத் துரைச்சாணி தன் முகத்திலே ஒரு முக்காடு போட்டிருந்தாள்.
There are large *valleys* between the mountains.	மலைகளுக்கு நடுவிலே பெரிய பள்ளங்கள் இருக்கின்றன.
He is a man of great *valour*.	அவன் ஒரு பெரிய பராக்கிரம சாலியாய் இருக்கிறான்.
What is the *value* of your house?	உன்னுடைய வீட்டிற்கு விலை என்ன?

The *valve* of the pump needs mending.	குழலின் அடைப்புப் பழுது பார்க்க வேண்டியது.
Vanity and pride are often joined with ignorance.	ஆடம்பரமும் பெருமையும் பல முறை அறியாமையின் சம்பந்தம்.
Those two lads are always at *variance.*	அந்த இரண்டுவாலிபர் எப்போதும் பிரிவினையாய் இருக்கிறார்கள்.
The sun is without *variation.*	சூரியன் எப்பொழுதும் வேற்றுமையின்றி இருக்கின்றது.
There is a great *variety* of flowers in this garden.	இத்தோட்டத்திலே பல வகையான புட்பங்கள் இருக்கின்றன.
I must get some *varnish* for my bandy.	நான் என்னுடைய பண்டிக்குக் கொஞ்ச மினுக்கெண்ணெய் வாங்க வேண்டும்.
Pack these articles nto the *vault.*	இந்த உடைமைகளைச் சுவரறையிலே அடுக்கி வை.
The *vedas* often contradict themselves.	அநேக இடங்களில் வேதங்கள் ஒன்றற்கொன்று ஒவ்வாமையாய் இருக்கின்றன.
There are many *vegetables* in the garden	தோட்டத்திலே அநேகம் பயிர் வகைகள் உண்டு.
In the dry season there is very little *vegetation.*	கோடை காலத்திலே பச்செனவு மிகவுங் குறைவு.

I can go in any *vehicle.*	நான் என்ன வாகனத்திலும் ஏறிப்போவேன்.
There are many *veins* in our body.	எங்கள் சரீரத்திலே அநேகம் இரத்த நரம்புகள் இருக்கின்றன.
People sometimes write on *vellum.*	சனங்கள் சிலவேளை பதனிட்ட தோலில் எழுதுகிறார்கள்.
A steam *vessel* runs with great *velocity.*	புகைக் கப்பல் வெகு கதியாய் ஓடும்.
There is to be a *vendue* in town to-morrow	பட்டினத்திலே நாளைக்கு ஒரு ஏலம் இருக்கும்.
He is worthy of great *veneration.*	அவர் மிகவுஞ் சங்கிக்கப் படத் தக்கவராய் இருக்கிறார்.
He ate some *venison* yesterday.	அவன் நேற்றுக்கொஞ்சம் மானிறைச்சி தின்றான்.
The orbit of *Venus* is between the earth and sun.	சுக்கிரன தயனம் பூமிக்குஞ் சூரியனுக்கும் ஊடாகச் செல்லுகிறது.
At this season there is a beautiful *verdure* every where.	இந்தக் காலத்திலே எங்கும் அழகான பச்சேனவுண்டு.
That young man is on the *verge* of ruin.	அந்த வாலிபன் கேட்டுக்குக் கிட்டியிருக்கிறான்.
We will sing three *verses.*	மூன்று கவிகளைப் பாடுவோம்.
Is the old *version* or the new better?	முன்னே திருப்பினதோ இப்போது திருப்பினதோ திறம்'

Bring me a *vessel* full of water.	ஒரு பாத்திரம் நிறையத் தண்ணீர் கொண்டுவா.
The merchant took a *vessel* and sailed for Penang.	வியாபாரி ஒரு தோணி பிடித்துக்கொண்டு சோலப்பினாவுக்குப் போனான்
Go and put on your *vest*.	நீ போய் உன் உடுப்பை உடு.
There is not a *vestige* left in the place.	அவ்விடத்திலே அடிச் சுவடு கூட இல்லை.
He was clothed with white *vestments*.	அவன் வெண் உடை உடுத்தப்பட்டான்.
The pastor held his meeting in the *vestry*.	குருவானவர் கோயிலுக்கடுத்த அறையிலே கூட்டம் வைத்தார்.
There are many *veterans* in the army.	சேனையிலே வெகு யுத்தம் பழகின வீரர் இருக்கிறார்கள்.
This business causes me much *vexation*.	இந்த வேலை என்னை மெத்தஅலைக்களிக்கிறது
Put this medicine into a *vial*.	இந்த மருந்தை ஒரு குப்பியிலே வைத்து வை.
Sound is conveyed by *vibration*.	தொனியானது காற்றசைவினால் செல்லுகின்றது.
Vice appears in many forms.	பொல்லாங்கு பலவிதப்பட்டதாய் இருக்கின்றது
We are subject to many *vicissitudes*.	நாம் வெகுவிதத் திரிவுகளுக்குட்பட்டவர்களாய் இருக்கிறோம்
He fell a *victim* to his own folly.	தனது தப்பிதத்துக்கு இரையாய்ப்போனான்.

On that day Wellington was *victor*.
அன்றைக்கு வெல்லிங்தன் வெற்றிகொண்டான்.

He won the *victory* in many battles.
யுத்தத்திலே அநேகம் முறை வெற்றி அடைந்தவன்.

Let us walk out and take a *view* of the town.
நாம் வெளியேபோய்ப் பட்டினத்தைப் பார்ப்போமாக.

He is a man of great *vigor* of body and mind.
அவனுடைய சரீரமும் மனதுந் திடனுள்ளது.

As we were walking in the *village* we saw one of the *villagers*.
நாம் கிராமத்தில் உலாவி வருகையில் அவ்விடத்தான் ஒருவனைக் கண்டோம்.

That man is a great *villain*.
அவன் ஒரு படு துட்டன்.

He shows much art in *villainy*.
அவன் பொல்லாங்கிலே தன் சாதக வித்தைகளை வெகுவாய்க் காட்டுகிறான்.

He said many things in *vindication* of himself.
அவர் தான் நிருவாகியென்று வெகு காரியங்களைச் சொன்னார்.

There are many grapes on the *vine*.
முந்திரிகைக் கொடியிலே வெகு பழங்கள் உண்டு.

Bring me some *vinegar*.
எனக்குக் கொஞ்சக் காடி கொண்டுவா.

This is a large *vineyard*.
இது ஒரு பெரிய கொடிமுந்திரிகைத் தோட்டம்.

He plays well on a *viol* (or *violin.*)	அவன் கெட்டியாய் வீணை வாசிக்கிறான்.
He did it in *violation* of the laws.	அவன் அதை நியாயப்பிரமாணங்களுக்கு விரோதமாய்ச் செய்தான்.
He took my goods by *violence.*	அவன் வலுவந்தமாய் என் உடைமைகளை எடுத்துக்கொண்டான்.
I killed a *viper* to-day.	நான் இன்றைக்கு ஒரு விரியன் பாம்பை அடித்தேன்.
The principles of *virtue* are all good.	சன்மார்க்கத்தின் மூலபோதங்கள் எல்லாம் உத்தமமுள்ளன.
His *visage* is sorrowful.	அவனுடைய முகம் துக்கமுள்ளதாய் இருக்கிறது.
The power of *vision* is very wonderful.	காட்சிப் புலன் மெத்த அதிசயமுள்ளது.
When will you make me a *visit*?	நீர் என்னைக் காணும்படி எப்போது வருவீர்?
Some *visitors* called on me to-day.	சில பெயர் இன்றைக்கு என்னைக் காணும்படிக்கு வந்தார்கள்.
I wish to get a piece of blue *vitriol.*	ஒரு துண்டு துருசி வாங்க விரும்புகிறேன்.
He has great *vivacity* of mind.	அவனுடைய மனதுள்ள காரியத்திலேயுஞ் சாக்கிரதையுள்ளது.
Your *vocabulary* is very small.	உன்னுடைய சொல்லுப் புத்தகம் மகா சிறிது.

She has a very excellent *voice*.

அவளுடைய குரல் மிகவும் உச்சிதமாய் இருக்கின்றது.

I had no *voice* in that matter.

அந்தக் காரியத்திலே நான் ஒன்றும் பேசினதில்லை.

Volcanoes are sometimes very dangerous.

அக்கினி காலும் மலைகளினால் அநேக முறைகளில் வெகு மோசங்களுண்டாகின்றன.

Volition is common to man and beast.

விருப்பம் மனிதருக்கும் மிருகங்களுக்கும் பொதுவாக இருக்கின்றது.

The sepoys fired a whole *volley* into the fort.

படைகள் எல்லாம் ஒன்றுய்த் திரண்டு கோட்டைக்குப் போக ஒருமிக்க வெடி வைத்தார்கள்.

How many *volumes* have you in your library?

உமது புத்தக சாலையில் எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன?

A *volume* of smoke is seen rising from the mountain.

மலையில் இருந்து ஒரு புகைப் படலம் எழும்பிக் காணப்படுகின்றது.

Every *volunteer* shall have a reward.

சஞ்சாய வேலைகாரருக்குப் பலன் கிடைக்கும்.

Pay unto the Lord your *vows*.

கர்த்தருக்கு உங்கள் சங்கற்பங்களைச் செலுத்துங்கள்.

How many *vowels* are there in the English language?

இங்கிலீசுப் பாஷையிலே உயிரெழுத்து எத்தனை?

He intends to take a *voyage* to England.

அவர் இங்கிலாந்து தேசத்துக்குப் பயணம்பண்ண நினைக்கிறார்.

Do not keep company with the *vulgar*.	இழிஞரோடே சங்காத்தம் பண்ணாதே.
He manifests much *vulgarity*.	அவன் மெத்த நீசத்தனங் காட்டுகிறான்.
Roman Catholics use the *vulgate*.	வல்காத்தென்ற புத்தகத்தை உரோமை மார்க்கத்தார் கைக்கொண்டு வருகிறார்கள்.
Vultures are common.	பருந்துகள் எங்கும் உண்டு.

U.

Take your *umbrella*, it may rain.	ஒரு வேளை மழை பெய்யும், உன் குடையை எடு.
Whom shall we choose as *umpire* in the case?	இந்தக் காரியத்திற்கு ஆரை மத்திட்சனாக நாங்கள் தெரிந்துகொள்வோம்?
There is great *unanimity* among the lads	வாலிபருக்குள் ஒரு பெரிய ஐக்கம் இருக்கின்றது.
The sin of *unbelief* is very common and great.	அவிசுவாசம் மெத்த வழக்கமும் கொடிதுமான பாவம்.
There is no *uncertainty* about death.	மரணத்தைப் பற்றி யாதொருசந்தேகமும்இல்லை
Where is your *uncle*?	உன் பிதாவுடைய அல்லது மாதாவுடைய சகோதரன் எங்கே?
He manifests an entire *unconcern* about this.	இதைப் பற்றி அவன்முற்றாகக் கவலையீனத்தைக் காண்பிக்கிறான்.

He is a man of excellent ***understanding.***	அவன் ஒரு நல்லறிவுள்ளவன்.
The ***undertaker*** sustained great loss in the work.	அந்த வேலைக்கு முகாமைக்காரன் பெரிய நட்டப்பட்டான்.
When he saw the witnesses he manifested great ***uneasiness.***	அவர் சாட்சிகளைக்கண்டபோது பெரிய மனவிதனத்தைக்காட்டினார்
Because there are many gods in the land there is much ***ungodliness.***	தேசத்திலே அநேகந்தேவர்கள் இருக்கிறதினாலே அவபத்தி மிகுதியாய் இருக்கின்றது.
There is great ***uniformity*** in his manner of life.	அவன் ஒரே ஒழுங்காய்ச் சீவியம்பண்ணிவருகிறான்.
Union of heart and action should be manifest among Christians.	கிறீஸ்தவர்கள்நினைவிலுஞ் செய்கையிலும் ஒருமித்தவர்களாய் இருக்கவேண்டியது.
All should act in ***unison.***	எல்லாரும் ஒருமித்துச் செய்ய வேண்டியது.
He manifested much ***unkindness*** to me.	அவர் எனக்கு அபட்சங் காண்பித்தார்.
That is a manifest ***untruth.***	அது பொய்யென்றுவெளியரங்கமாய் இருக்கின்றது.
There was a great ***uproar*** among the people.	சனங்களுக்குள்ளேபெரிய சந்தடி இருந்தது.
Turn this ***upside*** down.	இதை மேல் கீழாய்த் திருப்பு.

There is great *urgency* in his case.	அவருடைய காரியம்மிகவும் அவசரம்.
This is common *usage.*	இது பொது வழக்கு.
He is an *usher* in an academy.	அவர் ஒரு சாத்திரப் பள்ளிக் கூடத்திலே கீழ வாத்தி.
He lends his money on *usury.*	அவன் தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்கிருன்.
There is no *utility* in this.	இதில் ஒரு பலனும் இல்லை.
He could not give *utterance* to his joy.	அவனுக்குச் சொல்லடங்காத சந்தோஷம்.

W.

Give me a *wad* for my gun.	என் துப்பாக்கிற்கு ஒரு தக்கை தா.
I wish to buy some *wafers.*	நான் கொஞ்சப் பொட்டுப் பசைகொள்ள விரும்புகிறேன்.
How much *wages* will you give a month?	ஒரு மாதத்துக்கு எவ்வளவு சம்பளங் கொடுப்பீர்?
His horses ran away and broke his *waggon.*	அவருடைய குதிரைகள் கதியாய் ஓடி அவருடைய இரதத்தை முரித்துப்போட்டன.
The *waggoner* was killed.	சாரதி செத்தான்.
There was a great *wailing* yesterday.	நேற்றுப் பெரிய புலம்பல் இருந்தது.

He had a girdle around his *waist*.

அவன் தன் இடைக்கு ஒரு கச்சுப் பூட்டியிருந்தான்.

When will the tailor bring my *waistcoat*?

தையற்காரன் என்னுடைய அரைச் சட்டையை எப்போதுகொண்டு வருவான்?

Waiter, bring me some *water*.

வேலைக்காரா, கொஞ்சந் தண்ணீர் கொண்டு வா.

I knew him by his *walk*.

அவனுடைய நடைப்பாங்கினால் நான் அவனை அறிந்தேன்.

The *wall* is made of stone.

சுவர் கல்லினாலே கட்டப்பட்டிருக்கின்றது.

He put all his trappings into his *wallet*.

அவன் தன் சாமான்களை எல்லாம் பையிலே வைத்தான்.

The *wanderer* has returned.

நாடோடி திரும்பி விட்டான்.

Those who humbly trust in God will never suffer *want*.

தாழ்மையோடே கருத்தாவை நம்புகிறவர்கள் ஒருக்காலுந் தாழ்ச்சி அடையார்கள்.

War is very *undesirable*.

யுத்தம் நல்லதல்ல.

His *wardrobe* is well furnished.

அவனுடைய வஸ்திர சாலையில் உடுப்பு மிகுதியாய் உண்டு.

He owns a large *ware-house* where he sells his *wares*.

தமது சாமான்களை வைத்து விற்கிறதற்கு ஒரு பொக்கிஷ சாலை அவருக்குண்டு.

He spoke with much *warmth*.	அவர் மெத்த அனலாய்ப் பேசினார்.
He has had many *warnings*.	அவர் வெகுவாய் எச்சரிக்கப்பட்டார்.
The constable received a *warrant* to apprehend him.	அவனைப் பிடிக்கும் படி சேவகனுக்கு மறியற்கடுதாசி கிடைத்தது.
He was a brave *warrior*.	அவன் ஒரு போர் வீரனாய் இருந்தான்.
There are many *warts* on his hand.	அவனுடைய கைகளில் அநேகங் காய்கள் வளர்ந்திருக்கின்றன.
Give these clothes to the *washerman*.	இந்த உடுப்புக்களை வண்ணானிடத்திற்கொடு.
He was stung by a *wasp*.	அவனை ஒரு வண்டு குற்றினது.
There is great *waste* in the management of his domestic affairs.	அவர் தமது வீட்டுக்காரியப் பராமரிப்பிலே வீண் செலவு பண்ணுகிறார்.
What is the time by your *watch*?	உம்முடைய நாழிகை வட்டத்தின் படி மணி என்ன?
The *watch* all went to sleep.	காவற்காரர் எல்லாரும் நித்திரை செய்தார்கள்
The soldiers forgot the *watch-word* and killed each other.	போர்ச்சேவகர்தங்கள்குழக்குறியானசொல்லைமறந்துபோனதினால் ஒருவரை ஒருவர் கொன்றுபோட்டார்கள்.
There is much *water* in the road.	தெருவிலே மெத்தத் தண்ணீர் இருக்கின்றது.

The *waves* are very high.	திரைகள் மிகவும் உயரமாய் இருக்கின்றன.
It melted like *wax* in the fire.	அது நெருப்பிற்பட்ட மெழுகுபோல உருகிப்போயிற்று.
There are many *ways* to ruin.	கேட்டுக்கு அநேகம் வழிகள் உண்டு.
He suffers great *weakness*.	அவர் மெத்தப் பலவீனமாய் இருக்கிறார்.
There is not much real *wealth* in the city.	பட்டணத்திலே நிலைபரமான பாக்கியம் மெத்த இல்லை.
Every *weapon* was broken.	ஒவ்வொரு ஆயுதமும் முறிக்கப் பட்டது.
I felt great *weariness* and sat down.	நான் மிகவுந் தஞ்சக்கெட்டு இருந்துவிட்டேன்
The *weather* was very stormy.	மிகவுங் காற்றடிக்கிற காலமாய் இருந்தது.
The *weaver* weaves his *web* very well.	நெசவுகாரன் நல்ல நெசவு பண்ணுகிறான்.
There was a *wedding* in town yesterday.	பட்டணத்திலே நேற்று ஒரு கலியாணச் சடங்கு இருந்தது.
We split wood and rocks with *wedges*.	மலைகளையும் மரங்களையும் நாம் ஆப்புகளினாற் பிளக்கிறோம்.
There are many *weeds* in the garden.	தோட்டத்திலே வெகு களைகள் இருக்கின்றன.
There are 52 *weeks* in a year.	ஒரு வருடத்திலே ஐம்பத்திரண்டு வாரங்கள் உண்டு.

The *web* or *woof* is sometimes called filling.	ஊடு நூல் அல்லது குறுக்கு நூல் சில வேளைகளிற் பின்னல் நூலென்று சொல்லுவார்கள்.
There is a great *weight* on that timber.	அந்தக் கவற்றின் மேல் மெத்தப் பாரமிருக்குது
He received a hearty *welcome*.	அவன் ஒரு அன்பான வினவுதல் பெற்றுக்கொண்டான்.
I take great interest in his *welfare*.	அவருடைய சுக செய்தியை அறியக் கவனிக்கிறேன்.
Here is a *well* of good water.	இங்கே ஒரு நல்ல தண்ணீர்க் கிணறு இருக்கின்றது.
Make this *welt* strong	இதின் விழிம்பைப் பெலனுகத் தை.
He has a *wen* on his neck.	அவன் கழுத்திலே ஒரு கழலை இருக்கின்றது.
Whales are numerous in the Pacific Ocean.	பாசுபிக்கென்னுஞ் சமுத்திரத்திலே திமிங்கிலங்கள் வெகு திரளாய் உண்டு.
There is a good *wharf* at the landing.	துறை முகத்திலே ஒரு நல்ல பாலம் இருக்கிறது.
Bread is generally made of *wheat*.	அப்பம் பெரும்பாலுங் கோதும்பையிலே உண்டுபண்ணப்படுகின்றது.
The *wheel* of his bandy is broken.	அவனுடைய பண்டியிற் சில்லு முறிந்து போயிற்று.

The prisoners carry dirt in the *wheel-barrows*.	மறியற்காரர் ஒற்றைச்சில் வண்டிலிலே மண்ணை கொண்டுபோகிறார்கள்.
He is gone a great *while*.	அவர் போய் வேகு நேரமாயிற்று.
Bring me a *whip*.	எனக்கு ஒரு சவுக்குக் கொண்டுவா.
The carpenter has brought his *whip-saw*	தச்சன் தனது சட்டவாளைக் கொண்டு வந்திருக்கிறான்.
Whirl-pools and *whirl-winds* are often dangerous.	சுழி நீருஞ் சுழிகாற்றும் வெகு முறைகளில் மிகுந்த மோசம் வருவிக்கின்றன.
The habit of drinking *whiskey* is very bad.	சாராயம் குடிக்கப்பழகுதல் மிகுந்த கேடாய் இருக்கின்றது.
He spoke to me in a *whisper*, no body heard him.	அவன் எனக்கு இரகசியமாய்ச் சொன்னான், அவன் சொன்னதை ஒருவனும் கேட்டதில்லை.
Children are pleased with *whistles*.	சீழக்கைக் குழல் ஊதுகிறது பிள்ளைகளுக்குப் பிரியம்.
White-wash is made of shell-lime.	சிப்பிச் சுண்ணாம்பினாலே வெள்ளை அடிக்கிறது.
Give me the *whole* of it.	அது முழுதையும் எனக்குக் கொடு.
He disposed of his goods at *whole-sale*.	அவன் தன் உடைமைகள் எல்லாவற்றையும் ஒருமிக்க விற்றுப்போட்டான்.

The *wick* of this candle is not good.	இந்த விளக்குத் திரி நல்லதல்ல.
The boy has just gone out at the *wicket*	சிறுவன் இப்போதுதான் சங்கடங் கடந்துபோனான்.
She is a *widow* and lives with her son.	அவள் ஒரு விதவை, தன் மகனுடனே குடியிருக்கிறாள்.
He wears a *wig*.	அவன் முடி மயிர் சூடுகிறான்.
The American Indians build their *wigwams* in the *wilderness*.	அமரிக்கன் இந்தியர் வனாந்தரங்களிலே குடில்களைக் கட்டுகிறார்கள்.
He has many *wiles*.	அவன் வெகு தந்தரி.
He is accustomed to do according to his own *will*.	தன் சொந்தப் பிரியத்தின்படி செய்கிறது அவனுடைய பழக்கம்.
The carpenter has brought his *wimble*.	தச்சன் துறப்பணங் கொண்டு வந்திருக்கிறான்
The *wind* is very high.	காற்று மெத்தப் பெலனாய் இருக்கிறது.
These *wind-falls* are not good.	காற்றுக்கு உதிர்ந்த இந்தப் பழங்கள் நல்லதல்ல.
He works well at the *windlass*.	பாரம் வலிக்கும் எந்திரத்தை நன்றாய்த் திரிப்பான்.
Wind-mills are sometimes profitable.	காற்றியந்திரங்கள் சில வேளை பிரயோசனமுள்ளவைகளாய் இருக்கின்றன.

There are six *windows* in his house.	அவருடைய வீட்டுக்கு ஆறுபலகணிகள் உண்டு.
His *wind-pipe* is injured.	அவனுடைய மிடற்றிலே வருத்தம் உண்டாயிருக்கிறது.
Wine is made of grapes.	முந்திரிகை இரசம் முந்திரிகைப் பழத்தினால் உண்டாக்கப்படுகின்றது.
The bird's *wing* is broken; it cannot fly.	குருவியின் செட்டை முரிந்துபோயிற்று, அது பறக்க மாட்டாது.
When it is the proper time, just give me a *wink*.	உற்ற சமயத்தில் எனக்கு கண்மறிக்காட்டு.
He spoke as quick as a *wink*.	கண் சிமிட்டுப் போலக் கெதியாய்ப் பேசினான்
Winters are very long and cold in Lapland.	இலப்பிலாந்திலே மாரிகாலம் மிகவும் நீட்டித்தும் மிகுந்த கூதிருமுள்ளதாயிருக்கிறது.
Gold *wires* may be made very small.	பொற்கம்பி மிகவும்மெல்லிசாய் இழுக்கக் கூடும்.
True *wisdom* is the special gift of God.	மெஞ்ஞானம் தேவ ஈவு.
Our *wishes* are not always realised.	நமது விருப்பத்தின்படி எப்போதும் நமக்கு வாய்க்கிறதில்லை.
He often manifests much *wit*.	அவன் வெகு முறைகளில் சுழகாய்ப் பேசுகிறான்.
Witches and *witchcraft* are opposed to true wisdom.	சூனியக்காரரும் சூனியவித்தையும்மெஞ்ஞானத்துக்கு விரோதம்.

They bound Samson with green *withes*	அவர்கள் பச்சையான நார்க்கொடிகளாலே சிமிசோனைக் கட்டினார்கள்.
The *witnesses* did not agree in their evidence.	சாட்சிக்காரருடைய ஒப்பனை ஒன்றுக்கொன்று பொருந்தவில்லை.
He is very fond of *witticisms*.	அவன் சுழுகான பேச்சுக்களில் மெத்த விருப்பமுள்ளவனாய் இருக்கிறான்
Wo to the *wicked*!	பொல்லாதவனுக்கையோ!
I caught a *wolf* in a trap.	பொறியிலே நான் ஒரு கோணாயைப் பிடித்தேன்
It is a great *wonder* that he scaped unhurt.	அது யாதொரு மோசமும் இல்லாமல்த் தப்பி விட்டது மகா அதிசயம்.
The cook has no *wood*.	சமைற்காரனுக்கு விறகில்லை.
He got lost in the *wood*.	அவன் காட்டுக்குள்ளே வழி தப்பிப்போய் விட்டான்.
Wool is manufactured into cloth.	கம்பளி மயிரினாலே புடைவை நெய்யப்படுகின்றது.
I did not say a word about that *work*.	அந்த வேலையைப்பற்றிநான் ஒரு சொல்லுஞ் சொல்லவில்லை.
All the *world* can understand this.	உலகம் முழுதும் இதை அறியக் கூடியது.
Did you see the *worm* on that leaf?	அந்த இலையிலே புழு இருக்கிறதைக் கண்டாயா?

Wormwood is very bitter but wholesome.	நோச்சிக் கீரை சுகத்துக்கு நல்லது, ஆகிலும் கசப்புள்ளது.
Worship rendered to idols is feeding on ashes.	விக்கிரகங்களுக்குச் செய்யும் ஆராதனை சாம்பல் உண்பது போல் இருக்கின்றது.
What is the *worth* of that horse?	அந்தக் குதிரைக்கு விலை என்ன?
He received a very bad *wound*.	அவன் ஒரு கொடிய காயம்பட்டான்.
It was because he got into a great *wrangle*.	அவன் பெரிய கம்பலைக்குட்பட்ட படியினாலே தான் அப்படி வந்தது.
Please bring me my *wrapper*.	தயவுபண்ணி என்னுடைய போர்வையைக் கொண்டுவா.
I can put a *wrapper* round the letter.	காகிதத்துக்கு நான் ஒரு செந்திருக்கம் போடுவேன்.
He was filled with *wrath*.	அவன் கோபத்தினால் நிறைந்திருந்தான்.
He put a *wreath* on her head.	அவன் அவளுடைய தலையிலே ஒரு பூமாலையைச் சுற்றி விட்டான்.
I took a boat and went off to the *wreck*.	நான் ஒரு தோணியைப் பிடித்துக்கொண்டு அந்தக் கப்பற் சேதம் பார்க்கப் போனேன்.
He gave me a violent *wrench* in the arm.	அவன் என் கையைப் பிடித்துப் பெலனாய்த் திருகிப்போட்டான்.

His house is a scene of *wretchedness*.	அவனுடை வீடு நிற்ப ந்தமான ஒரு களரி.
He is old and has many *wrinkles* on his face.	அவன் வயது சென்ற வன், அவன் முகந் திரை ந்துபோயிற்று.
He dislocated his *wrist*.	அவனுடைய மணிக்க ட்டுப் பெயர்ந்துபோயிற்று
I have almost done my *writing*.	நான் கிட்டத்தட்ட எ ழுதிமுகித்துப்போட்டேன்
He does me great *wrong*.	அவர் எனக்கு மீகுந்த தீங்கு செய்கிறார்.

Y.

A small *yacht* came to anchor yesterday near Madras.	நேற்றைக்குச் சலுப் பொன்று சென்னப்பட் டினத்துக்குக் கிட்ட வந் து நங்கூரம்போட்டு நின் றது.
Yams grown in Jaffna are very excellent.	இயாழ்ப்பாணத்திலே உ ண்டாகிற கிழங்கு உருசி யுள்ளது.
The church is 60 *yards* long and has a large *yard* in front of it.	அந்தக் கோயில் அறு பது முழநீளமுள்ளது, அ தற்கு முன்னாலே ஒரு பெ ரிய முற்றம் இருக்கின்ற து
He purchased four skeins of *yarn*.	நான்கு நூற்களிகளை அவன் விலைக்குக் கொ ண்டான்.
He brings me a present once a *year*.	அவர் வருடம் ஒரு மு றை எனக்கு வெகுமதி கொண்டு வருகிறார்.

The oxen broke their *yoke* and went off. — எருதுகள் நுகத்தை முறித்துப்போட்டு ஓடிவிட்டன.

He is a very clever *Youth.* — அந்த வாலிபன் வெகு கெட்டிக்காரன்.

Z.

Zeal without patience and forethought is dangerous. — பொறுமையும் யூகமுமில்லாதவயிராக்கியம்மோசத்தை வரப்பண்ணும்.

The sun is in the *zenith* and it is very hot. — சூரியன் உச்சியிலே நிற்கையால் மிகுந்த வெப்பமாய் இருக்கின்றது.

The earth is divided into five *zones* which are called the torrid, the temperate and the frigid. — பூச்சக்கரம் உட்டணம் மத்திமம் சீதளம் என்னும் மூன்று இயல்புடைய ஐந்து பகுதியாய்ப் பிரிக்கப்பட்டிருக்கின்றது.

EXAMPLES OF ADJECTIVES

ARRANGED IN ALPHABETICAL ORDER.

A.

He is an *able* man. — அவன் ஒருவல்லபன்.

Are you *able* to do this? — இதைஉன்னாலேசெய்யக் கூடுமா?

I have been *absent* ten days. — நான்பத்துநாளாக இங்கே இல்லை.

It would be *absurd* to speak thus. — இப்படிப் பேசுகிறது புத்தியீனம்.

Your present of a book was very *acceptable.*	நீர் இந்தப் புத்தகத்தை உபகாரமாய்த் தந்தது பெரிய சந்தோஷம்.
This fruit is very *acid*	இந்தப் பழம் மிகவும் புளிப்பு.
He is exceedingly *active* in the business	அவர் அந்த வேலையிலே மிகவுஞ் சாக்கிரதையாக இருக்கிறார்.
This is *admirable* writing.	இந்த எழுத்து வெகு நேற்றி.
Do you think it *advisable* to do so?	அப்படிச் செய்கிறது புத்தியென்று நினைக்கிறீரா?
Yes, I do; you will find it *advantageous* in many respects.	ஆம், நானாவிதத்திலும் அது பிரயோசனமாய் இருக்கும்.
She is a dutiful and *affectionate* child.	அவள் பயபத்தியும் அன்புமுள்ள பிள்ளை.
I am *afraid* to go there.	நான் அங்கே போகப் பயப்படுகிறேன்.
His company is very *agreeable.*	அவருடைய சகவாசம் மிகவு நல்லது.
God is *almighty.*	பராபரன் சருவத்துக்கும் வல்லவர்.
Delhi is an *ancient* city.	தில்லி பழையநாளையிற் பட்டினம்.
Does this make you *angry?*	இதினால் உமக்குக் கோபம் வருகிறதா?
Yes I am very *angry.*	ஆம், எனக்கு மிகுந்த கோபந்தான்.
I am *anxious* to get there.	அங்கே போய்ச் சேர எனக்கு ஆசை.

I am *apt* to forget what I have heard.	நான் கேட்டதை மறந்து போகிறேன்.
This is an *arduous* undertaking.	இது பிரயாசமான வேலை.
They are very *artful.*	அவர்கள் மகா தந்திரிகள்.
She is *attentive* to learning.	அவளுக்குப்படிப்பிலே மிகவுங் கருத்து.
This kind of amusements is *attractive* to the people.	இந்த விதமான விளையாட்டுக்கள் மனிதருக்குப் பிரீதி.
He is extremely *avaricious.*	அவன் மகா உலோபி.
Let your reading be in an *audible* tone of voice.	துலக்கமாய்க் கேட்க வாசி.
I have reason to think the information is *authentic.*	இந்தச் செய்தி நிச்சயமென்று நம்புகிறதற்கு ஏதுவிருக்கின்றது.
How inexpressibly *awful* is the state of those who despise God	பராபரனை நிந்திக்கிறவர்களுடைய நிலைமை சொல்லி முடியாத பயங்கரமானது.
He is *awkward* at his work.	அவன் அந்த வேலையில் அப்பியாசி.
This is an *awkward* circumstance.	இதொரு அடிதலை கெட்ட காரியம்.

B.

Why do you write with a *bad* pen?	சீர்ப்பிழையான தூவலால் ஏன் எழுதுகிறாய்?
We sat on the *bare* ground.	வெறுந்தரையில் உழக்கார்ந்தோம்.

This land is entirely *barren.*	இது அறப்பாழ் நிலம்.
Alas! that I should have been guilty of such *base* conduct.	ஐயோ! நான் இப்படிப்பட்ட கீழ்மையான குற்றத்தைச் செய்தேனே.
This is a *beautiful* garden.	இது ஒரு சிறப்பானசோலை.
Which is the *best,* his book or her's?	அவனுடைய புத்தககமோ அவளுடைய புத்தகமோ நல்லது?
I think it will be *best* to do so.	அப்படிச் செய்வது உத்தமமென்று நினைக்கிறேன்.
Mine is *better* than your's.	உன்னுடையதில் என்னுடையது நல்லது.
How *big* is the book you spoke of?	நீ சொல்லுகிற புத்தகம் எவ்வளவு பருப்பம்?
The fruit has a *bitter* taste.	இந்தப் பழங் கைக்கிறது.
Am I *blameable* in this?	இதில் என் மேற் குற்றஞ் சாருமோ?
No, without doubt you are *blameless.*	இல்லை, உன்மேற் குற்றஞ் சாராது.
He is now quite *blind* of both eyes.	அவனுக்கு இப்பொழுது இரண்டு கண்ணுங் குருடு.
Before he was *blind* of one eye only.	முன் அவனுக்கு ஒரு கண் மாத்திரங் குருடு.
He was led *blind-fold* through the city.	அவன் கண்ணைக் கட்டிப் பட்டினத்திற்கூடே கொண்டு போனார்கள்.

This knife is very *blunt*.	இந்தக் கத்தி தீர மழுங்கல்.
He does not suffer much *bodily* pain.	அவனுக்கு அதிக சரீர வருத்தம் இல்லை.
I am not so *bold* as he.	அவனைப் போலே நான் தயிரியவான் அல்ல.
He commands very *brave* soldiers.	அவன் நடத்துகிற படைகள் வீரர்.
Do you observe that *bright* star?	துலங்குகிற அந்த நட்சத்திரத்தைக் காண்கிறாயா?
The diamond is the most *brilliant* of all jewels.	நவரத்தினங்களுக்குள்ளே வயிரம் மகாசோதி.
How *broad* shall I make this mat?	இந்தப் பாயைஎவ்வளவு அகலமாக இழைக்க வேண்டும்.
What colour shall I make it? *black*, *blue*, white, red, green, *brown*, or yellow?	கறுப்பு, வெள்ளை, சிவப்பு, பச்சை, புகர், நீலம், மஞ்சள் என்னும் நிறங்களில் இதை என்ன நிறமாக்க?
He is very *busy* and cannot speak to you.	அவருக்கு அதிக வேலை உம்முடனே பேசிக்கொள்ளக் கூடாது.

C.

The sea was quite *calm*.	கடல் தீர அமைதியாய் இருந்தது.
I bought a very *capital* watch.	நான் திறமான ஒரு நாழிகை வட்டங் கொண்டேன்.

We ought to be *cautious* not to give unnecessary offence to any.	ஒருவனுக்குங் காரணமில்லாத விசனமுண்டாக்காதபடி கவனிக்கவேண்டும்.
He is a *celebrated* poet.	அவன் ஒரு பேர்ப்பட்ட புலவன்.
Do you think what he says is true? Yes I am *certain* of it.	அவன் சொல்லுகிறது நிச்சயமென்று நினைக்கிறாயா? ஆம் நிச்சயம்.
His mind is very *changeable*.	அவனுடைய மனஞ்சலனப்படுகிறது.
They are very *charitable* to the poor.	அவர்கள்வறியவர்களுக்கு மிகவுந் தருமஞ் செய்கிறார்கள்.
These articles, I think, are *cheap*.	இந்தச் சரக்குகள் அதிக மலிவாய்க் காண்கிறது.
My *chief* reason for coming here was to see you.	நான் உம்மைக் காண்கிறதே இங்கே வந்த பிரதான நோக்கம்.
These are but *childish* employments.	இவை குழந்தைகளுக்கடுத்த வேலைகள்.
The *Christian* religion teaches us to love God supremely, and our neighbour as ourselves.	நாம் எவற்றிற்கும் மேலாய்த் தேவனையும் நம்மைப்போற் பிறரையும் நேசிக்கவேண்டுமென்று கிறிஸ்து மார்க்கம் சொல்லுகின்றது.
He is one of the King's *Civil* servants.	இவர் இராச காரியத்துரைமாரில் ஒருவர்.
He is *civil* to every one.	அவன் சகலருக்கும் மரியாதை காட்டி நடக்கிறான்.

Wash your face and hands *clean*.	உன் முகத்தையுங்கையையுங் கழுவிச் சுத்தி பண்ணு.
She is more *clever* than he.	அவனில் அவள் சாமார்த்தியவாட்டி.
To-day it is very *cloudy*.	இன்றைக்கு நல்ல மந்தாரமாய் இருக்கின்றது.
This cloth is very *coarse*.	இந்தப் புடைவை தீரப் பருக்கன்.
I feel very *cold*.	எனக்கு அதிக கூதிர்.
This is a *commercial* city.	இது வியாபாரத்திற் சிறந்த பட்டிணம்.
The *common* people speak thus.	ஊர்ச் சனங்கள் அப்படிப் பேசுகிறார்கள்.
He appears to be very *communicative*.	அவன் வெளிதிறந்து பேசுகிறவன்.
Are you *competent* to the work?	நீ அந்த வேலைக்குச் சமர்த்தனோ?
He is *complete* master of the language.	அந்தப் பாடையிலே இவன் மகா நிபுணன்.
His speech was *concise* but much to the purpose.	அவனுடைய வசனஞ் சுருக்கமாய் இருந்தாலுங் காரியத்துக்குச் சரி.
I am *confident* what I tell you is correct.	நான் உமக்குச் சொல்வது திட்டமென்பதற்கு ஐயம் இல்லை.
I am not *conscious* of having said so.	அப்படிச் சொன்னேனென்று எனக்குநினைவில்லை.
He has lost a *considerable* sum of money in trade.	வியாபாரத்திலே பணத்தை மிகுதியாய் இழந்துவிட்டான்.

They are *constant* in their attendance at my house.	அவர்கள் எனது வீட்டுக்கு அடுத்தடுத்து வருகிறார்கள்.
I am *content* with what I have.	நான் எனக்குள்ளது போதுமென்றிருக்கிறேன்.
They are exceedingly *contentious*.	அவர்கள் மகா குதர்க்க முள்ளவர்கள்.
There is a *continual* noise in this place.	இவ்விடத்தில் இடைவிடாமற் கூக்குரல் உண்டாகிறது.
The vessel has been detained by *contrary* winds.	ஒவ்வாக் காற்றினாற் படகு தாமதப்பட்டது.
Will it be *convenient* for you to come to-morrow?	நாளைக்கு வர உனக்கு ஒத்துக்கொள்ளுமோ?
It is *cooler* to-day than it was yesterday?	நேற்றையில் இன்றைக்கு அதிக கூதிர்.
The state of society there is extremely *corrupt*.	அவ்விடத்துச் சனங்களுடைய சீர் தீரக் கெடுதலாய் இருக்கிறது.
They are excessively *covetous*.	அவர்கள் பொருளிலே மட்டற்ற ஆசையுள்ளவர்கள்.
This is a *counterfeit* rupee.	இது கள்ள ரூபா.
That line is *crooked*.	அந்த வரி கோணல்.
I conceive you are no ways *culpable* in the matter.	உமக்கு இந்தக் காரியத்திற் சற்றாகிலுங் குற்றம் இராதென்று நினைக்கிறேன்.

They are by nature cruel and very *cunning*.	அவர்கள் இயல்பாகக் கொடுமையும் உபாயமுமுள்ளவர்கள்.
This is a *curious* shell.	இது ஒரு நூதனமான சங்கு.
Do you know the *current* price of this article?	இந்தச் சரக்குக்கு வாடிக்கையான விலை தெரியுமா?

D.

This house is very *damp*.	இந்த வீடு அற ஈரம்.
I saw a *dead* snake lying on the road side.	வழியருகே ஒரு செத்த பாம்பு கிடக்கிறதைக் கண்டேன்.
He is *deaf* and can hear nothing.	அவன் ஒரு செவிடன் ஒன்றுங் கேளாது.
The goods you have purchased, I think, are *dear*.	நீ கொண்ட சாமான்கள் ஒறுப்பென்று நினைக்கிறேன்.
He is very *dear* to me.	அவன் எனக்கு மிகவும் அருமையானவன்.
What is there more *deceitful* than the human heart?	மனிதருடைய மனதிலும் அதிக எத்துள்ளதென்ன?
They are not *deficient* in understanding.	அறிவிலே அவர்கள் குறைவுள்ளவர்கள் அல்ல.
She is *deformed* in person.	அவள் அவலட்சணமானவள்.
His mind is much *dejected*.	அவனுடைய மனம் மிகவுந் தளர்ந்திருக்கிறது.

This is my *deliberate* opinion.	இதுதான் நான் யோசித்த தீர்ப்பு.
The situation of this house is *delightful.*	இந்த வீடு சந்தோஷங் கொடுக்கத் தக்க வசதியான இடத்திற் கட்டப்பட்டிருக்கின்றது.
The fever is so violent that he is sometimes *delirious.*	காய்ச்சல் கடினமானதினாற், சில வேளை அறிவு கெட்டுப்போகிறான்.
We are entirely *dependent* on the providence of God.	நாங் தேவ விசாரணையினாலே தான் இருக்கிறோம்.
Your situation is every way *desirable.*	நாலா விதத்திலும் உன்னுடைய வாழ்வு சிறந்திருக்கின்றது.
He is very *desirous* of seeing you.	அவனுக்கு உம்மைக் காணப் பெரிய ஆசை.
People are of *different* opinions on the subject.	சனங்கள் அது காரியத்திலே பல விதமாகவும் நினைக்கிறார்கள்.
Do you think the English language is *difficult?*	இங்கிலீசுப் பாஷை படிக்கப் பிரயாசமென்று நினைக்கிறாயா?
They are *diligent* scholars.	அவர்கள் சாக்கிரதையுள்ள மாணாக்கர்.
Her eyes are become *dim* through age.	முதுமையினாலே அவளுடைய கண்கள் ஒளிமழுங்கிப்போயின.
This is the *direct* road to Tillipally.	இது தெல்லிப்பழைக்குப் போக நேர் வழி.
In the rainy season it is *dirty.*	மழை காலத்தில் எங்கும் சகதியாய் இருக்கிறது

On that account, it is very *disagreeable* to me.	அதினலே அது எனக்குத் தீர வெறுப்பாயிருக்கிறது.
They are very *dishonest*.	அவர்கள் தீர நாணயங்கெட்டவர்கள்.
Is the place you mention *distant*?	நீ சொல்லும் இடந்தூரமா?
His articulation is peculiarly clear and *distinct*.	அவருடைய உச்சரிப்புத் தீர்க்கமும் தெளிவுமாய் இருக்கிறது.
Is this paper *double*?	இந்தக் கடுதாசி இரட்டையா?
It is *doubtful* whether he will come or not	அவன் வருவானோ வரானோ தெரியாது.
This house is exceedingly *dry*.	இந்த வீட்டிலே சற்றும் ஈரமில்லை.
That note is *due* tomorrow.	அந்த உண்டியலுக்கு நாளைக்குப் பணங்கொடுக்க வேண்டியதவணை.
She is both deaf and *dumb*.	அவள் ஊமையும் செவிடுமாய் இருக்கிறாள்.
Real and *durable* happiness is not attainable on earth.	உண்மையும்நிலையுமான இன்பம் பூமியிலே இல்லை.

E.

He is *eager* to undertake the business.	இந்த வேலையைப்பெற ஆவலாயிருக்கிறான்.
They manufacture various kinds of *earthen* ware.	அவர்கள்பலவிதமான பாண்டங்களை வனைகிறார்கள்.

I will set you an *easy* lesson.	நான் உனக்கொரு இலகுவான பாடங் குறித்து விடுவேன்.
Give this book to your *elder* brother.	உனது தமையனுக்கு இந்தப்புத்தகத்தைக்கொடு.
Which of you two is the *elder*?	உங்கள் இருவரில் மூத்தவன் யாவன்?
Her's is an *elegant* house.	அவளுடைய வீடு சிறப்பானது.
He is an *eloquent* speaker.	அவன் ஒரு வாய்ச்சாலகன்.
This house is *empty*; it has no tenant.	இந்த வீடு வெறிதாய்ப் போயிற்று, வாடைக்குவாங்க ஒருவரும் இல்லை.
Mr. Colebrook was an *eminent* scholar.	கோல்புறுக்கென்னுந் துரைஉயர்ந்த படிப்பாளி.
This is an *endless* business.	இது முடியாத வேலையாய் இருக்கின்றது.
He has now the *entire* concern in his own hands.	காரியம் எல்லாம் இப்பொழுது அவன் வசத்திலே ஆகி விட்டது.
Do you think your writing *equal* to mine?	உன்னுடைய எழுத்து என்னுடைய எழுத்துக்குச் சரியென்று நினைக்கிறாயா?
Let us forsake *erroneous* opinions.	தப்பான எண்ணங்களை விட வேண்டியது.
This is a matter of *especial* moment: the rest is by no means *essential*.	இதொரு விசேஷித்த காரியம், மற்றது விசேஷித்ததல்ல.

They who fear God will obtain *eternal* happiness.	தேவனுக்குப் பயப்படுகிறவர்கள் நித்திய இன்பம் பெறுவார்கள்.
Draw two *even* lines	நேராக இரண்டு வரி கீறு.
Those who fear not God must endure *everlasting* misery.	பராபரனுக்குப் பயப்படாதவர்கள் நித்திய நிற்பந்தப் படுவார்கள்.
They are gone *every* one of them.	அவர்கள் எல்லாரும் போய் விட்டார்கள்.
It is *evident* you are mistaken.	உமது எண்ணந் தப்பென்பது தெளிவு.
Evil company is ever to be avoided.	பொல்லாத கூட்டத்தோடே ஒரு பொழுதுஞ் சேர்மானமாகாது.
European artieles are now plentiful.	ஐரோப்பாவின் சரக்குகள் இப்பொழுது மிகுதி.
Tell me the *exact* sum I am indebted to you.	நான் உமக்குக்கொடுக்க வேண்டிய கடன் இவ்வளவென்று சரி வரச் சொல்லும்.
This is *excellent* fruit	இது மேன்மையான பழம்.
What you propose is, I think, *exceptionable* in one particular.	நீர் எடுத்த காரியங்களில் ஒன்றிலே தவறு வரக் கூடியதென்று நினைக்கிறேன்.
House-rent is very *expensive* in Colombo	கொழும்பிலே வீட்டுக்கு வாடை மிகுதி.
This is *extraordinary* news indeed.	மெய்யாய் இது ஒரு ஆச்சரியமானபுதினம்

His children are thoughtless and *extravagant.*	அவன் பிள்ளைகள் கவலையற்றவர்களும் ஆராதூரித்தனமுள்ளவர்களுமாய் இருக்கிறார்கள்.

F.

The history is entirely *fabulous.*	இந்தக் கதை முற்றும் பொய்.
They were *faint* through fatigue and hunger.	உழைப்பினாலும் பசியினாலும் ஆயாசப்பட்டுப் போனார்கள்.
This is a *fair* way of dealing; how can you say that it is unfair?	இதுதான் நியாயமான பரிமாற்றம். இதை நியாயத் தப்பென்று நீர் எப்படிச் சொல்லலாம்?
It is now *fair*, you can go.	வெளித்தது, இனி நீர் போகலாம்.
He is an old and *faithful* servant.	அவன் நம்பிக்கையுள்ள பழைய வேலைகாரன்
You may be assured that the report is *false*	சொல்லப்பட்டது பொய்யென்று நீர் நம்பிக்கொள்ளலாம்.
Are these sheep *fat* or lean?	இந்த ஆடு தெளிவோ வசக்கேடோ?
He died leaving a widow and five *fatherless* children.	மனைவியையும் ஐந்து பிள்ளைகளையும் விட்டு இறந்து விட்டான்.
Who is there that is *faultless?*	பிழையில்லாதவன் யாவன்?
The wind is *favourable* for going up the river.	ஆற்றுக்கெதிராகப் போகக் காற்று இணக்கமாயிருக்கிறது.

I would go there now but am *fearful* it would be late before I arrive.	அங்கே இப்பொழுது போக விரும்புகிறேன், போய்ச் சேர நேரஞ் சென்று போமென்று அஞ்சுகிறேன்.
He is now too *feeble* to stir from home.	வீட்டை விட்டு வெளிப்படப் பெலனற்றவனாய் இருக்கிறான்.
I saw several kinds of birds, a pair of each kind male and *female*	இனத்துக்கொவ்வொரு சோடு பேடையுஞ் சேவலுமாகக் கண்டேன்.
The country every where is *fertile*.	ஊர் எங்குஞ் செழிப்பாய் இருக்கிறது.
This is merely a *figurative* mode of speaking.	இதொரு உவமையான பேச்சு.
The *final* dividend on his estate, will be paid to-morrow.	இவருடைய ஆஸ்தி நாளைக்குத்தான் முடிவாக எல்லாம் பங்கிட்டுக் கொடுத்துவிடப்படும்.
These are *fine* rasins.	இவைகள் நல்ல முந்திரிகைப்பழ வற்றல்.
How should man, being *finite*, comprehend, God who is infinite?	அளவுபட்ட மனிதன் அளவுபடாதகருத்தாவை அறிவதெப்படி?
In this I have *firm* belief.	இதிலே எனக்கதிக உறுதியான நம்பிக்கை.
What is the *first* thing to be done in this business?	இந்த வேலைகளில் முதற் செய்ய வேண்டியதேது?
He is not at all *fit* for this work.	அவன் இந்த வேலைக்துச் சற்றுந் தகாதவன்.

I am not so *fluent* in speech as he.	நான் அவனைப்போல ப்பேச்சிலே வல்லபி அல்ல.
What is the shape of the earth—round, *flat*, square or oval?	பூமியினுடைய ஆகாரம் என்ன, உண்டையோ தட்டையோ சதுரமோ முட்டை வடிவோ?
I am not *fond* of that fruit.	எனக்கு அந்தப் பழத்திலே பிரியம் இல்லை.
To be angry without cause is *foolish.*	காரியம் இல்லாமற் கோபிப்பது புத்தியீனம்.
He has gone to a *foreign* country.	அவன் புற ஊருக்குப் போய் விட்டான்.
She is the *foremost* in learning.	படிப்பிலே அவள் தேறி இருக்கிறாள்.
Which part of his letter do you think the best, the *former* or the latter?	அவனுடைய காகிதத்தில் முற்பகுதியோ பிற்பகுதியோ நல்லதென்று நினைக்கிறாய்?
The objections you make to my plan are indeed *formidable.*	எனது காரியத்தைப் பற்றி நீர் எடுத்துக் காட்டுகிற நியாயங்கள் அச்சுறுத்துவதாயிருக்கின்றன.
You are *free* to do as you please.	நீர் உமது இட்டப்படி செய்யலாமே.
These vegetables are *fresh* from the garden	இந்தக் காய் கிழங்கு வருக்கங்கள் தோட்டத்தில் இருந்து இப்பொழுது வந்தன.
I have *frequent* opportunities of seeing him.	அடிக்கடி அவனைக் காணச் சமையங் கிடைக்கின்றது.

He behaves towards us in a *friendly* manner.	எங்களுடனே மிகவும் நட்பாய் நடக்கிறான்.
I am now entirely *friendless*.	எனக்கு இப்பொழுது ஒரு துணையும் இல்லை.
How does he manage his household affairs? is he *frugal* or extravagant?	வீட்டிற் காரியங்களை எப்படிச் சமாளிக்கிறான்? அவன் செலவிலே மட்டாய் இருக்கிறானோ? கதிப்பாயிருக்கிறானோ?
Is this cask empty or *full*?	இந்தப் பீப்பா வெறிதாயிருக்கிறதோ? ஏதேனும் அதில் இருக்கிறதோ?
Whether we agree to this or not, will be a *future* consideration.	நாம் இதற்கு இணங்குவோமோஇல்லையோவென்று பின்பு தீர்த்துக்கொள்ளலாம்

G.

There was a *general* sorrow at his death	அவனுடைய மரணத்தைக் குறித்து ஊரெங்கும் துயரப்பட்டது.
He is *gentle* in disposition, and exceedingly *generous*.	அவன் சாந்தனும் மகா உபகாரியுமாய் இருக்கிறான்.
Are you *glad* or sorry on this account?	இதற்காக உனக்குச் சந்தோஷமோ சலிப்போ?
Our attainment of knowledge is *gradual*.	நாம் சற்றுச் சற்றாகக் கற்றுத் தேறுகிறோம்.
Whose *grand* house is that?	அந்தச் சிறப்பான வீடு ஆருடையது?

I am *grateful* for your kindness.	நீர் செய்த தயவுக்காக நன்றியுள்ளவனாய் இருக்கிறேன்.
You have done me a very *great* favour.	எனக்கு ஒரு பெரிய தயை செய்தீர்.
This is a *grievous* calamity.	இதொரு துயரமான இடுக்கண்.
He is now old and *grey-headed.*	வயது சென்று நரைத்துப்போனான்.

H.

In his appearance, he is *handsome.*	அவன் பார்வைக்கு அழகாயிருக்கிறான்.
No one in this world can be perfectly *happy.*	இந்த உலகத்திலே ஒருவனுக்கும் பூரண சந்தோஷம் இல்லை.
Is the lesson you have given me *hard* or easy?	நீர் எனக்குத் தந்த பாடங் கடினமோ இலகுவோ?
These animals are *harmless.*	இந்த மிருகங்கள் சாதுவானவைகள்.
To act *hastily* is not wise.	எடுத்தாப்போலே செய்கிறது புத்தியல்ல.
This box is very *heavy*; how can I carry it?	இந்தப் பெட்டகம் வெகுபாரம், நான் எப்படி எடுப்பேன்?
He is now as old and *helpless* as a child.	அவன் முதுமையினாலே சிறு குழந்தையைப்போல ஒன்றுக்கும் இயலாதவனாய் இருக்கிறான்.
Bring some *hot* water.	கொஞ்ச வெந்நீர்கொண்டுவா.

God is *holy* and just.	தேவன் பரிசுத்தமும் நீதியுமுள்ளவர்.
The duration of *human* life is uncertain.	மனிதருடைய சீவியம் நிலையற்றதுதான்.
He is a man of very *humane* disposition, and *humble* to all.	அவன் எல்லாருக்கும் இரக்கமுந் தாழ்மையும் உள்ளவன்.
I am both *hungry* and thirsty.	நான் பசியுந்தாகமுமாயிருக்கிறேன்.

I.

They are excessively careless, ignorant, and *idle*.	பராகண்டிதமும் அறியாமையும் சோம்புமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.
Such a sentiment would be deemed *illiberal*.	அப்படிப்பட்ட நிதானிப்பு பிறரைக் கட்டுப் படுத்திக்கொள்ளச் செய்ததாகக்காணப்படும்.
It is not good always to associate with *illiterate* persons.	எப்பொழுதும் படியாதவர்களுடைய சகவாசம் நல்லதல்ல.
You may keep the book which I lent you a few days longer; I am not in *immediate* want of it.	நான் உனக்கு இரவலாய்த் தந்த புத்தகத்தை இன்னுங் கொஞ்ச நாள் வைத்திருக்கலாம் எனக்கு இப்பொழுது தேவை இல்லை.
The undertaking is likely to be attended with *immediate* expense.	இந்த எடுப்புக்கு வெகு செலவு சுறுக்கிலே வரும்.

He was in *imminent* danger of his life	அவன் உயிர்ச் சேதத்திற்கு ஏதுவான மோசத்துக்குள் இருந்தான்.
The body is mortal, the soul *immortal.*	சரீரம் அளிவுள்ளது ஆத்துமா அழிவில்லாதது
They are *immoveable* in their opinions	அவர்கள் பிடித்த எண்ணம் விடார்கள்.
An upright judge will be *impartial.*	நீதிவான் பரபட்சமாயிரான்.
These mountains are *impassable* being surrounded on all sides with *impenetrable* forests.	மலையைச் சூழ ஈறற்காடு இருப்பதால் அந்தமலையைக் கடந்துபோகக் கூடாது.
Every thing relating to man is *imperfect.*	மனிதனுக் குள்ள யாவுங் குறைவானது.
His behaviour is *impertinent.*	அவன்ஒருமேட்டிமையான நடையுள்ளவன்.
It is very *important* that we attend to this	இதைச் செய்வது நமக்கு அவசரமாயிருக்கும்.
It is *impossible* for me to comply with what you say.	நீர் சொல்லுகிறதற்கு நான் இணங்கக் கூடாது.
With God nothing is *impossible.*	தேவனுக்கு அருமையானதொன்றுமில்லை.
What he tells me appears very *improbable.*	எனக்கு அவன் சொல்லுகிறபடி சம்பவிப்பதரிது.
To act thus would be highly *improper,* and therefore *imprudent.*	அப்படிச் செய்வது தீர அடாது, அது புத்தியீனம்.

Nothing that is *impure* will enter heaven — அசுத்தமொன்றும்மோட்சத்துக்குட்படாது.

I am *incapable* of managing this business. — இந்த வேலையை நடப்பிக்க நான் இயலாதவன்.

We have lately had *incessant* rain. — சில நாளாக விடாமழை.

The account is from January to August, *inclusive*. — தைமாதந் தொடங்கி ஆவணி முடியுமட்டும் உள்ள கணக்கெல்லாம் இருக்கின்றது.

This is *incomparable* writing. — இந்தக் கையெழுத்துக்குச் சமானம் இல்லை.

Your book is *incomplete*. — உனது புத்தகங் குறையாயிருக்கிறது.

It will be *inconvenient* for me to wait upon you to-morrow. — நாளைக்கு வந்து உம்மைக் காண்கிறதற்கு எனக்குச் சமையம் இல்லை.

Is what I say correct or *incorrect*? — நான் சொல்லுகிறதுசரியோ சரியல்லவோ?

This is quite *incredible*. — இதைத் தீர நம்பப் படாது.

They speak *indecent* language. — மரியாதை கெட்ட பேச்சைப் பேசுகிறார்கள்.

He is now quite *independent*. — அவன் இப்பொழுது முழுதுந் தன் இட்டமாய் இருக்கிறான்.

Is this an *indigenous* plant? — இது இத்தேசத்துப் பயிரா?

My writing is *inferior* to yours. — என்னுடைய எழுத்து உம்முடைய எழுத்துக்குத் தணிவு.

The power and wisdom of God are *infinite.*	தேவனுடைய தத்துவத்திற்கும் ஞானத்திற்கும் எல்லை இல்லை.
She is very *ingenious.*	அவள் நல்ல யூகி.
Their disposition is *inhuman.*	அவர்கள் கொடுமையான குணமுள்ளவர்கள்
We ought not to do that which is *injurious* to our neighbour.	பிறருக்குத் தீங்கானதை நாம் செய்யப்படாது.
These animals are *inoffensive.*	இந்த மிருகங்கள் தீங்கில்லாதன.
Without locks to the doors, your goods will be *insecure.*	கதவுகளுக்குப் பூட்டில்லாதிருந்தால், உமது பொருள் பத்திரமாய் இராது.
He is so ill that he is *insensible.*	அவன்துன்பத்திலே அறிவு கேடாய் இருக்கிறான்.
How *insignificant* is man compared to the Almighty.	சருவ வல்லவருடனே ஒத்துப் பார்க்க மனிதன் எவ்வளவு?
His words are *insincere.*	அவனுடைய வார்த்தைகள் கபடம்.
They behaved in an *insolent* manner.	அவர்கள் அகந்தையாக நடந்தார்கள்.
He has lately become *insolvent.*	அவன் இந்த நாட்களிற் கடனிறுக்க இயலாதவனாய்ப் போனான்.
Ten rupees will be *insufficient*; you must give me fifteen.	பத்து ரூபாய் போதாது பதினைந்து தரவேண்டும்.

He is an *intelligent* man.	அவன் நானா காரியத்தையும் அறிந்தவன்.
The hurt he has received appears to be *internal*.	அவனுக்குள்ளே நொந்துபோனதாகத் தோற்றுகின்றது.
The Nabob imagined his soldiers were *invincible*.	நபாபுதமது போர்ச்சேவகர் தோறார்களென்று நினைத்தார்.
God is *invisible*.	தேவன் அதரிசனர்.
This employment is *irksome*.	இது தலையடியானவேலை.
These lines are *irregular*.	இந்த வரிகள் ஒழுங்கில்லை.

J.

He is the senior and I the *junior*.	அவன் மூத்தவன், நான் இளையவன்.
God is *just* and merciful	தேவன் நீதியும் இரக்கமுமுள்ளவர்.

K

God is *kind* to all his creatures.	பராபரன் தமது படைப்பு யாவுக்கும் அன்புசெய்கிறவர்.

L.

Yours is a *laborious* work.	உன்னுடைய வேலை பிரயாசம்.
Being *lame*, he walks with a stick.	முடவனானதினாலேகோல் ஊன்றி நடக்கிறான்.
I caught a *large* fish yesterday.	நேற்றுப் பருமீன் பிடித்தேன்.

I saw him *last* Tuesday.	போன செவ்வாய்க்கிழமை அவனைக் கண்டேன்.
Which of us read *last*?	நம்மில் கடைசியாக வாசித்து விட்டதார்?
I arrived there *last*.	எல்லாருக்கும் பின்பு நான் அங்கே சேர்ந்தேன்.
Is it *lawful* (or legal) to do this?	இப்படிச் செய்கிறது முறையா?
They are too *lazy* to work.	அவர்கள் வேலைக்கு அதிக சோம்புத்தனமுள்ளவர்கள்.
He is a very *learned* man.	அவர் அதிக கல்விமான்.
You have given me the *least* share.	தீரச் சின்னப் பங்கை எனக்குத் தந்தீர்.
Being *lame* of his right hand, he writes with the *left*.	வலது கை சொத்தியானதினால் இடது கையால் எழுதுகிறான்.
This writing is not *legible*.	இந்த எழுத்துக்கள்வாசிக்கக் கூடாதவை.
Why should you give me *less* than you give him?	அவனைப் பார்க்க எனக்குக் குறைய நீர் கொடுக்கவேண்டியதென்ன?
My wages are *less* than his.	அவன் சம்பளத்திலே என் சம்பளங் குறைவு.
The ground is quite *level*.	இந்த நிலம் நல்ல ஒப்பரவு.
Do not associate with *lewd* persons.	தூர்த்தருடனே சேர வேண்டாம்.

You are *liable* to a penalty for doing this.	இதைச் செய்தால் தண்டத்துக்கு ஏதுவாயிருப்பாய்.
He is exceedingly *liberal.*	அவர் மகா கொடையாளி.
He fell to the ground *lifeless.*	அவன் சீவனற்றுத் தரையில்விழுந்தான்.
Is this package *light* or heavy?	இந்தக் கட்டு இலேசோ பாரமோ?
This is a *light* room.	இது வெளிச்சமான அறை.
My house is very much *like* yours.	உமது வீட்டின் மாதிரி தான் எனது வீடு.
The translation is too *literal.*	இந்த வாசகம் முந்தின பாஷையின் நடையாய்ப் போகின்றது.
Give me a *little*; I don't ask for a great deal.	எனக்குக் கொஞ்சங் கொடும்; நான் அதிகங் கேட்கவில்லை.
He is a *little* boy.	அவன் ஒரு சிறு பிள்ளை.
He is of a *lively* disposition.	அவன் தாராள குணமுள்ளவன்.
These rooms are very *lofty.*	இவ்வறைகள் மிகுந்த உயரம்.
How *long* is this piece of cloth?	இந்தப் புடைவை எவ்வளவு நீளம்?
How *long* do you mean to remain there?	அங்கே எவ்வளவு நேரத்துக்கு நிற்கப்போகிறீர்?
The joints of this chair are very *loose.*	இந்த நாற்காலியிற்பொருத்துவிட்டுக் கழலுகிறது.
This is a very *low* room.	இது அதிக பதிவான அறை.

The price he asks is very *low*.	அவன் சொல்லுகிற விலை மிகவும் மலிவு.
Theirs is a *lucrative* employment.	அவர்களுடைய வேலை மிகவும் பலனுளது.
He is now grown very *lusty*.	அவன் அதிகமாய்ப் பருத்துவிட்டான்.
He was bit by a *mad* dog.	அவன் ஒரு விசர் நாயாற் கடி உண்டான்.
These are *magnificent* apartments.	இவ்வறைகள் மகா அலங்காரமானவைகள்.
It is not *material* whether you go or not	நீர் போனாலும் போகாவிட்டாலும் ஒன்றும் இல்லை.
Alas! this is a *melancholy* event.	ஐயோ! இது துயரமான காரியம்.
He has suffered much *mental* distress.	அவன் மிகுந்த மன இக்கட்டுப்பட்டான்.
We ought ever to be *merciful*.	நாம் எப்பொழுதும் இரக்கமுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.
Let us walk in the *middle* path.	நடு வழியிலே நடப்போமாக.
This paper is *middling*.	இது நடுத்தரமான கடுதாசி.
She is *mild* in temper.	அவள் பதமையான குணமுள்ளவள்.
God attends to the most *minute* circumstances.	பராபரன் சொற்பகாரியங்களையும் பார்க்கிறார்.
They are very *mischievous* children.	அவர்கள் மகா துடினமான பிள்ளைகள்.

Wicked men are always *miserable.*	பொல்லாதவர்கள் எப்பொழுதும் நிற்பந்தராய் இருக்கிறார்கள்.
We ought to be *moderate* in our desires.	மட்டுக்குமிஞ்சி ஆசைப்படப்படாது.
He is of a *modest* disposition.	அவன் நல்ல சாந்தன்.
Has this book a *moral* or immoral tendency?	இந்தப் புத்தகஞ் சன்மார்க்கத்துக்கோ துன்மார்க்கத்துக்கோ ஏதுவானது?
A mountain is *motionless.*	மலை அசைவில்லாதிருக்கும்.
This is a *mournful* history.	இது ஒரு பரிதாபமான கதை.
Why do you bathe in *muddy* water?	சேற்று நீரில் ஏன்தோய்கிறாய்?
I spoke several times, but still they continued *mute.*	அநேகந்தரம் நான் பேசியும், அவர்கள் பேசவில்லை.
This will be for our *mutual* benefit.	இதினால் நம்மெல்லாருக்கும் நன்மை உண்டாம்.

N.

In India, little children usually go *naked.*	இந்து தேசத்திலே சிறு பிள்ளைகள் நிருவாணமாய்த் திரிகிறது வாடிக்கை.
Bengal is my *native* country.	வங்காளந்தான் நான் பிறந்த ஊர்.

He has collected a great many *natural* curiosities.	அநேக நூதனப் பொருள்களைச் சேகரித்து வைத்திருக்கிறான்.
It was *natural* for me to think thus.	அப்படி நினைக்கிறதெனது இயல்பு.
She is a *naughty* little girl.	அவள் ஒரு துடினமான சிறுமி.
This is *neat* writing.	இது நேர்த்தியான எழுத்து
It is not *necessary* that you go there.	நீ அங்கேபோகத் தேவை இல்லை.
It is absolutely *needful* that I should go there.	எனக்கு அங்கே போகிறது பெரிய அவசரம்.
They are idle and *negligent.*	அவர்கள் சோம்பும் பராக்குமுள்ளவர்கள்.
Have you seen my *new* book?	எனது புதுப் புத்தகத்தைக் கண்டீரா?
We will go there *next month.*	நாம் வருகிற மாதம் அங்கே போவோம்.
These are very *nice* mangoes.	இந்த மாம்பழம் அதிக நல்லது.
He is a *noble* youth.	அவன் சற்புத்திரன்.
My fingers are *numb* with cold.	என் விரல்கள் கூதிரால் விறைத்தன.
There are *numerous* errors in your writing.	உன் எழுத்திலே அநேகம் பிழை இருக்கின்றன.

O.

Good children are *obedient* to their parents and obliging to every one.	நல்ல பிள்ளைகள் பிதா மாதாவுக்கு அமைகிறதுமன்றி, எல்லாருக்கும் நன்மை செய்கிறார்கள்.

The meaning of this is *obscure*.	இதின் கருத்துக் கருகலாய் இருக்கிறது.
This term has become *obsolete*.	இச்சொல் இக்காலத்தில் வழக்கம் இல்லை.
They are *obstinate* in their opinions.	தங்கள் எடுப்பை என்ன சொன்னாலும் விடார்கள்.
This is a very *odd* kind of expression.	இது ஒரு போங்கான பேச்சு.
Sin only is *offensive* to God.	பாவந்தானே பராபரனுக்கு அருவருப்பானது.
God is *omnipotent*, *omnipresent*, and *omniscient*.	பராபரன் சருவ வல்லவரும் சருவ வியாபகருஞ் சருவஞ்ஞருமாய் இருக்கிறார்.
His house is *opposite* to mine.	என் வீட்டுக்கு எதிரே அவருடைய வீடு.
He was well versed in *oriental* literature.	அவன் கிழக்குத் தேசத்துக்கடுத்த படிப்பிலே நன்றாய்த் தேறினவன்.
This is not the *original* writing.	ஆதியெழுத்து இதல்ல.

P.

The cut in my finger is very *painful*.	என் விரலில் வெட்டுப் பெரிய வருத்தமாய் இருக்கின்றது.
He became *pale* through fear.	பயங்கரத்தினால் வெளிறிப்போனான்.
We ought not to be *partial* in our judgment.	நாம் பராபட்சமாய்த் தீர்க்கப்படாது.

I wish to speak with you on a *particular* subject.	ஒரு பிரதான காரியத்தைக் குறித்து உன்னுடனே பேசவிரும்புகிறேன்.
He is very *passionate*.	அவன் மகாதுடுக்கன்
They are *patient* under sufferings and *peaceable* in disposition.	அவர்கள் இக்கட்டிலே பொறுமையும் குணத்திலே சமாதானமுமுள்ளவர்கள்.
He will suffer only *pecuniary* loss.	அவனுக்குப் பணச்சேதம் மாத்திரம் வரும்.
His turn of mind is *pensive*.	அவன் மனக் கிலேசமுள்ளவன்.
These children are *peevish* and *perverse*.	இப்பிள்ளைகள் அரிகண்டமும் மூர்க்கமுமுள்ளவர்கள்.
This blemish is not *perceptible*.	இந்தப் பழுது தோன்றாது.
Your work is now *perfect*.	உனது வேலை இப்பொழுது திருத்தம்.
The publication you mention is *periodical*.	நீர் சொல்லுகிற புத்தகங் காலக் கிரமமாய் அச்சுப்பதியப்படுகிறது.
Is this regulation to be *permanent*?	இந்தக் கட்டளைச் சட்டம் நிலைப்படுமோ?
The tide has a *perpetual* flux and reflux.	கடல் எப்பொழுதும் வற்றும் பெருக்குமாய் இருக்கிறது.
His answers are *pertinent*.	அவனுடைய மறுமொழிகள் ஏற்றன.
Where is the account of *petty* expenses?	சில்லறைக் காரியங்களின் கணக்கு எங்கே?

She is a *pious* woman.	அவள் பத்தியுள்ளவள்.
This writing is *plain* and easy to be read.	இந்தக் கையெழுத்துத் தீர்க்கமாயுந் துலக்கமாயும் இருக்கிறது.
His company is *pleasant*.	அவனுடைய சகவாசம் இன்பமானது.
This kind of fruit is *plentiful*.	இந்த விதமான பழம் மிகுதி.
He is now become *poor*.	அவன் இப்பொழுது வறியவனாய் இருக்கிறான்.
Calcutta is a *populous* city.	கல்குத்தா குடி மிகுந்த பட்டினமாய் இருக்கிறது.
The Captain has received *positive* orders to sail to-morrow.	நாளைக்குப் பாய்வலிக்கக் கப்பலோட்டிக்கு உறுதியான கட்டளை பண்ணப்பட்டது.
It is not *possible* for me to do this.	இதைச் செய்ய எனக்குக் கூடாது.
His arguments are very *powerful*.	அவனுடைய நியாயங்கள் மகா திறம்.
What you purpose I think, is not *practicable*.	நீர் எடுத்த காரியம் நிறைவேறாதென்று நினைக்கிறேன்.
Her health is very *precarious*.	அவளுடைய சுகமெத்த அசாத்தியம்.
Such habits are *prejudicial* to health.	அப்படிப்பட்ட பழக்கங்கள் சுகத்துக்கீனம்
Which of these two is *preferable*?	இவ்விரண்டில் எது உத்தமம்?
These are very *pretty* flowers.	இவைகள் நல்ல வடிவான புட்பங்கள்.

This disorder is, at present, very *prevalent*.	இந்த வியாதி இப்பொழுது அதிக கடாந்திரம்.
Your departure was *previous* to my arrival	நான் வந்து சேரு முன்னே நீர் புறப்பட்டு விட்டீர்.
Who is the *principal* manager of the business?	இந்த வேலையை நடப்பிக்கிற முகாரியார்?
They held a *private* conversation on this subject.	இக்காரியத்தைப் பற்றி அவர்கள் தனித்திருந்து பேசினார்கள்.
That is not at all *probable.*	அப்படி நடப்பதரிது.
They use only *profane* language.	தேவ நிந்தனையை அதிகமாய்ப் பேசுகிறார்கள்.
Man is *prone* to err.	மனிதன் தவறுகிறவன்.
Do you conceive this to be *proper* or improper?	இது தகுமோ அல்லவோ என்ன நினைக்கிறீர்?
His affairs are now very *prosperous.*	அவனுடைய காரியங்கள் இப்பொழுது விருத்திப்பட்டு வருகின்றன.
They who are *proud* have little understanding.	செருக்குள்ளவர்களுக்குப் புத்தி குறைவு.
She is a wise and *prudent* woman.	அவள் ஒரு அறிவும் புத்தியுமுள்ளவள்.
God only is *pure.*	தேவன் மாத்திரமே பரிசுத்தர்.

Q

They are of a *quarrelsome* disposition.	அவர்கள் சண்டைக்காரர்.
That vessel has made a *quick* voyage.	அந்தக் கப்பல் சுறுக்கிலே போய்த் திரும்பி விட்டது.

R.

The stream is very *rapid* in the *rainy* season.	மாரி காலத்திலே நீர்ப் பாய்ச்சல் அதிக வேகம்.
This is a very *rare* plant.	இது மிகவும் அரியபயிர்.
He is very *rash* in his conduct.	அவன் துடினமாய் நடக்கிறவன்.
They speak in a *rational* manner.	அவர்கள் புத்தியுடனே பேசுகிறார்கள்.
It is not good to eat rice *raw*.	பாகமாக்காத அரிசியைச் சாப்பிடுகிறது நல்லதல்ல.
This is all *real*, not show merely.	இது மாயம் அல்ல நிசச் செய்கை.
What you say is *reasonable*.	நீர் சொல்லுகிறது நியாயம்.
Is this intelligence *recent*?	இந்தச் செய்தி நூதனமானதா?
This is according to the *regular* mode of business.	இப்படிச் செய்வதுதான் வழக்கம்.
His behaviour is always *respectful*.	அவனுடைய நடக்கை எப்பொழுதும் மதிக்கத் தக்கது.

I have passed a *restless* night.	போன இரா முழுதும் எனக்கு ஒரு ஆறுதலும் இல்லை.
They are *resolute* in their purpose.	எடுத்த காரியத்திலே உறுதியாய் இருக்கிறார்கள்.
Do I spell this word *right* or not.	இந்தச் சொற்கு எழுத்துச் சரிவரச் சொல்லுகிறேனோ இல்லையோ?
Bring some *ripe* fruit.	கனிந்த பழங்களிற் சில கொண்டுவா.
They are very *rude* boys.	அவர்கள் மெத்தக் குறும்புள்ள பிள்ளைகள்.
Those knives are *rusty*.	அந்தக் கத்திகள் கறையாயிருக்கின்றன.

S.

This is indeed a *sad* misfortune.	மெய்யாய் இதொரு துயரமான கேடு.
I have heard of his *safe* arrival in London	அவன் இலண்டனிலே சுகமாய் வந்து சேர்ந்ததைக் கேள்விப் பட்டேன்.
These articles are not *saleable*.	இந்தச் சரக்குகள் விலைபோகாதன.
Yours and mine are both the *same* pattern	உன்னுடையதும் என்னுடையதும் ஒரே மாதிரி.
This article is now *scarce*.	இந்தச் சரக்கு இப்பொழுது அரிமை.
They keep all things *secret*.	எல்லாவற்றையும் அவர்கள் இரகசியத்தில் வைத்திருக்கிறார்கள்.

You may remain here *secure.*	நீ இங்கே பழுது வராமல் இருக்கலாம்.
He is a *sensible* man.	அவன் புத்தியுள்ளவன்.
They delight only in *sensual* pleasure.	சிற்றின்பத்திலே மாத்திரம் பிரியமாய் இருக்கிறார்கள்.
The sky is now beautifully *serene* and clear.	இப்பொழுது காற்றமர்ந்து வானம் வெளித்திருக்கிறது.
I hope the advice I gave you will prove *serviceable.*	நான் உனக்குச் சொன்ன புத்தி பிரயோசனமாய் இருக்குமென்று நம்புகிறேன்.
They live in *separate* houses.	அவர்கள் வெவ்வேறு வீட்டில் இருக்கிறார்கள்.
Are you *serious* in what you say?	நிதானமாய்ப் பேசுகிறாயா!
He has received *severe* punishment.	கடூரமான ஆக்கினைப் பட்டான்.
This is a *shameful* business.	இதொரு இலச்சைகேடானகாரியம்.
Is your knife *sharp*?	உன் கத்தி கூராயிருக்கிறதா?
He has been *sick* (or ill) a long time.	அவன் வெகுநாளாகக் கிடைப்பட்டுக் கிடந்தான்
They all remained *silent.*	எல்லாரும் பேசாதிருந்தார்கள்.
The enemy have sustained a *signal* defeat.	சத்துராதிகள் தீரத்தோல்வியானார்கள்.

My case is *similar* to yours.	என் காரியமும் உன் காரியம் போலத்தான் இருக்கிறது.
What can be more *silly* than to think thus?	அப்படி நினைக்கிறதிலும் அதிக புத்தித் தாழ்ச்சி என்ன?
His love towards us is *sincere*.	அவன் நம்மேல் மனசார அன்புள்ளவனாய் இருக்கிறான்.
Their religious opinions are very *singular*	அவர்கள் கோட்பாடு ஒருபோக்காய்ப் போகின்றது.
He is a *skilful* physician.	அவன் ஒரு சாமாத்தியமான பரிகாரி.
I am very *sleepy*.	எனக்குத் தூக்கம் வருகிறது.
These mangoes are very *small*.	இம்மாம்பழம் மிகவுஞ் சிறியது.
This is *smooth* paper	இது அழுத்தமான கடுதாசி.
He is scarcely ever *sober*.	அவனை வெறியற்றவனாய்க் காண்கிறது அரிது.
These are all made of *solid* gold.	இவைகள் எல்லாந் தனிப் பொன்னினாலே செய்யப்பட்டன.
This pen is very *soft*.	இத் தூவல் சவண்டு போயிற்று.
He appears very *sorrowful*.	அவன் மிகவுந் துக்கமுள்ளவனாய்க் காணப்படுகிறான்.
I am *sorry* for my offence.	நான் செய்த குற்றத்திற்காகத் துயரப் படுகிறேன்.

This wood is entirely *sound*.	இந்த மரம் முழுதும் வயிரம்.
That fruit is *sour*; don't eat it.	அந்தப் பழம் புளிப்பு, சாப்பிடாதே.
He gives us *spiritual* advice.	எங்களுக்கு ஞான காரியத்தைப் போதிக்கிறார்.
He still continues *steady* to his purpose.	தன் காரியத்திலே உறுதியாக நிலைநிற்கிறான்.
The banks of the river are very *steep*.	ஆற்றங்கரை மிகவும் உயரம்.
This paper is very *stiff*.	இந்தக் கடுதாசி மிகவும் முரண்.
Cannot you be *still* for one moment?	ஒரு நிமிஷத்துக்கு அமரிக்கையாய் இருக்கக் கூடாதா?
The weather is still very *stormy*.	இன்னுங் கடிய புயலாய் இருக்கிறது.
They are *strong* and healthy.	அவர்கள் சவுரிய சவுக்கியமுள்ளவர்கள்.
We have not been *successful* in this undertaking.	எடுத்த காரியம் நமக்குக் கை கூடி வரவில்லை.
Your advice appears *suitable*.	உனது யோசனை தகுதியாய்க் காண்கிறது.
God is the *supreme* ruler of the universe.	தேவன் சருவ லோகாதிபதியாய் இருக்கிறார்.
I am not *sure* that it is so.	அப்படி இருக்கிறதாக எனக்கு நிசப்படவில்லை.
Sugar-cane is very *sweet*.	கரும்பு மகா இனிப்பு.

T.

He is very *timid*.	அவன் தீரப்பயந்தவன்
Do you wish for *thick* paper or thin?	உனக்குத் தடித்த கடுதாசியோ மெல்லிய கடுதாசியோ தேவை?
This is *tolerable* writing.	இது நடுராசியான எழுத்து.
Their conduct has been most *treacherous*.	அவர்களுடைய நடத்தை மிகவும் வஞ்சனையாயிற்று.
This is but a *trivial* (or trifling) matter.	இது ஒரு அற்ப காரியம்.

U.

This is an *ugly* shaped letter.	இவ்வெழுத்து அந்தக் கேடாய் இருக்கிறது.
I am so lame I am *unable* to stir out.	நான் நொண்டியாய் இருக்கிறதினால் வெளியே வரக் கூடாது.
They were *unanimous* in their opinions	தங்கள் யோசனையில் ஒன்று போல் இருந்தார்கள்.
It is *uncertain* whether I go or not.	போவேனோ இல்லையோ நிசம் இல்லை.
To act thus would be highly *unbecoming*.	அப்படிச் செய்கிறது தீர அடாது.
God only is *unchangeable*.	தேவன் மாத்திரமே மாறுபடாதவர்.
I am very *uneasy* in not hearing from you.	உம்முடைய காரியத்தைக் கேள்விப்படாததினால் மனம் மிகவும் குழம்புகிறேன்.

This letter was *unexpected.*	இந்தக் காகிதம் வருமென்றிருக்கவில்லை.
He is wholly *unfit* for the task assigned him.	அவன் குறித்த வேலைக்கு முற்றுந் தகாதவன்.
This house is *unfurnished.*	வீட்டிலே தட்டு முட்டுக்கள் இல்லை.
She is quite *unhappy* on this account.	இதற்காக அவள் மகா துக்கப்படுகிறாள்.
Through the mercy of God, we escaped *unhurt.*	பராபரனுடைய கிருபையினால் பழுதில்லாமற் தப்பிக்கொண்டோம்.
Do you conceive this to be *unjust?*	இது நீதிகேடென்று நினைக்கிறீரா?
We ought not to be *unkind* to each other.	நாம் ஒருவரில் ஒருவர் பட்சம் வையாமல் இருக்கப்படாது.
To do so is *unlawful*	அப்படிச் செய்கிறது அநியாயம்.
They are very *unlearned.*	அவர்கள் தீரப்படியாதவர்கள்.
Why are you so *unmerciful?*	ஏன் உனக்கு அவ்வளவு வன்மம்?
Their demands are *unreasonable.*	அவர்களுடைய கேள்வி நீதகீனம்.
The ways of God are *unsearchable.*	தெய்வச் செயலே அதீதமாயிருக்கின்றது.
We passed by *unseen.*	காணாதபடி போனோம்.
Our joy is *unspeakable.*	நமது சந்தோஷஞ் சொல்லில் அடங்காது.

His mind is very *unsteady.*	அவனுடைய மனம் நிலையற்றது.
That fruit is *unwholesome.*	அந்தப் பழஞ் சுக நாசம்.
I am altogether *unwilling* to go there.	அங்கேபோக எனக்கு முற்றும் மனம் இல்லை.
It were *unwise* not to agree to this.	இதற்கு இணங்காமற் போகிறதுபுத்தித்தாழ்ச்சி.
He has proved himself *unworthy* of your protection.	உம்முடைய ஆதரவுக்கு அபாத்திரனாய் நடந்தான்.
Are there any *upper* rooms in this house?	இந்த வீட்டில் மேல் மாடம் உண்டோ?
They are *upright* in their dealings.	பரிமாற்றத்தில் நீதானமுள்ளவர்களாய் இருக்கிறார்கள்.
This business is *urgent.*	இந்தக் காரியம் அவசரம்.
You will find this very *useful.*	இது உமக்குப் பிரயோசனங் கொடுக்கும்.
The tools you sent me are quite *useless.*	நீர் அனுப்பின பணிமுட்டு ஒன்றும் உதவாது.
